பட்ட அத்வைதம் சித்திக்காமற்போகும். ஆனால் சகல உபநிஷத்துக்களுக்கும் சகல தேகங்களிலு மிருக்கிற ஆத்மா ஒன்று என்று பிரதிபாதிக்கிறதில் இஷ்டம். ஆகையால் ஆத்தியாத்மிகமான பிரத்தியகாத்மாவும், சுவர்க்கலோகம் முதலியவைகளை அங்கங்களாக உடைய ஆதிதெய்விகமான விராடாத்மாவும் ஒன்று என்ற அபிப்பிராயத்தால் சப்தாங்க வசனத்தைக் கூறினது யுக்தமே मुर्धाते व्यप तिष्यति யந்மாம் நாகமிஷ்ய இதி = (சாந்தோக்கியம்) எதையும் ஆத்மாவுக்குத் தனியாக உபதேசித்தால் உன் தலை விழுந்து போகும் என்னும் சுருதியும் இதையே சொல்லுகிறது. விராட்டும் விசுவனும் ஒன்று என்று சொன்னதினால் ஹிரண்ய கர்ப்பனும் தைஜஸனும் ஒன்று என்றும் அவ்வியாகிருதனும் பிராஞ்ஞனும் ஒன்று என்றும் அறிய வேண்டியது 28

மதுப்பிராமணத்தில் (பி - IV - 5) यश्चायमस्यां पृथिव्यां तेजोमयो ऽमृतमयः पुरुषो यश्चायमध्यात्मम् யஶ்சாயமத்யாத்மம் ஶாரீரஸ் தேஜோமயோ ऽம்ருதமய: புருஷோ யஶ்சாயமாத்மா (பிருதிவியிலிருக்கிற தேஜோமயரும், அமிருதமய புருஷன், பிரத்தியகாத்மாவும் இதுவே) என்று சொல்லியிருப்பதால் இந்த ஐக்கியம் அவ்விடத்திலும் கூறப்பட்டிருக்கிறது. சுஷுப்திக்கும அவ்வியாகிருதத்துக்கும் வித்தியாச மில்லாதபடியால் இரண்டு மொன்றுதான் ஆகையால் சகல துவைத நாசத்தால் அதுவைதமே சித்திக்கிறது. ஆகையால் தத்துவ ஞானத்தாலும் ஆசாரியோபதேசத்தாலும், தத்துவ ஞானத்திற்கு பிரதி பந்தங்களாகிய மானஸப்பிர பஞ்சமாகிய துவைதம் நிவிர்த்தியானவுடன் அத்வைதமே மிஞ்சுகிறதென்கிறது சித்தம்.

2 - வது கண்டம். 1 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

ஈ—பா :—

அ-கை :—மேற்சொன்ன நான்கு பாதங்களை விஸ்தாரமாக கூறுகிறார்.

जागरितस्थान: ஜாகரிதஸ்தாந:=ஜாக்கிரதசையை உண்டுபண்ணுகிறவன் என்று அர்த்தம். ஏனெனில் =जागरितेवह ஜாகரிதே ப்ரூஹ என்கிற சுருதியில் பிரம்மசப்தம் அநிருத்தனே ஜாக்கிர தசையின் நிர்வாஹகன் என்று கூறுகிறது.

---

28. விசுவனும் விராட்டும் ஸ்தூலப்பிரபஞ்சத்தின் அபிமானிகளானதால் ஒன்று என்றும் தைஜஸனும் ஹிரண்ணிய கர்பனும் சூக்ஷ்ம பிரபஞ்ச அபிமானிகளானதால் ஒன்று என்றுப் பிராஞ்ஞன் சுஷுப்தியில் தன்னிடத்தில் சகலத்தையும் லயப்படுத்தி தான் நிர்விசெஷமா யிருப்பதாலும் பிராஞ்ஞனும் அவ்வியாகிருத பிரளய காலத்தில் சகலத்தையும் தன்னிடத்தில் லயப்படுத்தி தான் நிர்விசேஷமா யிருப்பதாலும் பிராஞ்ஞனும் அவ்வியாகிருதனும் ஒன்று என்று அறியவேண்டும்.

बहिः प्रज्ञः பஹிஃ ப்ரஜ்ஞ:=வெளியிலுள்ள ரூபாதி விஷய மான ஞானமுடையவன்.

सप्ताङ्गः ஸப்தாங்க:=ஏழு அங்கங்களோடு கூடினவன். அதாவது வைசுவாநர வித்தையில் சொல்லப்பட்ட சுவர்க்கம், சூரியன், வாயு, ஆகாசம், ஜலம், பிருதிவீ, இவைகளாகிற தலை, கண். பிராணன், நடுஉடல், உபஸ்தம், கால் ஆகிய ஆறு அங்கங்களும் ஜீவனுமாகிய ஏழாவது அங்கமும் ஆக இவைகளையுடையவன்.

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுக:=ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, பிராணன் ஐந்து, அந்தக்கரணம் நாலு, ஆக பத்தொன்பது முகங்களோடு கூடினவன் இவைகளெல்லாம் ஜீவன் மூலமாக அதிஷ்டானங்கள் என்று அறியவேண்டியது.

स्थूलभुक् ஸ்தூலபுக்=ரூபாதி விஷயங்களை அநுபவிக்கிறவன், ऋतं पिबन्तौ ருதம் பிபந்தௌ (கட-I-3-1) என்கிற சுருதியில் ஜீவன் கர்மபலத்தை அநுபவிக்கும்படி செய்கிற பரமாத்மாவை பானம் பண்ணுகிறவன் என்று சொல்லியிருப்பதுபோல். ஜாக்கிறதபிமானிக்கு ரூபாதி விஷய ஞானத்தை உண்டுபண்ணுகிறபடியால் அநிருத்தனே ஸ்தூலபுக் என்று அறியவும்.

वैश्वानरः வைஶ்வாநர:=எல்லாரையும் பிரேரணை செய்கிறவனாக எவனிருக்கிறானோ அவன் ஓங்காரத்தின் முதலாவது பாதம் உ.

கூ—பா.

அ—கை:—அந்த பாதங்களுக்கு ஸ்தானங்கள் எவை வியாபாரமென்ன. ரூபங்கள் எப்படிப்பட்டவை. புஜிக்கத்தக்கவை எவை, பெயரென்ன இந்த கேள்விகளுக்கு கிரமமாக உத்தரஞ் சொல்லுகிறார்.

जागरितस्थानः ஜாகரிதஸ்தாந:=எந்த விடத்திலிருந்து ஜீவன் விழித்துக்கொண்டிருக்கிறானோ அந்த ஸ்தானத்துக்கு ஜாகரிதமென்று பெயர். அதுவே சக்ஷுஸ் அந்த சக்ஷுஸை ஸ்தானமாக உடையவன்.

बहिः प्रज्ञः பஹிஃ ப்ரஜ்ஞ:=வெளியிலுள்ள விஷயங்களை தெரியப்படுத்துகிறவனும் அறிகிறவனும் யிருக்கிறவன்

सप्तांगः ஸப்தாங்க:=நாலு கைகள், இரண்டு பாதங்கள், யானை முகமாயிருப்பதால் துதிக்கை ஆக ஏழு அங்கங்களையுடையவன்.

एकोनाविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுக: = மத்தியில் யானை முகமும், இரண்டு பக்கங்களிலும் ஒன்பது ஒன்பது மனுஷிய முகங்களும் ஆக பத்தொன்பது முகங்களையுடையவன்.

स्थूलभुक् ஸ்தூலபுக் = ஸ்தூலமான போகங்களை புஜிக்கிறவனுயும், புஜிக்கும்படி செய்கிறவனுயு மிருக்கிறவன்.

वैश्वानरः வைஶ்வாநர:=(विश्यते=गम्यते, ज्ञायते सर्वैः விஶ்யதே=கம்யதே, ஜ்ஞாயதே ஸர்வை:) எல்லாராலும் அடையத் தகுந்தவனுயும் அறியத்தகுந்தவனுயு மிருக்கிறவன். அல்லது विश्वं விஶ்வம் என்றல் எல்லாராலும் அறியக்கூடிய ஸ்தூலவஸ்து. அதை புஜிக்கிறபடியால் அதின் சம்பந்தத்தோடு கூடினவன் विश्वः விஶ்வ: नरः நர: = नरीयते நரீயதே = நாசத்தை அடையாதவன் ஆகவே वैश्वश्चासौ नरश्च=वैश्वानरः வைஶ்வஶ்சாஸௌ நரஶ்ச=வைஶ்வாநர: இப்படிப்பட்ட வைசுவாநரன் प्रथमः पादः ப்ரதம: பாத: = சகல தேசங்களிலும் ஆதாரமாக கர்த்தாவாக இருக்கிற ஆத்மாவுக்கு முதல் ரூபமென்று அர்த்தம். ॥ 3 ॥

3-வது மந்திரம். ஸூவைதம்.

அ-கை :—அந்த அம்சங்கள் எவை அவர்களுடைய ஸ்தானங்கள் எவை. வியாபாரங்கள் எவை. ரூபங்கள் எப்படிப்பட்டவை. அவர்களுக்கு போக்கியம் எது. இவைகளை யெல்லாம் இப்போது சொல்லுகிறுர்.

जागरितस्थानः ஜாகரிதஸ்தாந:=எந்த இடத்திலிருந்து விழித்துக்கொண்டிருக்கிறுனே அந்த இடம் ஜாகரிதம் அதாவது சக்ஷுஸ். அதையே ஸ்தானமாக உடையவன் ஜாகரிதஸ்தான: கண்ணை ஸ்தானமாக உடையவன்.

बहिः प्रज्ञः பஹி: ப்ரஜ்ஞ: பஹி: என்கிற சப்தம் பாஹ்ய பதார்த்தத்தைக் கூறுகிறது. பிரஜ்ஞ: என்னும் பதம் பிரஞ்ஞையை உண்டு பண்ணுகிறவனைக் கூறுகிறது. ஆகவே பாஹ்ய பதார்த்தத்தின் ஞானத்தை உண்டு பண்ணுகிறவன் என்பது அர்த்தம்.

सप्ताङ्गः ஸப்தாங்க:=நான்கு கைகள், இரண்டு பாதங்கள், யானை முகமுள்ளவனுகையால் துதிக்கை ஒன்று ஆக ஏழு அங்கங்களுடன் கூடினவன்.

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுக: = நடுவிலிருக்கிற முகம் யானை முகம்போலிருக்கிறது. ஒவ்வொரு பக்கத்திலும் ஒன்பது மனுஷிய முகம்போலிருக்கிறது. ஆகவே பத்தொன்பது முகங்களுள்ளவன்.

स्थूलभुक् ஸ்தூலபுக்=சுபமான ஸ்தூலபோகங்களை புஜிக்கிறவன்.

वैश्वानरः வைஶ்வாநர꞉=விசுவமென்றால் எல்லாராலும் அறியத்தகுந்த ஸ்தூல வஸ்து. அதை புஜிக்கிறவன் வைசுவன். நர னென்றால் நாசமற்றவன். ஆகவே ஸ்தூல வஸ்துவை புஜிக்கிறவனாயும் நாசமற்றவனாயு மிருக்கிறவன்.

प्रथमः पादः ப்ரத²ம꞉ பாத³꞉=முதலாவது அம்சம் சர்வ தேகங்களில் ஆதாரம் முதலிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கிற ஆத்மாவின் முதல் ரூபம் என்று அர்த்தம். ॥ 3 ॥

4. உபநிஷத்தின் 4-வது மந்திரம் அத்வைதம்.

स्वप्नस्थानोऽन्तःप्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः प्रविविक्तभुक्तैजसो द्वितीयः पादः ॥ 4 ॥

ஸ்வப்நஸ்தா²நோऽந்த꞉ப்ரஜ்ஞ꞉ ஸப்தாங்க³ ஏகோநவிம்ஶதிமுக²꞉ ப்ரவிவிக்தபு⁴க்தைஜஸோ த்³விதீய꞉ பாத³꞉ ॥ 4 ॥

स्वप्नस्थान; ஸ்வப்நஸ்தா²ந꞉=ஸ்வப்னாவஸ்தையை ஸ்தானமாயுடையவன் (அதாவது அதில் அபிமான முடையவன்)

अन्तः प्रज्ञः அந்த꞉ ப்ரஜ்ஞ꞉=உள்ளே பிரஞ்ஞையை யுடையவன்

सप्ताङ्गः ஸப்தாங்க³꞉=ஏழு அங்கங்களுடையவன்

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுக²꞉=பத்தொன்பது முகங்களுடையவன்

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபு⁴க்=மிகவும் சூட்சுமங்களான பதார்த்தங்களை அனுபவிக்கிறவன்

तैजसः தைஜஸ꞉=தைஜஸன்.

द्वितीयः த்³விதீய꞉=இரண்டாவதான

पादः பாத³꞉=பாதம்

ச-பா :—स्वप्नस्थानः ஸ்வப்நஸ்தா²ந꞉=இந்த தைஜஸனாகிற திருஷ்டாவுக்கு[29] ஸ்வப்னம் ஸ்தானமாயிருப்பதால் அதாவது நான் என்னுடையது என்கிற அபிமானத்திற்கு விஷயமாயிருப்பதால் ஆத்மா ஸ்வப்னத்தை அறிகிறான்.

अन्तः प्रज्ञः அந்த꞉ப்ரஜ்ஞ꞉=ஜாக்கிரத் காலத்திலிருக்கிற பிரஞ்ஞையானது அநேக சாதனங்களுடன் கூடியும், விஷயங்கள் மனதின் கற்பனையாகமட்டுமிருந்தும் அவைகள் தனக்கு வெளியேயிருப்பதாக பாவித்தும், அவைகளின் சம்ஸ்காரத்தை தன் மனதில் சேர்ப்பிவிக்கிறது. சித்திரமடங்கிய வஸ்திரம்[30] போல இப்

---

29. ஆத்மாவின் விசுவனாகிய முதல் பாதத்தைக் கூறி இனி தைஜஸனாகிய இரண்டாவது பாதத்தைக் கூறுகிறான்.

30. ஜாக்கிரத்தின் வாசனையுடன் கூடின மனது ஸ்வப்னத்தில் ஜாக்கிரத் போலிருக்கிற தென்பதற்கு திருஷ்டாந்தம். சுவரில் சித்திரத்தை எழுதினால் [illegible]

படி ஸம்ஸ்காரமடைந்த மனதானது பாஹ்ய சாதனங்களை அபே க்ஷிக்காமல் அவித்தை காமங்களால் ப்ரேரணை செய்யப்பட்டு ஜாக்கிரத்போல் விளங்குகிறது.

अस्य लोकस्य सर्ववतो मात्रामापादेयत्

அஸ்ய லோகஸ்ய ஸர்வாவதோ மாத்ராமாதாய

அதாவது இந்த லோகத்தின் சமஸ்தமான அனுபவங்களின் வாசனைகளை கிரஹித்துத் தூங்குகிறான் என்று ப்ரஹதாரண்யக ச்ருதி சொல்லுகிறது.

முண்டகோபநிஷத்தும் परेदेवेमनसि एकीभवति பரே தேவே மனஸி ஏகீ பவதி முதல் अत्रएषदेवः स्वप्नेमहिमानं अनुभवति அத்ரைஷ தேவ: ஸ்வப்நே மஹிமாநம் அநுபவதி வரையில் இந்த அர்த்தத்தையே கூறுகிறது.

இந்திரியங்களை ~~[illegible]~~ இன்றி உள்ளிருக்கும் மனதின் வாசனா ரூபமான பிரஞ்ஞை ஸ்வப்நத்தில் எவனுக்கு இருக்கிறதோ அவன் அந்த: பிரஞ்ஞன்.

तैजसः தைஜஸ:=விஷயங்களில்லாமலிருக்க கேவல பிரகாசஸ்வரூபமான பிரஞ்ஞையில் விஷயங்களின் வாசனை எவனுக்குத் தோன்றுகின்றதோ அவன் தைஜஸன்.

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக்:விசுவனுக்கு விஷயத்தோடு கூடின ஸ்தூல பிரஞ்ஞை போக்ஜியமாயிருக்கிறது. இவ்விடத்தில் கேவலம் வாசனாமயமான பிரஞ்ஞை போஜ்ஜியமாயிருக்கிறது. ஆகையால் வாசனாமயமான சூட்சுமபோகத்தை யுடையவன் என்று அர்த்தம். மற்றது எல்லாம் முன்சொன்னபடியே. இரண்டாவது பாதம் தைஜஸன். ॥ 4 ॥

2-வது கண்டம் 2-வது மந்திரம் (விசிஷ்டாத்வைதம்.)

ரா° பா:—

स्वप्नस्थानः अन्तः प्रज्ञः ஸ்வப்நஸ்தாந: அந்த: ப்ரஜ்ஞ:=ஸ்வப்நத்தில் உண்டான வஸ்துக்கள் ஜாக்கிர காலத்திலிருக்கிற வஸ்துக்கள்போல் பிறர்களுடைய அனுபவத்துக்கு விஷயமாகமாட்டா. ஆகையால் அந்த வஸ்துக்களை அனுபவிக்கும்படி செய்கிறவன் பிரத்யும்நன் அவன் அந்த: பிரஞ்ஞன் எனப்படுகிறான்.

सप्ताङ्गः ஸப்தாங்க:=ஸ்வப்நத்தில் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்வர்க்கம் சூரியன் முதலிய ஏழு அங்கங்களோடு கூடின

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுக: = ஸ்வப்நத்தில் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட பிராணங்கள், கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள், அக்காலத்தில் லயத்தை அடையாமலிருக்கிற அந்தக்கரணங்கள் நான்கு ஆக பத்தொன்பது முகங்களை உடையவன்.

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக்=தனியே அனுபவிக்கிறவன் ஸ்வப்னபதார்த்தங்கள் அந்தந்த புருஷனால் மட்டும் அனுபவிக்கப்படுகிறபடியால் ஸ்வப்ந தசையை அடைந்த ஜீவன் தனிமையில் அனுபவிக்கிறவனாயிருக்கிறான். அந்த ஜீவனுக்கு அதிஷ்டாதாவான तैजसः தைஜஸ: தைஜஸ சப்தத்தால் கூறப்படும் பிரத்யும்னனையும் பிரவிவிக்தபுக் என்று அறியவேண்டும். மற்றவர்களால் அறியப்படாததாயும் அதிசூக்ஷுமமாகவு மிருக்கிற பதார்த்தங்களை சொப்பனத்தில் அதிஷ்டாதாவான பிரத்யும்னன் தேஜஸ்போல் பிரகாசம் செய்கிறபடியால் தைஜஸன் என்று சொல்லப்படுகிறான். (4)

கூ. பா.

स्वप्नस्थानः ஸ்வப்நஸ்தாந:=ஜீவன் எந்த இடத்திலிருந்து ஸ்வப்நத்திலுண்டான பதார்த்தங்களை பார்க்கிறானோ அது ஸ்வப்நத்திற்கு ஸ்தானம். அதையே ஸ்தானமாக உடையவன் கண்ட தேசத்திலிருக்கிறவன்.

अन्तः प्रज्ञः அந்த: ப்ரஜ்ஞ:=உள் பிரஞ்ஞையுள்ளவன். அதாவது வெளியிலிருக்கிற விஷயானுபோகத்தின் வாசனையாலுண்டான பதார்த்தங்களை அறியப்படுத்துகிறவனாயும் அறிகிறவனாயுமிருக்கிறவன்.

दृष्टञ्चा दृष्टञ्च श्रुतञ्चाश्रुतञ्चानुभूतञ्चा ननुभूतञ्च सर्वं पश्यति த்ருஷ்டஞ்சா த்ருஷ்டஞ்ச ஶ்ருதஞ்சா ஶ்ருதஞ்சாநுபூதஞ்சா நநுபூதஞ்ச ஸர்வம் பஶ்யதி = பார்க்கப்பட்டதையும் பார்க்கப்படாததையும் கேட்கப்பட்டதையும் கேட்கப்படாததையும் அனுபவித்ததையும் அனுபவிக்கப் படாததையும் எல்லாவற்றையும் பார்க்கிறான் என்று சுருதி சொல்லியிருப்பதால் இவ்விடத்தில் ஸ்வப்ந பதார்த்தங்கள் ஜாக்கிறத்வாசனையால் உண்டாகின்றனவென்று பெரும்பான்மையாகச் சொல்லப்பட்டது.

सप्तांगः ஸப்தாங்க:=......

एकोनविंशतिमुखः ஏகோநவிம்ஶதிமுக:=முன்போலவே அர்த்

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக்=பாஹ்ய விஷயங்களை விட வேறான சொப்பன பதார்த்தங்களை புஜிக்கிறவன், புஜிக்கும்படி செய்கிறவன்.

तैजसः தைஜஸ: = தேஜோமயமான சித்தத்திலிருப்பதால் அப்பெயருள்ளவன்.

द्वितीयः पादः த்விதீய: பாத:=அவன் ஆத்மாவுக்கு இரண்டாவது பாதம் அதாவது ரூபம் எனப்படுகிறான். ॥ 4 ॥

I-4-வது மந்திரம். (த்வைதம்)

स्वप्नस्थानः ஸ்வப்நஸ்தாந:=எந்த இடத்திலிருந்து ஜீவன் ஸ்வப்நத்திலுண்டாகும் பதார்த்தங்களைப் பார்க்கிறானோ அது ஸ்வப்நம். அதை ஸ்தானமாக உடையவன் ஸ்வப்நஸ்தானன் கண்ட தேசத்திலிருக்கிறவன் என்று அர்த்தம்.

अन्तः प्रज्ञः அந்த: ப்ரஜ்ஞ:=அந்த: என்னும் பதம் பாஹ்ய வஸ்து விஷய ஞானத்தாலுண்டாகும் வாசனா பரிணாமத்தைக் கூறுகிறது. பிரஞ்ஞ: என்னும் பதம் ஞானத்துடன் கூடினவனைக் கூறுகிறது. ஆகவே வாஸனாமய பதார்த்தத்தை அறியும்படிச் செய்கிறவனும் அறிகிறவனுமான தானும், அந்த: பிரஞ்ஞன் என்பதின் அர்த்தம்.

सप्तांग एकोनविंशति मुखः ஸப்தாங்க ஏகோநவிம்ஶதிமுக:= முன் போலவே அர்த்தம். ॥ 4 ॥

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக்=பாஹ்ய பதார்த்தங்களை விட வேறான வாசனாமய ஸ்வப்ந வஸ்துக்களை ஜீவனை புஜிக்கும்படி செய்கிறான். தானும் புஜிக்கிறான் (அறிகிறான்)

तैजसः தைஜஸ: = தேஜோமயமான சித்தத்திலிருப்பதால் தைஜஸன் என்கிற பெயருள்ளவன்.

द्वितीयः पादः த்விதீய: பாத:=ஆத்மாவின் இரண்டாவது ரூபம் என்று அர்த்தம. ॥ 4 ॥

---

(5) உபநிஷத்தின் 5-வது மந்திரம். (அத்வைதம்)

यत्र सुप्तो न कंचन कामं कामयते न कंचन स्वप्नं पश्यति तत्सुषुप्तम् सुषुप्तस्थान एकीभूतः प्रज्ञानघन एवा ऽनन्दमयो ह्यानन्दभुक्चेतोमुखः प्राज्ञस्तृतीय पादः ॥ 5 ॥

யத்ர ஸுப்தோ ந கஞ்சந காமம் காமயதே ந கஞ்சந ஸ்வப்நம் பஶ்யதி தத்ஸுஷுப்தம் । ஸுஷுப்தஸ்தாந ஏகீபூத: ப்ர [illegible]

[illegible]

यत्र யத்ர = எந்த ஸ்தானத்தில் காலத்திலாவது.
सुप्तः ஸுப்த: = தூங்கினவன்
कञ्चन கஞ்சந = ஒரு
कामं காமம் காமிய விஷயத்தையும்
न कामयते நகாமயதே = விரும்பமாட்டானோ
कञ्चन கஞ்சந = ஒரு
स्वप्नं ஸ்வப்நம் = ஸ்வப்நத்தையும்
न पश्यति ந பஶ்யதி = பார்க்கிறதில்லையோ
तत् தத் = அது
सुषुप्तं ஸுஷுப்தம் = காடநித்திரை ஸ்வப்நமில்லாத தூக்கம்
तृतीयः த்ருதீய: = மூன்றாவதான
पादः பாத: = பாதம்
प्राज्ञः ப்ராஜ்ஞ: = பிராஞ்ஞன்
(सः ஸ: = அவன்)
सुषुप्तस्थानः ஸுஷுப்தஸ்தாந: = சுஷுப்திஸ்தான முடையவன்
एकीभूतः ஏகீபூத: = ஒன்றாக இருக்கிறவன்
प्रज्ञानघनः एव ப்ரஜ்ஞாநகந: ஏவ = அவிவேக ரூபமாயிருப்பதால் பிரஞ்ஞானகநன் எனப்படுகிறான்
आनन्दमयः हि ஆநந்தமய: ஹி = ஆநந்தப்பிராயம்
आनन्दभुक् ஆநந்தபுக் = ஆநந்தத்தை அநுபவிக்கிறவன்
चेतोमुखः சேதோமுக: = ஜாக்கிரத் ஸ்வப்ந மனதுக்கு துவாரம்போலிருக்கிறவன்

ச-பா:—ஆத்மாவின் மூன்றாவது பாதம் இந்த மந்திரத்தில் கூறப்படுகிறது. இந்த மூன்றாவது பாதம் பிராஞ்ஞன். இவன் சுஷுப்தி அபிமானி. சுஷுப்தியாவது எந்த ஸ்திதியில் அல்லது காலத்தில் ஸ்தூலவிஷயவிருத்தியும் அதற்குவேறான வாசனா மாத்திரத்தின் விருத்தியும் இல்லையோ அதுவேயாம். தத்துவத்தை அறியாமையாகிய நித்திரை ஜாக்கிரத் ஸ்வப்நாவஸ்தைகளிலுமிருக்கிறது. இந்த அவஸ்தைகளுக்கு வேறான சுஷுப்தி அவஸ்தையின் லக்ஷணத்தைச் சொல்லும்பொருட்டு மேற்சொல்லிய இரண்டு விசேஷணங்களும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. அல்லது, தத்துவத்தைஅறியாமையாகிய தூக்கம் மூன்று அவஸ்தைகளுக்கும் சமானமாயிருப்பதால் ஜாக்கிரத்ஸ்வப்நங்களினின்றும் சுஷுப்தியைப் பிரித்துக் காண்பிக்கும் பொருட்டு மேற் சொல்லிய விசேஷணங்களை அதாவது யாதொரு கோரிக்கையையும் கோரும [illegible] வில்லை, ஸ்வப்நம் [illegible], இவை [illegible]

அல்லது, இந்த சுஷுப்தி அவஸ்தையில் அல்லது காலத்தில் ~~தூங்கும் மனிதன் யாதொரு காம்யத்தையும் இச்சிக்கிறதில்லை.~~ சுஷுப்தியில் மற்ற இரண்டு ஸ்திதிகளிற்போல் அன்னியதாகிரஹண ரூபமான ஸ்வப்ந தர்சனமாவது இச்சையாவது யாதொன்றுமில்லை. இந்த காடமான நித்திரையை ஸ்தானமா யுடையவன் அதாவது சுஷுப்தி ஸ்தாநாபிமானியாக சொல்லப்படுகிறான்.

एकीभूतः ஏகீபூத:=ஜாக்கிர ஸ்வப்நங்களால் பிரிக்கப்பட்ட துவைத வியவஹாரங்க ளெல்லாம் மனதாற் கற்பிக்கப்பட்டவைகளாக யிருக்கின்றன. பகல் காலத்திலுள்ள சகலபதார்த்தங்களும் தங்கள் தங்கள் குணவிசேஷங்களை இழந்து போகாமலும் இரவில் பிரித் தறியப்படாமல் ஒரே அந்தகாரத்தில் முழுகிப் போவது போல் இருக்கின்றன. அப்படியே ஜாக்கிர ஸ்வப்ந வியவஹாரங்களும் தங்கள் தங்கள் விசேஷங்களை விடாமல் சுஷுப்தியில் ஒன்றாய்விட்டதுபோல் சொல்லலாம். அதாவது காரியங்களெல்லாம் காரணத்தை அடைந்து காரணமென்றே சொல்லப்படலாம். அந்த அவஸ்தையில் அந்த உபாதியுடைய ஆத்மா ஏகீ பூதனாகிறான் அதாவது இவ்விடத்தில் எல்லாம் ஒன்றாய் விடுகிறது. ஆகையாற்றான் ஸ்வப்நஜாக்கிரங்களின் மனோ கற்பனைகளான பிரஞ்ஞைகளும் சுஷுப்தி காலத்தில் மொத்தளாகாரம் போல் ஆய்விடுகிறது. இந்த அவஸ்தை அவிவேக ரூபமாயிருப்பதால் பிரஞ்ஞானகனமென்று சொல்லப்படுகின்றது. இராத்திரியில் இரவின் இருட்டால் பிரித்தறியப்படாத சர்வமும் கனம் அதாவது மொத்தளாகாரமாயிருப்பதுபோல்ஆத்மாபிரஞ்ஞான கனமாகவேயிருக்கிறான். एव ஏவ சப்தத்தால் பிரஞ்ஞையைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்று அர்த்தம்.

आनन्दमयः ஆநந்தமய:=மனது விஷய விஷயி ஆகாரமாக பரிணமிக்கிறதினால் உண்டாகும் சிரமமில்லை. அதனால் துக்கமில்லை. ஆனதால் ஆத்மா ஆநந்த மயன். அதாவது வெகு ஆநந்த முள்ளவன் என்று அர்த்தம். ஆநந்த ரூபமன்று. ஏனெனின் நாசமாகாத ஆநந்த மற்றவனாக இருக்கிறான்.

आनन्दभुक् ஆநந்தபுக்=உலகத்தில் சிரமமன்றியில் சுகியாயிருக்கிற புருஷன் ஆநந்தத்தை புஜிக்கிறதாகச் சொல்லப்படுகிறான். யாதொரு சிரமமில்லாத இந்த ஸ்திதி இவனால் அநுபவிக்கப்படுகிறபடியால் இவன் ஆநந்தபுக். एषोऽस्य परम आनन्दः ஏஷோ(அ)ஸ்ய பரம ஆநந்த: என்கிற சுருதியும் சுஷுப்தியிலிருக்கிற புருஷனுக்கு தன் ஸ்வரூபமான நிரதிசயாநந்தம் விளங்குகிறதென்று [illegible]கிறது.

चेतोमुखः சேதோமுக:=ஜாக்கிர ஸ்வப்னங்களை அறிய எவன் துவாரம் அதாவது காரணமாயிருக்கிறானோ. அதாவது ஜாக்கிர ஸ்வப்னங்களின் விஷயங்களை அறிய சேதஸ் துவாரம். அதாவது காரணமாயிருப்பதால் இவன் சேதோ முகன் எனப்படுகிறான்.

प्राज्ञः ப்ராஜ்ஞ:=சென்றவைகளையும், வரப்போகிற வைகளையும் அறியும் தன்மையும், சர்வ விஷயங்களை அறியும் தன்மையும் இவனுக்கே யிருப்பதால் இவன் பிராஞ்ஞன், சுஷுப்தியிலிருக்கிறவனும் ஜாக்கிர ஸ்வப்னங்களின் பிரஞ்ஞையுடன் கூடியிருந்தபடியால் இப்போது பிராஞ்ஞன் எனப்படுகிறான். ஞான மாத்திரம் இவனுக்கே ஏற்பட்ட ரூபமாயிருப்பதால் இவன் பிராஞ்ஞன். மற்றவர்களுக்கு ஞானமும் ஞானவிஷயமான விஷயங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

तृतीयः पादः த்ருதீய: பாத:=இந்த பிராஞ்ஞன் மூன்றாவது பாதம். ॥ 5 ॥

II - 3 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

ஸம் பாட:—

यत्र யத்ர=எந்த ஸ்தானத்தில்

सुप्तः ஸுப்த:=ஜீவன் தூங்கிக்கொண்டு

नकञ्चनकामं कामयते நகஞ்சந காமம் காமயதே = இராக முதலிய தோஷமற்றவனாக இருந்துகொண்டு, ஒன்றையும் இச்சிக்காமலும்

स्वप्नं ஸ்வப்நம்=ஸ்வப்னத்தை

नपश्यति நபஶ்யதி=பார்க்கவில்லையோ

तत् தத்=அந்த ஸ்தானத்தை

सुषुप्तं ஸுஷுப்தம்=சுஷுப்தி என்கிறார்கள்.

सुषुप्तस्थाने एकीभूतः ஸுஷுப்தஸ்தாநே ஏகீபூத:=சுஷுப்தி ஸ்தானத்தில் ஒன்றாக ஆகி அதாவது தான் சுஷுப்தி ஸ்தானமாக இருந்தான் என்று அர்த்தம். तदभावो नाडिषु तच्छ्रुतेरात्मनि च ததபாவோ நாடீஷு தச்ச்ருதேராத்மநிச=(III-2-7) என்கிற பிரம்ம சூத்திர அதிகாரணத்திற் சொல்லியபடி சுஷுப்தஸ்தானனாக இருந்துகொண்டு

प्रज्ञानघनः ப்ரஜ்ஞாநகந:=ஞான ஸ்வரூபனாக இருக்கிறான்.

आनन्दमयः ஆநந்தமய:=ஆநந்த ஸ்வரூபன். ஜீவனுக்கு சுஷுப்தி காலத்திலுண்டான ஆநந்தானுபவத்தை உண்டுபண்ணுகிறான்

चेतोमुखः சேதோமுக²꞉=சுத்த மனதால் பிரகிக்கத்தருந்தவ னையும் ஞானாநந்த ஸ்வரூபனுகவுமிருக்கிறவன்.

आनन्दभुक् ஆநந்த³பு⁴க் = ஆநந்தத்தை அனுபவிக்கிறவனுக இருக்கிறுன். இப்படி

प्राज्ञः ப்ராஜ்ஞ꞉=எந்த பிராஞ்ஞனிருக்கிறுனே; சங்கர்ஷணன் என்று பெயருள்ள அந்த பிராஞ்ஞன்

तृतीयः पादः த்ருதீய꞉ பாத³꞉=மூன்றுவது பாதமாக இருக்கி றுன்

கூ. பா.

அ·கை :—மூன்றுவது பாதத்தின் ஸ்தானத்தைச் சொல்லு வதற்காக அந்த ஸ்தானத்தின் ஸ்வரூபத்தைக் கூறுகிறுர்.

यत्र யத்ர=எந்த இடத்தில்

सुप्तः ஸுப்த꞉ = அஞ்ஞானத்தால் மறைபட்டவன் அல்லது प्राज्ञेनात्मना संपरिष्वक्त : ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்த꞉=சுஷுப்தி காலத்தில் ஜீவன் பிராஞ்ஞனை பரமாத்மாவுடன் சம்பந்தத்தை அடைகிறுன் என்று சுருதியில் சொல்லியிருப்பதால் சுகரூப னை பகவானை அடைந்தவன்.

कञ्चनकामं கஞ்சந காமம்=இச்சிக்கக்கூடிய யாதொன்றையும்

नकामयते ந காமயதே= இச்சிக்கிறதில்லை

कञ्चनस्वप्नं கஞ்சந ஸ்வப்நம் = ஸ்வப்நத்திலுண்டான யாதொரு பதார்த்தத்தையும்

नपश्यति ந பஶ்யதி=பார்க்கிறதில்லை. தன்னைவிட வேறென் றையும் பார்க்கிறதில்லை என்பது கருத்து.

तत् தத்=அந்த ஸ்தானத்தை

सुषुप्तं ஸுஷுப்தம்=சுஷுப்தமென்று சொல்லுகிறுர்கள்.

सुषुप्तस्थानः ஸுஷுப்தஸ்தா²ந꞉ = சுஷுப்தத்தை ஸ்தானமாக உடையவன் அதாவது ஹிருதய தாமரைப்பூவின் நடுவிலிருக்கும் காயின் நுணியிலிருக்கிறவன் என்பது தாற்பரியம்

एकीभूतः ஏகீபூ⁴த꞉=வைசுவாநரன், தைஜஸன், இவர்கள் போல் இவனும் ஞானம் ஆநந்தம் முதலான ரூபங்களுள்ளவன்.

प्रज्ञानघनः ப்ரஜ்ஞாநக⁴ந꞉=கர்மத்தால் சூழப்பட்ட ஜீவன் கனம் எனப்படுகிறுன். சுஷுப்தி காலத்தில் ஜீவஸ்வரூபத்தை அறிகிற வன் கனப்பிரஞ்ஞன். மேல் கனப்பிரஞ்ஞன் என்று சொல்லியிருப்ப தால் இவ்விடத்தில் பிரஞ்ஞானகனத்தை கனப்பிரஞ்ஞனாகவே சொல் மாற்றியிருப்பதுபோல் அறியலாம். அல்லது பிரஞ்ஞாபிதஃ [illegible]
[illegible]
என்று அறியவும்.

आनन्दमयः ஆநந்தமய:=பூர்ணாநந்தத்தை உடையவன் என்பது கருத்து.

हि ஹி=यतोवाचोनिवर्त्तन्ते யதோவாசோநிவர்த்தந்தே என்கிற சுருதியில் பிரசித்தமாயிருக்கிறவன்.

आनन्दभुक् ஆநந்தபுக்=விஷய போகங்களை விட்டு ஆநந்தத்தை அனுபவிக்கிறவனும் அனுபவிக்கும்படி செய்கிறவனுமாயிருக்கிறவன் என்று அர்த்தம். ஆகையால் ஸ்தூலத்தை புஜிக்கும் தன்மையும், பிரவிவிக்தமாக புஜிக்கும் தன்மையும் நித்திய பூர்ணாநந்தானுபவமுள்ளவனுக்கு கிரீடாரூபம் என்பது கருத்து.

चेतोमुखः சேதோமுக:=ஞானரூப முகத்தையுடையவன் முகமென்பது உபலக்ஷணம். ஞானரூப சகல அவயவங்களையுடையவனென்று அர்த்தம். ஆநந்தமய: சேதோமுக: என்கிற இரண்டு விசேஷணங்கள் மேற்சொன்ன இரண்டு ரூபங்களுக்கென்றும், ப்ராஜ்ஞ: என்று இனி வரும் விசேஷணம் நான்காவது ரூபத்துக்கும் இதற்கும் என்றும் அறியவும். प्राज्ञः ப்ராஜ்ஞ: ப்ரகர்ஷேண + ஞாபயதி=ஜீவன் விசேஷமாய் பாஹ்ய ஸ்வாப்நிக பதார்த்தங்களை அறியும்படி செய்யாதவன். ஆகையால் ப்ராஜ்ஞன் என்று பெயருடையவன் அவன்

तृतीयः पादः த்ருதீய: பாத:=ஆத்மாவுக்கு மூன்றாவது ரூபம் ॥ 5 ॥

I - 5 - வது மந்திரம். (துவைதம்)

அ-கை:—மூன்றாவது பாதத்தின் ஸ்தானத்தை குறிப்பிடுவதற்காக ஸ்தான ஸ்வரூபத்தைக் கூறுகிறார்.

यत्र யத்ர=எந்த இடத்தில்

सुप्तः ஸுப்த:=सु+(सुखरूपं)भगवन्तं प्राप्तः=सुप्तः ஸுஸம் (ஸுகஸ்வரூபம் பகவந்தம்) + ப்ராப்த:=ஸுப்த:=அஞ்ஞானத்தால் சூழப்பட்டவன் அல்லது ஸுகஸ்வரூபியான பகவானை அடைந்தவன். இதற்கு

प्राज्ञेनात्मनासंपरिष्वक्तः ப்ராஜ்ஞேநாத்மநாஸம்பரிஷ்வக்த: முதலிய சுருதிகள் பிரமாணம்.

नकञ्चन कामं कामयते நகஞ்சந காமம் காமயதே =இச்சிக்கக்கூடிய யாதொரு வஸ்துவையும் இச்சிக்கிறதில்லையோ

नकंचनस्वप्नं पश्यति நகஞ்சந ஸ்வப்நம் பச்யதி =ஸ்வப்நத்திலுள்ள யாதொரு [illegible]

[illegible]

तत् सुषुप्तं தத் ஸுஷுப்தம் = அந்த ஸ்தானமானது ஸுஷுப்தமென்று சொல்லப்படுகிறது.

सुषुप्तस्थानः ஸுஷுப்தஸ்தாநஃ = ஸுஷுப்தத்தை ஸ்தானமாயுடையவன். ஹிருதய தாமரை பூவின் நுனியிலிருக்கிறவனென்று அர்த்தம்.

एकीभूतः ஏகீபூதஃ = வைசுவாநரன் தைஜஸன் இவர்களுடன் சேர்ந்து ஒன்றாக ஆனவன்.

प्रज्ञान घनः ப்ரஜ்ஞாநகநஃ = அவித்தையால் சூழப்பட்ட ஜீவன் ப்ரஜ்ஞாநகநனென்று சொல்லப்படுகிறான். ஸுஷுப்தி காலத்தில் ஜீவனுடைய ஸ்வரூபம், அஞ்ஞானம், அத்துடன் கூடின காலம் இம்மூன்றையும் ஜீவன் அறியும்படி செய்கிறபடியால் பிரஞ்ஞானகனனென்று சொல்லப்படுகிறான். प्रज्ञापितः + घनः (जीवः) येनसः=प्रज्ञानघनः ப்ரஜ்ஞாபிதஃ + கநஃ (ஜீவஃ) யேநஸஃ=ப்ரஜ்ஞாநகநஃ அல்லது घनप्रज्ञः கநப்ரஜ்ஞஃ என்று இனி சொல்லப்போகிறபடியால் பிரஞ்ஞானகன என்பதை கனப்பிரஞ்ஞன் என்பதின் மாறுதலாக அறியலாம்.

आनन्दमयः ஆநந்தமயஃ=மிகுந்த ஆநந்தமுள்ளவன். यतोवाचो निवर्त्तन्ते யதோவாசோ நிவர்த்தந்தே முதலிய சுருதிகளில் இது பிரசித்தம் என்பதை हि ஹி என்பது காட்டுகிறது.

आनन्दभुक् ஆநந்தபுக் விஷயானுபவமன்றியில் ஆநந்தத்தை அனுபவிக்கிறவன். அனுபவிக்கும்படி செய்கிறவன். இவ்விடத்தில் சொல்லிய ஸ்தூலபுக், பிரவிவிக்தபுக், ஆநந்தபுக், இவைகள் நித்திய பூர்ணாநந்தானுபவ ரூபத்துக்கு கிரீடாரூபமாயிருக்கிறதாக அறியவும்.

चेतोमुखः சேதோமுகஃ ஞான ஸ்வரூபமான முகமுள்ளவன். ஞானஸ்வரூபமான ஸர்வாவயவ முள்ளவன் என்பது கருத்து இந்த ஆநந்தமயத்வமும் சேதோமுகத்வமும் மேற்சொன்ன இரண்டு ரூபங்களிலுமுண்டு.

प्राज्ञः ப்ராஜ்ஞஃ = அதிகமான ஒன்றையும் அறியும்படிச் செய்யாதவன். ஜீவஸ்வரூபம், காலம், அஞ்ஞானம் இவைகளைத்தவிர வேறு ஒன்றையும் அறியும்படி செய்யாததால் பிரஞ்ஞன் என்று பெயர் சித்தித்தது.

உபநிஷத்தின் ௬-வது மந்திரம். (அந்வயம்)

एष सर्वेश्वर एष सर्वज्ञ एषोऽन्तर्याम्येष योनिः सर्वस्य प्रभवाप्ययौ हि भूतानाम् ॥ ६ ॥

𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑍇𑌷 𑌯𑍋𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌪𑍍𑌯𑌯𑍌 𑌹𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 ॥ ௬ ॥

एषः 𑌏𑌷𑌃 = இந்த பிராஞ்ஞன்
सर्वेश्वरः 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 = சமஸ்தத்துக்கும் ஈசுவரன்
एषः 𑌏𑌷𑌃 = இந்த பிராஞ்ஞன்
सर्वज्ञः 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 = சமஸ்தத்தை அறிந்தவன்
एषः 𑌏𑌷𑌃 = இந்த பிராஞ்ஞன்
अन्तर्यामि 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿 = உள்ளே இருந்து நியமனம் செய்கிறவன்.
एषः 𑌏𑌷𑌃 = இவன்
सर्वस्य 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 = சமஸ்தத்துக்கும்
योनिः 𑌯𑍋𑌨𑌿𑌃 = உபாதான காரணம்
भूतानां 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 = பூதங்களின்
प्रभवाप्ययौ हि 𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌪𑍍𑌯𑌯𑍌 𑌹𑌿 = உத்பத்திப் பிரளயங்களும்

(एष एव 𑌏𑌷 𑌏𑌵 = இவனே)

ச-பா:—एष सर्वेश्वरः 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 = இந்த சுஷுப்திக்கு அபிமானியான பிராஞ்ஞன் தன் ஸ்வரூபத்திலிருந்துகொண்டு அதாவது உபாதியற்ற சைதன்னிய ஸ்வரூபமாயிருந்துகொண்டு சகல பிரபஞ்சத்துக்கும் ஈசுவரனாயிருக்கிறான். அதாவது சகலத்தையும் நியமனம் செய்கிறான். மற்றவர்கள் சொல்லுவதுபோல் ஈசுவரனை இதைவிட வேறாக பாவிக்கமுடியாது. प्राणबन्धनं हि सोम्यमनः 𑌪𑍍𑌰𑌾𑌣𑌬𑌨𑍍𑌧𑌨𑌂 𑌹𑌿 𑌸𑍋𑌮𑍍𑌯𑌮𑌨𑌃 = அதாவது "மனஸ் சப்தத்தால் கூறப்படும் ஜீவன் பிராண சப்தத்தால் கூறப்படும் பிரம்மமாகவே ஆய்விடுகிறான்" என்கிற சுருதியும் மேற்கூறிய அர்த்தத்தையே விவரிக்கிறது.

एष सर्वज्ञः 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 = இவனே சர்வ பேதங்களுள்ளவனாய் சகலத்தையும் அறிகிறான்.

एषः अन्तर्यामी 𑌏𑌷𑌃 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍀 = சமஸ்தபூதங்களின் உள்ளே பிரவேசித்து சமஸ்தத்தையும் நியமனஞ்செய்கிறபடியால் இவன் அந்தர்யாமி.

एषयोनिः सर्वस्य 𑌏𑌷𑌯𑍋𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 = சமஸ்தமான ஜகத்தும் இவனிடத்திலிருந்து உண்டாவதால் இவனே சமஸ்தத்துக்கும் காரணம். ॥ ௬ ॥

11 - 4 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்)

ரு॰ பா॰:—

ஸ்தாநம்: ஸ்தாநம்=ஸ்தானம். மற்ற பதங்கள் ஸ்பஷ்டம். விசுவன் தைஜஸன் பிராஞ்ஞன் மூன்று பேர்களும் பகவானுடைய சரீரமாகையால் சர்வேசுவரத்வாதிகுணங்கள் இம்மூன்று பேர்களுக்கும் சமானமாயிருந்தாலும் அவரவர்களுக்குத் தனித்தனியே ஏற்பட்ட மேற்சொன்ன குணங்களுடன் அவரவர்களிருப்பதாக தியானம் செய்யவேண்டியது என்பது கருத்து. (6)

கூ॰ பா॰

அ-கை:—இந்தப்பிரகாரம் மூன்று பாதங்களையும் நிரூபணம் செய்து நான்காவது பாதத்தை நாந்த: பிரஞ்ஞ: என்கிற மந்திரத்தில் நிரூபணம் செய்ய இச்சிக்கிறவராய், வைசுவாநராதிகளுடைய ஸ்தானம், வியாபாரம் முதலியவைகளைச் சொல்லுவதற்குமுன் நான்கு ரூபங்களுடைய மஹிமையைக் கூறுகிறார்.

एष: ஏஷ:=மேற்சொன்ன ரூபங்களுடனும் இனி சொல்லப்போகிற ரூபத்துடனும் கூடின ஆத்மா. ஏஷ: என்னும் பதத்தின் ஆவிர்த்தியானது ரூபங்களில் இந்த வேதத்துக்கிருக்கும் தாற்பரியத்தைக் கூறுகிறது. இதனால் (அதாவது இந்த ரூபங்களை வேதம் ஒப்புக்கொள்ளுகிறபடியால்) இந்த குணங்கள் அஞ்ஞானத்தால் கற்பிக்கப்பட்டவை என்று சொல்லும் பக்ஷம் தள்ளப்படுகிறது.

सर्वेश्वर: ஸர்வேச்வர:=ஜாக்கிறதாதி நான்கு அவஸ்தைகளுடன் கூடின சகல வஸ்துக்களுக்கும் சேஷி. அதாவது பிரதானமாயிருக்கிறவன்.

सर्वज्ञ: ஸர்வஜ்ஞ:=சகல பிரபஞ்சத்தின் தன்மையையும் ஸ்வரூபத்தையும் அறிகிறவன்.

अन्तर्यामि அந்தர்யாமீ=சரீரத்துக்குள்ளிருந்துகொண்டு நியமனம் செய்கிறவன்.

हि ஹி=எக்காரணத்தால்

भूतानां பூதாநாம்=பிராணிகளுடைய

प्रभवाप्ययौ ப்ரபவாப்யயௌ=உற்பத்தி விநாசங்களுக்கு ஹேதுவாயிருக்கிறானோ அக்காரணத்தால

सर्वस्य ஸர்வஸ்ய=சகல ஜந்துக்களுக்கும்

[illegible]

I - 6 - வது மந்திரம். (துவைதம்)

அ-கை :—இந்தப்படி விசுவாதி மூன்றின் மஹிமையை நிரூபணம் செய்து नान्त: प्रज्ञं ந பஹி: ப்ரஜ்ஞம் = என்கிற வாக்கியத்தால் நான்காவது ரூபத்தின் மஹிமையை சொல்ல இச்சித்து, நான்கின் மஹிமையையும் ஒரே காலத்தில் கூறுகிறார்.

एष: ஏஷ: = முன் கூறப்பட்டும் இனி கூறப்படப் போகிறதுமான ரூபங்களுடன் கூடின ஆத்மா (ஏஷ: என்று அடிக்கடி கூறுவதானது தாற்பரியத்தைக் கூறுகிறது.)

सर्वेश्वर: ஸர்வேஶ்வர: = சகலத்துக்கும் அதிபதி

एष: ஏஷ: = இந்த ஆத்மா

सर्वज्ञ: ஸர்வஜ்ஞ: = சகல விஷயங்களின் ஞானமுடையவன்

एष: ஏஷ: = இந்த ஆத்மா

अन्तर्यामि அந்தர்யாமி = பிராணிகளுக்குள் இருந்துகொண்டு சகலத்தையும் நியமனம் செய்கிறவன்

एष: ஏஷ: = இந்த ஆத்மா

सर्वस्ययोनि: ஸர்வஸ்யயோநி: = சகலத்துக்கும் காரணம்.

भूतानां प्रभवाप्ययौ பூதாநாம் ப்ரபவாப்யயௌ = இந்த வாக்கியம் முன் சொல்லிய யோனி என்பதற்கு வியாக்கியான ரூபம் பூதங்களின் அதாவது பிராணிகளின் உற்பத்தி விநாசங்கள் ஆத்மாவிடமிருந்து உண்டாவதால் யோனி அதாவது காரணமாயிருக்கிறான் என்று அர்த்தம்.

चतुर्धावस्थितो देहे परमात्मा सदानत: ।
वैश्वानरो जागरितस्थानगो गजवक्त्रक: ॥
निर्माता बाह्यसंवित्तेर्जीवानां तदगोचर: ।
अष्टादशमुखान्यस्य पुमाकाराणि सर्वश: ॥
मध्यमंतु गजाकारं चतुर्बाहु धर: पुमान् ।
पादौ हस्ता इति सप्तांग ईरित: ॥
स्थूलान्भोगानिंद्रियै: शुभान्भुंक्तेन चाशुभान् ।
विश्वं स्थूलं समुद्दिष्टं सर्वगम्यत्व हेतुत: ॥
तत्संबंधी नरोनाशाद्वैश्वानर उदाहृत: ।
विनायकस्तु विश्वस्य ध्यानाद्देवनवक्त्रतां ॥
तथैव तैजसध्यानाद्विध्याना दिंद्रतां ।
चतुर्ध्यानात्तु रुद्रत्वं रुद्र आपजनार्दनात् ॥
एवं भूतगुणो विष्णुश्चतुरात्मा परात्पर: । (इति महायोगे)
जाग्रद्दर्शन सं[illegible]रूपत्वात्[illegible]तुयत् ॥

सुषुप्तं तु तमो ज्ञेयं हरिं प्राप्यतदावृतः ।
न कामयेन्नैव पश्येज्जीवः स्वात्मतमोविना ॥
कालंचतस्य स्थानस्य पतिः प्राज्ञो हरिः स्वयं ।
चित्तस्थो दर्शयेद्यस्मात्तैजसः स्वप्नकृद्धरिः ॥
न बाह्यं ज्ञापयेद्यस्मात्प्राज्ञस्तेन जनार्दनः ।
एकीभावं व्रजतां च तेन विश्वतैजसः ॥
एकीभूतस्ततः प्राज्ञो घनो जीवस्तमो वृतः ।
तन्मात्रस्य सकालस्य यतः प्रज्ञः प्रदर्शनात् ॥ (इति प्रकाशिकायां)·

[illegible] ॥
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
பதார்த்தம் ... ॥
ஏவம் ... விஷ்ணு ... ।
(இதி ...
ஜாக்ரத்ஸ்வப்ந ஸம்ப்ரதாயே ... ॥
ப்ரவிவிக்தம் ... காரணம் ... ॥
(இதி வாராஹே
ஸுஷுப்தந்து தமோஜ்ஞேயம் ஹரிம் ப்ராப்யததாவ்ருத:)
ந காமயேந்நைவ பஶ்யேஜ்ஜீவ: ஸ்வாத்மதமோவிநா ॥
காலஞ்சதஸ்ய ஸ்தாநஸ்யபதி: ப்ராஜ்ஞோ ஹரி: ஸ்வயம் ।
சித்தஸ்தோ தர்ஶயேத்யஸ்மாத்தைஜஸ: ஸ்வப்நக்ருத்தரி: ॥
ந பாஹ்யம் ஜ்ஞாபயேத்யஸ்மாத்ப்ராஜ்ஞஸ்தேந ஜநார்தந: ।

ஏகீபாவம் வ்ரஜதாஞ்சதேந விஶ்வதைஜஸ: ॥
ஏகீபூதஸ்தத: ப்ராஜ்ஞோகநோ ஜீவஸ்தமோ வ்ருத: ।
தந்மாத்ரஸ்ய ஸகாலஸ்யயத: ப்ரஜ்ஞ: ப்ரதர்ஶநாத் ॥
(இதி ப்ரகாஶிகாயாம்)

1

॥ अथ गौडपादीयकारिकाः ॥

॥ अत्रैते श्लोका भवन्ति ॥ காரிகை.

बहिः प्रज्ञो विभुर्विश्वो ह्यन्तः प्रज्ञस्तु तैजसः ।
घनप्रज्ञस्तथा प्राज्ञ एक एव त्रिधा स्मृतः ॥ 7 ॥

॥ அத கௌடபாதீயகாரிகா: ॥

॥ அத்ரைதே ஶ்லோகா பவந்தி ॥

பஹி: ப்ரஜ்ஞோ விபுர்விஶ்வோ ஹ்யந்த: ப்ரஜ்ஞஸ்து தைஜஸ: ।
கநப்ரஜ்ஞஸ்ததா ப்ராஜ்ஞ ஏக ஏவ த்ரிதா ஸ்ம்ருத: ॥ 7 ॥

अत्र அத்ர=இவ்விடத்தில் இந்த உபநிஷத்தின் அர்த்தத்தில்
एते ஏதே = இந்த
श्लोकाः ஶ்லோகா:=சுலோகங்கள்
भवन्ति பவந்தி=இருக்கின்றன
विश्वः விஶ்வ:=விசுவன்
विभुः விபு:= எங்கும் வியாபகன்
बहिःप्रज्ञः பஹி:ப்ரஜ்ஞ:=வெளியில் பிரஞ்ஞையுள்ளவன்
तैजसः தைஜஸ:=தைஜஸன்
अन्तःप्रज्ञः तु அந்த:ப்ரஜ்ஞ: து = உள் பிரஞ்ஞையுள்ளவன்
तथा ததா=அப்படியே இந்தப்பிரகாரம்
प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஞ்ஞன்
घनप्रज्ञः கநப்ரஜ்ஞ:=கனப்பிரஞ்ஞன்
एक एव ஏக ஏவ=ஒரு ஆத்மாவே
त्रिधा த்ரிதா=மூன்றுவிதமாக
स्मृतः ஸ்ம்ருத:=நினைக்கப்படுகிறது சொல்லப்படுகிறான் 2

காரிகையின் 2-வது சுலோகம்.

दक्षिणाक्षिमुखे विश्वो मनस्यन्तस्तु तैजसः ।
आकाशे च हृदि प्राज्ञस्त्रिधा देहे व्यवस्थितः ॥ 8 ॥

தக்ஷிணாக்ஷிமுகே விஶ்வோ மநஸ்யந்தஸ்து தைஜஸ: ।
ஆகாஶே ச ஹ்ருதி ப்ராஜ்ஞஸ்த்ரிதா தேஹே வ்யவஸ்தித: ॥ 8 ॥

दक्षिणाक्षिमुखे தக்ஷிணாக்ஷிமுகே = வலது கண்ணின் அக்கிர பாகத்தில்
विश्वः விஶ்வ: = விசுவரூபமாயும்
अन्तः அந்த:=உள்ளே
मनसि மநஸி=மனதில்
तैजसश्च தைஜஸஶ்ச = தைஜஸரூபமாயும்
हृदि ஹ்ருதி=இருதயத்திலிருக்கிற
आका[illegible]

प्राज्ञश्च ப்ராஜ்ஞஶ்ச=பிராஞ்ஞரூபமாயும்

(आत्मा ஆத்மா=ஆத்மா)

त्रिधा த்ரிதா=மூன்றுவிதமாக

देहे தேஹே=தேகத்தில்

व्यवस्थितः வ்யவஸ்தித:=இருக்கிறான்

இந்த உபநிஷத்தின் முந்தின ஆறு மந்திரங்களின் அர்த்தத்தை ஸ்ரீகௌட பாதாசாரியருடைய ஒன்பது சுலோகங்கள் கூறுகின்றன.

बहिःप्रज्ञः......பஹிஃப்ரஜ்ஞ:...... முன் உரையில் சொல்லியது போலவே.

இதற்கு அபிப்பிராயம்:—ஒரே ஆத்மா மூன்று ஸ்தானங்களிலும் கிரமமாக இருப்பதினாலும், "அவனே நான்" என்னும் ஸ்மரணையால் உண்டாகும் பிரத்தியக்ஷ ஞானத்தாலும் ஆத்மா மூன்று ஸ்தானங்களைவிட வேறு என்றும், ஒன்று என்றும், சுத்தமென்றும், அசங்கமென்றும் சித்திக்கிறது. மஹா மத்சியாதி திருஷ்டாந்தத்தைக் கூறும் சுருதி இதற்குப் பிரமாணம்

ஜாக்கிராவஸ்தையிலேயே விசுவாதி மூன்றின் அனுபவத்தையும் காண்பிக்கும் பொருட்டு இந்த சுலோகம் ஆரம்பிக்கப்படுகின்றது. வலது கண்ணில் முக்கியமாயிருந்து கொண்டு ஸ்தூல பதார்த்தங்களைப் பார்க்கிறவன் விசுவன் என்று தியான நிஷ்டையிலிருக்கிறவர்கள் அறிகிறார்கள். இதற்குச் சுருதிப்பிரமாணம்:—"इन्धो ह वै नामैष योऽयं दक्षिणेऽक्षन्पुरुषः" "இந்தோ ஹ வை நாமைஷ யோऽயம் தக்ஷிணேऽக்ஷந்புருஷ:" (பிரஹ IV-2-2)
இதற்கு அர்த்தம்:—வலது கண்ணிலிருக்கிற விசுவனே சூரியாந்தர்கதனையும் பிரகாச ஸ்வரூபமாயுமிருக்கிற விராட் புருஷன்.

ஆக்ஷேபம்:—சூக்ஷ்மப் பிரபஞ்சாபிமானியாயும் சூரிய மண்டலாந்தர்கதனையும், சமஷ்டிசூக்ஷ்மதேகத்தோடு கூடியும், கண்ணிலிருக்கிற இந்திரியத்தை அனுக்கிரகிக்கிறவனையுமிருக்கிற ஹிரணியகர்பன் சம்சாரியான ஜீவனைவிட வேறு. ஸ்தூலப் பிரபஞ்சாபிமானியாயும், சூரிய மண்டலத்திலிருக்கிறவனையும், சமஷ்டிஸ்தூலதேகத்தோடுகூடியும், கண்ணென்கிற கோளகத்துக்கு அனுக்கிரகிக்கிறவனையுமிருக்கிற விராட் ஆத்மாவும் ஜீவனைவிட வேறு. க்ஷேத்திரஞ்ஞனே வியஷ்டிதேகமுள்ளவன் வலது கண்ணிலிருந்துகொண்டு பார்க்கிறவன், சக்ஷுரிந்திரியத்தை நியமனம் செய்கிறவன்,
[illegible]

ருட்காமதேகாபி மானிகளை விடவேறு. ஆகவே சமஷ்டியான ஹிர ணிய கர்பனும் விராட்டும், வியஷ்டியான ஜீவனும் வெவ்வேறா யிருப்பதால் ஒன்று என்று சொல்லுவது அயுக்தம்.

சமாதானம் :—இந்த ஆக்ஷேபம் சரியன்று. ஏனெனில் கற் பிக்கப்பட்ட பேதமிருந்தாலும் வாஸ்தவத்தில் பேதம் அங்கீகரிக் கப்படவில்லை. சுருதிப் பிரமாணம் :—

(1) एकोदेवः सर्वभूतेषु गूढः ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட: (ச்வே VI-11) பிரகாச ஸ்வரூபமான ஒன்றே சகல பூதங்களிலும் மறைப்பட்டிருக்கிறது.

(2) क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத (கீதை XIII-3) "என்னை சகலபிரா ணிகளிலு மிருக்கிற ஆத்மாவாக அறி"

(3) अविभक्तं च भूतेषु विभक्तमिव च स्थितं அவிபக்தம் ச பூதே ஷு விபக்தமிவ ச ஸ்திதம் (கீதை XIII-17) பூதங்களில் விபாகமடை யாமலிருந்தாலும் விபாகம் அடைந்தது போல் அது இருக்கிறது. (இதுவரையில் சமஷ்டியான ஹிரணியகர்பாதிகளும் வியஷ்டியான ஜீவனும் வேறல்லவென்று நிரூபிக்கப்பட்டது. இனி வலதுகண் ணைக் குறிப்பிட்டதின் பிரயோசனத்தைக் காட்டுகிறார்.) சகல இந் திரியங்களும் ஞானசாதகமாயிருந்தாலும் வலது கண்ணில் ஞான சாமர்த்தியம் விசேஷமாய்க் காணப்படுவதால், அதில் விசுவன் இருக்கிறான் என்று குறிப்பிடப்பட்டது.

मनस्यन्तस्तु तैजसः மனஸ்யந்தஸ்து தைஜஸ: :—வலதுகண்ணி லிருக்கிற விசுவன் ரூபத்தைப் பார்த்து, பிறகு கண்ணைமூடி, பார்த்த தையே மனதில் ஸ்மரித்து, ஸ்வப்னத்தில் போல் வாசனா ரூபமாய் விளங்கும் அந்த ரூபத்தையே உள்ளே பார்க்கிறான். ஜாக்கிறத் காலத்தில் விஷயங்களை எப்படி பார்க்கிறானோ அப்படி ஸ்வப்னத் திலும் வாசனா விஷயங்களைப் பார்க்கிறான். ஆகையால் மனதிற் குள்ளிருக்கும் தைஜஸனும் விசுவனே.

आकाशे च हृदि प्राज्ञः ஆகாசே ச ஹ்ருதி ப்ராஜ்ஞ:—மேலும் எந்த விசுவன் தைஜசபாவத்தை அடைந்திருக்கிறானோ அவன் ஸ்ம ரணை என்னும் வியாபாரத்தினின்றும் நிவிர்த்தி அடைந்து, மனோவியாபாரமில்லாததால் ஹிருதயத்தி லிருக்கிற ஆகாச [illegible] ... [illegible] ... [illegible] ...

றான். அதாவது பிராக்ஞனுடைய லக்ஷணத்துடன் கூடியவனாகிறான். தர்சனம், ஸ்மரணம் இவைகள் மனதின் கற்பனைகள். இவைகளில்லாத சமயத்தில், ஹிருதயத்தில் யாதொரு விசேஷமின்றியல் அவ்வியாகிருதப்ராணனாக இருக்கிறதே ஜாக்கிரத்தில் ஸுஷுப்தி எனப்படும். "प्राणो ह्येतान्सर्वान्संवृङ्क्ते" "ப்ராணோ ஹ்யேவைதாந் ஸர்வாந் ஸம்வ்ருங்க்தே" (சா IV-3-3) பிராணனே சகலத்தையும் தன்னிடத்தில் இழுத்துக் கொள்ளுகிறது என்று சுருதி சொல்லுகிறது. ஆகையால் பிராக்ஞன் ஜாக்கிரத்திலுள்ள ஸுஷுப்தியில் அவ்வியாகிருதமான பிராணனாக இருக்கிறான் என்று சொன்னது யுக்தமே. மேலும் தைஜஸனே ஹிரணியகர்ப்பன். ஏனெனின் ஹிரணியகர்ப்பன் சமஷ்டி மனதிலிருக்கிறவன், தைஜஸன் வியஷ்டி மனதிலிருக்கிறவன். சமஷ்டி வியஷ்டி மனது ஒன்றானதால் அவைகளிலிருக்கிற ஹிரணியகர்ப்பனும் தைஜஸனும் ஒன்று என்று கூறுவது யுக்தமே. மேலும் मनोमयोऽयं पुरुषः மனோமயோऽயம் புருஷ: என்கிற (பி V-6-1) சுருதிப்படி புருஷன் மனோமயன் ஹிரணியகர்ப்பன், புருஷரூபம். ஆகையால் ஹிரணியகர்ப்பனுக்கும் மனது சித்திக்கிறது. ஆகையால் இந்த மனதிலிருக்கிற தைஜஸனே ஹிரணியகர்ப்பன் என்று சொல்லுவது யுக்தம்.

ஆக்ஷேபம் :—தூங்குகிறவன் சமீபத்திலிருக்கிற ஜனங்கள், பிராண வியாபாரத்தை வியக்தமாய் பார்க்கிறார்கள்; ஸுஷுப்தியில் பிராணன் இருக்கிறான்; அவன் நாம ரூபங்களால் வியக்தமாயிருக்கிறான். மேலும் तएतस्यैव सर्वे रूपमभवन् த ஏதஸ்யைவ ஸர்வே ரூபமபவந் என்கிற (பி I-5-21) சுருதிப்படி ஸுஷுப்தி அவஸ்தையில் வாகாதி இந்திரியங்களும் பிராணரூபமாகவே இருக்கின்றன; ஆகையால் பிராணன் வியாகிருதன் (ஸ்பஷ்டம்) என்று சொல்லுவது யுக்தம். ஆகையால் பிராணன் அவ்வியாகிருதன் என்று எப்படிச் சொல்லலாம்.

சமாதானம் :—(அவ்வியாகிருதமும் பிராணனும் ஒரு லக்ஷணத்துடன் கூடியிருப்பதால இரண்டும் ஒன்று என்று சொல்லுவதில் தோஷமில்லை என்றார்) இது தோஷமன்று. ஏனெனின் அவ்வியாகிருதத்திற்கு (மாயைக்கு) தேசகாலவஸ்து பரிச்சேதமில்லை. அவ்வியாகிருதமோ தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துவாலும் பரிச்சேதமற்றது. ஸுஷுப்தியில் திருஷ்டியான பிராக்ஞனுடைய பிராணனும் அப்படியே. ஏனெனின் பிராக்ஞனுடைய திருஷ்டிக்கு அக்காலத்திலுள்ள பிராணன் தேசகாலவஸ்து பரிச்சேதம

டைந்திருப்பதாகக் காணப்படுகிறதில்லை. ஆகவே இருவருக்கும் இலக்ஷணம் ஒன்றாக இருப்பதால் இருவரும் சமம் என்று சொல்லுவதில் விரோதமில்லை.

ஆ:—"இந்த பிராணன் என்னுடையது" "இந்த பிராணன் அவனுடையது" என்பதாய் தேசப்பரிச்சேதம் காணப்படுவதால் இருவருக்கும் ஒரு இலக்ஷணம் ஏற்படவில்லை. ஆகையால் இருவரும் ஒன்று என்று சொல்லக்கூடாது.

ச:—ஜாக்கிராவஸ்தையில் பிரதி ஸ்தூல சரீரத்தை உத்தேசித்து "என்னுடையது" "அவனுடையது" என்கிற அபிமானத்தால் பிராணன் வியாகிருதன் என்று தோன்றினாலும், சுஷுப்தி அவஸ்தையில் சரீர பரிச்சேதம் காணப்படாததால் நான் என்னுடையது என்னும் அபிமானமும் காணப்படவில்லை. ஆகையால் பிராணன் அவ்வியாகிருதம் என்று சொல்லுவதில் விரோதமில்லை. நான் என்னுடையது என்னும் அபிமானமுள்ளவர்களுக்கு மரண காலத்தில் அபிமானமிராமற் போவதால் பிராணன் நாமரூபங்களை இழந்து அவ்வியாகிருதனாகிறான். அப்படியே பிராணாபிமானமுள்ளவர்களுக்கும் சுஷுப்தியிலும் அபிமானமில்லாமற் போய் விடுகிறது. இப்படி அபிமானமில்லாமையால் பிராணன் அவ்வியாகிருதன் என்று சொல்லலாம்.

மேலும் तद्धेदं तर्ह्यव्याकृतमासीत्तन्नामरूपाभ्यामेव व्याक्रियते தத்3தே4த3ம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத் தந்நாமரூபாப்4யாமேவ வ்யாக்ரியதே என்கிற (பி I-4-7) சுருதிப்படி அகிதைவமான அவ்வியாகிருதம் ஜகத் சிருஷ்டிக்குக்காரணமாயிருக்கிறதுபோல் பிராணன் என்கிற பிராஞ்ஞனும் ஜாக்கிர ஸ்வப்னங்களின் உற்பத்திக்குக் காரணமாயிருக்கிறான் ஆகவே காரியத்தை உத்தேசித்து காரணமாயிருக்குந்தன்மை இருவர்களுக்கும் சமமாயிருப்பதால் இவர்களும் ஒன்று என்று சொல்லலாம்.

மேலும் உபாதியை உத்தேசித்து இருவரும் ஒன்று என்று சொன்னதுபோல் உபாதியுடன் கூடினதையும் உத்தேசித்து ஒன்று என்று ஏற்படுகிறது. எப்படி எனின் அவ்வியாகிருதத்துடன் கூடினவன் ஈசுவரன். சுஷுப்தியில் பிராணனுடன் கூடினவன் [illegible]

ஆகவே முன் சொன்ன யுக்திகளால் பிராணனும் அவ்வியாகிருதமும் ஒன்றாக இருப்பதால் பிராணனுக்குக்கூறிய விசேஷணங்களான एकीभूतः प्रज्ञानघनः ஏகீபூத: ப்ரஜ்ஞாநகந: இவைகள் பொருந்தும்.

ஆ:—பிராண சப்தம் ஐந்து விருத்திகளுடன் கூடின வாயுவை கூறுகிறதினால் எப்படி அவ்வியாகிருதத்தை பிராண சப்தத்தால் கூறலாம்.

ச:—மற்ற இடங்களில் பிராண சப்தம் பஞ்சப் பிராணன்களைக்கூறினாலும் இவ்விடத்தில் प्राणबन्धनं हि सोम्यमनः ப்ராணபந்தநம் ஹி ஸோம்யமந: என்கிற சுருதியில் மனது சுஷுப்தியில் தன்னுடைய லயத்துக்கு ஆதாரமான பிராணனுடன் கட்டப்பட்டுப்போகிறது என்று சொல்லியிருப்பதால் அவ்வியாகிறதத்திற்கு பிராண சப்தத்தை உபயோகிக்கலாம்.

ஆ:—நீ சொன்ன சுருதியானது सदेवसोम्य ஸதேவஸோம்ய என்று சத் அதாவது பிரம்மத்தைக் கூறும் பிரகரணத்திலிருப்பதால், பிராண சப்தம் பிரம்மத்தைத் தான் கூறும், அவ்வியாகிருதத்தை கூறமாட்டாது.

ச:—இதில் தோஷமில்லை. ஏனெனின் அந்த பிரகிரணம் சுத்தப் பிரம்மத்தைக் கூறாமல் மாயா சபளித பிரம்மத்தைக் கூறுகிறது. ஆகையால் அவ்வியாகிருதத்தை பிராண சப்தத்தால் கூறலாம். அவ்விடத்தில் சுத்தப் பிரம்மத்தைப் பிராணன் கூறினாலும் சகல காரியங்களுக்கும் காரணமாயிருக்குந்தன்மையை விடாமலே அதைக்கூறுகிறது. சுத்தப்பிரம்மத்தை அந்த ஸத் சப்தமும் பிராண சப்தமும் கூறும் பக்ஷத்தில "नेति नेति" "நேதி நேதி" (பிIII-2-11) "यतोवाचो निवर्त्तन्ते" "யதோவாசோ நிவர்த்தந்தே" (தை II-4-9) "अन्यदेवतद्विदितादथो अविदितात्" "அந்யதேவ தத் விதிதாத஥ோ அவிதிதாத்" (கே I-3) என்று சொல்லியிருக்கவேண்டும் नसत्तन्नासत् நஸத்தந்நாஸத் என்கிற வாக்கியப்படி சுத்தப் பிரம்மமே கூறப்பட்டிருக்கும் பக்ஷத்தில்சுஷுப்தியிலும் பிரளய காலத்திலும் பிரம்மத்தில் லயமடைந்து பிரம்மத்துடன் ஒன்றாகப்போகும் ஜீவர்கள் மறுபடியும் வெளிக்கிளம்ப மாட்டார்கள். அல்லது முக்தி தசையில் சத்பிரம்மத்தை அடைந்த முக்தர்களும் மறுபடியும் உண்டாகும்படி நேரிடும். ஏனெனின் அஞ்ஞானமாகிற காரணம் ஒருவருக்கு மில்லை. மேலும் ஞானத்தால் தஹிக்கக்கூடிய காரணமில்லாததினால் ஞானம் வியர்த்தமாகும். ஆகையால், சகல சுருதிகளில் ... (அஞ்ஞானமாகிற) ... பட்டிருப்ப ... மென்றும் சொல்ல

படுகின்றது, அசுருதியாயும் அநிர்வாச்சியமாயுமிருக்கிற அஞ்ஞானத்துடன் கூடின பிரம்மமே காரணமென்று சொல்லியிருப்பதால் சுத்தப் பிரம்மம் (1) अक्षरात् परत: पर: அக்ஷராத் பரதஃ பரஃ (முII-1-2) அதாவது சிரேஷ்டமான அக்ஷரத்தைவிட சிரேஷ்டம் (2) सबाह्याभ्यन्तरोह्यज: ஸபாஹ்யாப்யந்தரோஹ்யஜஃ (முII-1-2) அதாவது காரணரூபமாயும் உண்டாகாதவர், காரிய ரூபமாயுமுண்டாகாதவர் (3) यतो वाचो निवर्त्तन्ते யதோ வாசோ நிவர்த்தந்தே (தைII-4-9) எதினிடமினின்றும் வாக்கு திரும்பி விடுகிறதோ (வாக்குக்கு எட்டாதது என்பது கருத்து) (4) नेति नेति நேதி நேதி (பி III-2-11) இல்லை இல்லை முதலிய சுருதி வசனங்களால் அஞ்ஞான (காரண) சக்திமற்றதாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பிராஞ்ஞ சப்தத்தால் கூறப்பட்டவனுக்கே துரியனாகையால் தேகாதி சம்பந்த மற்றதாயும் பாரமார்த்திகமாயுமிருக்கிற பீஜாவஸ்தையை அதாவது அஞ்ஞான சம்பந்த மற்ற அவஸ்தையை சுருதி இனிதனியேகூறுகிறது. தூங்கியெழுந்திருந்தவனுக்கு "நான் ஒன்றும் அறியவில்லை" என்னும் ஸ்மரணை காணப்படுவதால் அஞ்ஞான சக்திதகாரணாவஸ்தை தேகத்தில் அனுபவிக்கப் படுகிறது. ஆகவே தேகத்தில மும்மூவிதமாக தேகத்திலிருக்கிறான் என்று மூலத்தில் கூறப்பட்டிருக்கிறது.

II - 5 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

அ-கை:—உபநிஷத்தானது, தான் ஸ்வயம் பிரமாணமாக இருந்தாலும் தான் சொன்ன அர்த்தத்தை திடப்படுத்துவதற்காக தன்னால் சொல்லப்பட்ட விஷயத்தை மந்திரங்களாலும் கூறுகிறது.

अत्र அத்ர=மேற்சொன்ன அர்த்தங்களில்

(संवादिन: ஸம்வாதிநஃ=சொன்ன அர்த்தத்தை அனுசரித்துச் சொல்லுகிற)

एते श्लोका: ஏதே ஶ்லோகாஃ=இந்த மந்திரங்கள்

भवन्ति பவந்தி=ஏற்பட்டிருக்கின்றன. வைசுவானரனை பஹிப்ரஞ்ஞன் என்றும் தைஜஸனை அந்த: பிரஞ்ஞன் என்றும் பிராஞ்ஞனை பிரஞ்ஞானகனனென்றும் சொல்லிய அர்த்தத்தை பிரதிபாதிக்கும் மந்திரங்களையே அடியில் வரும் சுலோகங்களும் விவரிக்கின்றன.

त्रिधा: த்ரிதா= [illegible]

[illegible]

∴ एकएव त्रिधास्मृत: ஏகஏவ த்ரிதாஸ்ம்ருத: = மந்திரதிரஷ்டாவான பிரம்மாவானவர் இந்த பகவத் ரூபங்கள் ஒன்று என்றுதான் சொன்னார்.

I - 7 - வது மந்திரம். (அத்வைதம்.)

அ-கை :—உபநிஷத்தே ப்ரமாணமாக இருந்தாலும், அதினால் கூறப்பட்ட அர்த்தத்தை ஸ்திரப்படுத்தும்பொருட்டு பிரமாவால் பார்க்கப்பட்ட மந்திரங்களும் கூறப்படுகின்றன.

अत्र एतेश्लोका: அத்ர ஏதே ச்லோகா: = மேற்சொன்ன விஷயத்தில் பிரமாவால் பார்க்கப்பட்ட ச்லோகங்கள் அநுசரித்துச் சொல்லுகிறதாக இருக்கின்றன. வைச்வாநரன் பஹி: பிரஜ்ஞன் என்றும், தைஜஸன் அந்த: பிரஜ்ஞன் என்றும், பிராஜ்ஞன் பிரஜ்ஞானகனனென்றும் சொல்லிய அர்த்தத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

विश्व: விச்வ: = வைச்வாநரன் என்னும் ரூபம்

विभु: விபு: = சர்வ வியாபகமாயிருந்துகொண்டு

बहि: प्रज्ञ: பஹி: ப்ரஜ்ஞ: = வெளியிலுள்ள பதார்த்தங்களின் ஞானத்தை உண்டு பண்ணுகிறது

तैजस: தைஜஸ: = தைஜஸ ரூபம்

अन्त: प्रज्ञ: அந்த: ப்ரஜ்ஞ: = ஸ்வப்நத்திலுள்ள பதார்த்தங்களின் ஞானத்தை உண்டு பண்ணுகிறது.

तथा ததா = அப்படியே

प्राज्ञ: ப்ராஜ்ஞ: = பிராஜ்ஞ ஸ்வரூபம்

घन:प्रज्ञ: கந: ப்ரஜ்ஞ: = அஞ்ஞானத்தால் மூடப்பட்ட ஜீவனுக்கு ஆத்மா, காலம், அஞ்ஞானம் இவைகளின் ஞானத்தை உண்டு பண்ணுகிறது.

एकएव त्रिधास्मृत: ஏகஏவ த்ரிதாஸ்ம்ருத: = ஒரே பரமாத்மா 3 விதமாக இருக்கிறதாக பிரம்மதேவர் சொல்லியிருக்கிறார்.

பிரமாண வாக்கியம் :—

प्रमाणस्य प्रमाणं च वत्स्यद्विद्यते मुने ।
ब्रह्मदृष्टाह्यतोमन्त्रान् प्रमाणं सलिलेश्वर: ।
अत्रश्लोका भवन्तीति चकारेव पृथक् पृथक् ॥ (इति गारुडे)·

ப்ரமாணஸ்ய ப்ரமாணஞ்ச வத்ஸ்யத்வித்யதே முநே ।
ப்ரஹ்மத்ருஷ்டாந்ஹ்யதோமந்த்ராந் ப்ரமாணம் ஸலிலேச்வர: ।
அத்ரச்லோகா பவந்தீதி சகாரைவ ப்ருதக் ப்ருதக் ॥

II - 6 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்)

அ-ரை :—இது ஜாக்கிறத் ஸ்வப்ந ஸுஷுப்தி ஸ்தானங்கள் விஷயமாய் சுலோகம்.

दक्षिणाक्षिमुखे தக்ஷிணாக்ஷிமுகே = வலதுகண்ணின் முன் பக்கத்தில்

मनसि மநஸி = இது அந்த: என்பதற்கு வியாக்கியானம்

आकाशे च हृदि ஆகாஶே ச ஹ்ருதி = ஹிருதயாகாசத்தில் ஹிருதய தாமரையின் நுனியில் என்பது கருத்து.

त्रिधा देहे व्यवस्थित: த்ரிதா தேஹே வ்யவஸ்தித: = அந்த பகவான் ஒருவரே. இந்த தேகத்தில் மூன்று விதமாக இருக்கிறார் என்பது கருத்து. (8)

I - 8 - வது மந்திரம். (துவைதம்.)

ஜாக்ரித்ஸ்தானம், ஸ்வப்நஸ்தானம், ஸுஷுப்தி ஸ்தானம் இவைகளை யுடையவன் என்று கூறிய அர்த்தத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

दक्षिणाक्षिमुखे தக்ஷிணாக்ஷிமுகே = வலது கண்ணின் முன் பக்கத்தில்

विश्व: விஶ்வ: = விசுவனும்

मनसि अन्त: மநஸி அந்த: = மனதில்

तैजस: தைஜஸ: = தைஜஸனும்

आकाशे हृदि ஆகாஶே ஹ்ருதி = ஹிருதயத்திலுள்ள ஆகாசத்தின் முன் பக்கத்தில்

प्राज्ञ: ப்ராஜ்ஞ: = பிராஞ்ஞனும் இவ்விதமாக

त्रिधा देहे व्यवस्थित: த்ரிதா தேஹே வ்யவஸ்தித: = பரமாத்மா சரீரத்தில் மூன்றுவிதமாயிருக்கிறான்.

காரிகையின் 3-வது சுலோகம்.

विश्वो हि स्थूलभुङ् नित्यं तैजस: प्रविविक्तभुक् ।
आनन्द भुक्तथा प्राज्ञस्त्रिधा भोगं निबोधत ॥9॥

விஶ்வோ ஹி ஸ்தூலபுங் நித்யம் தைஜஸ: ப்ரவிவிக்தபுக்
ஆநந்தபுக்ததா ப்ராஜ்ஞஸ்த்ரிதா போகம் நிபோதத॥

विश्वो हि விஶ்வோ ஹி = விசுவனும்

नित्यं நித்யம் = எப்போதும்

स्थूलभुक् ஸ்தூலபுக் = ஸ்தூலங்களான சப்தாதி விஷயங்களை

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக்=வாஸநாமயமான ஸூக்ஷ்மபோகங்களை அநுபவிக்கிறவன்

तथा ததா = அந்தப்பிரகாரம்

प्राज्ञः ப்ராஜ்ஞ: = பிராஜ்ஞனும்

आनन्दभुक् ஆநந்தபுக்=ஆநந்தத்தை அநுபவிக்கிறவன்

(एवं ஏவம் = இந்தப்பிரகாரம்)

भोगं போகம்=அநுபவத்தை

त्रिधा த்ரிதா=மூன்றுவிதமாக

निबोधत நிபோதத=அறிந்துக்கொள்ளுங்கள் இந்த சுலோகத்தின் அர்த்தம் [illegible] வது பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. ॥ 9 ॥

II - 7 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

அ-கை :— ஸ்தூலபுக் பிரவிவிக்தபுக் ஆநந்தபுக் என்ற அர்த்தத்தை இந்த சுலோகம் விவரிக்கிறது.

निबोधत நிபோதத = இந்தப் பிரகாரம் அறியுங்கள் என்று மந்திரதிர்ஷ்டாவான பிரம்மாவானவர் தன்னால் உபதேசிக்கத் தகுந்தவர்களுக்கு சொல்லுகிறார். ॥ 9 ॥

I - 9 - வது மந்திரம். (துவைதம்.)

அ-கை :... ஸ்தூலபுக் என்று கூறிய அர்த்தத்தை இந்த சுலோகம் விவரிக்கிறது. விசுவாதிகளுக்கு உபயோகமான பதார்த்தங்களைச் சொல்லுகிறார்.

हि ஹி இது பாதத்தை பூரிக்க உபயோகப்பட்டிருக்கிறது.

नित्यं நித்யம்=எப்போதும்

स्थूलभुक् ஸ்தூலபுக் = சிருஷ்டியிலுள்ள பாஹ்ய பதார்த்தங்களை புஜிக்கிறவன்

तैजसः தைஜஸ:=தைஜஸ்ரூபம்

प्रविविक्तभुक् ப்ரவிவிக்தபுக்=பாஹ்ய பதார்த்தங்களுக்கு வேறான ஸ்வப்ந பதார்த்தங்களை புஜிக்கிறது.

प्राज्ञः ப்ராஜ்ஞ:=பிராஜ்ஞரூபம்

आनन्दभुक् ஆநந்தபுக் = ஆநந்தத்தை புஜிக்கிறது.

त्रिधाभोगं த்ரிதாபோகம் = இவ்விதமாக மூன்று விதமான போக்கிய பதார்த்தங்கள் இருப்பதாக

निबोधत நிபோதத = மந்திரதிர்ஷ்டாவான பிரம்மா தன்னுடைய சிஷ்யர்களை உத்தேசித்து கவனியுங்கள் [illegible] கிறார். இப்படியே निबोध [illegible] அறியவும். ॥ 9 ॥

காரிகையின் 4-வது சுலோகம்.

स्थूलं तर्पयते विश्वं प्रविविक्तं तु तैजसम् ।
आनन्दश्च तथा प्राज्ञं त्रिधा तृप्तिं निबोधत ॥10॥.

ஸ்தூலம் தர்ப்பயதே விஶ்வம் ப்ரவிவிக்தம் து தைஜஸம் ।
ஆநந்தஶ்ச ததா ப்ராஜ்ஞம் த்ரிதா த்ருப்திம் நிபோதத ॥10॥

स्थूलं ஸ்தூலம் = ஸ்தூலபதார்த்தம்
विश्वं விஶ்வம் = விசுவனை
तर्पयते தர்ப்பயதே = திருப்திசெய்கிறது
प्रविविक्तन्तु ப்ரவிவிக்தந்து = சூட்சும போகம்
तेजस தைஜஸம் = தைஜஸனை
तर्पयते தர்ப்பயதே = திருப்திசெய்கிறது
तथा ததா = அப்படி
आनन्दश्च ஆநந்தஶ்ச = ஆநந்தம்
प्राज्ञं ப்ராஜ்ஞம் = பிராஞ்ஞனை
तर्पयते தர்ப்பயதே = திருப்திசெய்கிறது
(एवं ஏவம் = இந்தப்படி)
तृप्तिं த்ருப்திம் = திருப்தியை
त्रिधा த்ரிதா = மூன்று விதமாக

निबोधत நிபோதத = அறிந்துகொள்ளுங்கள் இந்தசுலோகத்தின் அர்த்தம் -வது பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது

II - 8 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

அ-கை:—மேற்சொன்ன அர்த்தத்தையே இதுவும் கூறுகிறது.

स्थूलं ஸ்தூலம் = ஸ்தூலமான போக்கிய வஸ்துவானது

विश्वं விஶ்வம் = விசுவனை அதாவது மேற்சொன்ன பிரதமபாதத்தை

तर्पयते தர்ப்பயதே = திருப்தி செய்விக்கிறது. இப்படியே மற்ற இடங்களிலும் அறியவும். நித்திய திருப்தியுள்ள பரமாத்மாவுக்கு ஸ்தூலாதிகளாலுண்டாவதாகச் சொன்ன திருப்தியானது க்ரீடாரூபமென்று அறியவும். ॥ 10 ॥.

I - 10 - வது மந்திரம். (துவைதம்.)

அ-கை :...மேற் சொன்ன அர்த்தத்தையே வேறு மந்திரம் கூறுகிறது.

स्थूलं ஸ்தூலம் = போக்கிய வஸ்துவானது அதாவது [illegible]

तर्पयते தர்பயதே = திருப்தி செய்கிறது.

இப்படியே மேலும் அறியவேண்டியது. நித்திய திருப்தனுக்கு ஸ்தூல முதலியவைகளாலுண்டாகும் திருப்தி க்ரீடாரூபமென்று அறியத்தக்கது ॥ 10 ॥

௫. காரிகையின் 5-வது சுலோகம்.

त्रिषु धामसु यद्भोज्यं भोक्ता यश्च प्रकीर्तितः ।
वेदैतदुभयं यस्तु स भुञ्जानो न लिप्यते ॥11॥

த்ரிஷு தாமஸு யத்போஜ்யம் போக்தா யஶ்ச ப்ரகீர்த்திதஃ ।
வேதைததுபயம் யஸ்து ஸ புஞ்ஜானோ ந லிப்யதே ॥ 11 ॥

त्रिषु த்ரிஷு = மூன்று
धामसु தாமஸு = ஸ்தானங்களிலும்
यत् யத் = எது
भोज्यं போஜ்யம் = அனுபவிக்கத்தகுந்த விஷயமோ
भोक्ता போக்தா = அனுபவிக்கிறவனும்
यः யஃ = எவன்
वेद வேத = அறிகிறானோ
सः ஸஃ = அவன்
भुञ्जानः புஞ்ஜானஃ = அனுபவிக்கிறவனானாலும்
न लिप्यते ந லிப்யதே = சம்பந்தப்படுகிறதில்லை.

त्रिषु...प्रकीर्तितः த்ரிஷு...ப்ரகீர்த்திதஃ :— ஜாக்கிரத் முதலிய மூன்று அவஸ்தைகளில் ஸ்தூலம், சூட்சுமம், ஆநந்தம் என்று பெயருள்ள போஜ்ஜியம் ஒன்றே மூன்றுவிதமாக இருக்கிறது. விசுவன் தைஜஸன் பிராஞ்ஞன் என்று பெயருள்ள போக்தா ஒருவன் என்று கூறப்படுகிறான். ஏனெனின் சுஷுப்தி அடைந்தநானே ஸ்வப்நத்தையும் அடைகிறேன். எவன் ஸ்வப்நமடைகிறானோ அவனே நான், ஜாக்கிராவஸ்தையிலிருக்கிறவன். இப்படி ஒன்றாயிருக்குந் தன்மை அனுபவிக்கப்படுகின்றது. மேலும் அஞ்ஞானம், அதின் காரியம் இவைகளை உத்தேசித்து பிராஞ்ஞாதிகளுக்கு பார்க்குந்தன்மை சமானமாயிருக்கிறது. மேலும பார்க்கிறவன் வெவ்வேறு என்பதற்கு பிரமாணமில்லை. ஆகையால் போக்தா ஒருவன் என்று கூறினது யுக்தமே.

वेद...लिप्यते வேத...லிப்யதே :— போஜ்யம் போக்தா இப்படி அநேகவிதமாக இரண்டையும் எவன் அறிகிறானோ அவன் எதை அனுபவித்தாலும் அத்துடன் சம்பந்தப்படுகிறதில்லை. ஏனெனின் போஜ்ஜியமானசர்வமும் போக்தாவான ஒருவனுக்கே (1) விஷயமாயிருக்கிறது. [எவனுக்கு எது விஷயமோ அவன் அதினால் குறைவும் அடைகிறதில்லை, விருத்தியையும் அடைகிறதில்லை.] அக்கினியானது தனக்கு விஷயமான காஷ்டத்தை தகித்து விருத்தி க்ஷயங்களை அடையாததுபோலவும். ||

(1) நுகரப்படுவதால்.

II - 9 - வது மந்திரம். (விசிஷ்டாத்வைதம்.)

அ-கை:—விசுவம் முதலிய மூன்று ரூபங்களையும் அவை களின் ஸ்தானங்களையும் போஜ்ஜிய ஸ்வரூபத்தையும் அறிந்தவ க்கு பிரயோசனத்தை இந்த சுலோகம் கூறுகிறது.

त्रिषुधामसु த்ரிஷுதாமஸு=கண், மனது, ஹிருதயாகாச, இம்மூன்று ஸ்தானங்களில்

यत् भोज्यं யத் போஜ்யம்=ஸ்தூல, பிரவிவிக்த, ஆநந்த ரூப களான போஜ்ஜிய வஸ்து எதுவோ

यः चभोक्ता யஃ சபோக்தா=விசுவ தைஜஸ பிராஞ்ஞர்களா போக்தா எவனோ

एतदुभयं ஏதது₃ப₄யம்=போக்தா.போஜ்ஜியம் இவ்வி யும்

यःतु யஃது=எந்த அதிகாரி

वेद् வேத₃=அறிகிறானோ

सः ஸஃ=அவன்

भुञ्जानः புஞ்ஜாநஃ=விஷயங்களை அனுபவித்தாலும்

नलिप्यते நலிப்யதே=அந்த பல சம்பந்தத்தை அடையமாட் டான். அதாவது விஷயானுபவத்தாலுண்டான தாழ்ந்த, உயர்ந்த ஸ்திதிகளை அடைகிறதில்லை. அந்தந்த ஸ்தானங்களில் அந்தந்த போகபலன்களைக் கொடுக்கிறவரும் எனக்கும் மற்ற ஜீவர்களுக் கும் கர்மபலனைக் கொடுக்கிறவரும் ஈசுவரனே. தனக்காவது மற்ற ஜீவர்களுக்காவது கர்மபல போகத்தில் ஸ்வாதந்திரியமில்லை என்று நினைத்து அதிகாரி புருஷன் விகாரமடைகிறதில்லை என்பது கருத்து.

---

11 - வது மந்திரம். (துவைதம்.)

அ-கை:—விசுவாதிகளின் ஸ்வரூபத்தையும் அந்த ஸ்தானங் களிலிருக்கிற அவர்களின் போஜ்ஜிய ஸ்வரூபத்தையும் அறிந்த வனுக்கு பலனைச் சொல்லுகிறார்.

त्रिषुधामसु த்ரிஷுதாமஸு=கண், மனது, ஹிருதயாகாசம், இம்மூன்று ஸ்தானங்களில்

यत भोज्यं யத் போஜ்யம்=ஸ்தூலம் முதலியவை எவை

यः च भोक्ता யஃ ச போக்தா=விசுவன் முதலான மூன்று ரூப மான ஆத்மா எவர்.

एतदुभयं ஏதது₃ப₄யம்=போக்தா, போஜ்ஜியம் இவ்விரண்டை யும்

वेद वேத = அறிகிறானோ

सः ஸ:=அந்த ஞானியானவன்

भुञ्जानः புஞ்ஜாந:=விஷயங்களை அநுபவித்தாலும்

नलिप्यते நலிப்யதே = அநுபவத்தாலுண்டான சம்பந்தத்தை அடையமாட்டான். 11

காரிகையின் 6-வது சுலோகம்.

प्रभवः सर्वभावानां सतामिति विनिश्चयः ।
सर्वं जनयति प्राणश्चेतोंशून्पुरुषः पृथक् ॥ 12 ॥

ப்ரபவ: ஸர்வபாவாநாம் ஸதாமிதி விநிஸ்சய: ।
ஸர்வம் ஜநயதி ப்ராணஸ்சேதோம்ஸூந்புருஷ:ப்ருதக் ।

सतां ஸதாம் = இருக்கிற

सर्वभावानां ஸர்வபாவாநாம்=சர்வ பதார்த்தங்களுக்குள்

प्रभवः ப்ரபவ: = (அவித்தையாலுண்டான நாமரூபமயமான மித்தியா ஸ்வரூபத்தில் நின்றும்) உத்பத்தி உண்டாகிறது

इति இதி = என்று

विनिश्चयः விநிஸ்சய:=சித்தாந்தம்

प्राणः ப்ராண:=பிராணரூபமான

पुरुषः புருஷ:=புருஷன்

सर्वं ஸர்வம்=சமஸ்தமான அசேதனரூப ஜகத்தையும்

चेतोंशून् சேதோம்ஸூந்=(சைதன்னிய பிரதானமான மனதில் சேதனபிரதி பிம்பங்களான) ஜீவர்களையும்.

पृथक् ப்ருதக்=வெவ்வேறாக

जनयति ஜநயதி=சிருஷ்டிக்கிறான்

அ-கை:— ஆறாவது மந்திரத்தில் பிராஞ்ஞன் பிரபஞ்சத்துக்குக் காரணமென்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் சத்தான காரியத்தை உத்தேசித்து பிராஞ்ஞன் காரணமா? இப்படி சந்தேகம் ஜனிக்க அதை நிச்சயிக்கும் பொருட்டு அல்லது அஸத்தான காரியத்தை உத்தேசித்தது காரணமா! இனி ஆரம்பிக்கிறார்.

प्रभवः...विनिश्चयः ப்ரபவ:...விநிஸ்சய: இருக்கிற சகலபதார்த்தங்களுக்கும், உற்பத்தி உண்டு என்பது நிச்சயம்.

सर्वं...पृथक् ஸர்வம்...ப்ருதக்= ஆகையால் பிராணனாகிற புருஷன் சகலஜகத்தையும் ஜீவர்களையும் வெவ்வேறாக உண்டுபண்ணுகிறான்.

யாலுண்டாகிற நாமரூபங்களுள்ள மித்தியாஸ்வரூபத்தால் உற்பத்தி சம்பவிக்கிறது. மலடிமகன் வாஸ்தவமாயாவது பொய்யாகவாவது உண்டாகிறதில்லை என்று மேல் சொல்லப்போகிறார். அசத்பதார்த்தங்கள் உண்டாகுமானால், அதாவது காரியங்கள் அசத்தானால், காரியத்தால் காரணத்தை ஊகிக்கவேண்டியதாக இருப்பதால், காரியமே அசத்தாவதால் காரணமும் அசத்தாகும் அப்பொழுது பிரம்மம் அசத்என்று சொல்லவேண்டும். (காரியமும் காரணமும் இரண்டும் அசத்தாயிருக்கட்டுமே எனின் பிரத்தியக்ஷவிரோதாம் வருகிறதென்கிறார்) அவித்தியாகாரியமான ரஜ்ஜுசர்ப்பாதிகள் ரஜ்ஜுமுதலிய ரூபமாக சத்தாயிருக்கின்றன. ரஜ்ஜுசர்ப்பம், கானல்ஜலம் முதலியவையாதொரு ஆதாரமன்றியில் எங்கேயாவது எவனாலாவது அறியப்படுகிறதா - இல்லை. எப்படி ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பமுண்டாவதற்குமுன் சர்ப்பம் ரஜ்ஜுரூபமாயிருந்ததோ அப்படி சகல பதார்த்தங்களும் உண்டாவதற்கு முன் பிராணனென்கிற காரணமாகவே இருக்கின்றன. ஆகையால் (1) ब्रह्मैवेदं ப்ரஹ்மைவேதம் (மு II2-11) "பிரம்மமே" இது (2) आत्मा वा इदमग्र आसीत् ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் (ஐ I-1-1) ஆத்மாவே முதலிலிருந்தது என்று சுருதியுங்கூறுகிறது.

सर्वं जनयति प्राणः ஸர்வம் ஜநயதி ப்ராண:= இப்படிபிராணன் காரணமென்னும் வியவஹாரத்திற்கு யோக்கியனாகிறதினால் சகல அசேதனமான ஜகத்தை உண்டுபண்ணுகிறான்.

चेतांशून्... சேதாம்சூன்...= சூரியனுக்கு கிரணங்களிருப்பதுபோல் சித்ரூபபுருஷனுக்கு சிதாபாஸமான ஜீவர்களிருக்கிறார்கள். இவர்களை புருஷன் உண்டுபண்ணுகிறான். ஆனால் புருஷனுக்கும் ஜீவர்களுக்கும் வாஸ்தவத்தில் பேதமில்லை. ஜலத்தில் பிரதிபிம்பித்த சூரியன்போலிருக்கிறார்கள். தேவபசுபக்ஷிமுதலிய தேசங்களில் விசுவதைஜஸ பிராஞ்ஞ பேதத்தால் இவர்கள் வெவ்வேறு விஷயங்களை உடைத்தாயிருப்பதால்வெவ்வேறாயிருக்கிறார்கள். அக்கினியின் பொறிகள் போலும் ஜலத்தில்தோன்றும் சூரியபிரதிபிம்பம்போலும் இவர்கள் சேதனலக்ஷணத்துடன் கூடியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜீவர்களை காரணமான பிராணன் உண்டாக்குகிறான். ஜலத்தில் தோன்றும் பிரதிபிம்பம் பிம்பத்தைவிட வாஸ்தவத்தில் வேறாகவிராததுபோல்

यथोर्णनाभिः யதோர்ணநாபி: (மு I1-7) यथाऽग्नेर्विस्फुलिङ्गाः யதாऽக்நேர்விஸ்புலிங்கா: (மு II 1-1) முதலிய சுருதிகள் பிரமாணம் ॥ 12 ॥

12 - வது மந்திரம். (துவைதம்.)

அ-கை:—एषयोनिः सर्वस्य ஏஷயோநி: ஸர்வஸ்ய) என்கிற (6 - வது) மந்திரத்தின் அர்த்தத்தை இந்த சுலோகம் கூறுகிறது.

सर्वभावानां प्रभवः ஸர்வபாவாநாம் ப்ரபவ: = சகல வஸ்துக்களின் உற்பத்திக் காரணம் பரமாத்மா (என்று சேர்த்துக்கொள்ளவும்.)

इति सतांविनिश्चयः இதி ஸதாம்விநிஸ்சய: = என்பதாய் சாதுக்களின் நிச்சயம் என்று சொல்லியிருப்பதால் அசாதுக்களுக்கு வேறுவிதமான நிச்சயமிருக்கிறதாக தெரியவருகிறது.

सर्वं ஸர்வம் = (அ-கை) சர்வத்திற்கும் காரணமாயிருப்பதை விவரிக்கிறார்.

प्राणः सर्वं जनयति ப்ராண: ஸர்வம் ஜநயதி = எல்லாவற்றிற்கும் நியந்தாவாயிருப்பதால் பரமாத்மா பிராணன் எனப்படுகிறான் எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிறான் என்று சொன்னதினால் பரிணாமகாரணம் ஏற்படவில்லை என்று சொன்னதாக ஆய்விட்டது.

पुरुषः புருஷ: = பூர்ண குணமுள்ளவனாகையால் புருஷன் என்று பெயருள்ள மேற்சொன்ன நான்கு ரூபத்துடன் கூடின ஹரி

पृथक् ப்ருதக் = தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் இவ்விதமாக பிரிக்கப்பட்ட

चेतोंशून् சேதோம்ஸூந் = ஞானமென்று பெயருள்ள கிரணங்களை அதாவது ஜீவர்களை

जनयति ஜநயதி = சிருஷ்டிக்கிறான்.

பிரமாண வாக்கியம் :—

प्रभवः सर्वभावानां विष्णुरेव न संशयः ।
इत्थंसतां निश्चयः स्यादन्यथात्वसतां भवेत् ।
सर्वस्य हि प्रणेतृत्वात् प्राणो नारायणः परः ।
तां सृष्टिं बहुधा प्राहुर्ज्ञानिनो ज्ञानिनस्तथा ॥

ப்ரபவ: ஸர்வபாவாநாம் விஷ்ணுரேவ நஸம்ஸய: ।
இத்தம் ஸதாம் நிஸ்சய: ஸ்யாதந்யதாத்வஸதாம் பவேத் ।
[illegible]
[illegible]

II - 10 - வது மந்திரம் (விசிஷ்டாத்வைதம்)

அ-கை :—ஏஷ யோநி: ஸர்வஸ்ய இவன் சகலத்துக்கும் காரணமென்று சொன்ன அர்த்தத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

सर्वभावानां ஸர்வபாவாநாம்=சகல வஸ்துக்களுக்கும்

प्रभवः ப்ரபவ:=நான்கு ரூபத்தோடு கூடின ஆத்மா அதற்குத் தகுந்தபடி உற்பத்திக்காரணமாயிருக்கிறது.

इति सतां निश्चयः இதி ஸதாம் நிஸ்சய:=இந்தப்பிரகாரம் ஸாதுக்களுக்கு நிச்சயம் என்று சொன்னதால் அசாதுக்களுக்கு வேறுவிதமாக நிச்சயமிருக்கிறதென்று ஏற்படுகின்றது. இந்த அர்த்தத்தை இனி விவரிக்கிறார். சர்வத்துக்கும் காரணமாயிருப்பதை விவரிக்கிறார்.

सर्वं जनयति प्राणः ஸர்வம் ஜநயதி ப்ராண:=சகலத்துக்கும் நியந்தாவாயிருப்பதால் பிராணன் என்கிற பெயரை வகித்தவர். அவரே சகலத்தையும் உண்டுபண்ணுகிறார் என்று சொன்னதினால் அவர் விவர்த்தோபாதானமல்லவென்று சொன்னதாக ஆய்விட்டது.

पुरुषः புருஷ:=ஷட் குணத்துடன் கூடியும் நான்கு ரூபங்களை அடைந்தவருமான ஹரி.

पृथक् ப்ருதக்=தேவ அசுர மனுஷ்ய முதலிய அநேக விதமான

चेतोंशून् சேதோம்ஸூந்=ஞானமென்னும் பெயருள்ள கிரணங்களோடு கூடின ஜீவர்களை

जनयति ஜநயதி=சிருஷ்டிக்கிறார். (12)

காரிகையின் 7-வது சுலோகம்.

विभूतिं प्रसवं त्वन्ये मन्यन्ते सृष्टिचिन्तकाः ।
स्वप्नमायास्वरूपेति सृष्टिरन्यैर्विकल्पिता ॥13॥

விபூதிம் ப்ரஸவம் த்வந்யே மந்யந்தே ஸ்ருஷ்டிசிந்தகா:।
ஸ்வப்நமாயாஸ்வரூபேதி ஸ்ருஷ்டிரந்யைர் விகல்பிதா ॥

अन्ये அந்யே=இதரர்களான

सृष्टिचिन्तकाः ஸ்ருஷ்டிசிந்தகா:=பிரபஞ்ச சிருஷ்டியை விசாரித்தவர்கள்

प्रसवं ப்ரஸவம்=சிருஷ்டியை

विभूतिं விபூதிம் [illegible]

अन्यैः அன்யை: = பரமார்த்தத்தை சிந்திக்கிற ஞானிகளால்

सृष्टिः ஸ்ருஷ்டி: = சிருஷ்டியானது

स्वप्नमायासरूपेति ஸ்வப்நமாயாஸரூபேதி = ஸ்வப்நம் மாயை இவைகள் என்று

विकल्पिता விகல்பிதா = பாவிக்கப்படுகிறது

சிருஷ்டியை பிரதானமாய் ஆதரிக்கிறவர்கள் சிருஷ்டியை ஈசுவரனுடைய சாமர்த்தியத்தின் விளக்கமாகச் சொல்லுகிறார்கள். தத்துவத்தை விசாரிக்கிறவர்கள் சிருஷ்டியை ஆதரிக்கிறதில்லை என்பது கருத்து.

इन्द्रोमायाभिः पुरुरूपईयते இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே = (   ) ஆகாஉது இந்திரன் (பரமாத்மா) மாயையால் வெகுரூபங்களடைகிறான் என்று சுருதி சொல்லுகிறது. ஒரு வித்தையாடியானவன் ஒருகயிற்றை ஆகாசத்தில் எறிந்து அதின் மூலமாக ஆயுதசகிதமாய் மேலேறி கண்ணுக்கு மறைந்துவிடுகிறான். அவ்விடத்தில் யுத்தத்தினால் அவனுடைய அங்கம் கண்டம் கண்டமாக அறுபட்டு கீழ்விழுந்து மறுபடியும் அவன் எழுந்திருக்கிறான். இதை பார்க்கிறவர்கள் அவனால் செய்யப்பட்ட வித்தை வாஸ்தவமாவென்று விசாரிப்பதிலும் ஆதரவு செய்கிறதில்லை. இப்படியே இந்த மாயாவி விஷயத்தில் சுஷுப்தி ஸ்வப்நம் முதலியவைகள் கயிற்றை எறிந்ததற்குச் சமானமாயிருக்கின்றன. இவைகளிலிருக்கிற பிராஞ்ஞன் தைஜஸன் முதலானவர்கள் கயிற்றின்மேல் ஏறின மாயாவிக்குச் சமானமானவர்கள். வாஸ்தவமான வித்தையாடியானவன் கயிறு, அதில் ஏறினவன் இவர்களைவிட வேறு. அவனே பூமியிலிருக்கிறான், மாயையால் மறைபட்டிருக்கிறான், கண்ணுக்குத் தெரியாமலேயிருக்கிறான். அதுபோல் துரீயம் என்னும் பரமார்த்ததத்துவமுமிருக்கிறது. ஆகையால் மோக்ஷ இச்சையுள்ளவர்களுக்கு பரமார்த்ததத்துவத்தை விசாரிப்பதில்தான் இஷ்டமேதவிர பிரயோஜனமற்ற சிருஷ்டியில் இஷ்டமில்லை. स्वप्नमाया ... ஸ்வப்நமாய ... :— ஆகவே சிருஷ்டியை பிரதானமாய் கவனிக்கிறவர்களுக்கே சிருஷ்டியானது ஸ்வப்நத்திற்குச் சமானமென்றும் மாயைக்குச் சமானமென்றும் விகல்பங்கள் தோன்றுகின்றன. ‖ 13 ‖

I. I- 1ஆவது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

அத்வைத சங்கராதுக்களுக்கு இப்படிப்பட்ட நிச்சயம் என்பதையும் ...

सृष्टिचिन्तकाः ஸ்ருஷ்டிசிந்தகா꞉=சிருஷ்டி விஷயத்தை சிந்திக்கிறவர்களான

अन्ये அந்யே=சில வாதிகள் அதாவது பிரம்மமே ஜகத்தாக பரிணமிக்கிறதென்று சொல்லுகிற அசத்துக்கள்

प्रसवं ப்ரஸவம்=சிருஷ்டியை

विभूति விபூதிம்=விபூதியாக அதாவது பிரம்மம். அநேகவித ஜீவஜடங்களாய் பரிணமித்ததாக

मन्यन्ते மந்யந்தே=எண்ணுகிறார்கள்.

சிருஷ்டி சிந்தகர்கள் என்று சொன்னதால் பிரம்மத்தை நன்றாக அறியாதவர்கள் என்று தெரியவருகிறது.

अन्यैः அந்யை꞉=பிரம்மத்தின் விவர்த்தம் பிரபஞ்சம் என்று சொல்லுகிற அத்வைதிகளால்

सृष्टिः ஸ்ருஷ்டி꞉=சிருஷ்டியானது

स्वप्नमायासरूपा ஸ்வப்நமாயாஸரூபா=எப்படிஸ்வப்நத்திலுண்டான பதார்த்தங்கள் சுஷுப்தாத்மாவின் விவர்த்தமான மாயா ஸ்வரூபங்களோ அப்படி பிரம்மத்தின் விவர்த்தமான ஜாக்கிறத் காலத்திலுண்டான பதார்த்தங்களும் மாயாஸ்வரூபம். மாயாசப்தத்தால் மாயையால் ஏற்படும் கந்தர்வநகரம் முதலியவைகளை கிரகித்துக்கொள்ளவும். அதற்கு சமானமான ஸ்வரூபமுள்ள மித்தியாபூதங்களென்று

विकल्पिता விகல்பிதா=அநேக விதமாக கற்பிக்கப்பட்டதென்று அர்த்தம். ॥ 13 ॥

துவைதம்.

அ-கை:—முந்தின சுலோகத்தில் सर्वं जनयति ஸர்வம் ஜநயதி என்பதினால் விஷ்ணு ஜகதுற்பத்திக்கு நிமித்த காரணமாயிருக்கிறார் என்று சொன்னதை விவரித்துக்கொ[illegible] வாதிகளுடைய பூர்வபக்ஷங்களையும் கூறுகிறார்.

सृष्टिचिन्तकाः ஸ்ருஷ்டிசிந்தகா꞉=சிருஷ்டி வி[illegible]ஷயமாய் விசாரிக்கிறவர்களான

अन्ये அந்யே=பிரம்மம் பரிணமிக்கிறது [illegible]ன்று சொல்லுகிற வாதிகளாகிற அசத்துக்கள்

प्रसवं ப்ரஸவம்=சிருஷ்டியை

विभूति விபூதிம்=ஜீவஜட உற்பத்திய[illegible]

मन्यन्ते [illegible]கிறார்கள். [illegible]

ஸிருஷ்டி சிந்தகர்கள் என்று சொன்னதால் நன்றாக பிரம்ம ஸ்வரூபத்தை அறியாதவர்கள் என்று சூசனை செய்யப்பட்டது,

अन्ये: 𑌅𑌨𑍍𑌯𑍇 = பிரபஞ்சம் பிரம்மத்தின் விவர்த்தமென்று சொல்லுகிற வாதிகளால்.

सृष्टिः 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 = ஸிருஷ்டியானது

स्वप्नमाया स्वरूपेति 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌮𑌾𑌯𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌤𑌿 = ஸ்வப்னபதார்த்தம்போலும் கந்தர்வ நகரத்துக்குச்சமானமான மாயா ரூபம் போலும்

विकल्पिता 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾 = கற்பிக்கப்பட்டது.

பிரமாண வாக்கியம் :—

विष्णु विकृति मायाति महदादि स्वरूपिणीं ।
तत्तद्विविध भूतिस्तुसृष्टिः प्रोक्ताह्यपंडितैः ।
स्वप्नमाया स्वरूपां च केचिदज्ञा जनाविदुः ॥

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌵𑌿𑌕𑍃𑌤𑌿 𑌮𑌾𑌯𑌾𑌤𑌿 𑌮𑌹𑌦𑌾𑌦𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌂 ।
𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧 𑌭𑍂𑌤𑌿𑌸𑍍𑌤𑍁𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌹𑍍𑌯𑌪𑌂𑌡𑌿𑌤𑍈𑌃 ।
𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌮𑌾𑌯𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌂 𑌚 𑌕𑍇𑌚𑌿𑌦𑌜𑍍𑌞𑌾 𑌜𑌨𑌾𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ ॥13॥

காரிகையின் 8-வது சுலோகம்.

इच्छामात्रप्रभोः सृष्टिरिति सृष्टौ विनिश्चिताः ।
कालात्प्रसूति भूतानां मन्यन्ते कालचिन्तकाः ॥14॥

𑌇𑌚𑍍𑌛𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑍃𑌷𑍍𑌟𑍌 𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌃
𑌕𑌾𑌲𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌿𑌂 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌾𑌲𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 ॥

सृष्टौ 𑌸𑍃𑌷𑍍𑌟𑍌 = ஸிருஷ்டிவிஷயத்தில்

केचित् 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 = சிலர்

सृष्टिः 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 = ஸிருஷ்டியானது

प्रभोः 𑌪𑍍𑌰𑌭𑍋𑌃 = சத்திய சங்கல்பனாகிய ஈசுவரனுடைய

इच्छामात्रं 𑌇𑌚𑍍𑌛𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 = இச்சை மாத்திரம்

इति 𑌇𑌤𑌿 = என்று

विनिश्चिताः 𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌃 = நிச்சயம் அடைந்திருக்கிறார்கள்

कालचिन्तकाः 𑌕𑌾𑌲𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 = ஜ்யோதிஸ் சாஸ்திரத்தையே பிரதானமாகக் கொண்டிருக்கிற காலசிந்தகர்கள்

कालात् 𑌕𑌾𑌲𑌾𑌤𑍍 = காலதத்வத்திலிருந்து

भूतानां 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 = பூதங்களின்

प्रसूतिं 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌿𑌂 = ஸிருஷ்டியை

मन्यन्ते 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 = நினைக்கிறார்கள்

ச-பா:- குயவனுடைய சங்கற்பத்தால்மண்பாண்ட முண்டாகிறது. அவனுடைய சங்கற்பத்தை விட்டு வேறாக பாண்டமில்லை. இதுபோல் சகல பிரபஞ்சமும் ஈசுவர சங்கற்பத்தாலேயே உண்டாகி இந்த ஈசுவர சங்கற்பத்தைவிட்டு வேறாக பிரபஞ்சஸிருஷ்டியில்லை ॥ 14 ॥

II - 12 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

கூ-பா :—(அ-கை) பரிணாம, விவர்த்த, இந்த இரண்டு வாதங்களையும் ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில் எப்படி விஷ்ணுவினிடத்தினின்றும் ஜகத்து உண்டாகும் என்கிற கேள்விக்கு சாதுக்களுடைய நிச்சயப் பிரகாரத்தை உத்தரமாகச் சொல்லுகிறார்.

प्रभोः ப்ரபோ: = மிகுந்த சாமர்த்தியத்துடன் கூடின பரமாத்மாவினுடைய

सृष्टिः ஸ்ருஷ்டி: = ஜகத் ஸிருஷ்டியானது

इच्छामात्रं இச்சாமாத்ரம் = இச்சையைவிட வேறு சாதனமற்றது. சிரமமன்றியிலும் தாமஸமன்றியிலு முண்டானது, என்று

विनिश्चिताः விநிஶ்சிதா: = நிச்சயமடைந்தவர்கள், உபநிஷத்தின் அபிப்பிராயத்தை அநுசரித்தவர்களென்று அர்த்தம்.

मन्यन्ते மந்யந்தே = பகவான் சத்திய சங்கற்பராகையால் சகலத்திலும் சமர்த்தரான அவர் தன்னுடைய சங்கற்ப மாத்திரத்தினாலேயே ஸூக்ஷ்மமாயும் தனக்குச் சரீரமாயுமிருக்கிற சேதநாசேதன பிரபஞ்சத்தை முதலில் ஸ்தூல ரூபமாய் பரிணமிக்கும்படி செய்து, சர்வாத்மகராயும் விகார மற்றவராயு மிருந்துகொண்டு சர்வத்துக்கும் உபாதானமாகிறார் என்று எண்ணுகிறார்கள் என்பது கருத்து. பின்னும் மதாந்தரங்களைக் கூறுகிறார்.

कालचिन्तकाः காலசிந்தகா: = காலத்தையே ஈசுவரனாக எண்ணுகிறவர்கள்.

भूतानां பூதாநாம் = பூதங்களின்

प्रसूतिं ப்ரஸூதிம் = பிராணிகளுடைய உற்பத்தியை

कालात् காலாத் = காலத்தினின்றும்)

मन्यन्ते மந்யந்தே = உண்டானதாக எண்ணுகிறார்கள். காலம் என்ற பதம் ஸ்வபாவ முதலானவைகளுக்கு உபலக்ஷணம். தற்செயலாய் இந்த ஜகத்து உண்டாகிறதென்று சொல்லுகிற வாதிகளும் அதிர்ஷ்டத்தா லுண்டாகிறதென்று சொல்லுகிற வாதிகளும், ஸ்வபாவத்தா லுண்டாகிறதென்று சொல்லுகிற வாதிகளும் [illegible]ரிக்கும் மதம் புருஷ-பிரபு சப்தங்களால் தள்ளப்பட்டதாக [illegible] வென்றுபாது. ஆகையால் [illegible]

அ-கை:—ஜகத்து பிரம்மத்தின் பரிணாமமன்று பிரம்மத்தினிடத்தில் ஆரோபிக்கப்பட்டதுமன்று என்று சொன்னால் பகவானிடத்தினின்றும் ஜகத்து எப்படி உண்டாயிற்று யெனின் சொல்லுகிறார்.

प्रभोः ப்ரபோ: :—பிரபு சப்தத்துக்கு மூன்று அர்த்தங்கள் உண்டு.

(1) பூர்ண சக்தியுடன் கூடினவன்

(2) எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கிறவன்.

(3) சகலத்தையும் விசேஷமாய் அனுபவிக்கிறவன். ஆகவே பிரபு சப்தத்தால் பகவானுக்கு நிர்விகாரத் தன்மை, பூர்ணசக்தி தன்மை, சர்வஞ்ஞத்தன்மை இம்மூன்று குணங்களும் சொன்னதாக ஆகிறது.

சத்திய சிருஷ்டியைச் செய்ய அசமர்த்தனாயிருக்கிறவன் மாயிச, சிருஷ்டியை செய்வான். ஸர்வஞ்ஞனால் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்து ஸ்வப்ந பதார்த்தம்போல் இருக்கமாட்டாது. ஆகையால் பரிணாமவாதம் விவர்த்தவாதம், மாயாசரூபவாதம் இவைகள் தள்ளப்பட்டதாக ஆகின்றன. இப்படிப்பட்ட பிரபுவினின்றும்

सृष्टिः ஸ்ருஷ்டி: = சிருஷ்டியானது

इच्छामात्रं இச்சாமாத்ரம் = பிரயத்னமின்றியிலும் தாமஸமின்றியிலும் விகாரத்தை அடையாமலும் உண்டானதென்று

सृष्टौ ஸ்ருஷ்டௌ = சிருஷ்டியில்

विनिश्चिताः விநிஶ்சிதா: = பிரம்மாதிகளான சந்துக்கள் நிச்சயிக்கிறார்கள்.

कालात् காலாத் :—அ-கை:—மறுபடியும் மதாந்திரத்தைக் கூறுகிறார்.

कालचिंतकाः காலசிந்தகா: = காலத்தை முக்கியமாக எண்ணுகிறவர்கள்

भूतानां பூதாநாம் = பூதங்களின்

प्रसूतिं ப்ரஸூதிம் = உற்பத்தியை

कालात् காலாத் = காலத்தினின்றும்

मन्यन्ते மந்யந்தே = எண்ணுகிறார்கள்

* இது உபலக்ஷணம் (1) பிரம்மாவை பரமென்று நினைத்தவர்கள் பிரம்மாவினிடத்தினின்றும், (2) ருத்திர சிந்தகர்கள் ருத்திரனிடத்தினின்றும், [illegible] பாவிக்கிறார்கள்.
[illegible]

முள்ளவராயும் மற்ற தேவர்கள் அப்படியில்லாமலுமிருப்பதால் பிரபு பதத்தாலேயே நிராகரிக்கப்பட்டன என்று அறியவும். காலாதிகள் ஜடமானதையால் கர்த்தார்களாகமாட்டார்கள்

பிரமாண வாக்கியம்:—

अविकारस्य चिन्मात्रस्यै वाखिलजगत् ।
उत्पद्यप्राज्ञाः प्राहुर्ब्रह्मा दयोखिलाः ।
पूर्णशक्तेः कुतोमाया सर्वज्ञात्त्वमतस्कुतः
सर्वदोष व्यपेतस्य विकारः कुतइष्यते ।
तस्मा देवाविकारस्य विष्णो रिच्छावशादिदं ।
यथार्थमेव संभूतमिति वेदवचोखिलं ।
केचित्कालतएवैतां सृष्टिमाहुरकोविदः ।
केचिद्रुद्राद्ब्रह्मणश्च प्रधानादितिचापरे ।
विमूढाः सर्वएवैते यतो नारायणः परः ।
सर्वकर्त्ता सर्वशक्तिरेक एवनचापरः ।
प्रधानकाल ब्रह्मेशमुखाः सर्वेपितद्वशाः ।
तस्याविष्णोः सृष्टिं तु केचिदाहुरनैपुणाः ॥14॥

அவிகாரஸ்ய சிந்மாத்ரஸ்ய வாகிலஂஜகத் ।
உத்பத்யப்ராஜ்ஞா: ப்ராஹுர்ப்ரஹ்மாதயோகிலா: ।
பூர்ணஶக்தே: குதோமாயா ஸர்வஜ்ஞத்வமதஸ்குத: ।
ஸர்வதோஷவ்யபேதஸ்ய விகார: குதஇஷ்யதே ।
தஸ்மாதேவாவிகாரஸ்ய விஷ்ணோரிச்சாவஶாதிதம் ।
யதார்த்தமேவ ஸம்பூதமிதி வேதவசோகிலம் ।
கேசித்காலத ஏவைதாம் ஸ்ருஷ்டிமாஹுரகோவிதா: ॥
கேசித்ருத்ராத்ப்ரஹ்மணஶ்ச ப்ரதாநாதிதி சாபரே ॥
விமூடா: ஸர்வ ஏவைதே யதோ நாராயண: பர: ।
ஸர்வகர்த்தா ஸர்வஶக்திரேக ஏவ நசாபர:
ப்ரதாநகால ப்ரஹ்மேஶமுகா: ஸர்வேபிதத்வஶா: ।
தஸ்யவிஷ்ணோ: ஸ்ருஷ்டிம்து கேசிதாஹுரநைபுணா:॥

காரிகையின் 9-வது சுலோகம். (அத்வைதம்.)

भोगार्थं सृष्टिरित्यन्ये क्रीडार्थमिति चापरे ।
देवस्यैष स्वभावोयमाप्तकामस्यकास्पृहा ॥15॥

போகார்த்தம் ஸ்ருஷ்டிரித்யந்யே க்ரீடார்த்தமிதி சாபரே ।
தேவஸ்யைஷ ஸ்வபாவோயமாப்தகாமஸ்யகாஸ்ப்ருஹா ॥ 15 ॥
अन्ये அந்யே = வேறாயினர்

भोगार्थं போகார்த்தம் = ஈசுவரனுடைய போகத்தின் பொருட்டு என்றும்

अपरे च அபரே ச = வேறு சிலர்

क्रीडार्थं इति க்ரீடார்த்தம் இதி = ஈசுவரனுடைய லீலையின் பொருட்டு என்றும்

मन्यन्ते மந்யந்தே = நினைக்கிறார்கள் (ஆனால் ஸித்தாந்தம் என்னவெனில்)

अयं एषः அயம் ஏஷ: = இந்த ஸிருஷ்டி
देवस्य தேவஸ்ய = பரமேசுவரனுடைய
स्वभावः ஸ்வபாவ: = ஸ்வபாவம் அநாதியானமாயை.
आप्तकामस्य ஆப்தகாமஸ்ய = பூர்ணகாமனுக்கு
का கா = என்ன
स्पृहा ஸ்ப்ருஹா = இச்சை

வேறு சிலர், ஈசுவரன் போகத்தின் பொருட்டும், இன்னும் வேறு சிலர் ஈசுவரன் லீலையாகவும் பிரபஞ்சத்தை ஸிருஷ்டித்ததாகச் சொல்லுகிறார்கள்.

देवस्य... தேவஸ்ய...:- இந்த பக்ஷங்களின் தூஷணம் இனி சொல்லப்படுகிறது. இந்த ஸிருஷ்டியானது பரமேசுவரனுடைய ஸ்வபாவம். பூர்ணகாமனான ஈசுவரனுக்கு என்ன இச்சையிருக்கும்: ஒன்று மிருக்கமாட்டாது.

ஸ்வபாவ பக்ஷத்தை ஆசிரயித்து மேற்சொல்லிய இரண்டு பக்ஷங்களையும், அல்லது சகல பக்ஷங்களையும் தூஷிக்கிறார்.

(1) ஈசுவரனுடைய சாமர்த்திய விளக்கமே ஸிருஷ்டி என்று சொன்ன முதல் பக்ஷம் கூடாது. ஏனெனின் ஆப்தகாமரான பரமாத்மா மாயையன்றியில் சாமர்த்தியத்தை விளக்கமாட்டார்.

(2) சத்திய சங்கற்பரான ஈசுவரனுடைய ஸிருஷ்டியானது ஸ்வப்நஸ்வரூபம் அல்லது மாயாஸ்வரூபம் என்பது ஒரு பக்ஷம். ஸ்வப்ந மாயைக்குச் சமானமென்று சொல்லலாம் ஸ்வப்நமாயா ஸிருஷ்டியைச் சொல்ல முடியாது ஏனெனின் ஸ்வப்நமாயாசப்தங்கள் பொய்யையே கூறுகின்றன.

(3) ஈசுவரன் உதாசீனரானதால் அவரிடத்தினின்றும் ஸிருஷ்டி உண்டாகிறதாகச் சொல்லக்கூடாது. காலத்தினின்றும் ஸிருஷ்டி உண்டாகிறதாகச் சொல்லவேண்டும்.

(4) போகத்தின் பொருட்டாவது லீலையின் பொருட்டாவது ஸிருஷ்டி [illegible]

இந்த பக்ஷங்களும் பொருந்தாவாம். ஏனெனின் பரமானந்த ஸ்வபாவமான பரமாத்மாவுக்கு மாயையன்றியில் இச்சை உண்டாகமாட்டாது. ஸ்வத: விகாரமற்றவருக்கு இச்சை முதலியவைகள் சம்பவிக்கமாட்டா. மாயையன்றியில் போகமாவது கிரீடையாவது அவருக்கு ஒவ்வாது. ஆகையால் பகவானுடைய சிருஷ்டியானது மாயாரூபமே என்பது கருத்து. அதிஷ்டான ரஜ்ஜுவானது அவித்தியா பலத்தால் சர்ப்பாகாரமாகத் தோன்றுகிறதுபோல், பரமாத்மா தன் மாயாபலத்தால் ஆகாசாதி பிரபஞ்சம் போல் தோன்றுகிறார். आत्मनः आकाशः संभूतः ஆத்மந: ஆகாஶ: ஸம்பூத: (தை II - 1.) என்பதினால் ஆத்மாவினிடமிருந்து ஆகாசம் உண்டானதாகச் சொல்லியிருப்பதால் காலத்தினின்றும் உண்டானதாகச் சொல்லுவதற்குப் பிரமாணமில்லை. || 15 ||

II - 13 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

அ-கை :- அப்படியானால் பரிபூர்ணரான ஈச்வரனுக்கு இந்த சிருஷ்டி என்னத்திற்காக எனின் உலகத்தில் அனுக்கிரகத்தின் பொருட்டு ஸ்வபாவமே பிரவிர்த்திக்கிறது என்பதைச் சொல்லும் பொருட்டு மதாந்தரங்களைக் கூறுகிறார்.

भोगार्थं போகார்த்தம் = திருப்தியடையாத பகவான் சுகாதிகளை அனுபவிக்கிறதற்காக

सृष्टिः ஸ்ருஷ்டி: = சிருஷ்டிக்கிறார் என்று

अन्ये அந்யே = சிலர்.

मन्यन्ते மந்யந்தே = எண்ணுகிறார்கள்.

अपरे அபரே = வேறு சிலர்

क्रीडार्थं க்ரீடார்த்தம் = மகாராஜாவுக்கு பந்து முதலிய விளையாட்டுபோல் ஈச்வரனுக்கு இந்த ஜகத்சிருஷ்டியானது கிரீடை என்று எண்ணுகிறார்கள். சுருதியின் மதமயாதெனின்,

देवस्य தேவஸ்ய = கிரீடை செய்துகொண்டிருக்கிறவருக்கு

अयं एषः அயம் ஏஷ: = இந்த சிருஷ்டி முதலிய விஷயமான விளையாட்டானது.

स्वभाव एव ஸ்வபாவ ஏவ = ஸ்வபாவந்தான். வேறு விதமான பிரயோசனத்தை உத்தேசித்ததல்ல என்று தாற்பரியம். लोकवत्तु लीलाकैवल्यं லோகவத்து லீலாகைவல்யம் (II-2-33) என்கிற பிரம்ம சூத்திரத்தில் இந்த அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது.

कास्पृहा காஸ்ப்ருஹா = என்ன இச்சை. ஒரு பிரயோஜனத்திலும் இச்சையில்லை என்று அர்த்தம்.

इति இதி = இந்த ஸப்தம் மூன்று ரூபங்களும் நிரூபிக்கப்பட்டன என்றும் முடிவை கூறுகிறது. ॥15॥

தாத்பர்யம்.

அவதாரிகை:— ஆனால் பரிபூர்ணரான பகவான் ஏன் ஸ்ருஷ்டிக்கிறார் எனின், ஜீவர்களுக்கு அனுக்கிரகம் செய்தல் அவருடைய ஸ்வபாவம் இப்படி சொல்லுவதற்காக மேல் கிரந்தத்தைக் கூறுகிறார். ஸ்ருஷ்டியைப்பற்றி பரவாதிகளுக்கு

भोगार्थं सृष्टिः போகார்த்தம் ஸ்ருஷ்டி: = போகத்தின் பொருட்டு ஸ்ருஷ்டி.

अन्ये அந்யே = சிலர்

मन्यन्ते மந்யந்தே = நினைக்கிறார்கள்

अपरे அபரே = வேறு சிலர்

क्रीडार्थं க்ரீடார்த்தம் = மகாராஜாவுக்கு பந்து முதலிய விளையாட்டுப்போல நினைக்கிறார்கள். கடைசியானது ஸ்வபாவத்தைக் கூறுகிறது.

देवस्य தேவஸ்ய = தேவனுக்கு

एषः ஏஷ: = ஸ்ருஷ்டி விஷயமான வியாபாரம்

स्वभाव एव ஸ்வபாவ ஏவ = ஸ்வபாவமே தவிர வேறு பிரயோஜனமுள்ளதல்ல.

आप्तकामस्य कास्पृहा ஆப்தகாமஸ்ய காஸ்ப்ருஹா = பூர்ணகாமனுக்கு ஆசை ஏது ஒன்றுமில்லை.

इति இதி = இது ஸமாப்தியை கூறுகிறது.

பிரமாண வாக்கியம்:—

अतृप्तस्यैव भोगार्थं क्रीडार्थं तु विपश्चितः ।
साच क्रीडा स्वभावोऽस्य कुतोतृप्त्या स्पृहाविभोः ॥

அத்ருப்தஸ்யைவ போகார்த்தம் க்ரீடார்த்தம் து விபஸ்சித:
ஸாச க்ரீடா ஸ்வபாவோऽஸ்ய குதோத்ருப்த்யா ஸ்ப்ருஹாவிபோ:

பகவதிச்சையால் ஸ்ருஷ்டி உண்டானதாக ஒருவன் சொல்லுவதும் பிசகு. ஏனெனின் பிரயோஜனத்தை அவர் அபேக்ஷித்தால் பூர்ணகாமராகமாட்டார். அபேக்ஷிக்காமல் ஸ்ருஷ்டி செய்தால் மூர்க்கத்தன்மை ஏற்படும். இப்படி ஒருவன் சொன்னால் அதற்கு உத்தரமென்னவெனின்:— அவர் போகத்தின் பொருட்டு

ஸிருஷ்டிக்கவில்லை. பிரளய காலத்தில் ஈசுவரன் ஒருவரே இருப்பதால் அவர் விஷயத்தில் ஆலசியம் கூறும்படி நேரிடும். அதை பரிகரிக்கிறதற்காக கிரீடையாக ஸிருஷ்டிசெய்கிறார் என்று இராமாநுஜாசாரியார் சொல்லுவதுபோல் சொல்லுவதும் சரியன்று. ஆப்தகாமராயிருக்கிற பகவானுக்கு போகத்தின் பொருட்டு ஸிருஷ்டியும் வேண்டியதில்லை. ஆலசியம் இல்லாமலிருப்பதற்காக கிரீடையாகவும் ஸிருஷ்டிக்கவேண்டியதில்லை. தனக்குப் பிரயோசனமில்லாவிட்டாலும் பரபிரயோசனத்தை உத்தேசித்து சுவபாவமாகவே ஸிருஷ்டி உண்டாகிறது. ‖15‖

முதலாவது கண்டம் முற்றிற்று.

7வது மந்திரம் उपानेषत (அத்வைதம்)
உபநிஷத்

नान्तः प्रज्ञं न वहिः प्रज्ञं नोभयतः प्रज्ञं न प्रज्ञानघनं न प्रज्ञं नाप्रज्ञम् ।अदृष्टमव्यवहार्यमग्राह्यमलक्षणमचिन्त्यमव्यपदेश्यमेकात्मप्रत्ययसारं प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते स आत्मा स विज्ञेयः ॥ 16 ॥

நாந்தஃ ப்ரஜ்ஞம் ந பஹிஃ ப்ரஜ்ஞம் நோபயதஃ ப்ரஜ்ஞம் ந ப்ரஜ்ஞாநகநம் ந ப்ரஜ்ஞம் நாப்ரஜ்ஞம் । அத்ருஷ்டமவ்யவஹார்யமக்ராஹ்யமலக்ஷணமசிந்த்யமவ்யபதேஶ்யமேகாத்மப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோபஶமம் ஶாந்தம் ஶிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேயஃ ‖16‖

अन्तः प्रज्ञं அந்தஃ ப்ரஜ்ஞம்=உள்ளிருக்கும் ஸ்வப்ந ஞானவானாகிய தைஜசன்

न ந=அல்ல

वहिः प्रज्ञं பஹிஃ ப்ரஜ்ஞம்=வெளி பிரஞ்ஞையுள்ள ஜாக்கிராவஸ்தாபிமானியாகிய விசுவன்

न ந=அல்ல

उभयतः प्रज्ञं உபயதஃப்ரஜ்ஞம்=ஜாக்கிர ஸ்வப்னங்களின் மத்தியாவஸ்தையின் அபிமானியும்

न ந=அல்ல

प्रज्ञानघनं ப்ரஜ்ஞாநகநம்=சுஷுப்தி அபிமானியாகிய பிராஞ்ஞனும்

न ந=அல்ல

प्रज्ञं ப்ரஜ்ஞம்=(கேவலம் ஞான ரூபமாயிருந்தாலும் சர்வஞ்ஞரான ஈசுவரன் போல் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் [illegible]
[illegible]

अग्राह्यं अக்ராஹ்யம் = அறியப்பட்டதாகிய அனைதன்னியம்
न ந = அல்ல

अदृष्टं அத்ருஷ்டம் = ஞானேந்திரியப் பிரமாணத்தால் அறியத் தகுந்தவரல்ல

अव्यवहार्यं அவ்யவஹார்யம் = ஆனதால் வாக்கால் வியவஹாரத் துக்கு யோக்கியரல்ல

अग्राह्यं அக்ராஹ்யம் = மற்ற கர்மேந்திரியங்களால் கிரகிக்கத்தகுந்தவரல்ல

अलक्षणं அலக்ஷணம் = லிங்கங்களால் ஊஹிக்கத் தகுந்தவரல்ல

अचिन्त्यं அசிந்த்யம் = ஆனதால மனதினால் நினைக்க அசக்கியமானவர்

अव्यपदेश्यं அவ்யபதேச்யம் = ஆனதால் சப்தத்தால் இன்னதென்று நிர்தேசிப்பதற்கு அசக்கியமானவர்

एकात्मप्रत्ययसारं ஏகாத்மப்ரத்யயஸாரம் = ஜாக்கிரதாதி அவஸ்தைகளில் ஒரே ஆத்மாவாய் இருக்கிறுன் என்கிற ஞானத்தால் ஊகிக்கத்தக்கவர்

प्रपञ्चोपशमं ப்ரபஞ்சோபசமம் = ஜாக்கிரதாதிஸ்தானங்களின் தர்மங்களில்லாதது

शान्तं சாந்தம் = ஆனதால் ராகத்வேஷாதி தோஷங்களற்ற கூடஸ்தர்

शिवं சிவம் = பரிசுத்தம் பரமானந்த போதரூபம் (இப்பேர்ப் பட்ட

अद्वैतं அத்வைதம் = பேதமில்லாத அத்வைதத்தை
चतुर्थं சதுர்த்தம் = நான்காவது என்று
मन्यन्ते மன்யந்தே = நினைக்கிறுர்கள்
सः ஸ: = அவரே
आत्मा ஆத்மா = பரமாத்மா
सः ஸ: = அவரே
विज्ञेयः விஜ்ஞேய: = அறியத்தக்கவர்

மூன்று பாதங்களைச் சொன்ன பிறகு நான்காவது பாதத்தைச் சொல்ல சுருதி ஆரம்பிக்கிறது. சப்தங்களால் கூறக்கூடிய குணங்கள் தர்மங்கள் முதலியவை பிராதபடியால் அது சப்தத்தால் கூறப்பட மாட்டாது என்று விசேஷங்களை நிஷேதிக்கிறதினலே

யமோ? அல்ல. மித்தியா வஸ்துவுக்கு அதிஷ்டான மில்லாம லிருக்கமாட்டாது. வெள்ளி, சர்ப்பம், புருஷன் கானல்ஜலம் முதலிய விகற்பங்கள் கிளிஞ்சல், ரஜ்ஜு, கட்டை, ஊஷரபூமி இவைக ளன்றியில் ஒன்றையும் ஆசிரயிக்காமல் இருப்பதாகச் சொல்ல முடியாது. அப்படியானால், பிராணாதி சர்வ விகற்பங்களுக்கும் துரீயம் ஆதாரமாயிருப்பதால் உதகத்திற்கு ஆதாரமான கடம் சப்தத்தால் கூறப்படுவதுபோல் சப்தத்தால் கூறப்படட்டுமே, நிஷேதத்தால் அதை அறிய வேண்டியதில்லையே?

இது யுக்தமன்று ஏனெனில் கிளிஞ்சல் முதலியவைகளில் வெள்ளி முதலியவைகள் பொய்யா யிருப்பதுபோல் பிராணாதி விகற்பங்களும் பொய்யா யிருக்கின்றன. (துரீயம் வாச்சியமா யிருக்கும் பக்ஷத்தில் ஐந்துநிமித்தகாரணங்க ளிருக்கவேண்டும். அதாவது சம்பந்தம், ரூடி, ஜாதி, கிரியை, குணம். இவைகளில் ஒன்றுமில்லை என்று இனிசொல்லுகிறார். எப்படி எனின்) (1) துரீயம் வஸ்து, துரீயத்துக்குவேறானது. வஸ்துவுக்கும் அவஸ்துவுக்கும் சம்பந்தம் ஏற்படமாட்டாது. (2) விசிஷ்ட ரூபமாய் பிரம்மம் விஷயமானாலும் ஸ்வரூபத்தில் உபாதியற்றதாக இருப்பதால் அது பசுமுதலியவைகள் போல் பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களுக்கு விஷயமாகிறதில்லை. ஆகவே ரூடி சம்பவிக்கமாட்டாது (3) பசு முதலியவைகளில்போல் அத்விதீயமான துரீயத்தில் சாமான்னிய விசேஷபாவங்களில்லாதபடியால் ஜாதிவிஷயமாயும் வாச்சியத்வம் ஏற்படமாட்டாது (4) சமயல்காரனிடத்தில் கிரியை யிருக்கிறதாக சொல்லுவதுபோல் கிரியை யற்ற துரீயபிரம்மத்தில் கிரியா விஷயமாய் வாக்கியத்வம் சொல்லமுடியாது (5) உத்பல முதலிய புஷ்பத்தில் நீலம் முதலிய குணங்களிருப்பதுபோல் நிர்குணப் பிரம்மத்தினிடத்தில் குணவிஷயமாய் வாச்சியத்வம் ஏற்படமாட்டாது. ஆகவே துரீயப் பிரம்மத்தை பெயரால் குறிப்பிட முடியாது.

ஆ :—அப்படியானால் முயற்கொம்பு முதலியவைகளை அறிவதினால் பிரயோஜன மில்லாததுபோல் இதை அறிவதினாலும் பிரயோசனமில்லாமற் போகவேண்டும்.

ச :—அது சரியன்று கிளிஞ்சலை அறிந்த மாத்திரத்தில் வெள்ளியின் ஆசை நிவிர்த்தியாய்விடுவதுபோல் துரியமே ஆத்மா

களாகிற தோஷங்கள் இருக்கமாட்டா. மேலும் துரீயத்தை ஆத்மாவாக அறியாததற்குக் காரணமில்லை. ஏனெனின் (1) तत्त्वमसि தத்வமஸி (சா-VI-8-7) அது நீயே (2) अयमात्मा ब्रह्म அயமாத்மா ப்ரஹ்ம (மா - 2) இந்த ஆத்மா பிரம்மம, (3)तत्सत्यम् தத்ஸத்யம் (சா-VI-8-7) அது சத்தியம் (4) स आत्मा यत्साक्षादपरोक्षाद्ब्रह्म ஸ ஆத்மா யத்ஸாக்ஷாதபரோக்ஷாத் ப்ரஹ்ம (பிரஹ) எது சாக்ஷாத் அபரோக்ஷப் பிரம்மமோ அது ஆத்மா (5) सबाह्याभ्यन्तरो ह्यजः ஸபாஹ்யாப்யந்தரோ ஹ்யஜ:(மு-II-1-2)அது உள்ளும் வெளியுடனும் கூடிப்பிறப்பற்றதாயிருக்கிறது (6) आत्मैवेदं सर्वमिदं ஆத்மைவேதம் ஸர்வமிதம் (சா-VII-25-2) இதுவெல்லாம் ஆத்மாவே முதலிய உபநிஷத்துக்களெல்லாம் அந்த அர்த்தத்தையே கூறுகின்றன. பரமார்த்த அபரமார்த்த ரூபமான இந்த ஆத்மா நான்கு பாதங்களுள்ளது என்று (முன் இரண்டாவது மந்திரத்தில்) சொல்லப்பட்டது. அபரமார்த்த ரூபமானது அவித்தையாலுண்டானது. ரஜ்ஜு ஸர்ப்பாதிகளுக்குச் சமமாயிருக்கிறது, விரைமுளைபோல ஒன்றுக்கொன்று காரியகாரணமாயிருக்கிற மூன்று பாதங்களுள்ளதென்று முன்சொல்லப்பட்டிருக்கிறது. இனி காரியகாரணமற்ற இரஜ்ஜுபோல பரமார்த்த ரூபமான துரீயத்தை சர்ப்பத்துக்குச் சமானமான மூன்று பாதங்களை நிஷேதித்து சுருதி नान्तः प्रज्ञं நாந்த:ப்ரஜ்ஞம்=முதலியதால் கூறுகின்றது.

ஆ :—ஆத்மாவுக்கு நான்கு பாதங்களிருக்கிறதாகச் சொல்லி மூன்று பாதங்களை கூறினதினாலேயே நான்காவது பாதம் अन्तःप्रज्ञं அந்த:ப்ரஜ்ஞம் முதலியவைகளுக்கு வேறு என்று சித்திக்கும்போது, இவைகளை நிஷேதித்தல் பிரயோசனமற்றதே. (இந்த ஆக்ஷேபகாரனுடைய அபிப்பிராயத்தில் ஆத்மாவினுடைய மூன்று பாதங்களும் வாஸ்தவம்; இவைகளை நிஷேதிக்கிறதினால் நான்காவது பாதம் சித்தித்துப்போகிறது, ஆகவே அதைத் தனியாக கூற வேண்டியதில்லை. மூன்று பாதங்களும் மித்தை என்றும் நான்காவதே வாஸ்தவம் என்றும் ஆகவே அதைத்தனியே கூறவேண்டியது யுக்தமென்றும் இனி சித்தாந்தி சொல்லுகிறார்.)

சி :—சர்ப்பாதி விகற்பங்களை நிஷேதிக்கிறதினாலேயே இரஜ்ஜுவின் ஸ்வரூபம் அறியப்படுகிறதுபோல் மூன்று அவஸ்தைகளுடன் கூடின ஆத்மாவுக்கு அவைகளை நிஷேதிக்கிறதினால் நான்காவது ஸ்திதியைக்கூற சுருதி இச்சிக்கிறது. तत्त्वमसि தத்வமஸி= (சா VI-8-7) என்னும் வாக்கியத்தில் த்வம் தத் பதார்த்தங்களுக்கு ஐக்கியம் சொல்லுகிறது போலும்.

ஆ :—மூன்று அவஸ்தைகளுடன் ஆத்மாவைவிட துரீயம் வேறாக இருக்கும் பக்ஷத்தில், ச: இரண்டுக்கும் சம்பந்தமில்லை. அப்போது ஒன்று சாதகமாகவும் மற்றொன்று சாத்தியமாகவும் ஆகமாட்டாது. ஆகையால் விசிஷ்ட ஆத்மா மூலமாக துரீயத்தை அறியமுடியாது. அதை அறிய வேறு மார்க்கமும் காணப்படவில்லை. ஆகையால் துரீயத்தின் ஞானமே உண்டாகமாட்டாது. ஆகையால் உன் ஆக்ஷேபம் யுக்தமன்று.

ஆ :—சாஸ்திரத்தால் துரீயத்தை அறியலாமெனில்

ச :—விசிஷ்டமான ஆத்மாவை ஒப்புக்கொண்டு அதிலுள்ள விசேஷணம்சங்களைத் தள்ளி மிச்சப்படுவதை துரீயமாக சாஸ்திரம் உபதேசிக்கிறது. இரண்டுக்கும் அத்தியந்தம் பேதமிருக்கும் பக்ஷத்தில் உபதேசம் வியர்த்தமாகும். சாஸ்திரத்தால் அதை அறியமுடியாமலபோகும். ஆகையால் உன் ஆக்ஷேபம் யுக்தமன்று.

ஆ :—துரீயத்தின் ஞானமே வேண்டாமே எனின்.

ச :—விசிஷ்டந்தான் அறியப்பட்டிருக்கின்றது. துரீயமோ அறியப்படவில்லை. விசுவாதிகள் தள்ளப்பட்டுப் போய்விட்டபடியாலும் வேறு ஒன்றும் அறியப்படாததினாலும் ஆத்மா இல்லை என்னும் ஞானமே சித்திக்கும்.

ஆ :—மேற் கூறிய தோஷங்களால் பேதம் சித்திக்க வேண்டாம், அபேத பக்ஷந்தான் எப்படி சித்திக்கும்.

ச —(a) பிரயோசனமில்லை என்பதாய் இந்த ஆக்ஷேபஞ்செய்கிறாயா ? (b) சப்தம் பிரமாணம் அல்ல என்பதாய் ஆக்ஷேபிக்கிறாயோ ? (c) சாதனமல்ல என்று ஆக்ஷேபிக்கிறாயா ?

(a) முதலாவது பக்ஷத்தில், அதிஷ்டானமான இரஜ்ஜுவானது சர்ப்பம், ஜலதாரை முதலியவைகள்போல் தோன்றுகிறது போல், ஒரே ஆத்மா மூன்று அவஸ்தைகளிலும் அந்த: பிரஞ்ஞன் முதலியவைகள்போல் வெகுவாய் எப்போது காணப்படுகிறதோ, அப்போது அதை ஒப்புக்கொண்டு அதிலுள்ள அந்த: பிரஞ்ஞத்தன்மை முதலியவைகளை நிஷேதிக்கிறதினால் உண்டாகும் ஞானம் சித்திக்குங்காலத்திலேயே அனர்த்த நிவிர்த்தியாகியபலம் சித்திக்கிறது. ஆகவே பிரயோஜனமில்லை என்றும் ஆக்ஷேபத்துக் கிடமில்லை.

(b) "பரோக்ஷஞானம் அதாவது ஒருகாலத்தில் உண்டாகக்

[illegible]

கற்பிக்கப்பட்டதல்ல. ஆகையால் அதை உண்டாக்க (அல்லது கொடுக்க) சப்தம் ஹேதுவாக யோக்யமல்ல. ஆகையால் துரீயத்தை அறிவதற்கு வேறு பிரமாணத்தைத்தேடவேண்டும்'' என்னும் பக்ஷத்தில் துரீயத்தை சாக்ஷாத்கரிக்கிற விஷயத்தில் சப்தத்தைத்தவிர வேறுபிரமாணத்தைத் தேடவில்லை, ஏனெனில், (பிரகிருதவிஷயமாகிய) துரீயமோ, சிஷ்டிக்கப்படாததும் (ஸ்வப்பிரகாசம், அல்லது நித்திய) அபரோக்ஷமாயும் இருக்கிறது. ஆகையால் சப்தமே பிரமாணம். வேறு பிரமாணம் தேடவேண்டிசிதில்லை.

(c) துரீயத்தை ஸாக்ஷாத்கரிப்பதற்கு प्रसंख्यानं =ध्यानाभ्यास ஆவ்ருத்தி=ப்ருத்தி அல்லது योग யோகம்) என்கிற சாதனாந்தரம் வேண்டும் (शब्द ஜ்ஞானம் போதாது) என்னும் பக்ஷத்தில், प्रसंख्यानं ப்ரஸம்ஸ்ருதி அப்பிரமாணமாகையால் (पंचदशी வஜ்ரதீபம் IV37 IX 117),— வாஸ்தவ ஞான ஸாக்ஷாத்காரணத்தை அது प्रसंख्यानं ப்ரஸம்ஸ்ருதி) உண்டாக்காது.

ஆ: பிரமாணத்தின் பிரயோஜனமானது விஷயத்தை ஸ்பஷ்டமாக்குவதேதவிர அதிலுள்ள அத்தியாசமாகிய அநர்த்தத்தின் நிவர்த்தியன்று என்றுசொன்னால்.

ச: இப்படிச் சொல்லுவது கோடாலியால் கட்டையைப்பிளக்கும் கிரியையானது பிளக்கப்பட்ட ஒரு பாகத்திலிருந்து அதற்கு ஒரு விசேஷத்தைக்கொடுக்கிறதாகிறதே தவிற, பாகங்களின் சேர்க்கையை விலக்குகிறதாகஇல்லை என்று சொல்லுவதற்கு ஒப்பாகும்.

ஆ:—அஞ்ஞான நிவர்த்தியே பிரமாணத்தின் ப்ரயோசனம் என்னும் பக்ஷத்தில் விஷய ஞானமுண்டாவதற்குக் காரணமில்லாததால் விஷயஞானம் உண்டாகமாட்டாது. கடமானது இருட்டால் மூடப்பட்டதாய் வியவஹாரத்துக்கு யோக்கியமன்றியிருக்கிறது. பிரத்தியக்ஷாதிப் பிரமாணமானது இருட்டைவிலக்கி கடத்தை வியவஹாரத்துக்கு யோக்கியமாகச்செய்கிறது. பிரமாணத்தின் பலமானது இருட்டை நிவிர்த்திக்கிறதாக இருந்தால் கடஞானப் பிரமாணம் பலமாகமாட்டாது. கட்டையைப்பிளக்கும் கிரியையானது அதின் பாகங்களின் சேர்மானத்தை விலக்குகிறதில் பிரவிர்த்திக்கிறதுபோல் இவ்விடத்திலும் இருட்டைப்போக்குவதில் பிரமாணம் பிரவிர்த்திக்கிறது. ஆகையால் கடஞானம் உண்டாகமாட்டாது,

ச:—பிரமாணத்தின்பலம் அந்தகார நிவிர்த்திதான். அந்த கட விர்த்தியால் கடஞானம் தானாகவே சித்திக்கிறது. அதற்கு வேறு சாதனம் வேண்டியதில்லை. அது பிரமாணத்தின்பலமன்று. மேலும் கடாதிகள் ஜடமாயிருப்பதால்பிரகாசிக்கிற விஷயத்தில் ஞானத்தை அபேக்ஷிக்கின்றன. இந்த ஞானமானது பிரமாணத்துக்குப் பலமாயிருந்தாலும் துரீயமான ஆத்மஞான ஸ்வரூபமாயிருப்பதால் அது பிரகாசிக்கிற விஷயத்தில் வேறு ஞானம் வேண்டியதில்லை. ஆகவே, அதிற்சம்பந்தப்பட்ட அந்த:பிரஞ்ஞ முதலிய அஞ்ஞானநிவர்த்தியே பிரமாணத்தின்பலம், அந்த: பிரஞ்ஞைமுதலியவைகளின் நிவர்த்தியாகுங்காலத்திலேயே பிரமாதாமுதலிய பேதங்கள் நிவிர்த்தியாய் விடுகின்றன. அப்படியே ज्ञाते द्वैतं नविद्यते ஜ்ஞாதே த்வைதம் நவித்யதே அதாவது பிரம்மம் அறிந்தமாத்திரத்தில் துவைதம் இல்லாமற்போகிறது. என்று மேல்சொல்லப்போகிறார். மேலும் எந்தக்ஷணத்தில் ஞானமுண்டாகி துவைதம் நிவிர்த்தியாகிறதோ அந்தக்ஷணத்தைத்தவிர வேறுக்ஷணத்தில் ஞானமிருக்கிறதில்லை. அப்படி ஞானமிருந்தால் அதற்கு விஷயமானபிரம்மம் ஞேயம் ஒன்று இருக்க மறுபடியும் துவைதம் ஏற்படும். இதை நிவிர்த்திக்க ஒருஞானம் வேண்டும். இப்போதும் துவைதம் ஏற்படும். இப்படி அனவஸ்தாதோஷம் சித்திக்கும். துவைதமே நிவிர்த்தியாகமாட்டாது. ஆகையால் நிஷேதிக்கிறதினால் எந்த ஞானம் உண்டாகிறதோ அந்தஞானம் உண்டாகிற காலத்திலேயே ஆத்மாவினிடத்தில் ஆரோபிக்கப்பட்டிருக்கிற अन्त: प्रज्ञ அந்த: ப்ரஜ்ஞ முதலிய அநர்த்த நிவிர்த்தி ஆய்விடுகிறது.

नान्त: प्रज्ञ: நாந்த: ப்ரஜ்ஞ:=இது தைஜஸனை நிஷேதிக்கிறது

नवहि: प्रज्ञ: நபஹி: ப்ரஜ்ஞ:= இது விசுவனை நிஷேதிக்கிறது.

नोभयत: प्रज्ञं நோபயத: ப்ரஜ்ஞம்=இது ஜாக்கிர ஸ்வப்னங்களின் மத்தியிலிருக்கிற அவஸ்தையை நிஷேதிக்கிறது.

नप्रज्ञानघन: நப்ரஜ்ஞாநகந:=இது சுஷுப்தி அவஸ்தையை நிஷேதிக்கிறது. ஜாக்ர ஸ்வப்னங்களுக்குக் காரணம் சுஷுப்தி-இதில் யாதொருவியக்த விசேஷஞானமுமில்லை. ஆகவே பிரிக்கக்கூடாத ஒரே ஞானமாயிருக்கிறது. அப்படிப்பட்டதும் அல்ல, இந்த துரீயம்,

नप्रज्ञं நப்ரஜ்ஞம்=இது ஒரேகாலத்தில் சகல விஷயங்களையும் [illegible] அவஸ்தையை நிஷேதிக்கிறது.

नाप्रज्ञं நாப்ரஜ்ஞம் = இது அசேதனமென்பதை நிஷேதிக்கிறது.

ஆ :—ரஜ்ஜு முதலியவைகளில் பிராந்தியால் தோன்றும் சர்ப்பாதிகள் நிஷேதிக்கப்படுகிறபடியால் அவைகள் இல்லை என்று சொல்லுவது யுக்தம். ஆத்மாவினிடத்திலோ அந்த : பிரஜ்ஞத்தன்மை முதலியவைகள் பிரமாண ஸித்தமாயிருப்பதால் அவைகளை எப்படி நிஷேதிக்கலாம்.

சு :—அந்த : பிரஜ்ஞாதிகள் ஞானஸ்வரூபமா யிருப்பதால் ஒன்றுக்கொன்று விசேஷமில்லாவிடினும், ரஜ்ஜு முதலியவைகளில்கற்பிக்கப்பட்ட சர்ப்பம் ஜலதாரமுதலியவைகள்போல் ஒன்று தோன்றும்போது மற்றொன்று தோன்றாமையால், அஸத்தாயிருக்கின்றன. ரஜ்ஜு முதலியவைகள் போல், ஞானஸ்வரூபம் மாறாமலிருப்பதினால் அது, ஸத்தியமாயிருக்க ஸகல கற்பனைக்கும் அது ஸத்தியமாயிருக்கிற அதிஷ்டானமாகும்.

ஆ :—ஸுஷுப்தியால் ஞானமில்லை என்று சொல்லுவோமே

ச :—அது சரியன்று. ஏனெனின் ஸுஷுப்தி அடைந்த புருஷனுக்கு ஞானனுபவம் ஸித்தமாயிருக்கிறது. नहिविज्ञातुः विज्ञातेर्विपरिलोपो विद्यते நஹிவிஜ்ஞாதுஃ விஜ்ஞாதேர்விபரிலோபோ வித்யதே (பிரஹ) ஞானியின் ஞானத்துக்குலோபம் ஸம்பவிக்கிறதில்லை. என்று ஸ்ருதியும் கூறுகிறது.

अदृष्टं அத்ருஷ்டம்=இப்படி துரீயமானது நிஷேத வசனங்களால் நிர்விசேஷமாகிறது. ஆகையால் அது ஞானேந்திரியத்துக்கு விஷயமாகமாட்டாது. ஆகவே அது அதிர்ஷ்டம் அதாவது பார்வைக்குளடங்ினதன்று.

अव्यवहार्यं அவ்யவஹார்யம்= அதிர்ஷ்டமாயிருப்பதால் வியவஹாரத்துக்கு யோக்கிய மன்றியிலிருக்கிறது.

अग्राह्यं அக்ராஹ்யம்=கர்மேந்திரியங்களால்கிரஹிக்கக்கூடாதது

अलक्षणं. அலக்ஷணம் = ஊஹிக்கத்தக்கதன்று.

अचिन्त्यं அசிந்த்யம்= பிரத்தியக்ஷ அனுமானங்களுக்கு விஷயமாகாதபடியால் சிந்திக்கக் கூடாததாயிருக்கிறது.

अव्यपदेश्यं அவ்யபதேஸ்யம்= மனதிற்கு விஷய மாகாதபடியாலேயே சப்தத்தால் குறிப்பிடக்கூடாது.

एकात्म प्रत्ययसारं ஏகாத்ம [illegible]

வெனில், ஜாக்ரத் முதலிய அவஸ்தைகளில் இந்த ஆத்மா ஒன்றே மாறுபாட்டை யடையாமலிருக்கிறது என்று யாதொரு ஞானமுண்டோ அந்த ஞானத்தால் அறியத்தக்கது. அல்லது எந்த துரீயத்தை அறிவதில் ஆத்ம ஞானமே பிரமாணமாயிருக்கிறதோ அந்த துரீயம் ஏகாத்மியப்பிரத்தியயஸாரம் आत्मेत्येवोपासीत ஆத்மேத்யேவோபாஸீத = அதாவது ஆத்மாவே உபாசிக்கத்தக்கது என்று பிருஹதாரணியக ( ) சுருதியில் பரிபூர்ணமான லக்ஷணங்களுடன் கூடினவன் ஆத்மா. அவன் வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதவன்; சுருதியால் அறியத்தக்கவன். அப்படிப்பட்ட பரமாத்மாவை தான் என்று கிரகித்து தத்ஆகாரமாக இருக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மூன்று அவஸ்தைகளை அதிக்கிரமித்த துரீயமான ஆத்மா அபரோக்ஷமாய் காணப்படுகிறதென்று சுருதியால் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

प्रपञ्चोपशमं ப்ரபஞ்சோபஶமம் = அந்த: பிரஞ்ஞன் முதலானவர்கள் என்று சொன்னதால் அந்த ஸ்தானங்களின் அபிமானிகளின் தர்மங்கள் துரீயத்துக்கில்லை என்று நிஷேதிக்கப்பட்டன. பிரபஞ்சோபசமம் என்பதால் ஜாக்கிரத் முதலிய ஸ்தானங்களின் தர்மங்களில்லை என்று கூறப்படுகின்றது.

शान्तं ஶாந்தம் = இராக துவேஷாதிகளற்றது. விகாரமற்றது. கூடஸ்தம் என்று அர்த்தம்.

शिवं ஶிவம் = பரிசுத்தம், பரமானந்த ஞானஸ்வரூபம்.

अद्वैतं चतुर्थं मन्यन्ते அத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே = பேதப்பிரமைகளற்றதானதால் நான்காவது என்று நினைக்கிறார்கள். இது எண்ணிக்கைக்கு விஷயமாகாவிட்டாலும் காணப்படும் விசுவாதி மூன்று பாதங்களுக்கு விலக்ஷணமாயிருப்பதால் இது நான்காவது என்று கூறப்படுகின்றது.

स आत्मा स विज्ञेयः ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய: = காணப்படும் சர்ப்பம் பூமிப்பிளப்பு, தண்டம், இவை முதலியவைகளுக்கு வேறாக ரஜ்ஜு எப்படியிருக்கிறதோ அப்படி அவன் ஆத்மா அவன் அறியத்தக்கவன் "தத்வமஸி முதலிய வாக்கியங்களின் அர்த்தமாக ஏற்படுகிறது. ஆத்மா பார்க்கப்படாமலிருந்து பார்க்கிறான். नहि द्रष्टुः दृष्टेर्विपरिलोपो विद्यते நஹி த்ரஷ்டு: த்ருஷ்டேர்விபரிலோபோ வித்யதே = அதாவது திரஷ்டாவின் திருஷ்டியானது நாசமடைகிறதில்லை" முதலிய சுருதிகளில் கூறப்பட்ட ஆத்மா அறியத்தக்கவன் என்று சொன்னதானது அவித்தியாவஸ்தையில் அப்படி சொல்லுவதை அனுசரித்துத்தான். வித்தியாவஸ்தையில் [illegible]

[illegible]

[illegible]

II - 14 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

ஈபா அ-கை :—ரங்கராமாநுஜ பாஷ்யத்தை நிரூபிக்கிறார். नान्तःप्रज्ञः न बहिःप्रज्ञः नोभयतःप्रज्ञः நாந்த:ப்ரஜ்ஞ: ந பஹி:ப்ரஜ்ஞ: நோபயத: ப்ரஜ்ஞ: = என்பவைகளால் வெளி பிரஞ்ஞனான விச்வன், அந்த பிரஞ்ஞன் தைஜஸன், இவர்களைவிட வேறு என்று ஏற்படுகிறது

न प्रज्ञानघनं न प्रज्ञं ந ப்ரஜ்ஞாநகநம் ந ப்ரஜ்ஞம் = என்பவைகளால் ஸுஷுப்தி ஸ்தானனான பிரஞ்ஞானனைவிட வேறு என்று ஏற்படுகிறது. பிரஞ்ஞன் என்பதும் பிராஞ்ஞன் என்பதும் ஒரு பொருளைத்தான் கூறுகிறது.

न प्रज्ञं ந ப்ரஜ்ஞம்:—ந பிரஞ்ஞன் என்று சொன்னால் பிரஞ்ஞை இல்லாதவன் என்று ஏற்படும். பிரஞ்ஞை இல்லாதவன் அப்பிரஞ்ஞன் ஆவனென்னின் 'இல்லை என்கிறார்.

प्रकर्षेण जानातीति प्रज्ञः ப்ரகர்ஷேண ஜாநாதீதி ப்ரஜ்ஞ: அதாவது துரியன். விசேஷமாக அறிகிறவன். ஞானமுதலிய ஆறு குணங்களுக்குள் ஞானமுடிகமாயிருப்பதால், பிரஞ்ஞ சப்தத்தால் கூறப்படும் சுஷுப்தி ஸ்தானத்திலிருக்கிற சங்கர்ஷணனைவிட வேறாக இருந்தாலும் சர்வஞ்ஞனுகையால் அஞ்ஞன் அல்லவென்பது கருத்து.

अदृष्टं அத்ருஷ்டம்=பாஹ்ய இந்திரியங்களால் அறியத்தகாதது.

अव्यवहार्यं अग्राह्यं அவ்யவஹார்யம் அக்ராஹ்யம்=வாக்கு ஹஸ்தம் முதலிய கர்மேந்திரியங்களுக்கு விஷயமாகாதது. ஆகையால்

अलक्षणं அலக்ஷணம்=அனுமானத்தால் அறியத்தகாதது. ஆனதால்

अचिन्त्यं अव्यपदेश्यं அசிந்த்யம் அவ்யபதேச்யம்=இது இப்படிப்பட்டதென்று நினைக்கவும் சொல்லவும் முடியாதது.

एकात्मप्रत्ययसारं ஏகாத்ம ப்ரத்யயஸாரம்=ஏகாத்மஞானத்துக்கு விஷயமாக இருக்கிறது.

प्रपञ्चोपशमं ப்ரபஞ்சோபசமம் = சங்கர்ஷண, பிரத்தியும்ன அநிருத்த முதலிய பிரபஞ்சம் எதினிடத்தில் லயத்தை அடைகிறதோ அது பிரபஞ்சோபசமம். அப்படி இருக்கிறது. एतन्नानावताराणां निदानं बीजमव्ययं ஏதந்நாநாவதாராணாம் நிதாநம் பீஜ அவ்யயம் என்கிற ஸ்மிருதி இதற்குப் பிரமாணம்.

शान्तं சாந்தம்=பசிதாகமுதலிய ஆறு ஊர்மிகளற்றது.

शिवं சிவம்=ஒரு காலத்திலும் உற்பத்தி நாசமுதலியவைகள் ... மங்களம்,

अद्वैतं அத்வைதம்=இதற்குச் சரியான இரண்டாவது வஸ்துவில்லை. இப்படிப்பட்ட வாசுதேவனை

चतुर्थं मन्यन्ते சதுர்த்தம் மந்யந்தே=நான்காவது பாதமாக எண்ணுகிறார்கள்.

सः ஸ:=அவன்

आत्मा ஆத்மா=சகல தேச காலங்களில் சகல வஸ்துக்களையும் வியாபித்திருப்பதால் சங்கர்ஷணன் முதலானவர்களுக்கும் அவன் ஆத்மாவாக இருக்கிறான்.

सः विज्ञेयः ஸ: விஜ்ஞேய:=तमेवैकं जानथान्या वाचोविमुञ्चथ தமேவைகம் ஜாநதாந்யா வாசோவிமுஞ்சத என்கிற சுருதியிற் சொல்லியபடி அவனே அறியத்தகுந்தவன் என்று அர்த்தம். ॥ 16 ॥

௭—பா.

அவதாரிகை:—ஆத்மாவுக்கு நான்காவது பாதத்தைக் கூறுகிறார்.

नान्तःप्रज्ञं நாந்த:ப்ரஜ்ஞம் :–अन्तःप्रज्ञापयति=अन्तःप्रज्ञः அந்த:ப்ரஜ்ஞாபயதி=அந்த:ப்ரஜ்ஞ: அதாவது உள்ளே பிரஜ்ஞையை உண்டுபண்ணுகிறவர். ஸ்வப்நத்திலுண்டான வஸ்துக்களைக் காண்பிக்கிறவர் இவர் ஸ்வப்நத்திலுண்டான பதார்த்தங்களை பிரகாசம் பண்ணாதவராகையால் நாந்த: பிரஜ்ஞம்.

न बहिःप्रज्ञं ந பஹி:ப்ரஜ்ஞம்:– ஜாக்கிறத் காலத்திலுண்டான வஸ்துக்களை பிரகாசம் பண்ணாதவர்.

नोभयतः प्रज्ञं நோபயத: ப்ரஜ்ஞம்=பாஹ்ய சப்தாதிகளை அறிந்து ஸ்வப்நகாலத்திலுண்டான வஸ்துக்களையும் எப்போது பார்க்கிறாரோ அப்போது அதுவும் ஒரு தசை என்று उभय உபய என்பதால் கூறப்படுகின்றது. பாஹ்ய ஆந்தரங்களை பிரகாசம் செய்வதால் उभयतः प्रज्ञः உபயத: ப்ரஜ்ஞ: என்று சொல்லப்படுகிறான். நான்காவது பாதம் இப்படி இராதபடியால் नोभयतः प्रज्ञः நோபயத: ப்ரஜ்ஞ: எனப்படுகிறது. இந்த தசையின் வியாபாரம் விசுவதைஜஸ ஆகிற ஈசுவரனுடைய இரண்டு ரூபங்களால் செய்யப்படுகிறது. அது துரீயத்தில் இல்லை என்று அர்த்தம்.

न प्रज्ञानघनं ந ப்ரஜ்ஞாநகநம்=அஞ்ஞானத்தால் சூழப்பட்ட, தாங்குகிற ஜீவஸ்வரூபத்தை பிரகாசம் செய்யாதது.

न प्रज्ञं ந ப்ரஜ்ஞம்=மனோவாசனையாலுண்டான பதார்த்தங்களை பிரகாசம் பண்ணாதது. மானசிக [illegible]

படியே ஜாக்ர காலத்தில் நிர்விஷயமான ஆத்மஸ்புரணமற்ற ஜடபாவத்தை பிரகாசம் செய்வது பிராஞ்ஞன். சுஷுப்தியிலும் பிரகாசம் செய்வது பிராஞ்ஞன். துரீயன் இப்படிப்பட்டவனல்ல ஆகையால் தைஜஸன்.

இந்தப் பிரகாரம் விசுவ, தைஜஸ, பிராஞ்ஞ என்று பெயருள்ள மூன்று ரூபங்களின் வியாபாரங்களையும் அதாவது வெளி பதார்த்தம் உள் பதார்த்தம் இவைகளின் ஸ்வரூபத்தைத் அறிவிப்பதையும் ஸுஷுப்திஸ்வரூப ஞாபனத்தையும் அதாவது தூங்குகிறவனுடைய ஸ்வரூபத்தை தெரியப்படுத்துகிறதையும், கொஞ்சம், பாஹ்யம் கொஞ்சம் ஸ்வப்நம் இப்படி இருவித வியாபாரத்தையும், சமாதியில் நிரந்தர ஞானத்தை உண்டுபண்ணும் வியாபாரத்தையும், மேற்சொல்லிய ஜடபாவமாகிய வியாபாரத்தையும், இவைகளை துரீயன் செய்யவில்லை என்பது கருத்து.

न प्रज्ञं நா ப்ரஜ்ஞம் :- (அ-கை) नोभयतःप्रज्ञं நோபயதஃப்ரஜ்ஞம் என்பதினால் ஸ்வரூபத்தால் செய்யப்பட்ட இரண்டு வியாபாரமும் இவனுக்கில்லையாவெனின் அதை விசாரிக்க வேண்டிய அந்த துரீயமானது வியாபாரமற்றதா வெனின் வியாபாரமுளது என்று உத்தரம் சொல்லுகிறார். பிரஞ்ஞாபனமென்ற வியாபாரத்தோடு கூடினவர். முக்தர்களுக்கு யோக்கியமான சர்வ ஞானத்தை கொடுக்கும் வியாபாரத்தோடு கூடினவர் என்று அர்த்தம்.

अदृष्टं அத்ருஷ்டம்=பாஹ்ய ஆந்தர பதார்த்தங்களின் ஞானஞ்ஞானங்களால் விசுவாதிகள் ஊஹிக்கப்படுகிறார்கள். துரீயன் விசுவாதியல்ல. ஆகையால் அதிர்ஷ்டன்-அல்லது பக்தர்களுடைய திருஷ்டிக்கு விஷயமாகாதபடியால் அதிர்ஷ்டம்.

अव्यवहार्यं अग्राह्यं அவ்யவஹார்யம் அக்ராஹ்யம் முக்திகாலத்தில் தவிர மற்ற காலங்களில் பகவானுடைய ஞானம், அவரைக்கூறும் சப்தங்கள் இவைகள் சம்பவிக்க மாட்டாவாகையால் அக்கிராஹ்யம், அவ்விய வஹாரியம் என்று சொல்லப்படுகிறது.

अलक्षणं அலக்ஷணம்=லக்ஷணமற்றது. ஜாக்கிரத் முதலிய காலங்களில் பிரவிர்த்தி என்கிற ஹேதுவற்றது. ஆகையால்

अचिन्त्यं அசிந்த்யம்=சிந்திக்கத்தகாதது. ஆகையால்

अव्यपदेश्यं அவ்யபதேச்யம்= இன்னதென்று சொல்ல முடியாதது.

एकात्म्य प्रत्ययसार ஏகாத்ம்ய ப்ரத்யயஸாரம் = பிரதானமாயும், பூர்ணமாயும், ஞானரூபமாயும், ஆநந்தரூபமாயு மிருக்கிறவர்.

प्रपञ्चोपशमं ப்ரபஞ்சோபஶமம் = எங்கும் நிறைந்தவராயும் உத்கிருஷ்டாநந்த ரூபமாயு மிருக்கிறவர். அல்லது முக்தர்களுடைய பிரபஞ்சத்தை அதாவது அவர்களுக்கு அநிஷ்டங்களான தேகாதிபந்தங்களை உபசமம் பண்ணுகிறபடியால் அதாவது நிவிர்த்தி செய்கிறபடியால் பிரபஞ்சோபசமம்,

शान्तं ஶாந்தம் = ஊர்மிகளற்றவர்

शिवं ஶிவம் = துக்கமற்றதாயும் சுகரூபமாயுமிருப்பதால் சிவம்

अद्वैतं அத்வைதம் = த்வைதம் என்றால் மித்தியாஞானம் எதினால் மித்தியாஞானம் உண்டாகா தில்லையோ அது அத்வைதம். அல்லது மித்தியாஞானத்துக்கு விரோதி என்றுவது அர்த்தம். நான் என்னுடையது என்கிற மித்தியா ஞானத்தை நிவர்த்தி செய்கிறது என்பது கருத்து.

चतुर्थं சதுர்த்தம் = இப்படிப்பட்ட ஆத்மாவை நான்காவது ரூபமாக உபநிஷத்தில் விசுவாச முள்ளவர்கள்

मन्यन्ते மந்யந்தே = எண்ணுகிறார்கள்.

सोऽयमात्मा चतुष्पात् ஸோ(அ)யமாத்மா சதுஷ்பாத் = இந்த ஆத்மாவானவர் நான்கு ரூபத்தோடு கூடினவர் என்று வேதத்தால் பிரதிஞ்ஞை செய்யப்பட்டது. விசுவன் தைஜஸன், பிராஞ்ஞன், துரியம் என்று பெயருள்ள நான்கு ரூபங்களையும் விஸ்தாரமாக நிரூபணம் செய்து மூன்று ரூபங்களை விளக்கச்செய்யும் மந்திரங்களை உதாகரித்து நான்காவது ரூபத்தை விளக்கச்செய்யும் மந்திரங்களை உதாகரிக்கப் போகிறவரா யிருந்துகொண்டு, இப்போது நான்காவது ரூபமான ஆத்மா அறியத்தகுந்தவரென்று சொல்லி முடிக்கிறார்.

(य: ய: = எவர் நான்காவது ரூபமான)

आत्मा ஆத்மா = ஆத்மாவோ

स: ஸ: = அந்த ஆத்மா

विज्ञेय: விஜ்ஞேய: = நான்கு ரூபமாக முமுக்ஷுக்களால் அறியத்

[illegible]

இரண்டாவது கண்டம் முதலாவது மந்திரம்.

அ-கை:—இவ்விதமாக விசுவாதி மூன்றின் மஹிமையைக்கூறி துரீயத்தின் மஹிமையைக் கூறுகிறார்.

अन्त: प्रज्ञन அந்தஃப்ரஜ்ஞம் ந=अन्त:प्रज्ञापयतीति अन्त:प्रज्ञ: அந்தஃப்ரஜ்ஞாபயதீதி அந்தஃப்ரஜ்ஞஃ ஆத்மாவின் நான்காவது ரூபமானது உள்ளே ஞானமுண்டுபண்ணுகிறதில்லை. அதாவது ஸ்வப்ந பதார்த்தங்களை காண்பிக்கிறதில்லை.

बहि:प्रज्ञं न பஹிஃப்ரஜ்ஞம் ந=ஜாக்கிரத் பதார்த்தங்களின் ஞானத்தை உண்டுபண்ணுகிறதில்லை.

பிரமாண வாக்கியம்:—

अन्तर्बहिश्च सौतंच समाधिज्ञानमेवच ॥ ब्रह्मांडे ॥
அந்தர்பஹிஸ்ச ஸௌதஞ்ச ஸமாதிஜ்ஞாநமேவச ॥
॥ ப்ரஹ்மாண்டே ॥

उभयत: प्रज्ञन உபயதஃப்ரஜ்ஞம் ந=வெளியேயிருக்கிற பதார்த்தங்களைத் தெரிந்துகொண்டு ஸ்வப்நத்திலுண்டான பதார்த்தங்களையும் எப்போது பார்க்கிறானோ அந்த அவஸ்தை உபயத: என்பதால் கூறப்படுகிறது. ஆகவே பாஹிய ஆந்தர பதார்த்தங்களை அறியும்படி செய்கிறதில்லை.

பிரமாண வாக்கியம்:—

बहि: शब्दादिकं ज्ञानमन्तस्वप्नं तथैव च ।
यदाभवति सावस्था उभयज्ञान शब्दिता ।
एतत्सर्वं तुरीयेण नकरोत्यज. ॥

பஹிஃ ஸப்தாதிகஞ்ஜாநமந்தஸ்ஸ்வப்நம் ததைவச ।
யதாபவதி ஸாவஸ்தா உபயஜ்ஞாநஸப்திதா ॥
ஏதத்ஸர்வம் துரீயேண நகரோத்யஜஃ

प्रज्ञानघनं न ப்ரஜ்ஞாநகநம் ந=घनप्रज्ञानं கநப்ரஜ்ஞாநம் என்று மாற்றிக்கொள்ளவும் ஸுஷுப்தியை அடைந்த ஜீவஸ்வரூபத்தையாவது அஞ்ஞானத்தையாவது ஜீவன் அறியும்படி செய்கிறதில்லை

प्रज्ञं न ப்ரஜ்ஞம் ந=மனோவாஸனையாலுண்டான வஸ்துக்களை அறியும்படி செய்கிறதில்லை. விசுவதைஜஸ பிராஞ்ஞனென்று பெயருள்ள மூன்று ரூபங்களின் வியாபாரங்களையும், பாஹியவஸ்து, ஸ்வப்நவஸ்து, ஸுஷுப்தி ஸ்வரூபம், இவைகளை அறியும்படி செய்

[illegible]

[illegible]

அப்படியானால் இந்த நான்காவது ரூபத்துக்கு வியாபாரமே யில்லையாவெனின் சொல்லுகிறார்.

अप्रज्ञं न அப்ரஜ்ஞம் ந=ப்ரஜ்ஞையை உண்டுபண்ணுகிறதில்லை என்பதில்லை. முக்தர்களுக்கு அவரவர்களுக்குத் தகுதியான பூர்ணஞானத்தை உண்டுபண்ணுகிறதென்பது கருத்து.

ப்ரமாண வாக்கியம் :—

सर्वज्ञान प्रदश्चापि मुक्तस्यैव तुरीयकः ॥ ब्रह्मांडे॥

ஸர்வஜ்ஞாந ப்ரதஶ்சாபி முக்தஸ்யைவ துரீயக: ॥

॥ ப்ரஹ்மாண்டே ॥

अदृष्टं அத்ருஷ்டம்=விச்வன் முதலிய மூன்று ரூபங்கள் பாஹ்ய ஆந்தர ஞானத்தை உண்டுபண்ணுவதால் ஊஹிக்கப்படுவது போல் நான்காவது ரூபம் ஊஹிக்கப்படவில்லை. அல்லது (2) அமுக்தர்களின் திருஷ்டிக்குக் காணப்படாததால் அதிர்ஷ்டம்.

பிரமாணம் :—

अमुक्तस्यत्व दृश्यत्वात्षोडशी वाकलामृते ॥

அமுக்தஸ்ய த்ருஶ்யத்வாத் ஷோடஶீம் வாகலாம்ருதே ॥

பதினாறு கலைகளுடைய முக்கிய பிராணனுடைய அனுக்ரஹமன்றியில் ஜீவன் முக்தியில்லாததால் அப்படிப்பட்டவர்களால் அதிர்ஷ்டம்.

अव्यवहार्यं அவ்யவஹார்யம்=முக்தியன்றியில் அந்த ரூபத்தின் ஞானமும் அதின் வியவஹாரமுமிராததால் அவ்வியவஹாரியம்.

பிரமாணம் :—

तुरीयोदृष्ट इत्युक्तो ग्रहणादेरगोचरः ।
विनामुक्तिं यतस्तेना व्यवहार्य इतीरितः ॥

துரீயோ த்ருஷ்ட இத்யுக்தோ க்ரஹணாதேரகோசர: ।
விநாமுக்திம் யதஸ்தேநா வ்யவஹார்ய இதீரித: ॥

अग्राह्यं அக்ராஹ்யம்=முன் சொல்லிய அர்த்தமே

अलक्षणं அலக்ஷணம்=ஜாக்கிராதி அவஸ்தைகளில் ஜீவர்களை பிரவிர்த்திக்கும்படி செய்தல் எப்படி விச்வாதி ரூபங்களை அனுமானிக்கக் காரணமாயிருக்கிறதோ அப்படி இதை அனுமானிக்கக் காரணமில்லை. அப்படிப்பட்டது. ஆகவே

अचिन्त्यं அசிந்த்யம்=சிந்திக்கக்கூடாத சக்தியுள்ளது.

பிரமாண வாக்கியம் :—

[illegible]

[illegible]
[illegible]

अव्यपदेश्यं அவ்யபதேஶ்யம்=பிறருக்குச் சொல்லமுடியாதது.
பிரமாணம் :—

ततएवद्य निर्देश्य श्चिदानन्दैक लक्षणः ।
मुक्तस्य सर्वव्यापार हेतुरेव तुरीयकः ॥

[illegible]
[illegible]

ऐकात्म्य प्रत्ययसारं ஏகாத்ம்ய ப்ரத்யயஸாரம்=பிரதானமாகவும், பூர்ணமாகவும் ஞானரூபமாகவும், ஆநந்த ரூபமாகவும் இருக்கிறது.

பிரமாணம் :—

एकःप्रधान उद्दिष्टः आत्मापूर्णस्ततः श्रुतः ।
तदेवास्यस्वरूपं यदेकात्म्यं नामकीर्त्तितः ।
प्रत्ययोज्ञानरूपत्वात्सार आनन्दरूपतः ॥

[illegible]
[illegible]
[illegible]

प्रपञ्चोपशमं ப்ரபஞ்சோபஶமம்=பிரபஞ்சரூபமாகவும் அதாவது வியாபகமாகவும், உத்கிருஷ்டமான ஆநந்தரூபமாகவுமிருக்கிறது. அல்லது தேகசம்பந்த முதலிய அநிஷ்ட பிரபஞ்சத்தை நிவிர்த்திக்கிறதென்று அர்த்தம்.
பிரமாணம் :—

प्रपंचो विस्तृते विष्णुः शम आनन्दरूपतः ।
उत्कृष्टानन्दरूपत्वादुपशब्दः प्रकीर्त्तितः ।
प्रपंचं देहबन्धाख्यं तुरीयं शमयेद्यतः ।
प्रपंचोप शमस्तेनाप्युक्तः सभगवान्प्रभुः ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

शिवं ஶிவம்=துக்கமன்றியிலும் சுகரூபமாயுமிருக்கிறது.
பிரமாணம் :—

निर्दुःख सुखरूपत्वाच्छिवः [illegible] श्रुतौ श्रुतः ॥ [illegible] ॥
[illegible]

अद्वैतं அத்வைதம்=द्वितं த்விதம்=என்றால் அறியப்பட்ட வஸ்து. द्वितस्य इदं द्वैतं த்விதஸ்ய இதம் த்வைதம் அதாவது மித்தியாஞானம். எதினிடமிருந்து அன்னியதா ஞானம் திரும்புகிறதோ (नविद्यते द्वैतं यस्मात्=अद्वैतं நவித்யதே த்வைதம் யஸ்மாத்=அத்வைதம்) அது அத்வைதம், நான் என்னுடையது முதலிய மித்தியாஞானத்தை நிவிர்த்திக்கிறது.

பிரமாணம் :—

अन्यथा प्रत्ययोद्वैतं शमयेत्तं यज्ञोहरिः ।
अद्वैतस्ते न चोद्दिष्टस्तुरीयः पुरुषोत्तमः ॥ माहात्म्ये ॥
अपेक्ष्यवस्तु याथार्थ्या द्वित्वमन्यस्वरूपता ।
इणुगता वितिधातोश्च तद्ज्ञानं द्वैतमुच्यते ॥ संकल्पे ॥

அந்யதா ப்ரத்யயோ த்வைதம் ஶமயேத்தம் யஜ்ஞோஹரி: ।
அத்வைதஸ்தே ந சோத்திஷ்டஸ்துரீய: புருஷோத்தம: ॥
॥ மாஹாத்ம்யே ॥
அபேக்ஷ்யவஸ்து யாதார்த்யாத் த்வித்வமந்யஸ்வரூபதா ।
இணுகதா விதிதாதோஶ்ச தஜ்ஜ்ஞானம் த்வைதமுச்யதே ॥
॥ ஸங்கல்பே ॥

இண் என்னும் பகுதிக்கு அறிவு என்று அர்த்தம். இதினின்றும் இத: என்னும் பதம் உண்டாகிறது. வஸ்துவின் யதார்த்தத்தை அபேக்ஷித்து இரண்டாவது பிரகாரமான ஞானம் த்விதம் எனப்படும்.

चतुर्थं मन्यन्ते சதுர்த்தம் மந்யந்தே = இப்படிப்பட்டதை பரமாத்மாவின் நான்காவது பாதமாக பிரம்மாதி ஞானிகள் அறிகிறார்கள்.

விசுவாதிகளுக்கு ஸ்தானம் ஏற்பட்டதுபோல் இதற்கு ஸ்தானம் துவாதசாந்தம் அதாவது மூக்கின் நுனிமுதல் பனிரெண்டு விரல் இடம் என்று மாஹாத்மிய கிரந்தத்தை அனுசரித்து பாஷ்யகாரர் சொல்லுகிறார்.

सः आत्मा सः विज्ञेयः ஸ: ஆத்மா ஸ: விஜ்ஞேய:=விசுவாதிகளின் ரூபத்தை நன்றாக நிரூபித்து மந்திரங்களையும் உதாஹரித்து, நான்காவது ரூபவிஷயமாய் மந்திரங்களைச் சொல்லப்போகிறவர், நான்காவது ரூபமான ஆத்மா அவசியம் அறியத்தக்கவர் என்று முடிக்கிறார்.

(यः ய:=நான்கு ரூபமுள்ள எந்த ஆத்மாவோ)

[illegible]

विज्ञेयः விஜ்ஞேய꞉=முமுக்ஷுக்களால் நான்கு விதமாக அறியத் தக்கவர்.

பிரமாணம் :—

विश्वादिरूपो यस्यात्मा स विज्ञेयो मुमुक्षुभिः ।
निर्विशेषोऽपि भगवांश्चतुर्धा समुदीरितः ॥ प्रलये ॥

விஶ்வாதிரூபோ யஸ்யாத்மா ஸவிஜ்ஞேயோ முமுக்ஷுபி꞉ ।
நிர்விஶேஷோ஽பி பகவாம்ஶ்சதுர்தா ஸமுதீரித꞉ ॥
॥ ப்ரலயே ॥16॥

காரிகை=10 अत्र एत श्लोका:भवन्ति (அத்வைதம்.)
அத்ர ஏதே ஶ்லோகா꞉பவந்தி

निवृत्तेः सर्वदु:खानामीशान: प्रभुरव्ययः ।
अद्वैत: सर्वभावानां देवस्तुर्यो विभु स्मृतः ॥17॥
நிவ்ருத்தே꞉ ஸர்வது꞉கானாமீஶான꞉ ப்ரபுரவ்யய꞉ ।
அத்வைத꞉ ஸர்வபாவானாம்தேவஸ்துர்யோவிபு꞉ஸ்ம்ருத꞉॥

अत्र एते श्लोका: भवन्ति அத்ரஏதேஶ்லோகா꞉பவந்தி = அந்த꞉ பிரஞ்ஞன் அல்லவென்று முந்தின சுருதியில் சொல்லிய தாத்பரியத்தை ஸ்ரீ கௌடபாதாசாரியர் இனிவரும் சுலோகங்களில் விவரிக்கிறார்.

सर्वदु:खानां ஸர்வது꞉கானாம் = பிராஞ்ஞ தைஜஸ விசுவரூப ஜீவர்களின் சகல துக்கங்களின்
निवृत्तेः நிவ்ருத்தே꞉=நிவர்த்திக்கு
तुर्यः துர்ய꞉ = நான்காவதான
ईशान: ஈஶான꞉ = சுவாமியாயும்
प्रभु: ப்ரபு꞉=காரணமாயும்
अव्ययः அவ்யய꞉=ஸ்வரூபத்தில் வியபிசாரத்தை அடையாதவனும்
सर्वभावानां ஸர்வபாவானாம்=சகல பதார்த்தங்களுக்குள்
अद्वैत: அத்வைத꞉=அத்வைத ஸ்வரூபமாயும்
देवः தேவ꞉=பிரகாச ஸ்வரூபமாயும்
विभु: விபு꞉=விவிதமான ஸ்தானத்திரயங்கள் இவரிடத்திலிருந்து உண்டாவதால் விபு, அதாவது வியாபகமான ஆத்மா,
स्मृतः ஸ்ம்ருத꞉=சொல்லப்பட்டிருக்கிறது.
निवृत्तेः···ईशान: நிவ்ருத்தே꞉...ஈஶான꞉ = பிராஞ்ஞ தைஜஸ விசு
வர்களாகிற ரூபங்களில் ... சகல ...
...

நாசகமாயிருக்கிறது. துரியத்தை சாக்ஷாத்கரித்த மாத்திரத்தில் துக்கம் காணாமல் போவதால், அப்படிப்பட்ட துக்கத்தை துரியமே நிவிர்த்திக்கிறதாகச் சொல்லப்படுகின்றது.

अव्ययः அவ்யய:=ஸ்வரூபத்தினின்றும் மாறுதலை அடைகிறதில்லை. ஏனெனின்,

अद्वैतः सर्वभावानां அத்வைத: ஸர்வபாவாநாம்=சகல பதார்த்தங்களும் ரஜ்ஜுவில் காணப்படும் சர்ப்பம்போல் மித்தையாயிருப்பதால் இது ஒன்றே மாறுதலை அடையாததாக இருக்கிறது; ஒன்றாக இருக்கிறது.

देवः தேவ:=பிரகாச ஸ்வரூபம். சகலபதார்த்தங்களினிருப்புக்கு இது காரணம்.

स्मृतः ஸ்ம்ருத: = அவஸ்தாத் திரயாதீதமான துரியத்துக்குச் சொன்ன லக்ஷணம் வித்வான்களுடைய அனுபவசித்தம் என்பதை இப்பதம் குறிப்பிக்கிறது. ॥17॥

II - 15 - வது மந்திரம். விசிஷ்டாத்வைதம்.

அ-கை :---மேற் சொன்ன நான்காவது ரூபத்தின் மகாத்மியத்தை பிரமாணத்தால் கூறுவதாகச் சொல்லுகிறார்.

अत्र அத்ர=நான்காவதுக்குச் சொன்ன விஷயத்தில்

एतेश्लोकाः ஏதே ஶ்லோகா:=இந்தமந்திரங்கள்

भवन्ति பவந்தி=அனுசரித்துச் சொன்னதாக இருக்கின்றன.

அ-கை :-பிரபஞ்சோபசமம் முதலியதால் கூறப்பட்ட சர்வ அனர்த்த நிவிர்த்தியாகிற அர்த்தத்தை இந்த மந்திரம் கூறுகிறது.

तुर्यः துர்ய:=பிரம்மத்தின் நான்காவது ரூபம்

सर्वदुःखानां ஸர்வது:காநாம்=சகல துக்கங்களுடைய

निवृत्तेः நிவ்ருத்தே:=நாசத்திற்கு

(कारणं காரணம்=ஹேது.)

ईशानः ஈஶாந:=பிரம்மாதிகளை பிரேரணை செய்கிறவர்

प्रभुः ப்ரபு:=சுவாமி

अव्ययः அவ்யய:=எப்போதும் ஒரே ரூபத்தை உடையவர்

अद्वैतः அத்வைத:=மித்தியா ஞானத்தை நிவிர்த்தி செய்கிறவர்.

सर्वभावानां ஸர்வபாவாநாம்=भवन्ति इति भावः பவந்தி இதி பாவ: =உண்டாகிறவர்கள் என்று அர்த்தம். அதாவது பகவத் ஞானத்தால் சத்தையை அடைந்தவர்கள். அதாவது சகல அதிகாரிகளான ஜீவாத்மாக்கள் என்பது கருத்து.

देवः தேவ: = உபாசிக்கத்தகுந்தவர்

विभुः விபு:=சமர்த்தர்.

स्मृतः ஸ்ம்ருத:= இப்படி ஸ்ருதிகளால் சொல்லப்பட்டவர். ॥17॥

II - ல் 2 - வது மந்திரம். (துவைதம்.)

அ-கை:—अत्र एते श्लोका भवन्ति அத்ர ஏதே ஶ்லோகா பவந்தி= இந்த நான்காவது ரூப விஷயத்தில் அடியில் வரும் சுலோகங்களிருக்கின்றன. நான்காவது ரூபம் சர்வ அநிஷ்டத்தையும் நிவிர்த்திக்கிறதென்றும் प्रपंचोपशमं ப்ரபஞ்சோபஶமம் என்பதால் முன் கூறப்பட்ட அர்த்தத்தை இந்த சுலோகமும் கூறுகிறது.

तुर्यः துர்ய:=நான்காவது ரூபம்
सर्वदुःखानां ஸர்வது:கா²நாம்=சகல துக்கங்களின்
निवृत्तेः நிவ்ருத்தே:=நிவிர்த்திக்கு
(कारणं காரணம்=காரணம்)
ईशानः ஈஶாந:=முக்தர்களை பிரேரணை செய்கிறவர்
प्रभुः ப்ரபு:=சகலத்துக்கும் சுவாமி
अव्ययः அவ்யய:=எப்போதும் ஒரே ரீதியாக இருக்கிறவர்
अद्वैतः அத்³வைத:=மித்தியா ஞானத்தை நிவிர்த்திக்கிறவர்
सर्वभावानां देवः ஸர்வபா⁴வாநாம்தே³வ:=சகல ஜீவர்களுக்கு அதாவது சகல ஜீவர்களால் அடையத் தகுந்தவர்
विभुः விபு⁴:=சமர்த்தர்
स्मृतः ஸ்ம்ருத:=இப்படி இருக்கிறதாக மந்திரதிர்ஷ்டாவான பிரம்மாவால் வர்ணிக்கப்பட்டவர்

பிரமாண வாக்கியம் :—

हरिस्तुरीयरूपेण मोक्षदः संप्रकीर्तितः ।
देवः ससर्ज जीवानां गम्यत्वात्समुदीरितः ।
भावाजीवाः समुद्दिष्टा भवन्त्येते यतोविभोः ।
ईशानामपि मुक्तानामीशानः सोननात् श्रुतः ॥ प्रत्याहारे ॥

प्रपञ्चोपशमः 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪𑌶𑌮𑌃=த்வைதப் பிரபஞ்சமில்லாமலும்

अद्वयः 𑌅𑌦𑍍𑌵𑌯𑌃=அத்வயமாயு மிருக்கிற

अयं 𑌅𑌯𑌂=இந்த ஆத்மா

दृष्टः 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃பார்க்கப்படுகிறது

ச-பா:—தத்வஞானிகளின் ஸ்துதி சொல்லப்படுகிறது. அனுராகம், பயம், த்வேஷம் கோபம் முதலிய தோஷங்களில்லாமலும் எப்போதும் மனனம் செய்து கொண்டும், வேதாந்த தத்வத்தை அறிந்து மிருக்கிற முனிகள் ஆத்மாவை யாதொரு விகல்பமுமில்லாததாயும், பிரபஞ்ச அபாவரூபமாயும், அறிகிறார்கள். அபிப்பிராயம் என்னவெனின் ராகாதி தோஷங்களில்லாமலும், எப்போதும் வேதாந்த விசாரத்தில் முழுகியுமிருக்கிற சன்னியாசிகளால்

மிக முக்கியம்.

பக்ஷபாதமான அபிமானத்தை யுடையவர்களாகிய தார்க்கிகாதிக ளால் ஆத்மா அறியப்படமாட்டாது. ॥ 76 ॥

तस्मादेवं विदित्वैनमद्वैते योजयेत्स्मृतिं ।
अद्वैतं समनुप्राप्य जडवल्लोकमाचरेत् ॥ 77 ॥

தஸ்மாதேவம் விதித்வைநமத்வைதே யோஜயேத்ஸ்ம்ருதிம் ।
அத்வைதம் ஸமநுப்ராப்ய ஜடவல்லோகமாசரேத் ॥ 77 ॥

तस्मात् தஸ்மாத் = ஆகையால்
एनं ஏநம் = இந்த ஆத்மாவை
एवं ஏவம் = இவ்விதமாக
विदित्वा விதித்வா = அறிந்து
अद्वैते அத்வைதே = அத்வைதத்தில்
स्मृतिं ஸ்ம்ருதிம் = ஞாபகத்தை
योजयेत् யோஜயேத் = சேர்ப்பிக்க வேண்டியது
अद्वैतं அத்வைதம் = அத்வைதத்தை
समनुप्राप्य ஸமநுப்ராப்ய = செவ்வையாக அடைந்து
जडवत् ஜடவத் = ஜடன்போல்
लोकं லோகம் = லோகத்தை
आचरेत् ஆசரேத் = அனுசரிக்க வேண்டியது.

ச-பா :—சகல அநர்த்தங்களுமில்லாத அத்வைதம் சுகரூப மாயும் அபயரூபமாயு மிருக்கிறது. ஆகையால் ஞானி இவ்வித மாக அறிந்து எப்போதும் அத்வைதத்திலேயே ஞாபகம் வைக்க வேண்டியது. பசிதாகம் முதலியவைகளில்லாத, ஜனனமரண தர்மமற்ற சாக்ஷாத் பரப்பிரம்மமே நான் என்று செவ்வையாக அறிந்து, யாதொரு வியவஹாரமுமில்லாத ஜடன்போல் லோகத் தில் இருக்கவேண்டியது. தன்னுடைய ஞானம், முதலியவை களைப் பிரசித்தப்படுத்தாமலே ஞானி லோகத்தில் சஞ்சரிக்கவேண்டி யது என்பது கருத்து. ॥77॥

निस्तुतिर्निर्नमस्कारो निःस्वधाकार एव च ।
चलाचलनिकेतश्च यतिर्यादृच्छिको भवेत् ॥ 78 ॥

நிஸ்துதிர்நிர்நமஸ்காரோ நிஃஸ்வதாகார ஏவ ச ।
சலாசலநிகேதஶ்ச யதிர்யாத்ருச்சிகோ பவேத் ॥ 78 ॥

निस्तुतिः நிஸ்துதி: = ஸ்தோத்திரம் செய்யாமல் இருக்கவேண்

निः स्वधाकार एव च நிஃஸ்வதாகார ஏவ ச=ஸ்வதாகார மில்லா திருக்கவேண்டியது

चलाचल निकेतश्च சலாசலநிகேதஶ்ச=சலமாகிற சரீரத்துக்கும் அசலமான ஆத்மாவுக்கும் இருப்பிடமாக இருக்கவேண்டியது

यतिः யதிஃ=யதியானவன்

यादृच्छिकः யாத்ருச்சிகஃ=தற்சயலுக்கு உட்பட்டவனாக

भवेत् பவேத்=இருக்கவேண்டியது.

ச - பா:—எப்படி லோகத்தில் சஞ்சரிக்கவேண்டியது எனில் அவன் தேவதைகளையுடைய ஸ்தோத்திரத்தையாவது, நமஸ்காராதி கிரியையாவது செய்யக்கூடாது. பிதிர்களுக்கு சிராத்தாதிகளைச் செய்யவேண்டும்என்கிற இச்சையையாவது யாதொன்றையும் எதிர்பார்க்கக்கூடாது. சர்வ கர்மத்தையும் தள்ளி இச்சா ரஹிதனாய் பரமஹம்சன்போ லிருக்கவேண்டியது. போஜனாதி வியாபாரங்களில் ஆகாசம்போல் அசல் ஸ்வபாவமான ஆத்மாவை மறந்து நான் என்று வித்வான் அபிமானம் கொள்ளுகிறான், மற்ற சமயங்களில் தன்னுடைய எதார்த்தஸ்வரூபத்தை மறந்துபோகிறதில்லை. இவ்விதமாக ஞானி க்ஷணக்ஷணத்தில் மாறுதல் அடையும் சரீரம் எப்போதும் மாறாத ஆத்மா இவைகளுக்கு இருப்பிடமாகிறான். ஆனால் பாஹ்ய விஷயங்களுக்கு எப்போதும் ஆசிரயமாகிறதில்லை, ஆகையால் சரீர தாரணையைமட்டும் உத்தேசித்து அன்னாதி விஷயங்களில் எந்த எந்த காலங்களில் எவை எவை கிடைக்குமோ, அவையவைமட்டும் கிரகிக்கவேண்டியது. 78

तत्त्वमाध्यात्मिकं दृष्ट्वा तत्त्वं दृष्ट्वा तु बाह्यतः ।
तत्त्वीभूतस्तदाराम स्तत्त्वादप्रच्युतो भवेत् ॥ 79 ॥
इति गौडपादीयकारिकायां वैतथ्याख्यं
द्वितीयप्रकरणम् ओंतत्सत् ॥

தத்த்வமாத்யாத்மிகம் த்ருஷ்ட்வா தத்த்வம் த்ருஷ்ட்வா து பாஹ்யதஃ ।
தத்த்வீபூதஸ்ததாராம ஸ்தத்த்வாதப்ரச்யுதோ பவேத் ॥ 79 ॥
இதி கௌடபாதீயகாரிகாயாம் வைதத்யாக்யம்
த்விதீயப்ரகரணம் ஓம்தத்ஸத் ॥

आध्यात्मिकं ஆத்யாத்மிகம்=அந்தரங்கமான

तत्त्वं தத்த்வம்=தத்வத்தை

दृष्ट्वा த்ருஷ்ட்வா=பார்த்து

बाह्यतः பாஹ்யதஃ=வெளியேயுள்ள

तत्त्वं தத்த்வம்=தத்வத்தையும்

பக்ஷபாதமான அபிமானத்தை யுடையவர்களாகிய தார்க்கிகாதிக ளால் ஆத்மா அறியப்படமாட்டாது. ॥ 76 ॥

तस्मादेवं विदित्वैनमद्वैते योजयेत्स्मृतिं ।
अद्वैतं समनुप्राप्य जडवल्लोकमाचरेत् ॥ 77 ॥

தஸ்மாதேவம் விதித்வைநமத்வைதே யோஜயேத்ஸ்ம்ருதிம் ।
அத்வைதம் ஸமநுப்ராப்ய ஜடவல்லோகமாசரேத் ॥ 77 ॥

तस्मात् தஸ்மாத் = ஆகையால்
एनं ஏநம் = இந்த ஆத்மாவை
एवं ஏவம் = இவ்விதமாக
विदित्वा விதித்வா = அறிந்து
अद्वैते அத்வைதே = அத்வைதத்தில்
स्मृतिं ஸ்ம்ருதிம் = ஞாபகத்தை
योजयेत् யோஜயேத் = சேர்ப்பிக்க வேண்டியது
अद्वैतं அத்வைதம் = அத்வைதத்தை
समनुप्राप्य ஸமநுப்ராப்ய = செவ்வையாக அடைந்து
जडवत् ஜடவத் = ஜடன்போல்
लोकं லோகம் = லோகத்தை
आचरेत् ஆசரேத் = அனுசரிக்க வேண்டியது.

ச-பா:—சகல அனர்த்தங்களுமில்லாத அத்வைதம் சுகரூப மாயும் அபயரூபமாயு மிருக்கிறது. ஆகையால் ஞானி இவ்வித மாக அறிந்து எப்போதும் அத்வைதத்திலேயே ஞாபகம் வைக்க வேண்டியது. பசிதாகம் முதலியவைகளில்லாத, ஜனனமரண தர்மமற்ற சாக்ஷாத் பரப்பிரம்மமே நான் என்று செவ்வையாக அறிந்து, யாதொரு வியவஹாரமுமில்லாத ஜடன்போல் லோகத் தில் இருக்கவேண்டியது. தன்னுடைய ஞானம், முதலியவை களை பிரசித்தப்படுத்தாமலே ஞானி லோகத்தில் சஞ்சரிக்கவேண்டி யது என்பது கருத்து. ॥77॥

निस्तुतिर्निर्नमस्कारो निःस्वधाकार एव च ।
चलाचलनिकेतश्च यतिर्यादृच्छिको भवेत् ॥ 78 ॥

நிஸ்துதிர்நிர்நமஸ்காரோ நிஃஸ்வதாகார ஏவ ச ।
சலாசலநிகேதஶ்ச யதிர்யாத்ருச்சிகோ பவேத் ॥ 78 ॥

निस्तुतिः நிஸ்துதி: = ஸ்தோத்திரம் செய்யாமல் இருக்கவேண்

निः स्वधाकार एव च நிஃஸ்வதாகார ஏவச=ஸ்வதாகாரமில்லா திருக்கவேண்டியது

चलाचल निकेतश्च சலாசலநிகேதஶ்ச=சலமாகிற சரீரத்துக்கும் அசலமான ஆத்மாவுக்கும் இருப்பிடமாக இருக்கவேண்டியது

यतिः யதிஃ=யதியானவன்

यदृच्छिकः யத்ருச்சிகஃ=தற்சயலுக்கு உட்பட்டவனாக

भवेत् பவேத்=இருக்கவேண்டியது.

ச - பா:—எப்படி லோகத்தில் சஞ்சரிக்கவேண்டியது எனில் அவன் தேவதைகளையுடைய ஸ்தோத்திரத்தையாவது, நமஸ்காராதி கிரியையாவது செய்யக்கூடாது. பிதிர்களுக்கு சிராத்தாதிகளைச் செய்யவேண்டுமென்கிற இச்சையையாவது யாதொன்றையும் எதிர்பார்க்கக்கூடாது. சர்வ கர்மத்தையும் தள்ளி இச்சா ரஹிதனாய் பரமஹம்சன்போ லிருக்கவேண்டியது. போஜனாதி வியாபாரங்களில் ஆகாசம்போல் அசல ஸ்வபாவமான ஆத்மாவை மறந்து நான் என்று வித்வான் அபிமானம் கொள்ளுகிறான், மற்ற சமயங்களில் தன்னுடைய எதார்த்தஸ்வரூபத்தை மறந்துபோகிறதில்லை. இவ்விதமாக ஞானி க்ஷணக்ஷணத்தில் மாறுதல் அடையும் சரீரம் எப்போதும் மாறாத ஆத்மா இவைகளுக்கு இருப்பிடமாகிறான். ஆனால் பாஹ்ய விஷயங்களுக்கு எப்போதும் ஆசிரயமாகிறதில்லை, ஆகையால் சரீர தாரணையைமட்டும் உத்தேசித்து அன்னாதி விஷயங்களில் எந்த எந்த காலங்களில் எவை எவை கிடைக்குமோ. அவையவைமட்டும் கிரகிக்கவேண்டியது. 78

तत्त्वमाध्यात्मिकं दृष्ट्वा तत्त्वं दृष्ट्वा तु बाह्यतः ।
तत्त्वीभूतस्तदाराम स्तत्त्वादप्रच्युतो भवेत् ॥ 79 ॥

इति गौडपादीयकारिकायां वैतथ्याख्यं
द्वितीयप्रकरणम् ओंतत्सत् ॥

தத்த்வமாத்யாத்மிகம் த்ருஷ்ட்வா தத்த்வம் த்ருஷ்ட்வா து பாஹ்யதஃ ।
தத்த்வீபூதஸ்ததாராம ஸ்தத்த்வாதப்ரச்யுதோ பவேத் ॥ 79 ॥

இதி கௌடபாதீயகாரிகாயாம் வைதத்யாக்யம்
த்விதீயப்ரகரணம் ஓம்தத்ஸத் ॥

आध्यात्मिकं ஆத்யாத்மிகம்=அந்தரங்கமான

तत्वं தத்த்வம்=தத்வத்தை

दृष्ट्वा த்ருஷ்ட்வா=பார்த்து

बाह्यतः பாஹ்யதஃ=வெளியேயுள்ள

(ம) தத்த்வம்=தத்வத்தையும்

दृष्ट्वा த்ருஷ்ட்வா = பார்த்து
तत्त्वीभूतः தத்த்வீபூத: = தத்வாகாரமாகி
तदारामः ததாராம: = அதிலேயே ரமிக்கவேண்டியது
तत्त्वात् தத்வாத் = தத்வத்திலின்றும்
अप्रच्युतः भवेत् அப்ரச்யுத: பவேத் = நழுவக்கூடாது.

ச — பா:—விகாரங்கள் எல்லாம் நாமம் என்று சுருதியில் சொல்லியபடி ரச்சுசர்பாதிகள் போலவும் ஸ்வப்னமாயாதிகள் போலவும் அசத்தாயிருக்கிறஇந்த ஆத்தியாத்மிகமான சரீரத்துக்கு सबाह्य ஸபாஹ்ய = ஆத்மா அதிஷ்டானம் என்று பார்த்து ஆத்மாவே சத்தியம், ஆத்மாவே நான் என்று அறிகிறவன் பாஹ்ய விஷயங்களில் பிரீதி அடையாமல் ஆத்மாவிலேயே ரமிக்கிறான். தன்னிடத்தில் ஆசக்தசித்தனாய் வெளி விஷயங்களினின்றும், திரும்பின புத்தியுடையவனாய் பரமாத்மதத்வத்திலிருந்துகொண்டு அதினின்றும் நழுவாமலே ஞானியிருப்பான். அஞ்ஞானி ஒரு சமயத்தில் தான் சரீரம் என்றும் ஒரு சமயத்தில் தான் சரீரமல்ல ஆத்மாவென்றும் ஆகிறான். ஞானிக்கு இப்படிப்பட்ட சஞ்சல புத்தியில்லை. இவனுக்கு ஆத்மா எப்போதும் சஞ்சலிக்காத ஒரே ஸ்வரூபம். “நானே பிரம்மம்” என்று ஞானி எப்போதும் நிச்சயமான ஞாபகத்தை யுடையவன். 79

2-வது காரிகை முற்றிற்று.

हरिः ओम् ।
ஹரி: ஓம்

अथ गौडपादीयकारिकायाः
अद्वैताख्यं तृतीयप्रकरणम् ॥

ॐ॥ उपासनाश्रितो धर्मो जाते ब्रह्मणि वर्तते ।
प्रागुत्पत्तेरजं सर्वं तेनासौ कृपणः स्मृतः ॥

அத கௌடபாதீயகாரிகாயா:
அத்வைதாக்யம் த்ருதீயப்ரகரணம் ॥

ஓம்॥ உபாஸநாச்ரிதோ தர்மோ ஜாதே ப்ரஹ்மணி வர்த்ததே । ப்ராகுத்பத்தேரஜம் ஸர்வம் தேநாஸௌ க்ருபண: ஸ்ம்ருத: ॥

அவதாரிகை

முந்தின பிரகரணத்தில் யுக்தியால் த்வைதம் மித்தை அதாவது

முதலில் உபாஸ்ய, உபாஸக பேதஞானத்தை நிராகரிக்கிறார்.

उपासनाश्रितः உபாஸநாச்ரித:=உபாசனையை அடைந்த
धर्मः தர்ம:=ஜீவன்
जाते ஜாதே=உண்டான
ब्रह्मणि ப்ரஹ்மணி=பிரம்மத்தினிடத்தில்
वर्तते வர்த்ததே=இருக்கிறான்
(सः ஸ: =அவன்)
उत्पत्तेः प्राक् உத்பத்தே: ப்ராக்=உற்பத்திக்கு முந்தி
सर्वं ஸர்வம்=எல்லா ஜகத்தும்
अजं அஜம்=பிரம்ம ஸ்வரூபமென்று
(मन्यते மந்யதே=நினைக்கிறான்.)
तेन தேந=அந்தக் காரணத்தால்
असौ அஸௌ=இந்த உபாஸகன்
कृपणः க்ருபண:=அல்பனென்று
स्मृतः ஸ்ம்ருத:=மகாத்மாக்களால் சொல்லப்பட்டான்.

ச-பா:—அ-கை:—முதல் பிரகரணத்தில் ஓங்காரத்தை நிர்ணயம் செய்யுமிடத்தில் ஆத்மா प्रपञ्चोपशमः शिवःअद्वैतः ப்ரபஞ்சோபசம: சிவ: அத்வைத:=(பிரபஞ்ச மற்றது, சுகம், இரண்டற்றது) என்று சொல்லப்பட்டது. அதேபிரகரணத்தில் ज्ञाते द्वैतं न विद्यते ஜ்ஞாதே த்வைதம் நவித்யதே ஆத்மா அறியப்பட்டவுடனே த்வைதம் நீங்கிவிடுகிறதென்றும் சொல்லியிருக்கிறது.

இந்தத் த்வைதாபாவம் வைதத்தியம் என்கிற இரண்டாவது பிரகரணத்தில் ஸ்வப்நம், மாயை, ஆகாசபட்டணம் முதலிய திருஷ்டாந்தத்தாலும் பார்க்கப்படுதல், அந்தத்துடன் கூடியிருத்தல் முதலிய யுக்தியாலும் பிரதிபாதிக்கப்பட்டது. அத்வைதம் சாஸ்திரத்தால் மட்டும் பிரதிபாதிக்கத்தக்கதா? அல்லது யுக்தியாலும் கூடுமா? இந்த மூன்றாவது பிரகரணத்தில் சாஸ்திரத்தால் அறியக்கூடிய அத்வைதத்தை யுக்தியாலும் அறியக்கூடும் என்பதைச் சொல்லுகிறார். (नैषा तर्केण मतिरापनेया நைஷா தர்க்கேண மதிராபநேயா என்கிற சுருதியில் கேவல தர்க்கத்தால் அறியக்கூடாவிட்டாலும் சுருதியை அனுசரித்த தர்க்கத்தால் அறியலாம் என்றார். இரண்டாவது பிரகரணத்தில் உபாஸ்ய உபாஸகாதி பேதங்கள் எல்லாம் மித்தையென்றும், கேவலம் ஆத்மாவே அத்வைதமான பரமார்த்த ரூபம் என்றும் சொல்லப் [illegible]

தின்பொருட்டு அடையத்தக்கது. "நான் உபாசகன் பிரம்மம். என்றால் உபாசிக்கத்தக்கது. அப்படி உபாசனை செய்வதால் பஞ்சபூதங்களின் ஆகாரமாய் விளங்கும் பிரம்மத்தில் நான் இருக்கிறேன், அதாவது நானும் பிரம்மாகாரமாகிறேன்; சரீரம் போனபிறகு ஜன்மமில்லாத பிரம்மத்தை அடைகிறேன். உற்பத்திக்கு முன் அவஸ்தையில் எல்லாம் அஜன்மாவாயிருந்தது, நானும் அப்படியே இருந்தேன். உற்பத்திக்கு முன் பிரம்மரூபமாயிருந்த நான் இப்போது ஜன்மத்தை அடைந்திருக்கிறேன், பிரம்மத்தில்தானிருக்கிறேன்; உற்பத்திக்கு முன்னிருந்த ஸ்திதியையே பிரளயத்திலும் உபாசனையின் பலத்தால் அடைவேன்" என்று உபாசனையை ஆசிரயித்த ஜீவன் பிரம்மத்தை அற்பமாய் அறிகிறபடியால் அற்பன் என்று நித்தியமாயும் அஜமாயுமிருக்கிற பிரம்மத்தை அறிகிற மகான்கள் சொல்லுகிறார்கள். தளவகார சாகையில் यद्वाचानभ्युदितं யத்வாசாநப்யுதிதம் என்கிற சுருதியில் (கேன I-4) * உபாசனை நிந்திக்கப்பட்டிருக்கிறது. ॥ 80 ॥

III - 2 - வது சுலோகம்.

अतो वक्ष्याम्यकार्पण्य मजाति समतांगतम् ।
यथा न जायते किंचिज्जायमानं समन्ततः ॥ 81 ॥
அதோவக்ஷ்யாம்யகார்பண்யமஜாதி ஸமதாம்கதம் ।
யதா ந ஜாயதே கிஞ்சிஜ்ஜாயமானம் ஸமந்தத: ॥ 81 ॥

अत: அத:=ஆகையால்

अजाति அஜாதி=உற்பத்தியற்றதாயும்

समतांगतम् ஸமதாம்கதம் = நிரவயவமாயிருப்பதால் எங்கும் சமமாயும்

अकार्पण्यं அகார்பண்யம்=பூமாவென்னும் பெயருள்ள பிரம்மத்தை

वक्ष्यामि வக்ஷ்யாமி = சொல்லுகிறேன்

यथा யதா=எப்படி

समन्ततः ஸமந்தத: = நாலு பக்கங்களிலும்

जायमानं ஜாயமானம் = உண்டாகிறதாகத் தோன்றும்

किंचित् கிஞ்சித்=யாதொன்றும்

नजायते ந ஜாயதே=உண்டாகவில்லையோ

(तथा ததா=அந்தப் பிரகாரத்தை)

[illegible] =கேள்.

சு-பா :—अतो…அதோ…:—பிறப்பில்லாததும், உள்ளும் வெளியிலுமிருக்கிற ஆத்மாவை அறிய சாமர்த்தியமில்லாதவன் அவித்தையால் ஆத்மாவை தீனமாக அறிகிறவனும் நான் பிறக்கிறேன், காரியப்பிரம்மத்தினிடத்தில் இருக்கிறேன் அதை உபாசிக்கிறவனும் பிரம்மத்தை அறிகிறேன் என்று அறிந்து கிருபணனாக அதாவது அற்பபுத்தியுள்ளவனாக ஆகிறான். ஆகையால் கிருபணமற்ற வியாபகமானதும் உற்பத்தியற்றதாயுமிருக்கிற பிரம்மத்தைச் சொல்லுகிறேன். यत्रान्योऽन्यत्पश्यत्यन्यच्छृणोत्यन्यद्विजानाति तदल्पं मर्त्यमसद्वाचारंभणं विकारो नामधेयं யத்ராந்யோऽந்யத்பஶ்யத்யந்யச்ச்ருணோத்யந்யத்விஜாநாதி ததல்பம் மர்த்யமஸத்வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் முதலிய சுருதிகளில் எவன் எவ்விடத்தில் வேறு ஒன்றைப்பார்க்கிறானோ கேட்கிறானோ அறிகிறானோ அது அற்பம், நாசமுள்ளது, அசத்து வாக்கினால் சொல்லப்பட்டதெல்லாம் நாம மாத்திரமே. இந்த சுருதிகளால் முன் சொன்ன பிரம்மம் கிருபணபாவத்துக்கு ஆசிரயமாயிருக்கிறது (அதாவது த்வைத ஞானத்தால் அற்ப புத்தி சித்திக்கிறது. பூமா என்கிற பிரம்மம் இப்படிப்பட்டதல்ல. எதை அறிந்ததினால் அவித்தையால் உண்டான சகல கார்பண்ணியமும் நிவிர்த்தியாய் விடுகிறதோ அந்த அகார்பண்ணியத்தைச் சொல்லுகிறேன்]

अजाति அஜாதி=அது உற்பத்தியற்றது

समतांगते ஸமதாம்கதம் =எங்கும் சமமாயிருக்கிறது. ஏனெனின், அவயவ வித்தியாசங்களில்லை. அவயவத்துடன் கூடினவஸ்து அவயவபேதங்களை அடைந்து பிறக்கிறது என்று சொல்லப்படுகின்றது. இதுவோ அவயவமற்றதாகையால் சமமாயிருக்கிறது. எந்த அவயவத்தாலும் விசேஷமாய்ப் பிரகாசிக்கிறதில்லை. ஆகவே, அது ஜன்மமற்றது; கார்பண்ணியமற்றது.

यथा…யதா…=எப்படி ரச்சுவில் சர்ப்பம் பிராந்தியால் உண்டாகிறதோ, அப்படி சகலமும் அவித்தையாலுண்டான பிராந்தி திருஷ்டியால் உண்டாகிறதுபோல் காணப்படுகிறது. வாஸ்தவத்தில் எந்தப் பிரகாரமாக எதுவும் ஜன்மத்தை அடையவில்லையோ, ஆனால் எல்லாம் தேசகால வஸ்துக்களால் பூர்ணமாயிருக்கிற கூடஸ்தமாகவே யிருக்கிறதோ அந்தப் பிரகாரத்தைச் சொல்லுகிறேன், கேள் என்பது கருத்து. ॥ 81 ॥

आत्मा ह्याकाशवज्जीवैर्घटाकाशैरिवोदितः ।
घटादिवच्च संघातैर्जातावेतन्निदर्शनम् ॥ ८२ ॥

आत्मा हि ஆத்மா ஹி=பரப்பிரம்மம்

आकाशवत् ஆகாசவத்=சூட்சுமமாயும் நிரவயவமாயும் சர்வகதமாயு மிருக்கிற ஆகாசம்போல் சொல்லப்பட்டிருக்கிறது.

घटाकाशैः इव கடாகாசை: இவ=கடாகாசங்கள் போல்

जीवैः ஜீவை:=ஜீவர்கள்

उदितः உதித:=சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

घटादिवत् च கடாதிவச்ச=கடாதிகள்போல்

संघातैः ஸங்காதை:=சங்காதங்களும்

(उदितः உதித:=உண்டானதாக சொல்லப்பட்டிருக்கிறது.

जातौ ஜாதௌ ஆகையால் சிருஷ்டி விஷயத்தில்

एतत् ஏதத்=இது

निदर्शनम् நிதர்சநம்=திருஷ்டாந்தம்

ச-பா:—ஜன்ம மற்றதாயும் சிருபணமாவமற்றதாயு மிருக்கிற பிரம்மத்தைச் சொல்லுகிறேன் என்று பிரதிஞ்ஞை செய்யப்பட்டது. இது சித்திக்கும் பொருட்டு யுக்தியையும் திருஷ்டாந்தத்தையும் சொல்லுகிறேன் என்று சொல்லுகிறார்.

ஆத்மாவாகிற பிரம்மம் ஆகாசம்போல் சூட்சுமமாயும் நிரவயவமாயும் ஸர்வ வியாபியாயும் இருப்பதால் ஆகாசம்போல் சொல்லப்படுகின்றது. கடாகாசத்துக்குச் சமானமாக ஜீவர்கள் சொல்லப்படுகிறார்கள். அந்த ஜீவர்களே ஆகாச சதிர்சமான பரமாத்மா. (இது उदितः உதித:=என்னும் பதத்திற்குச் சொல்லப்பட்டது என்றும் அர்த்தத்தின்பேரில் ஏற்படுகின்றது. இனி உண்டாகிறது என்னும் அர்த்தத்தைக்கொண்டு சொல்லுகிறார்.)

அல்லது கடாகாசங்களால் எப்படி ஆகாசம் உண்டாகிறதோ அப்படி பரமாத்மா ஜீவாத்மாக்களால் உண்டாகிறார். அதாவது நாநாவித ஜீவர்களாகக் காணப்படுகிறார் என்பது கருத்து. ஜீவாத்மாக்கள் பரமாத்மாவினின்றும் உண்டானதாக வேதாந்தத்தில் சொல்லியதை மகாகாசத்தினின்றும் கடாகாசங்களுண்டானதற்குச் சமானமாக அறியவேண்டியதேதவிர வாஸ்தவமன்று என்பது கருத்து.

மேலும் ஆகாசத்தினின்றும் எல்லா கடங்களும் உண்டாவது போல் பரப்பிரம்மத்தினின்றும் பிருதிவீ முதலிய சமஸ்தமான பூதங்களும் சரீர இந்திரியாதிகளும் ரச்சுவில் சர்ப்பம்போல் கேவலம் கற்பனையாக உண்டாகின்றன! மகாகாசத்தில் கடாகாசங்களும் கடங்களும் அடங்கியிருப்பதுபோல் பரமாத்மாவில் ஜீவர்களும்

ஞானத்தின் பொருட்டு ஆத்மாவினின்றும் ஜீவர்கள் உண்டானதாக சுருதிசொல்லுமிடத்தில் மகாகாசத்தினின்றும் கடங்களும் கடாகாசங்களும் உண்டானதுபோல் என்று அறியத்தக்கது. சிருஷ்டி விஷயத்தில் இதுவே தகுந்த திருஷ்டாந்தம். ॥82॥

घटादिषु प्रलीनेषु घटाकाशादयो यथा ।
आकाशे संप्रलीयन्ते तद्वज्जीवा इहात्मनि ॥ 83 ॥
ഘടാദിഷു പ്രലീനേഷു ഘടാകാശാദയോ യഥാ ।
ആകാശേ സംപ്രലീയന്തേ തദ്വജ്ജീവാ ഇഹാത്മനി ॥ 83 ॥

यथा യഥാ=எப்படி
घटादिषु ഘടാദിഷു=கடாதிகள்
प्रलीनेषु പ്രലീനേഷു=நஷ்டமானபோது
घटाकाशादयः ഘടാകാശാദയഃ=கடாகாசாதிகள்
आकाशे ആകാശേ=மஹாகாசத்தில்
सम्प्रलीयन्ते സംപ്രലീയന്തേ= லயமடைந்து விடுகின்றனவோ
तद्वत् തദ്വത്=அப்படி
इह ഇഹ=இந்த
आत्मनि ആത്മനി=பரமாத்மாவில்
जीवः ജീവഃ=ஜீவன்
(प्रलीयते പ്രലീയതേ = லயமடைந்து விடுகிறான்.)

ஸ-பா:—கடாதிகளின் உற்பத்தியால் கடாகாசாதிகளின் உற்பத்தியும் கடாதிகளின் நாசத்தால் கடாகாசாதிகளின் நாசமும் உண்டாவதுபோல், தேகாதிகளின் உற்பத்தியால் ஜீவ உற்பத்தியையும் அவைகளின் நாசத்தால் ஜீவலயமும் உண்டாகின்றன. ஜீவனுடைய உத்பத்தி நாசங்கள் உபாதியைப் பொருந்திருக்கின்றன. ஸ்வதஃ இரண்டுமில்லை. ஆகையால் உற்பத்தி சுருதியாலும் பிரளய சுருதியாலும் அத்வைதத்துக்கு விரோதமில்லை. ॥ 83 ॥

यथैकस्मिन्घटाकाशे रजोधूमादिभिर्युते ।
न सर्वे संप्रयुज्यन्ते तद्वज्जीवाः सुखादिभिः ॥ 84 ॥
യഥൈകസ്മിൻഘടാകാശേ രജോധൂമാദിഭിര്യുതേ ।
ന സർവേ സംപ്രയുജ്യന്തേ തദ്വജ്ജീവാഃ സുഖാദിഭിഃ ॥84॥

यथा യഥാ=எப்படி
एकस्मिन् ഏകസ്മിൻ=ஒன்றான
घटाकाशे ഘടാകാശേ=கடாகாசம்
रजोधूमादिभिः രജോധൂമാദിഭിഃ= தூளி புகை முதலியவைக

युते யுதே=கூடினபோது

सर्वे ஸர்வே=சமஸ்த கடாகாசங்களும்

न संप्रयुज्यन्ते ந ஸம்ப்ரயுஜ்யந்தே=அந்த தூளி புகை முதலிய வைகளுடன் சம்பந்தத்தை அடையவில்லையோ

तद्वत् தத்வத்=அப்படி

जीवाः ஜீவா:=ஜீவர்கள்

सुखादिभिः ஸுகாதிபி:=பிறருடைய சுகதுக்காதிகளால்

न संप्रयुज्यन्ते ந ஸம்ப்ரயுஜ்யந்தே=சம்பந்தப்படுகிறதில்லை.

ச-பா:—சகல தேகங்களிலும் ஒரே ஆத்மா இருந்தால் ஒருஜீவனுடைய ஜன்மமரண சுகதுக்காதிகள் சகல ஜீவர்களுக்கும் இருக்க வேண்டுமே. ஒருவன் கர்த்தாவாக இருந்தால் எல்லாரும் கர்த்தாவாக இருக்கவேண்டும். ஒருவன் பலபோக்தாவாக இருந்தால் எல்லாரும் அப்படியே யிருக்கவேண்டும். இப்படிச்சொல்லும் த்வைதவாதிக்கு உத்தரம் சொல்லப்படுகிறது. புகை முதலியவைகளால் ஒரு கடாகாசம் சம்பந்தப்படுவதால் எல்லா கடாசங்களும் சம்பந்தப்படாததுபோல் ஒரு ஜீவன் சுகதுக்காதிகளை அடைந்ததினால் சகல ஜீவர்களும் சுகாதிகளை அடைகிறதில்லை.

ஆக்ஷேபம்:—ஆத்மா ஒன்று என்று சொல்லுகிறாயோ ?

சமாதானம்:—ஆம். ஆகாசம்போல் சர்வ சரீரங்களிலும் ஒன்று. ஆத்மா யிருக்கிறான் என்று சுருதியிற் சொல்லியதைக் கேட்கவில்லையோ ?

ஆ:—சர்வசரீரங்களிலும் ஆத்மா ஒன்றுதான் என்று சொன்னால் மேற்சொன்ன தோஷம் சம்பவிக்குமே.

ச:—இது சாங்கியனுடைய கேள்வியாக இருக்கவேண்டும் அப்படி அவன் கேட்டது சரியல்ல. ஏனெனின் அவன் ஆத்மாவினிடத்தில் சுகதுக்காதிகளை ஒப்புக்கொள்ளவில்லை. புத்தியினிடத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறான். ஆகவே, சுகதுக்கங்களின் வியவஸ்தையின் பொருட்டு ஆத்மபேதத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை. மேலும் ஞானஸ்வரூபமான ஆத்மாவுக்கு பேதம் கற்பிக்கிறதில் பிரமாணமில்லை.

ஆ:—ஆத்மாவுக்குப் பேதம் ஒப்புக்கொள்ளாதபக்ஷத்தில் பிரகிருதியானது ஒருவனுடைய போகார்த்தமாகவும், ஒருவனுடைய மோக்ஷார்த்தமாகவும் பிரவிர்த்தித்தல் ஒவ்வாது, அதற்காக பேதத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்.

ச:—நீ சொன்னது சரியன்று. ஏனெனின், பிரகிருதியால் உண்டுபண்ணப்பட்ட பந்த மோக்ஷங்கள் புருஷனிடத்தில் சம்பந்தப்படுகிறதில்லை. ஆத்மாவை நிர்விசேஷமாகவும் சேதனமாத்திரமாக

வும் சாங்கியன் ஒப்புக்கொண்டிருக்கிறான். ஆகையால் பிரகிருதியானது புருஷனுடைய பந்த மோக்ஷார்த்தமாக பிரவிர்த்திக்கவில்லை. மேலும், புருஷபேத கற்பனையில் வேறு பிரமாணமில்லை. புருஷனுடைய சந்நிதிமாத்திரத்தை நிமித்தமாக வைத்துக்கொண்டு பிரகிருதியானது தானே கட்டுப்படுகிறது, விடுபடுகிறது.

ஆ:— (யோகியின்):—பிரகிருதியானது ஈசுவரனால் பிரேரபனை செய்யப்பட்டு பிரவிர்த்திக்கிறது.

ச:—அதுவும் சரியன்று. அந்த ஈசுவரனும் புருஷ விசேஷனாகையால் ஞானஸ்வரூபனாக மாத்திரம் இருக்கிறான். ஆகவே, ஈசுவரன் பிரவர்த்தனாகமாட்டான். புருஷபேத கற்பனையில் சாங்கியர்களுக்கு மூடத்தன்மை உண்டாகிறதும் தவிர வேதார்த்தத்தையும் அவர்கள் விட்டுவிடுகிறார்கள்.

ஆ:—(தார்க்கிகர்கள்) இச்சாதிகள் ஆத்மாவினிடத்தில் இருக்கின்றன.

ச:—இதுவும் சரியன்று. ஏனெனின், ஆத்மாவில் ஸ்மரணை உண்டாகிறது. அந்த ஸ்மரணைக்குக் காரணம் பாவனை என்னும் பெயருள்ள ஸம்ஸ்காரம். அது அவயவமற்ற ஆத்மாவில் சம்பந்தப்படமாட்டாது.

ஆ:—ஆத்மாவுக்கும் மனதிற்கும் உண்டான சேர்க்கையால் ஸ்மரணம் உண்டாகிறது.

ச:—அப்போது ஸ்மரண நியமம் சம்பவிக்கமாட்டாது. அதாவது அனுபவகாலத்தில் ஸ்மரணை உண்டாகமாட்டாது என்கிற நியமம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அனுபவஞானத்துக்குக் காரணமான ஆத்மமனஸ் ஸம்யோகத்தினாலேயே ஸ்மரணம் உண்டாகும் பக்ஷத்தில் மேற்சொன்ன நியமம் சம்பவிக்கமாட்டாது. அல்லது ஒரே காலத்தில் அநேக ஸ்மரணங்கள் உண்டாகும். மேலும் சமான ஜாதிகளாகவும், ஸ்வர்க்காதி குணமுள்ளவர்களாகவு மிருக்கிறமல்லர், ஆட்டுக்கிடா முதலானவைகளிடத்தில் ஒன்றோடொன்று சம்பந்தம் கண்டிருக்கிறோம். கடம், ஆத்மா, மனது இவைகள் அப்படிப்பட்டவையல்ல. ஆகவே ஆத்மாவுக்கும் மனதிற்கும் சம்பந்தம் சம்பவிக்கமாட்டாது.

ஆ:—விஜாதீயமான குணம் முதலியவைகளுக்கு திரவியத்தோடு சம்பந்த மிருக்கிறதுபோல் ஆத்மாவுக்கும் மனதுடன் சம்பந்த மிருக்கட்டுமே.

ச:—அது சரியன்று; ஏனெனின் திருஷ்டாந்தம் வாதிப்பிரதிவாதிகளுக்கு சம்மதமாக இருக்கவேண்டும். வேதாந்தியின் மதத்தில் திரவியத்தைவிட குணங்களாவது, கர்மம், சாமான்னியம், விசே

ஷம், சமவாயம் இவைகளாவது வேறாக இல்லை. ஆகவே, இரண்டு வாதிகளுக்கும் சம்மதமான திருஷ்டாந்தம் சித்திக்கவில்லை.

ஆ:—திருவியத்தைவிட குணமுதலியவைகளும், ஆத்மாவைவிட இச்சை முதலியவைகளும் அத்தியந்தம் வேறுதான் என்று சொன்னால்

ச:—அப்போது ஹிமாசலத்தோடு விந்திய பர்வதத்துக்குப் போல, திருவியத்தோடு அவைகளுக்குச் சம்பந்தம் சித்திக்கமாட்டாது.

ஆ:—குணம் முதலியவைகள் திரவியத்தைவிட வேறாக இருந்தாலும் அயுதசித்தங்கள் அதாவது விட்டுப்பிரியாத பதார்த்தங்கள். அவைகளுக்குச் சமவாயம் என்னும் பெயருள்ள நித்தியமான சம்பந்தம் சித்திக்கிறது. அதில் யாதொரு விரோதமில்லை.

ச:—இது சரியன்று. பூர்வசித்தமாகவும் நித்தியமாகவும் இருக்கிற ஆத்மாவும் அநித்தியமான இச்சாதிகளும் அயுதசித்தங்களல்ல. இச்சாதிகள் ஆத்மாவுடன் அயுதசித்தங்களாகிறதில்லை என்று சொன்னால், அப்போது ஆத்மாவில் இருக்கிற மஹத்தன்மைபோல் இச்சாதிகள் நித்தியமாய்விடும். அப்படி ஒப்புக்கொண்டால் ஆத்மாவுக்கு இச்சாதி பந்தங்களினின்றும் மோக்ஷம் சித்திக்கமாட்டாது. மேலும் சமவாயம் என்னும் சம்பந்தம், திரவியத்தைவிட வேறு. திரவியத்துக்கும் அந்த சமவாயத்துக்கும் திரவிய குணங்களுக்குப்போல் வேறு சம்பந்தம் சொல்லவேண்டும். அப்போது அவஸ்தை ஏற்படுகிறது. சமவாயமானது நித்திய சம்பந்தமானதால் அதற்கு வேறு சம்பந்தம் வேண்டாம் என்று சொன்னால் அப்போதும் சமவாய சம்பந்தத்தோடு கூடின வஸ்துக்கள் நித்திய சம்பந்தத்தோடு கூடியிருப்பதால் பேதம் சித்திக்கமாட்டாது. திரவிய குணாதிகளுக்கு அத்தியந்தபேதம் சொல்லும்பக்ஷத்தில் ஸ்பர்சத்தோடு கூடின திரவியத்துக்கும் ஸ்பர்சமன்றியிலிருக்கிற திரவியத்துக்கும் போல் திரவியகுணங்களுக்கு சம்பந்தம் ஏற்படாது. மேலும் உற்பத்தி விநாசமுள்ள இச்சை முதலிய குணங்கள் ஆத்மாவினிடத்திலிருக்கும் பக்ஷத்தில் தேகாதிகளுக்குப்போல் ஆத்மாவுக்கு அநித்யத்துவம் வரும். மேலும் அவயவத்தோடுகூடின தன்மையுடன் விகாரமும் தேகாதிகளுக்குப்போல் பரிகரிக்கமுடியாத தோஷங்கள் ஏற்படும் ஆகவே; இச்சாதிகள் ஆத்மகுணங்களல்ல.

ஆகாசம் புகை முதலியவைகளால் அழுக்கடைந்ததாகச் சொல்லப்படுவதுபோல், ஆத்மாவினிடத்தில் அஞ்ஞானத்தால் கற்பிக்கப்படும் புத்தி முதலிய உபாதியிலுண்டாகும் சுகதுக்காதி தோஷங்கள் [illegible]

கலாம்; அதில் யாதொரு விரோதமுமில்லை. சர்வவாதிகளும் வியவஹாரங்கள் அஞ்ஞானத்தால் கற்பிக்கப்பட்டனவென்றும் பரமார்த்தமல்லவென்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தார்க்கிகர்களால் கற்பிக்கப்பட்ட ஆத்மபேத கற்பனை வியர்த்தம். ||84||

रूपकार्यसमाख्याश्च भिद्यन्ते तत्रतत्रवै ।
आकाशस्य नभेदोऽस्ति तद्वज्जीवेषु निर्णयः ॥ 85 ॥

ரூபகாய்யஸமாஃயாஶ்ச பிஜுஂதெ தத்ர தத்ரவை ।
ஆகாஶஸ்ய ந லேஜொஸ்தி தஜ்ஜீவேஷு நிணயஃ ॥85॥

रूपकार्यसमाख्याः ச ரூபகாய்யஸமாஃயாஃ வ = ஒரே ஆகாசத்தில் கடாகாசம், சட்டி ஆகாசம் பானை ஆகாசம் முதலியவைகளின் சிறிய பெரிய ரூபங்கள், ஜலத்தைக்கொண்டு வருதல் தரித்தல் முதலிய காரியங்கள், கடாகாசம் சட்டி ஆகாசம் முதலிய உபாதிகளால் உண்டான நாமங்கள், இவைகள்.

तत्रतत्रवै தத்ர தத்ரவை = ஒவ்வொரு வியவஹார விஷயத்திலும்

भिद्यते பிஜுதெ = வெவ்வேறாகக் காணப்படுகிறது.

आकाशस्य ஆகாஶஸ்ய = ஆகாசத்துக்கு

भेदः லேஜஃ = பேதம்

न अस्ति ந அஸ்தி = இல்லை

तद्वत् தஜ்வத் = அப்படியே

जीवेषु ஜீவேஷு = ஜீவர்களுக்குள்

निर्णयः நிணயஃ = நிச்சயம்.

ச-பா:—அத்வைதத்துக்கு சுருதி விரோதமன்றியிலிருப்பதாலும், கடம் படம்போல் நாமம், காரியம் ரூபம் இவைகள் தனித்தனியே இருப்பதால் ஜீவர்கள் வாஸ்தவத்திலும் வேறாக இருக்கிறார்கள் என்று அனுமானத்தால் விரோதம் வருகிறபடியால் ஆத்மா ஒன்றாயினும் அவித்தியா பலத்தால் ஆத்மாக்கள் அநேகம் என்கிற வியவஹாரம் சம்பவிக்கலாம் என்று எப்படிச்சொல்லலாமெனின், உத்தரம் கூறுகிறார்.

ஒரே ஆகாசத்தில் கடாகாசம், மடாகாசம் முதலிய ரூபபேதங்கள், ஜலத்தைக் கொண்டுவருதல், மூடுதல் முதலிய காரியபேதங்கள், கடாகாசம், மடாகாசம் முதலிய நாமங்கள், இப்பேற்பட்ட பேதங்கள் இங்கும் அங்கும் எங்கும் காணப்படுகின்றன. ஆகாசத்தின் பேதங்களால் உண்டான வியவஹாரங்கள் வாஸ்தவங்களல்ல. வாஸ்தவத்தில் ஆகாசத்தில் யாதொரு பேதமுமில்லை. எப்படி ஆகாச திருஷ்டாந்தத்தில் வியவஹார பேதம் ஆகாச பேதத்தை

கர்ணிக்காமல் உபாதி பேதங்களை மட்டும் குறிப்பிடுகிறதோ, அப்படி கடாகாசத்துக்குச் சமானமான ஜீவன் விஷயத்திலும், தேகாதி உபாதிகளால் பேதம் சம்பவிக்கிறதே தவிர, வாஸ்வத்திலில்லையென்பது ஞானிகளின் தீர்மானம். 85

नाऽऽकाशस्य घटाकाशो विकारावयवौ यथा ।
नैवात्मनः सदाजीवो विகாராவயவௌ तथा ॥ 86 ॥

நாऽऽகாஶஸ்ய வடாகாஶோ விகாராவயவௌ யதா ।
நைவாத்மந: ஸதாஜீவோ விகாராவயவௌ ததா ॥ 86 ॥

यथा யதா=எப்படி

घटाकाशः வடாகாஶ:=கடாகாசம்

आकाशस्य ஆகாஶஸ்ய=மஹாகாசத்தின்

न विकारावयवौ ந விகாராவயவௌ=விகாரமுமல்ல அவயவமுமல்லவோ

तथा ததா=அப்படி

जीवः ஜீவ:=ஜீவன்

आत्मनः ஆத்மந:=பரமாத்மாவின்

सदा न विकारावयवौ ஸதா நவிகாராவயவௌ எப்போதும் விகாரமுமல்ல அவயவமுமல்ல.

ச-பா :—கடாகாசாதி பேதத்தால் ஆகாசத்திலும் வாஸ்தவத்தில் பேதம் உண்டாகட்டுமே எனின் அது சரியன்று. ஏனெனில் தங்கத்திலிருந்து மோதிரம் போலும் ஜலத்திலிருந்து நுரை குமிழ் முதலியவைகள் போலும் கடாகாசம் மகாகாசத்தினின்றும் செய்யப்பட்டதல்ல. விருக்ஷத்துக்கு கொம்பு அவயவமாயிருப்பதுபோல் ஆகாசத்துக்கு கடாகாசம் அவயவமல்ல, ஆகையால் கடாகாசாதிகளின் பேத வியவஹாரங்கள் ஆகாசத்துக்கு ஏற்படவில்லை. இதுபோல் கடகாசஸ்தானத்திலிருக்கிற ஜீவனும் மகாகாசஸ்தானத்திலிருக்கிற பரமாத்மாவின் விகாரமுமல்ல, அவயவமுமல்ல. ஆகையால் அதாவது, அனுமானத்துக்கு இடமில்லாதபடியால் ஆத்மாக்கள் அநேகம் என்கிற வியவஹாரம் மித்தையே. 86

यथा भवति बालानां गगनं मलिनंमलैः ।
तथाभवत्यबुद्धानामात्माऽपि मलिनोमलैः ॥ 87 ॥

யதாபவதி பாலாநாம் ககநம் மலிநம்மலை: ।
ததாபவத்யபுத்தாநாமாத்மாऽபி மலிநோமலை: ॥ 87 ॥

बालानां பாலாநாம்=பாலர்களுக்கு

[illegible]

मलैः மலை:=தூளி முதலானதுகளால்
मलिनं மலிநம்=அழுக்கடைந்ததாக
यथा யதா=எப்படி
भवति பவதி=ஆகிறதோ
तथा ததா=அப்படி
अबुद्धानां அபுத்தாநாம்=அஞ்ஞானிகளுக்கும்
आत्मापि ஆத்மாபி=ஆத்மாவும்
मलैः மலை:=தோஷங்களால்
मलिनः மலிந:=மலினமாக
भवति பவதி=இருக்கிறது.

அத்யாரோபம் :—

தா - ம்:—ஜீவன் பரப்பிரம்மத்தின் அம்சமுமல்ல வென்றும் விகாரமுமல்ல வென்றும், உபாதியில் பிரவேசித்தபிரம்மமே ஜீவ சப்த வாச்சியமென்று ஸித்தாந்தி சொல்லுவது யுக்தமல்ல. ஏனெனில், பிரம்மம் [illegible] ஒன்றாயும் சுத்தமாயு மிருக்கிறது. ஜீவன் இராகாதி தோஷங்களோடு கூடியும், அநேகமாயு மிருக்கிறது. ஆகையால் ஜீவனும் பிரம்மமும் ஒன்றாகாது என்கிற சங்கைக்கு (வாஸ்தவத்தில் ஜீவனுக்கு யாதொரு தோஷமுமில்லை யென்று இந்த மந்திரத்தில் சொல்லுகிறார்.) கடாகாசம் என்கிறபேதபுத்தியால் ரூபாதிகளின் வியவஹாரம் உண்டாயிற்று. இதுபோல் தேகாதி பேதபுத்யால் ஜன்மம் மரணம் முதலிய வியவஹாரங்களும், ராகாதிதோஷங்களும் சம்பவிக்கின்றன. பாரமார்த்திகத்தில் பேதமுமில்லை தோஷமுமில்லை என்பதை திருஷ்டாந்தத்தால் காட்டுகிறார் :—லோகத்தில் அவிவேகிகளான பாலகர்கள் ஆகாசத்தைப்பார்த்து அது மேகத்தாலும், தூளிகளாலும், புகையினாலும் சம்பந்தப்பட்டு மலினமானதாக பாவிக்கிறார்கள். ஆனால் விவேகிகள் இவைகளுடன் ஆகாச சம்பந்தப்படுகிறதாக நினைக்கிறதேயில்லை. இதுபோல் சுத்தஞான ஸ்வரூபமான பரப்பிரம்மமும் அஞ்ஞானிகளுக்கு ராகாதிகளுடன் கூடினதாக காணப்படுகிறது. ஊஷரப்பிரதேசம் தாகமுள்ளவனால் ஜலசகிதமாயிருப்பதாக பாவிக்கப்பட்ட போதிலும், எப்படி வாஸ்தவத்தில் அப்படியில்லையோ, அப்படி அஞ்ஞானிகள் ஆத்மாவிடத்தில் ராகாதி மலங்களை ஆரோபித்தாலும் ஆத்மா மலினமாகிறதில்லை. 87

मरणे संभवे चैव गत्यागमनयोरपि ।
स्थितो सर्वशरीरेषु आकाशेनाविलक्षणः ॥ 88 ॥

மரணே ஸம்பவே சைவ கத்யாகமநயோரபி ।
ஸ்திதோ ஸர்வஶரீரேஷு ஆகாஶேநாவிலக்ஷண: ॥ 88 ॥

मरणे மரணே=மரணத்திலும்

संभवेचैव ஸம்ஹவேசைவ=உற்பத்தியிலும்

गत्यागमनयोरपि கத்யாகமநயோரபி =போகுதல் வருதல் இவைகளிலும்

स्थितौ ஸ்திதௌ=இருப்பிலும்

सर्वशरीरेषु ஸர்வசரீரேஷு=சர்வ சரீரங்களிலும்

(आत्मा ஆத்மா=ஆத்மா)

आकाशेनाविलक्षण: ஆகாசேநாவிலக்ஷண:=ஆகாசத்துக்கு விலக்ஷணமாயில்லை.

தா-ம்:—ஜீவன் மரணத்துக்குப் பிறகு தர்மத்தை அனுசரித்து ஸ்வர்க்கத்துக்கும், அதர்மத்தை அனுசரித்து நரகத்துக்கும் போகிறுன். புண்ணிய பாபயோகம் முடிந்தபின் மறுபடியும் பூலோகத்துக்கு வந்து ஜனிக்கிறுன். போகம் உள்ள வரையில் பூமியிலிருந்து மறுபடியும் பரலோகத்துக்குப் போகிறுன். இவ்விதமாய் இந்த லோகத்துக்கும் பரலோகத்துக்கும் ஜீவன் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கிறுன் என்கிற வியவஹாரத்துக்கு அத்வைதம் விருத்தமாயிருக்கிறதே எனில்:—முந்தின மந்திரத்தில் சொல்லிய அர்த்தத்தையே விவரிக்கிறுர். கடாகாசத்தின் ஜன்மம், மரணம், கமனம், ஆகமனம் ஸ்திதி இவைகள்போல் சர்வ சரீரங்களிலும் மிருக்கிற ஆத்மாவின் ஜனனுதிகளும் ஆகாச விஷயத்தில் ஜனனுதிகள் எப்படி பிராந்தி மாத்திரமோ, அப்படி ஆத்மா விஷயத்திலும் ஜனனுதிகள் பிராந்தியே. ஆகாசத்துக்கும் ஆத்மாவுக்கும் விலக்ஷணத்வமில்லை. ॥ 88 ॥

संघाता: स्वप्नवत्सर्वे आत्ममायाविसर्जिता: ।
आधिक्येसर्वसाम्ये वा नोपपत्तिर्हि विद्यते ॥ 89 ॥

ஸம்வாதா: ஸ்வப்னவத்ஸர்வே ஆத்மமாயாவிஸர்ஜிதா: ।
ஆதிக்யே ஸர்வஸாம்யே வா நோபபத்திர்ஹி வித்யதே ॥89

सर्वे ஸர்வே=சமஸ்தமான

संघाता: ஸம்வாதா:=தேகாதி சங்காதங்களும்

स्वप्नवत् ஸ்வப்னவத்=ஸ்வப்நம் போல்

आत्ममायाविसर्जिता: ஆத்மமாயாவிஸர்ஜிதா:=ஆத்மாவின் மாயா பலத்தால் உண்டுபண்ணப்பட்டவைகள்

आधिक्ये ஆதிக்யே=ஆதிக்கியத்திலாவது

सर्वसाम्ये वा ஸர்வஸாம்யே வா=எல்லாம் சமம் என்பதிலாவது

उत्पत्तिः உத்பத்திஃ=யுக்தியானது
न विद्यते हि நவித்யதே ஹி=இருக்கவில்லை.

ஸ-பா :—கடஸ்தானங்களிலிருக்கிற சமஸ்தமான தேகாதி சங்காதங்களும் ஸ்வப்நத்திற் பார்க்கப்பட்ட தேகாதிகள் போலும், மாயாவி புருஷனால் உண்டுபண்ணப்பட்ட தேகாதிகள் போலும், ஆத்மாவின் மாயையால் உண்டாகின்றனவே தவிர வாஸ்தவத்தில் அவைகளிருக்கவில்லை.

தேவதைகள் உத்தமர்களாகையால் அவர்களின் சரீரங்கள் உத்தமமென்று அவிவேகிகளின் திருஷ்டியால் கற்பிக்கப்பட்டிருந்தாலும், சர்வ சரீரங்களும் பஞ்சபூத காரியங்களானதால் சமமென்று விவேகியின் திருஷ்டியால் கற்பிக்கப்பட்டிருந்தாலும், சரீரங்கள் சத்தியமென்று சொல்ல ஒருவித யுக்தியுமில்லை. ஆகையால் அவித்தையால் ஆத்மபேதம் காணப்படுகிறதே தவிர வாஸ்தவத்திலில்லை. ॥90॥

रसादयो हि ये कोशा व्याख्यातास्तैत्तिरीयके ।
तेषामात्मापरोजीवः खं यथासंप्रकाशितः ॥ 90 ॥ (11)

ரஸாதயோ ஹி யே கோஶா வ்யாக்யாதாஸ்தைத்திரீயகே ।
தேஷாமாத்மாபரோஜீவஃ கம் யதா ஸம்ப்ரகாஶிதஃ ॥90 ॥

रसादयः ரஸாதயஃ=அன்ன(ரச) மய, முதலிய
ये யே=எந்த
कोशाः கோஶாஃ=கோசங்கள்
तैत्तिरीयके தைத்திரீயகே=தைத்திரீய உபநிஷத்தில்
व्याख्याताः வ்யாக்யாதாஃ=சொல்லப்பட்டிருக்கின்றனவோ
तेषां தேஷாம்=அவைகளுக்கு
परः பரஃ=பிரம்மரூபமான
आत्मा ஆத்மா=ஆத்மாவே
जीवः ஜீவஃ=ஜீவன்
यथा யதா=எப்படி
खं கம்=ஆகாசமோ
(तथा ததா=அப்படி)
संप्रकाशितः ஸம்ப்ரகாஶிதஃ=செவ்வையாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறான்.

தா-ம்:—ஆத்மா உற்பத்தி முதலியவையில்லாத அத்வைதரூபம் என்பதற்கு சுருதிப்பிரமாணம் கொடுக்கிறார். தைத்திரீய உபநிஷத்தில் அன்னமயம் பிராணமயம் முதலிய கோசங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. [illegible]

வெளிகோசமாயிருப்பதுபோல் பிராணமயகோசத்துக்கு அன்னமய கோசம் உறைபோல் வெளியாயிருக்கிறது. எல்லா கோசங்களுக்கும் உள் ஆத்மா இருக்கிறது. சகல கோசங்களும் ஜீவிக்க ஆத்மா காரணமாயிருக்கிறபடியால் ஆத்மாவே எல்லாவற்றிற்கும் ஜீவன். இந்த ஜீவன் சத்தியஞான அநந்த ரூபமாயின் பிரம்மமே. ஸ்வப்நபதார்த்தம், மாயாவின் சிருஷ்டி, இவைகள்போல் ஆத்மாவின் மாயாபலத்தால் அன்னமயாதி கோசங்கள் உண்டாகின்றன. முன் 3-வது மந்திரத்தில் இந்த ஆத்மா ஆகாச திருஷ்டாந்தத்தால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தார்க்கிகளால் சொல்லப்பட்ட ஆத்மாவைப் போல் புருஷயுக்தியால் அறியத்தகுந்ததல்லவென்பது கருத்து. 90.

द्वयोर्द्वयोर्मधुज्ञाने परंब्रह्मप्रकाशितम् ।
पृथिव्यामुदरे चैव यथाऽऽकाशः प्रकाशितः ॥ 91 ॥

த்வயோர்த்வயோர்மதுஜ்ஞாநே பரம்ப்ரஹ்மப்ரகாசிதம் ।
ப்ருதிவ்யாமுதரே சைவ யதாऽऽகாச: ப்ரகாசித: ॥91॥

मधुज्ञाने மதுஜ்ஞாநே=மது பிராம்மணத்தில்
द्वयोः द्वयोः த்வயோ: த்வயோ:=இரண்டு இரண்டு ஸ்தானங்களில்
परंब्रह्म பரம்ப்ரஹ்ம=பரமமான பிரம்மம்
प्रकाशितम् ப்ரகாசிதம்=பிரகாசமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.
यथा யதா=எப்படி
पृथिव्यां ப்ருதிவ்யாம்=பூமியிலும்
उदरे च உதரே ச=உதரத்திலும்
आकाशः एव ஆகாச:ஏவ=ஆகாசமே
प्रकाशितः ப்ரகாசித:=(அப்படி) அனுமானத்தால் பிரகாசம் பண்ணப்பட்டிருக்கிறது.

ச.பா:—முந்தின மந்திரத்தில் தைத்தரீயத்தின் தாற்பரியம் சொல்லப்பட்டது. இப்போது பிருஹதாரணியத்தின் தாற்பரியம் கூறப்படுகின்றது. இந்த உபநிஷத்தில் மதுப்பிராம்மணத்தில் அதிதெய்வம் அத்தியாத்மம் என்று பிரிக்கப்பட்ட இரண்டு ஸ்தானங்களிருக்கின்றன. அதிதெய்வமாகிய பிருதிவி முதலியதும் அத்தியாத்மமாகிய சரீரத்திலும் ஜோதிர்மயனும் மரணமற்றவனும், பூர்ணனும் எந்த ஆத்மா இருக்கிறானோ அவனே பிரம்மம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (பிரம்ம வித்தைக்குப்பெயர் மது அதாவது அமிருதம், பரமாநந்தத்துக்கு ஹேதுவாக இருப்பதால், அந்த மதுவைக்கூறும்

[illegible] ॥ 91 ॥

जीवात्मनोरन्यत्व मभेदेन प्रशस्यते ।
नानात्वंनिन्द्यतेयच्च तदेवं हि समञ्जसम् ॥ 92 ॥

ஜீவாத்மநோரநந்யத்வமபேதேந ப்ரஶஸ்யதே ।
நாநாத்வம் நிந்த்யதே யச்ச ததேவம் ஹி ஸமஞ்ஜஸம் ॥ 92 ॥

जीवात्मनोः ஜீவாத்மநோ:=ஜீவனுடையவும் ஆத்மாவி னுடையவும்

अनन्यत्वं அநந்யத்வம்=ஒன்றாயிருத்தல்
अभेदेन அபேதேந=அபேதத்தால்
प्रशस्यते ப்ரஶஸ்யதே=ஸ்துதிக்கப்படுகிறது
नानात्वं நாநாத்வம் =நாநாவாயிருத்தல்
निन्द्यते நிந்த்யதே=நிந்திக்கப்பட்டிருக்கிறது
यच्च யச்ச=என்கிறது யாதொன்று உண்டோ
तत् தத்=அது
एवं ஏவம்=இப்படியானால்
समञ्जसम् ஸமஞ்ஜஸம்=சயுக்திகமா யிருக்கிறது.

ச - பா:—சுருதி யுக்திகளால் நிச்சயிக்கப்பட்ட ஜீவப்பிரம்ம ஐக்கியம் வியாசர் முதலான ரிஷிகளாலும் சாஸ்திரத்தாலும் ஸ்துதிக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்ச வியவஹாரத்தில் ஜீவர்கள் அநேகமாய்க் காணப்படுவதால் ஜீவர்கள் அநேகர் என்று சாஸ்திரவிருத்தமாய் குதார்க்கிகர்களால் கற்பிக்கப்பட்ட பேதஞானமானது.

(1) नतुतद्द्वितीयमस्ति (बृ-IV-3-23)
நது தத்த்விதீயமஸ்தி (ப்ரு-IV-3-23)

(2) द्वितीयाद्वैभयमस्ति (बृ-I-4-2)
த்விதீயாத்வை பயமஸ்தி (ப்ரு-I-4-2)

(3) उदरमन्तरंकुरुते अथ तस्य भयंभवति
உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி

(4) इदं सर्वंयदयमात्मा
இதம் ஸர்வம் யதயமாத்மா

(5) मृत्योःसमृत्युमाप्नोति य इहनानेवपश्यति (कठ-II-1-10) ம்ருத்யோ:
ஸம்ருத்யுமாப்நோதி ய இஹ நாநேவ பஶ்யதி (கட-II-1-10)

முதலிய சுருதி வாக்கியங்களாலும் இதர பிரம்ம ஞானிகளாலும் நிந்திக்கப்பட்டிருக்கிறது. வேதாந்த சித்தாந்தமே யுக்தி சகிதமா யிருக்கிறதே தவிர தார்க்கிகர்களுடைய கொள்கை அப்படி யில்லை, என்பது கருத்து. 92.

जीवात्मनोः पृथक्त्वं यत्प्रागुत्पत्तेः प्रकीर्तितम् ।
भविष्यद्वृत्त्या गौणं तन्मुख्यत्वं हि न युज्यते ॥ 93 ॥

ஜீவாத்மனோ: ப்ருதக்த்வம் யத்ப்ராகுத்பத்தே: ப்ரகீர்த்திதம் ।
பவிஷ்யத்வ்ருத்த்யா கௌணம் தன்முக்யத்வம் ஹி ந யுஜ்யதே ॥ 93

उत्पत्तेः प्राक् உத்பத்தே: ப்ராக்=உற்பத்திக்கு (சிருஷ்டிக்கு) முன்

यत् யத்=யாதொரு

जीवात्मनोः ஜீவாத்மனோ:=ஜீவாத்மாக்களின்

पृथक्त्वं ப்ருதக்த்வம்=பிரதக்பாவம்

प्रकीर्तितम् ப்ரகீர்த்திதம்=சொல்லப்பட்டதோ

तत् தத்=அது

भविष्यद्वृत्त्या பவிஷ்யத்வ்ருத்த்யா=மேல் ஏற்படுகிற விருத்தியால்

गौणं கௌணம்=முக்கியமல்ல

तन्मुख्यत्वं தன்முக்யத்வம்=அது முக்கியம் என்பது

न हि युज्यते நஹி யுஜ்யதே=கூடாது

ச-பா :—சிருஷ்டிக்குமுன் என்பது சிருஷ்டியைப்பற்றி பிரஸ்தாபிக்கும் உபநிஷத் வாக்கியத்துக்கு முந்திய வாக்கியம் அதாவது கர்ம காண்டத்தில் என்று அர்த்தம். கர்ம காண்டத்தில் ஜீவன் ஆத்மா இவைகளின் பேதமும் ஞானகாண்டத்தில் இவைகளின் அபேதமும் சொல்லியிருப்பதால், ஞானகாண்டத்திற் சொல்லிய அபேதம் யுக்தமென்று எப்படிச் சொல்லலாம்.

(1) यतो वा इमानि भूतानि जायन्ते
யதோவா இமானி பூதானி ஜாயந்தே

(2) यथाग्नेः क्षुद्रा विस्फुलिङ्गाः
யதாக்னே: க்ஷுத்ரா விஸ்புலிங்கா:

(3) तस्माद्वा एतस्मादात्मन आकाशः संभूतः
தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச: ஸம்பூத:

(4) तदैक्षत तत्तेजोऽसृजत
ததைக்ஷத தத்தேஜோஸ்ருஜத

முதலிய அபேதத்தைக்கூறும் உபநிஷத் வாக்கியங்களால் கர்ம காண்டத்திற் சொல்லிய பேதம் வாஸ்தவமல்ல, கௌணமே. மகாகாசத்துக்கும் கடாகாசத்துக்கு மிருக்கும் பேதம் போலும். இனிமேல் சாதம் ஆகப்போகிற தென்கிற உத்தேசத்தால் சாதம் சமைக்கிறேன் என்பதுபோலும். பேதத்தைக்கூறும் கர்மகாண்டத்தின் அர்த்தம் முக்கியமென்று சொன்னால் அஞ்ஞானிகளின் பேதஞானத்தை அநுவதிக்கிறபடியால் முக்கியமாகமாட்டாது. உற்பத்தி

பிரளயங்களைக் கூறும் உபநிஷத் வாக்கியங்கள் லோகத்தால் அறியக் கூடாத அபேத ரூபமான அர்த்தத்தைச் சொல்லுகிறபடியாலும் तत्त्वमसि 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 अन्योसावन्योहमस्मि 𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 न स वेद 𑌨 𑌸 𑌵𑍇𑌦 என்கிற சுருதிகளாலும் அந்த அபேதரூபமான அர்த்தம் முக்கியமே. ஆகையால் கர்ம காண்டத்திற் சொல்லிய பேதம் வாஸ்தவமல்லவென்பது கருத்து ॥ 93 ॥

मृल्लोहविस्फुलिंगाद्यैः सृष्टिर्या चोदिताऽन्यथा ।
उपायः सोऽवताराय नास्ति भेदः कथंचन ॥ 94 ॥

𑌮𑍃𑌲𑍍𑌲𑍋𑌹𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑍍𑌯𑌾 𑌚𑍋𑌦𑌿𑌤𑌾𑌽𑌨𑍍𑌯𑌥𑌾
𑌉𑌪𑌾𑌯𑌃 𑌸𑍋𑌽𑌵𑌤𑌾𑌰𑌾𑌯 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌭𑍇𑌦𑌃 𑌕𑌥𑌂𑌚𑌨 ॥ 94 ॥

मृल्लोहविस्फुलिंगाद्यैः 𑌮𑍃𑌲𑍍𑌲𑍋𑌹𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌦𑍍𑌯𑍈𑌃=மண், இரும்பு, பொறி முதலியவைகளாலும்

अन्यथा 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾=வேறு பிரகாரத்தினாலும்

या 𑌯𑌾=யாதொரு

सृष्टिः 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃=சிருஷ்டியானது

चोदिता 𑌚𑍋𑌦𑌿𑌤𑌾=சொல்லப்பட்டதோ

सः 𑌸𑌃=அது

अवताराय 𑌅𑌵𑌤𑌾𑌰𑌾𑌯=பிரம்மத்தை அறியும்பொருட்டு

उपायः 𑌉𑌪𑌾𑌯𑌃=உபாயம்

कथंचन 𑌕𑌥𑌂𑌚𑌨=ஆகையால் கொஞ்சங்கூட

भेदः 𑌭𑍇𑌦𑌃=பேதம்

नास्ति 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿=இல்லை.

ச - பா :—சிருஷ்டிக்குமுன் எல்லாமொன்று யிருந்தாலும் சிருஷ்டிக்குப்பின் பேதமிருக்கிறதே என்கிற ஆக்ஷேபம் சரியன்று. ஏனெனின் சிருஷ்டி வாக்கியங்களுக்கு அர்த்தம் வேறு. மஹாகாசம் கடாகாசம்போல் ஆத்மாவும் ஜீவர்களும் அபேதம் என்று முன்னமேயே நிரூபித்திருக்கிறோம். (ஆக்ஷேபம்) சிருஷ்டி சுருதிகள் ஸ்வப்ந மாயாதி சிருஷ்டிகள்போல் பொய்யான சிருஷ்டியைக் கூறுவதால் அதில் அவைகளுக்குத் தாற்பரியமில்லையென்று முன்னமேயே சொல்லியிருக்க திரும்பவும் இங்கு அதைச் சொல்வது வீண், (சமாதானம்) அவ்விடத்தில் சுருதிகளுக்கு சிருஷ்டியில் தாற்பரியமில்லை என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ஐக்கியத்திற் தாற்பரியத்தைப் பிரதிபாதனம் பண்ணுவதற்காக திரும்பியும் சொல்லுவது வீணல்ல.

மண் முதலிய திருஷ்டாந்தங்களால் எந்த சிருஷ்டி சொல்லப் [illegible]

பிராணனுக்கும் இந்திரியங்களுக்கும் நடந்த சம்வாதத்தில் பிராணனுடைய சிரேஷ்டத்தன்மையைச் சொல்லும்பொருட்டு தேவாசுர யுத்தம் முதலிய கதையை கற்பித்திருப்பதுபோல் ஜீவப்பிரம்ம ஐக்கிய ஞானம் உண்டாவதற்காக சிருஷ்டிகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆ:—பிராண சம்பவத்தில் வாக்காதிகளை தேவதைகளாகச் சொல்லியிருப்பதால் அந்தக்கதை வாஸ்தவமே. ஆனதால் நீ சொன்ன உதாரணம் சரியல்ல.

ச:—பிராண இந்திரிய சம்வாதத்தை வெவ்வேறு சாகைகளில் வெவ்வேறுவிதமாய்ச் சொல்லியிருப்பதால் ஒவ்வொரு இடத்திலும் தோன்றும் வெளிப்படையான அர்த்தமே வாஸ்தவமாகாது. அவைகளின் கருத்து மட்டும் ஒன்றாக இருக்கவேண்டும். மற்ற கற்பனைகளெல்லாம் அந்தக் கருத்தை அறியச் சாதகங்களாக இருக்கவேண்டும். ஆகையால் சிருஷ்டியைப்பற்றிச் சொல்லிய சுருதி வாக்கியங்களையும் அப்படியே அறியவேண்டியது. ஆத்மாவை அறிய அவைகள் சாதனங்களென்றே அறியத்தக்கது. சிருஷ்டி சுருதிகள் ஒன்றுக்கொன்று பேதமாயிருந்தாலும் கற்பபேதத்தாலாவது உபாசனா பேதத்தாலாவது தாற்பரியத்தைக் கற்பிப்பது பிசகு. கல்பத்துக்குக் கல்பம் சிருஷ்டி வேறாக இருக்கிறதென்று தெரிந்துகொள்வதில் ஒரு பிரயோஜனமுமில்லை. அந்தப்படி உபாசனை செய்யச்சொல்லவுமில்லை. பிராணாதிகளுடைய கலகத்தை உபாசிக்கிறதினால் அனர்த்தமும் உண்டாகும். ஆகவே உற்பத்தி முதலியவைகளால் ஆத்மபோம் சித்திக்கமாட்டாது. ॥94॥

आश्रमास्त्रिविधा हीनमध्यमोत्कृष्टदृष्टयः ।
उपासनोपदिष्टेयं तदर्थमनुकम्पया ॥ 95 ॥

𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾 𑌹𑍀𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑍋𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑌃 ।
𑌉𑌪𑌾𑌸𑌨𑍋𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑍇𑌯𑌂 𑌤𑌦𑌰𑍍𑌥𑌮𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌯𑌾 ॥ 95 ॥

हीनमध्यमोत्कृष्टदृष्टयः 𑌹𑍀𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑍋𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑌃 = மந்த மத்தியம உத்தம திருஷ்டிகளுடன் கூடின

आश्रमाः 𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌃 = ஆசிரமிகள்

त्रिविधाः 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 = மூன்று விதங்கள்

तदर्थं 𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 = மந்தமத்தியம திருஷ்டி உள்ளவர்களின் பொருட்டு

अनुकंपया 𑌅𑌨𑍁𑌕𑌂𑌪𑌯𑌾 = கிருபையால்

इयं 𑌇𑌯𑌂 = இந்த

उपदिष्टा உபதிஷ்டா= உபதேசிக்கப்பட்டது.

தா-ம் :... நித்திய சுத்த புத்த முக்த ஸ்வபாவமான பரப்பிரம்மமாகிற ஆத்மா சத் என்றும் மற்றவையெல்லாம் அசத் என்றும் சுருதியால் பிரதிபாதிக்கப்பட்டால், வேறு சில சுருதிகளால் ஆத்மா பார்க்கத்தக்கது, தியானிக்கத்தக்கது, உபாசிக்கத்தக்கது, இவ்விதமாய் ஏன் உபதேசம் செய்யவேண்டும்; ஏன் அக்கினி ஹோத்திர முதலான கர்மங்கள் செய்யவேண்டும்; இதற்கு சித்தாந்தி உத்தரம் சொல்லுகிறதாவது. மூன்றுவித ஆசிரமிகளிருக்கிறார்கள்.

(1) காரிய பிர்ம்மத்தைப் பார்க்கும் மந்தபுத்தி சாமர்த்தியத்துடன் கூடினவர்கள் (2) காரணப்பிர்ம்மத்தை பார்க்கும் மத்திய புத்தி சாமர்த்தியத்துடன் கூடினவர்கள் (3) அத்வைதத்தை பார்க்கும் உத்தமபுத்தி சாமர்த்தியத்துடன் கூடினவர்கள். இவைகளில் மந்த மத்திய புத்தி சாமர்த்தியத்துடன் கூடினவர்களின் பொருட்டு இவர்கள் சன்மார்க்கத்தில் செல்லும் பொருட்டு பரம தயாளுவான வேதம் உபாசனையையும் கர்மத்தையும் உபதேசிக்கிறது. வேதத்தால் செய்யப்படும் இந்த உபதேசம் "ஆத்மா ஒன்றே. அத்விதீயம்" என்கிற நிச்சயமுடைய உத்தம புத்தியுடன் கூடினவர்களுக்கு ஏற்படவில்லை. அவர்களுக்கு வர்ணாசிரம பேதங்களில்லாதபடியால் உபாசனையும் இல்லை கர்மமுமில்லை. ॥ 95 ॥

स्वसिद्धान्तव्यवस्थासु द्वैतिनो निश्चिता दृढम् ।
परस्परं विरुध्यन्ते तैरयं न विरुध्यते ॥ 96 ॥

സ്വസിദ്ധാന്തവ്യവസ്ഥാസു ദ്വൈതിനോ നിശ്ചിതാ ദൃഢം ।
പരസ്പരം വിരുധ്യന്തേ തൈരയം ന വിരുധ്യതേ ॥ 96 ॥

द्वैतिनः ദ്വൈതിനഃ=த்வைதிகள்

स्वसिद्धान्तव्यवस्थासु സ്വസിദ്ധാന്തവ്യവസ്ഥാസു=தங்களுடைய சித்தாந்தங்களை ஸ்தாபிக்கிற விஷயங்களில்

दृढम् निश्चिताः ദൃഢം നിശ്ചിതാഃ=பலமான நிச்சயத்தை யுடையவர்களா யிருக்கிறார்கள்

परस्परं പരസ്പരം=பரஸ்பரம்

विरुध्यन्ते വിരുധ്യന്തേ=விரோதபபடுகிறார்கள்

अयं അയം=இந்த அத்வைத பக்ஷமானது

तैः തൈഃ=அவர்களுடன்

न विरुध्यते നവിരുധ്യതേ=விரோதப்படுகிறதில்லை

சாஸ்திரத்தாலும் யுக்தியாலும் நிச்சயமாய் அறியப்பட்ட ஆத்ம ஞானந்தான் சரியான ஞானம். சாஸ்திரத்துக்கும் யுக்திக்கும் விருத்தமாய் அறியப்பட்டது மித்தியா ஞானம். இத்துவைதம் மித்தை என்பதற்கு ஒரு காரணமன்று. [illegible] ([illegible])

கணாதர் (வைசேஷிக கர்த்தா) பௌத்தர் இவர்களாகிற த்வைதிகள் தாங்கள் தங்களுடைய சித்தாந்தங்களே சத்தியம் என்றும் மற்றவை அசத்தியமென்றும் பாவித்து தங்களுடைய சித்தாந்தத்தை ஒப்புக் கொள்ளாதவர்களிடம் கோபம்கொள்ளுகிறார்கள். இவர்களுக்குள்ளேயே பரஸ்பரம் விரோதங்களுண்டு. தங்களுக்கு விரோதியாயிருப்பவர்களை அவர்கள் வெறுக்கிறார்கள். சரீரத்தின் கை கால் முதலியவைகள் சரீரத்துக்கு விரோதமாயிராததுபோல், இந்த அத்வைதம் அவைகளுக்கு விருத்தமாயில்லை. இது எல்லாவற்றையும் அடக்கிக்கொள்ளுகிறது. இராகத்வேஷாதிகள் இல்லாதபடியால் அத்வைதமே சத்தியம். ।96॥

अद्वैतं परमार्थो हि द्वैतं तद्भेद उच्यते ।
तेषामुभयथा द्वैतं तेनायं न विरुध्यते ॥ 97 ॥

அத்வைதம் பரமார்த்தோ ஹி த்வைதம் தத்பேத³ உச்யதே ।
தேஷாமுபயதா த்வைதம் தேநாயம் நவிருத்யதே॥97॥

अद्वैतं அத்வைதம் = அத்வைதம்
परमार्थोहि பரமார்த்தோஹி=பரமார்த்த சத்தியம்
द्वैतं த்வைதம்=த்வைதம்
तद्भेदः தத்பேதஃ=அத்வைதத்தின் காரியம் என்று
उच्यते உச்யதே=சொல்லப்படுகிறது
तेषां தேஷாம்=த்வைதிகளுக்கு
उभयथा உபயதா =பாரமார்த்திகத்திலும் வியாவஹாரிகத்திலும்
द्वैतं த்வைதம்=த்வைதமே
तेन தேந = அந்தக் காரணத்தால்
अयं அயம் = இந்த அத்வைதம்
नविरुध्यते நவிருத்யதே= விருத்தப்படுகிறதில்லை.

தா-ம் :—அத்வைதம் எப்படி த்வைதத்துக்கு விருத்தமல்லவென்பது இப்போது சொல்லப்படுகிறது. அத்வைதமோ பாரமார்த்திகசத்தியம் த்வைதமோ அநேகம்; அத்வைதத்தின் காரியம். "ஒரே அத்விதீயம் இருந்தது, அதுதேஜஸை சிருஷ்டித்தது" இது முதலிய சுருதிகளாலும், சுஷுப்தி மூர்ச்சை சமாதி இவைகளில் த்வைதம் காணப்படாததினாலும், அத்வைதம் சித்திக்கிறது. ஆகையால் த்வைதம் காரியமாக சொல்லப்படுகிறது. த்வைதங்களின் சித்தாந்தத்தின்படி வியாவஹாரிகத்திலும் பாரமார்த்திகத்திலும் த்வைதமே சத்தியம். த்வைதிகள் பிராந்தி திருஷ்டியை யுடையவர்கள்.

திரன். மாயையால் வெகு ரூபங்களை அடைகிறான். இரண்டாவது இல்லை" இது முதலிய சுருதிகளால் அத்வைதம் த்வைதபாவனைக்கு விருத்தப்படுகிறதில்லை. திருஷ்டாந்தம்:—மதம்பிடித்த யானையின்பேரில் ஏறினவன்ஒருவன் பூமியிலிருந்து கொண்டே மதம்பிடித்தயானையின் பேரில் ஏறியிருப்பதாக நினைக்கிற பைத்தியக்காரன் ஒருவன். அவனைப்பார்த்து இவன் என்பேரில் யானையை செலுத்து என்று சொன்னதினால் அவன் செலுத்துகிறதில்லை. ஏனெனில், அவனுடைய புத்தி விருத்தமாயில்லை, அதாவது ஸ்வாதீனத்தி லில்லாமலில்லை. இதுபோல் அத்வைதியும் த்வைதியுடன் விருத்தப்படுகிறதில்லை. பரமார்த்தமான பிரம்ம சேதனமே த்வைதவாதிகளின் ஆத்மாவாயிருப்பதால் அத்வைத பக்ஷம் யாதொரு விரோதத்தையும் அடைகிறதில்லை. ॥ 97 ॥

मायया भिद्यते ह्येतन्नान्यथाऽजं कथंचन ।
तत्वतो भिद्यमानेहि मर्त्यताममृतं व्रजेत् ॥ 98 ॥
மாயயா பித்யதே ஹ்யேதந்நாந்யதாऽஜம் கதஞ்சந ।
தத்வதோ பித்யமாநேஹி மர்த்யதாமம்ருதம் வ்ரஜேத் ॥ 98 ॥

एतत् ஏதத்= இந்த
अजं அஜம்=அத்வைதமானது
मायया மாயயா=மாயையால்
भिद्यते பித்யதே=பேதத்தை அடைகிறது
अन्यथाकथंचन அந்யதாகதஞ்சந=வேறொரு பிரகாரத்தாலும்
न ந= பேதத்தை அடைகிறதில்லை
तत्वत: தத்வத:=வாஸ்தவத்தில்
भिद्यमाने பித்யமாநே=பேதத்தை அடைந்தால்
अमृतं அம்ருதம்=மரணமற்ற அத்வைதமானது
मर्त्यतां மர்த்யதாம்=மரணதர்மத்தை
व्रजेत् வ்ரஜேத்= அடையும்.

தா-ம்:—த்வைதம் அத்வைதத்தின் காரியமானால் த்வைதமும் அதின் காரணமான அத்வைதம்போல் சத்தியமாக இருக்கவேண்டுமே. இந்த ஆக்ஷேபத்துக்கு உத்தரம். மந்த திருஷ்டியுள்ளவன் கண்ணுக்கு ஒரே சந்திரன் அநேக சந்திரன்கள் போலும் ரச்சு சர்ப்பாதிகள் போலும் ஒரே அத்வைதம் மாயையால் பலவிதமாகத் தோன்றுகிறது. வாஸ்தவத்தில் ஆத்மாவுக்கு அவயவமில்லாதபடியால் பேதத்துக்கு இடமில்லை. மண் கடம் முதலிய பல ரூபங்களை அடைவதுபோல் எதற்கு அவையவம் உண்டோ அதுதான் அவயவபேதத்தால் வெவ்வேறு பேதங்களை அடையக்கூடும். அவையவர்களில் [illegible] ஜனனமில்லாமலுமிருக்கிற ஆத்மா எந்த

விதத்திலும் பேதத்தை அடையமாட்டாது என்பது கருத்து. தோற்றும் பேதங்கள் எல்லாம் மாயா பலத்தால்தான். ஆத்மாவிடத்தில் பேதம் சம்பவிக்குமானால் மரணதர்மமில்லாதது அதற்கு விருத்தமான மரணதர்மத்துடன் கூடினதாக ஆகும். இது அக்கினி சீதளமாயிற்று என்று சொல்லுவதற்கு சமமாயிருக்கும். ஸ்வபாவம் விபரீத பாவத்தை அடைவது எந்த பிரமாணத்துக்கும் பொருந்ாது. ஆகையால் ஜனனமில்லாமலும் நாசமில்லாமலுமிருக்கிற ஆத்ம தத்வம் மாயையால் பேதத்தை அடைகிறதே தவிர வாஸ்தவத்திலில்லை. த்வைதம் அசத்தியமே. ।98॥

अजातस्यैव भावस्य जातिमिच्छन्तिवादिनः ।
अजातोह्यमृतोभावो मर्त्यतां कथमेष्यति ॥ 99 ॥

அஜாதஸ்யைவ பாவஸ்ய ஜாதிமிச்சந்திவாதிந: ।
அஜாதோஹ்யம்ருதோபாவோ மர்த்யதாம் கதமேஷ்யதி ॥99॥

वादिनः வாதிந:=பிரம்மவாதிகள்
अजातस्य அஜாதஸ்ய=பிறப்பற்ற
भावस्यएव பாவஸ்யஏவ=பதார்த்துக்கே, தத்துவத்துக்கே
जातिं ஜாதிம்=பிறப்பை
इच्छन्ति இச்சந்தி=இச்சித்துச் சொல்லுகிறார்கள்
अजातः அஜாத:=ஜனனமில்லாமலும்
अमृतः அம்ருத:=மரணமில்லாமலுமிருக்கிற
भावः பாவ:=தத்வம்
कथं கதம்=எப்படி
मर्त्यतां மர்த்யதாம்=மரணஸ்வபாவத்தை
एष्यति ஏஷ்யதி=அடையும்

தா-ம் :—உபநிஷத்துக்களை வியாக்கியானம் செய்திருக்கிற சில பிரம்மவாதிகளான உபாசகர்கள் வாஸ்தவத்தில் ஜனனமரண தர்மங்களற்றதான ஆத்மதத்வத்துக்கு, வாஸ்தவத்தில் உற்பத்தியிருப்பதாக பாவிக்கிறார்கள். ஜன்ம மரணமில்லாதது எப்படி மரணத்தை அடையக்கூடும். தன்ஸ்வபாவத்துக்கு விபரீதமான ஸ்வபாவத்தை ஒன்றும் ஒருக்காலத்திலும் அடையமாட்டாது. ॥ 99 ॥

न भवत्यमृतं मर्त्यं न मर्त्यममृतं तथा ।
प्रकृतेरन्यथाभावो नकथंचिद्भविष्यति ॥ 100 ॥

ந பவத்யம்ருதம் மர்த்யம் ந மர்த்யமம்ருதம் ததா ।
ப்ரக்ருதேரந்யதாபாவோ நகதஞ்சித்பவிஷ்யதி ॥ 100 ॥

अमृतं அம்ருதம்=மரணதர்மமில்லாதது
मर्त्यं மர்த்யம்=மரண[illegible]

न भवति ந ப⁴வதி=ஆகிறதில்லை
तथा ததா²=அப்படியே
मर्त्यं மர்த்யம்=மரண தர்மமுள்ளது
न अमृतं ந அம்ருதம்=மரணமில்லாததாக ஆகிறதில்லை
प्रकृतेः ப்ரக்ருதே:=ஸ்வபாவத்திற்கு
अन्यथाभावः அந்யதா²பா⁴வ:=வேறானபாவம்
कथंचित् கத²ஞ்சித்=எவ்விதத்திலும்
न भविष्यति ந ப⁴விஷ்யதி=உண்டாகமாட்டாது.

ச-பா :—உலகத்தில் மரிக்கும்படியிராதது மரணத்தை அடைகிறதில்லை. அப்படியே மரிக்கும்படியானது மரிக்காமலிருக்கிறதில்லை. ஸ்வபாவம் விபரீதபாவத்தை அடைந்தால் ஸ்வரூபமே நாசமாய் விடும். ஆகையால் அக்கினி சீதமாகாததுபோல் ஸ்வபாவம் வேறு விதமாக ஆகமாட்டாது. ॥ 100 ॥

स्वभावेनामृतो यस्य भावो गच्छति मर्त्यताम् ।
कृतकेनामृतस्तस्य कथं स्थास्यति निश्चलः ॥ 101 ॥

ஸ்வபா⁴வேநாம்ருதோ யஸ்ய பா⁴வோ க³ச்ச²தி மர்த்யதாம் ।
க்ருதகேநாம்ருதஸ்தஸ்ய கத²ம் ஸ்தா²ஸ்யதி நிஶ்சல: ॥ 101 ॥

यस्य யஸ்ய=எந்த வாதிக்கு
स्वभावेन ஸ்வபா⁴வேந=ஸ்வபாவத்தில்
अमृतः அம்ருத:=மரணதர்மமில்லாத
भावः பா⁴வ:=பாவம்
मर्त्यतां மர்த்யதாம்=மரணதர்மத்தை
गच्छति க³ச்ச²தி=அடைகிறதோ
तस्य தஸ்ய=அந்த வாதிக்கு
अमृतः அம்ருத:=மரணதர்மமில்லாதது
कृतकेन க்ருதகேந=ஜனனச்செய்கையால்
कथं கத²ம்=எப்படி
निश्चलः நிஶ்சல:=சலனமில்லாததாக
स्थास्यति ஸ்தா²ஸ்யதி=இருக்கும்

தா-ம் :—பிரம்மம் உற்பத்திக்குமுன் காரண ரூபத்தால் மரணதர்மமில்லாததாயிருந்தாலும், உற்பத்திக்குப் பிறகு காரிய ரூபமாய் மரண தர்மத்தை அடையக்கூடும். அப்போது ரூபபேதங்களை அடையக்கூடும். அப்போது முந்தினதற்கும் பிந்தினவைகளுக்கும் [illegible]

அடைகிறதாக சொல்லும் பக்ஷத்தில், உற்பத்திக்கு முன் மரணமில்லாதது என்று சொல்லுவது வியர்த்தம். எதற்கு ஜனனமுண்டோ அது சலனமற்றது என்று எப்படி சொல்லக்கூடும். ஆத்மாவுக்கு உற்பத்தி உண்டென்று சொல்லுகிறவர்களின் மதத்தில் ஜனனமில்லாத வஸ்து யாதொன்று மில்லை. எல்லாம் மரணதர்மத்துக்குள்பட்டது. ஆகையால் மோக்ஷத்துக்கே இடமில்லை, ॥ 101 ॥

भूततोऽभूततो वाऽपि सृज्यमाने समा श्रुतिः ।
निश्चितं युक्तियुक्तं च यत्तद्भवति नेतरम् ॥ 102 ॥

ஹூததோऽஹூததோ வாऽபி ஸ்ருஜ்யமானே ஸமா ஶ்ருதி: ।
நிஶ்சிதம் யுக்தியுக்தம் ச யத்தத்பவதி நேதரம் ॥ 102 ॥

भूतत: ஹூதத:=வாஸ்தவத்திலாவது
अभूततःवापि அஹூதத:வாபி=மாயையாலாவது
सृज्यमाने ஸ்ருஜ்யமானே=சிருஷ்டிக்கத்தகுந்த வஸ்துவில்
श्रुतिः ஶ்ருதி:=சுருதியானது
समा ஸமா=ஒரேகருத்துள்ளதாயிருக்கிறது
निश्चितं நிஶ்சிதம்=சுருதியால் நிச்சயிக்கப்பட்டதாயும்
युक्तियुक्तञ्च யுக்தியுக்தஞ்ச=யுக்தியுடன் கூடினதாயும்
यत् யத்=எது இருக்கிறதோ
तत् தத்=அதுவே
भवति பவதி=சுருதியின் அர்த்தமாக இருக்கிறது
नेतरत् நேதரத்=வேறொன்றும் சுருதியின் அர்த்தமல்ல.

ச-பா:—ஆத்மாகாரிய ரூபமாக உண்டாகாத பக்ஷத்தில் சிருஷ்டியைப் பிரதிபாலிக்கும் சுருதிகள் பிரமாணங்களாகமாட்டா வென்று நீ சொன்னது வாஸ்தவந்தான். ஆயினும் அதின் கருத்து வேறு என்பதை 94-வது மந்திரத்தில் முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஆனல் இப்போது தாற்பரியார்த்தத்தைக் குறித்து சிருஷ்டி சுருதிகளிலிருக்கிற பதங்களுக்கு முக்கியார்த்தம் விரோதப்படுகிறதென்கிற சங்கைக்கு உத்தரம் இந்த மந்திரத்தில் சொல்லப்படுகிறது. வாஸ்தவத்திலாவது மாயையாலாவது சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துவில் சுருதிக்கு ஒருவித கருத்தே தவிர வேறில்லை. தாற்பரியத்தை உத்தேசித்து சுருதிகளுக்கு அர்த்தம் சொல்லும் பக்ஷத்தில் முக்கியார்த்தம் தவறிப்போய் விடுகிறது. இப்படி ஆக்ஷேபிப்பது சரியல்லவே எனின் லோகத்தில் சத்திய சிருஷ்டியே பிரசித்தமாக இருக்கவில்லை. அப்படி பிரசித்தமாக இருந்தாலும் அதைப் பிரதி [illegible]

தாத்பரியமில்லை. எல்லாம் அவித்தையாலுண்டாகிறதே தவிர. सबाह्याभ्यन्तरो ह्यजः ஸபாஹ்யாப்யந்தரோ ஹ்யஜ: என்கிற சுருதிப்படி வாஸ்தவமல்ல. ஆகையால் சுருதியால் நிச்சயிக்கப்பட்டும் யுக்தியுடனும் எது இருக்கிறதோ அதுவே சுருதியின் அர்த்தமே தவிர மற்றதல்லவென்பது கருத்து. ॥102॥

नेह नानेति चाम्नायादिन्द्रो मायाभिरित्यपि ।
अजायमानो बहुधा मायया जायते तु सः ॥ 103 ॥

நேஹ நாநேதி சாம்நாயாதிந்த்ரோ மாயாபிரித்யபி ।
அஜாயமாநோ பஹுதா மாயயா ஜாயதே து ஸ: ॥ 103 ॥

इह இஹ=இந்த ஆத்மாவில்
नाना நாநா=அநேகம்
नेति நேதி=இல்லை என்று
अम्नायात् ஆம்நாயாத்=வேதத்தாலும்
इन्द्रः இந்த்ர:=பரமேசுவரன்
मायाभिः इत्यपि மாயாபி: இத்யபி=மாயையால் என்கிற சுருதி வசனத்தாலும்
अजायमानः அஜாயமாந:=எப்போதும் ஜனனமில்லாத
सः ஸ:=பரமேசுவரன்
मायया तु மாயயா து=மாயையாலேயே
बहुधा பஹுதா=அநேக விதமாய்
जायते ஜாயதே=உண்டாகிறான்

தா-ம்:—சுருதியால் எப்படி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதை சொல்லுகிறார். சிருஷ்டி வாஸ்தவமாயிருக்கும் பக்ஷத்தில், வஸ்துக்கள் எல்லாம் சத்தியமாயிருக்கவேண்டும். அவைகள் இல்லை என்று சொல்லும் பொருட்டு வேதவாக்கியங்கள் ஏற்பட்டிருக்கக் கூடாது. ஆனால் "அநேகமில்லை" என்கிற சுருதியைப்போல் த்வைதத்தை நிஷேதிக்கும்சுருதிகள் அநேகமாயிருக்கின்றன. பிராணசம்வாதம் போல் ஆத்மாவை அறியும் பொருட்டு சிருஷ்டி சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வாஸ்தவமல்ல, மேலும் இந்திரன் மாயையால் வெகுவிதமாகிறான் என்பதினாலும், வாஸ்தவமானது அத்வைதம் என்பதே நிச்சயப்படுகிறது, மாயா சப்தமானது பிரஞ்ஞையைக் கூறுகிறதே தவிர அவித்தையைக்கூறவில்லை. ஆகவே, மாயையால் இந்திரன் வெகு விதமாகிறானென்று சொன்னது எப்படி கூடும்.

இந்திரியங்களால் உண்டாகிற ஞானம் அவித்யா மயமானதை [illegible]

ன்னது சரியல்ல மேலும் "ஜன்மமில்லாதது வெகு விதமாய் ஜனிக்கிறது." என்கிற சுருதியாலும் மாயையால்தான் உற்பத்தி என்பது நிச்சயம். அக்கினிபாண்டத்தில் உஷ்ணத்வமும் சீதலத்வமும் பொருந்தாததுபோல், ஒரே ஆத்மாவினிடத்தில் ஜன்மமில்லாமையும், வெகு விதமான ஜன்மமும் பொருந்தா. ஆகையால் மாயையால் தான் ஜனனம் என்று சொல்லுவது யுக்தமே. ஆத்மா ஒன்றுஎன்று அறிகிறவர்களுக்கு சோகமுமில்லை, துக்கமுமில்லை என்றும், த்வைதி மிருத்யுவை அடைகிறான் என்றும் வெகு சுருதிகளில் பலன் சொல்லப் பட்டிருக்கிறது. இப்படி சிருஷ்டி பேதம் நிந்திக்கப்படுகிறது. 1(3

संभूतेरपवादाच्च संभवः प्रतिषिध्यते ।
कोन्वेनं जनयेदिति कारणंप्रतिषिध्यते ॥ 104 ॥

ஸம்பூ⁴தேரபவாதா³ச்ச ஸம்ப⁴வ: ப்ரதிஷித்⁴யதே ।
கோந்வேநம் ஜநயேதி³தி காரணம் ப்ரதிஷித்⁴யதே ॥ 104 ॥

संभूतेः ஸம்பூ⁴தே:=ஹிரணிய கர்ப்பரை.
अपवादात्च அபவாதா³த்ச=நிஷேதிக்கப்பட் டிருப்பதாலும்
संभवः ஸம்ப⁴வ:=காரியங்கள்
प्रति षिध्यते ப்ரதிஷித்⁴யதே=பிரதிஷேதிக்கப்படுகின்றன
एनं ஏநம்=இந்த ஜீவனை
कः க:=எவன்
जनयेत् ஜநயேத்=உண்டு பண்ணுவான்
इति இதி=என்பதினால்
कारणं காரணம்=காரணம்
प्रतिषिध्यते ப்ரதிஷித்⁴யதே=பிரதிஷேதிக்கப்படுகிறது ॥103॥

தா-ம் :—ஈசாவாசியத்தில் சம்பூதி அதாவது ஹிரணிய கர்ப்பத்தை உபாசிக்கிறவர்கள் காடாந்தகாரத்தை பிரவேசிக்கிறதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் சம்பூதி உபாசனை நிந்திக்கப்படுவதால் அதன் காரியமான சகலமும் நிஷேதிக்கப்பட்டதாக ஆகிறது. சம்பூதி வாஸ்தவத்திலிருந்தால் அது நிந்திக்கப்பட்டிருப்பதால் வாஸ்தவத்தில் அது இல்லை என்பது சித்தம். மேலும் அவித்தியாகாரியமான ஜீவன் அவித்தை நீங்கின வுடன் தன் ஸ்வரூபத்தைச் சேர்ந்து விடுகிறது. அவித்தையால் ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பம் தோன்றுகிறது. ரச்சு அறியப்பட்ட மாத்திரத்தில் சர்ப்பம் நீங்கி விடுகிறது. இதை மறுபடியும் உண்டுபண்ணயாரால் முடியும். இது போல் ஜீவனை உண்டு பண்ண யாரால் முடியும்.' இந்த கேள்வியால் [illegible] 104 [illegible]

सएष नेति नेतीति व्याख्यातं निह्नुतेयतः ।
सर्वमग्राह्यभावेन हेतुनाऽजं प्रकाशते ॥ 105 ॥ (26)

ஸஏஷநேதி நேதீதி வ்யாக்யாதம் நிஹ்நுதேயத꞉ ।
ஸர்வமக்ராஹ்யபாவேந ஹேதுநாऽஜம்ப்ரகாஶதே ॥10॥

यतः யத꞉=யாதொரு காரணத்தால்

एषः ஏஷ꞉=இந்த ஆத்மா

इति न इति न இதிநஇதிந=இது அன்று இது அன்று

इति இதி=என்று

व्याख्यातं வ்யாக்யாதம்=கீழே சொல்லப்பட்ட

सर्वं ஸர்வம்=சமஸ்தத்தையும்

निह्नुते நிஹ்நுதே=நிஷேதிக்கிறதோ

अतः அத꞉=ஆனதால்

अग्राह्यभावेन हेतुना அக்ராஹ்யபாவேந ஹேதுநா =கிரகிக்க முடியாது என்கிற காரணத்தால்

अजं அஜம்=உற்பத்தியில்லாத பிரம்மம்

प्रकाशते ப்ரகாஶதே=பிரகாசிக்கிறது.

ச - பா:—இப்போது சொல்லப்போகிற காரணத்தாலும் துவைதம் இல்லை என்று கூறுகிறார். சமஸ்த விசேஷங்களின் நிஷேதத்தால் பிரதிபாதிக்கப்படும் ஆத்மா பிரயாசத்தால் அறியத்தகுந்தது என்று என்னும் சுருதியானது. அந்தப் பிரம்மத்தை அறிய வேறு உபாயம் சொல்லவேண்டுமென்கிற இச்சையால் வியாக்கியானம் செய்ததையெல்லாம் நிஷேதிக்கிறது. நேதி நேதி என்கிற சுருதியானது ஆத்மாவை அதிர்சியம் என்று காண்பித்து, உபாசியம் போல் திருசியமாக ஆய்விடும் என்கிற சங்கை உண்டாகாமல் நிஷேதிக்கிறது. உபாசியம் பிரம்மம்தான் திருசியமென்று தெரிந்து கொண்டவனுக்கு நித்தியசுத்தமாகிய ஆத்மதத்துவம் தானே பிரகாசிக்கிறது. ॥105॥

सतो हि मायया जन्म युज्यते नतुतत्वतः ।
तत्वतो जायते यस्य जात तस्य हि जायते ॥ 106 ॥ (27)

ஸதோஹிமாயயாஜந்ம யுஜ்யதே நதுதத்வத꞉ ।
தத்வதோஜாயதேயஸ்ய ஜாதம் தஸ்யஹிஜாயதே ॥ 106 ॥

सतः हि ஸத꞉ஹி=சத்தான பரமாத்மாவுக்கு

जन्म ஜந்ம=ஜன்மம்

मायया மாயயா=[illegible]

युज्यते யுஜ்யதே=கூடும்
तत्वतः தத்வதஃ=வாஸ்தவத்தில்
नतु நது=கூடாது
यस्य யஸ்ய=எவனுடைய மதத்தில்
तत्वतः தத்வதஃ=வாஸ்தவத்தில்
जायते ஜாயதே=ஜனிக்கிறதோ
तस्य தஸ்ய=அவனுடைய மதத்தில்
जातं ஜாதம்=ஜனித்ததானது
जायते ஜாயதே=மறுபடியும் ஜனிக்கும்

தா - ம்:—அநேக சுருதிகளால் ஆத்மதத்துவம் ஒன்றைத்தவிர வேறொன்று மில்லையென்று நிச்சயிக்கப்பட்ட ஆத்மதத்துவத்தையே யுக்தியாலும் நிச்சயிக்கிறார். ஆத்மா அக்கிராஹ்யமானால் அஸத்தாயிருக்கக்கூடுமே யெனில் அது சரியன்று. ஆத்மாவின் காரியங்களை நாம் நன்றாய்ப் பார்க்கிறோம். ஒரு மாயாவியின் மாயா காரியங்களைப்பார்த்து அவைகளைச் செய்கிற மாயாவி ஒருவன் இருக்கவேண்டும் என்று நாம் ஊஹிக்கிறதுபோல் சிருஷ்டியாதிகளைப்பார்த்து அவைகளுக்கு அதிர்ஷ்டானமாய் சத்தியமானது ஒன்று இருக்கவேண்டும் என்று நாம் ஊஹிக்கலாம்ஒரு வித்தையாடி இருந்துதான் மாயையில் யானை முதலியவைகளைக் காட்டவேண்டும். இதுபோலவே மாயையால்தான் இந்தஜகத்துண்டாயிருக்கவேண்டும். இதற்கு யாதொரு காரணமுமிராது என்று சொல்லக்கூடாது காரணமன்றியில் யாதொன்றும் (உண்டாக மாட்டாது. ஆத்மாவினிடத்தி னின்றும் வாஸ்தவத்தில் யாதொன்றும் உண்டாகிறதில்லை. இரச்சு சர்ப்பாகாரத்தை தரிக்கிறதுபோல் சத்தே மாயையால் அநேக ரூபங்களை தரிக்கிறதுபோல் காணப்படுகிறது. வாஸ்தவத்தில் அது கிரகிக்கக்கூடிய வஸ்துவல்ல மேலும் அஜன்மாவான ஆத்மா ஜனிக்கிறதாக சொல்லுவது பூர்வோத்திர விருத்தம். ஆத்மாவுக்கு ஜன்மம் இருக்கிறதாகச் சொல்லும் பக்ஷத்தில் மறுபடியும் ஜனிக்கிறதாகச் சொல்லவேண்டும். அப்போது அனவஸ்தா தோஷம் சம்பவிக்கும் ஆகையால் ஜனனமில்லாத ஆத்மதத்துவமே சித்தியாகிறது. ॥106॥

असतो मायया जन्म तत्वतो नैव युज्यते ।
वंध्यापुत्रो न तत्वेन मायया वाऽपि जायते ॥ 107 ॥

(28)

[illegible]
[illegible]

असतः அஸத꞉=அசத்தானதற்கு
मायया மாயயா=மாயையாலும்
तत्वतः தத்வத꞉=வாஸ்தவத்திலும்
जन्म ஜந்ம=உற்பத்தி
नैवयुज्यते நைவயுஜ்யதே=கூடாது
वंध्यापुत्रः வந்த்யாபுத்ர꞉=மலடிமகன்
तत्वेन தத்வேந=வாஸ்தவத்திலாவது
माययावापि மாயயாவாபி=மாயையாலாவது
नजायते நஜாயதே=பிறக்கிறதில்லை.

தா-ம்:—சிலர் சகலத்துக்கும் அசத்துத்தான் காரணம் என்று சொல்லுகிறார்கள். வாஸ்தவத்திலாவது மாயையாலாவது அசத்தினின்றும் சத் உண்டாகும் என்று காட்ட அவர்களால் முடியாது. மலடிமகன் என்பது பாவனையே தவிர வாஸ்தவத்தில் ஜனிக்கமாட்டான் மாயையாலும் உண்டாகமாட்டான், ஆகையால் இந்த அசத்வாதம் சுத்த பிசகு. ॥ 107 ॥

यथा स्वप्ने द्वयाभासं स्पन्दतेमाययामनः ।
तथाजाग्रद्द्वयाभासं स्पन्दतेमाययामनः ॥ 108 ॥

யதாஸ்வப்நே த்வயாபாஸம்ஸ்பந்ததே மாயயாமந꞉ ।
ததாஜாக்ரத் த்வயாபாஸம் ஸ்பந்ததே மாயயாமந꞉ ॥ 108 ॥

मनः மந꞉=மனது
यथा யதா=எப்படி
स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்நத்தில்
मायया மாயயா=மாயையால்
द्वयाभासं த்வயாபாஸம்=த்வைதாபாஸ ரூபமாய்
स्पन्दते ஸ்பந்ததே=ஸ்புரிக்கிறதோ
तथा ததா=அப்படி
जाग्रत् ஜாக்ரத்=ஜாக்கிரத் காலத்தில்
मनः மந꞉=மனது
मायया மாயயா=மாயையால்
द्वयाभासं த்வயாபாஸம்=கிராஹிய கிராஹகங்களாய்
स्पन्दते ஸ்பந்ததே=ஸ்புரிக்கிறது.

தா-ம்:—சத்வஸ்துவுக்கே மாயையால் உற்பத்தி உண்டாகும் என்பதைக் காட்டுகிறார். ரச்சுவிடத்தில் கற்பிக்கப்பட்ட சர்ப்பம்
[illegible]

சத்தாகவே யிருக்கிறது. ஸ்வபாவத்தில் மனது ஒன்றுனாலும் கிரகிக்கப்பட்ட விஷயங்களாகவும் கிரகிக்கிறவனாயும் காணப்படுகிறது. இதுபோல் ஜாக்கிராவஸ்தையிலும் இதே காரணத்தால் மனது இரண்டுவிதமாக காணப்படுகிறது. ॥108॥

अद्वयंचद्वयाभासं मनः स्वप्ने नसंशयः ।
अद्वयंचद्वयाभासं तथाजाग्रन्नसंशयः ॥ 109 ॥

𑌅𑌦𑍍𑌵𑌯𑌂𑌚𑌦𑍍𑌵𑌯𑌾𑌭𑌾𑌸𑌂 𑌮𑌨𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ।
𑌅𑌦𑍍𑌵𑌯𑌂𑌚𑌦𑍍𑌵𑌯𑌾𑌭𑌾𑌸𑌂 𑌤𑌥𑌾𑌜𑌾𑌗𑍍𑌰𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ 109 ॥

अद्वयञ्च 𑌅𑌦𑍍𑌵𑌯𑌞𑍍𑌚 = அத்வயமான
मनः 𑌮𑌨𑌃 = மனது
स्वप्ने 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 = ஸ்வப்நத்தில்
द्वयाभासं 𑌦𑍍𑌵𑌯𑌾𑌭𑌾𑌸𑌂 = இரண்டு விதமாக காணப்படுகிறது
न संशयः 𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 = சந்தேகமில்லை
तथा 𑌤𑌥𑌾 = அப்படியே
जाग्रत् 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑍍 = ஜாக்கிராவஸ்தையிலும்
मनः 𑌮𑌨𑌃 = மனது
अद्वयञ्च 𑌅𑌦𑍍𑌵𑌯𑌞𑍍𑌚 = அத்வைதமானாலும்
द्वयाभासं 𑌦𑍍𑌵𑌯𑌾𑌭𑌾𑌸𑌂 = இரண்டு விதமாக காணப்படுகிறது
न संशयः 𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 = ஸந்தேகமில்லை

தாம் :—ஆனால் த்வைதம் ஸ்வீகரிக்கப்படுகிறதே வெனில் இல்லை என்று நிஷேதிக்கிறார். ரச்சு ரூபமாக சர்ப்பம் காணப்படுவதுபோல், வாஸ்தவத்தில் அத்வைத ஆத்ம ரூபமாயிருக்கிற மனது ஸ்வப்நத்தில் அனேக ரூபங்களை தரிக்கிறது. ஸ்வப்நத்தில் பார்க்கப்பட்ட யானை முதலிய விஷயங்களும், அவைகளை அறியும் சக்ஷுராதிகளும் மனதைத்தவிர வேறல்ல வென்பதில் சந்தேகமில்லை. இதுபோல், ஜாக்கிராவஸ்தையிலும் அத்வைத ரூபமனதே அநேக ஆகாரங்களை தரிக்கிறது. இதில் யாதொரு சந்தேகமில்லை. பாரமார்த்திகமான ஞானமாத்திரமே எப்போதும் நிச்சயமாக இருக்கிறது. ॥ 109 ॥

௮௦

मनोदृश्यमिदं द्वैतं यत्किंचित्सचराचरम् ।
मनसोह्यमनीभावे द्वैतंनैवोपलभ्यते ॥ 110 ॥

𑌮𑌨𑍋𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 ।
𑌮𑌨𑌸𑍋𑌹𑍍𑌯𑌮𑌨𑍀𑌭𑌾𑌵𑍇 𑌦𑍍𑌵𑍈𑌤𑌂𑌨𑍈𑌵𑍋𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 ॥110

मनोदृश्यं மநோத்ருஶ்யம் = மனதால் பார்க்கக்கூடிய
यत् किंचित् யத்கிஞ்சித் = யாதொரு
सचराचरम् ஸசராசரம் = சராசர சகிதமான
इदं இதம் = இந்த
द्वैतं த்வைதம் = த்வைதம் உண்டோ
(सर्वं मनइति प्रतिज्ञा ஸர்வம் மநஇதி ப்ரதிஜ்ஞா = எல்லாம் மனது என்று பிரதிஞ்ஞை)
मनः மந꞉ = மனது
अमनोभावे அமநோபாவே = நிரோதமான ளவில்
द्वैतं த்வைதம் = த்வைதம்
नैवोपलभ्यते நைவோபலப்யதே = பார்க்கப்படுகிறதில்லை

ரச்சுவினிடத்தில் சர்ப்பம் கற்பிக்கப்படுவதுபோல் த்வைதமெல்லாம் மனதின் கற்பனையே என்பதற்குப் பிரமாணம். அன்வயவியதிரேகமான அனுமானத்தைச் சொல்லுகிறார். மனது இருக்கும்போது ஸ்தாவரஜங்கமாத்மகமான பிரபஞ்சமெல்லாம் பார்க்கப்படுகிறது. மனதில்லாதபோது ஒன்றும் பார்க்கப்படுகிறதில்லை; த்வைதம் இருக்கிறதில்லை. ரச்சுவில் லயமடைந்த சர்ப்பம் பார்க்கப்படாததுபோல், விவேகத்தாலும் வைராக்கியத்தாலும் சமாதியிலும் சுஷுப்தியிலும் மனது நிரோதமடைந்தவுடன் த்வைதம் பார்க்கப்படாமல் போகிறது. சமாதி சுஷுப்திகளில் த்வைதம் இல்லாதபடியால் த்வைதம் அசத் என்பது சித்தம். ॥ 110 ॥

आत्मसत्यानुबोधेन नसंकल्पयते यदा ।
अमनस्तां तदा याति ग्राह्याभावे तदग्रहम् ॥ 111 ॥
ஆத்மஸத்யாநுபோதேந நஸங்கல்பயதே யதா ।
அமநஸ்தாம் ததாயாதி க்ராஹ்யாபாவே ததக்ரஹம் ॥ 111 ॥ (32)

आत्मसत्यानुबोधेन ஆத்மஸத்யாநுபோதேந = மிருத்திகை (மண்) போல் ஆத்மாவே சத்தியம் என்பதாய் சாஸ்திர ஆசாரிய உபதேசத்துக்குப் பிறகு யாதொரு அறிவுண்டாகிறதோ அந்த அறிவினால்.

यदा யதா = எப்போது.
(मनः மந꞉ = மனது)
न संकल्पयते நஸங்கல்பயதே = சங்கற்பிக்கவில்லையோ
விருந்து

ग्राह्याभावे க்ராஹ்யாபாவே=கிரகிக்கப்படும் வஸ்துக்களில்லாவி டத்தில்

तदग्रहं ததக்ரஹம்=கிரகிக்கும் கற்பனையுமற்ற மனது

अमनस्तां அமநஸ்தாம்=மனமில்லை என்கிற பாவத்தை

याति யாதி=அடைகிறது.

தாத்பர்யம் :—மனது எப்படி இல்லாமல் போகிறது என்பதைச் சொல்லுகிறார். ஆத்மதத்வம் அறிந்த மாத்திரத்தில் மனது யாதொன்றையும் சங்கற்பிக்கிறதில்லை. கிரகிக்கும்படியான விஷயங்களை உத்தேசித்து கிரகிக்கிற மனது ஏற்படுகிறது. விஷயங்களில்லாமல் போனால் கிரகிக்கும் மனதுதான் எப்படியிருக்கும். கட்டையில்லாவிட்டால் அக்கினி எப்படி ஜ்வலிக்கும்.

अकल्पकमजं ज्ञानं ज्ञेयाभिन्नं प्रचक्षते ।
ब्रह्म ज्ञेयमजं नित्यमजेनाजं विबुध्यते ॥ 112 ॥

அகல்பகமஜம் ஜ்ஞாநம் ஜ்ஞேயாபிந்நம் ப்ரசக்ஷதே ।
ப்ரஹ்மஜ்ஞேயமஜம் நித்யமஜேநாஜம் விபுத்யதே ॥ 112 ॥

(ब्रह्मविदः ப்ரஹ்மவித꞉=பிர்ம்மவித்துக்கள்)

अकल्पकं அகல்பகம்=சர்வ கற்பனையற்றதாயும்

अजं அஜம்=ஜன்மரகிதமாயிருக்கிற

ज्ञानं ஜ்ஞாநம்=சேதனமாத்திரத்தை

ज्ञेयाभिन्नं ஜ்ஞேயாபிந்நம்=பாரமார்த்திக சத்பிர்ம்ம ரூபமான ஞேயத்துக்கு அபின்னமாக

प्रचक्षते ப்ரசக்ஷதே=சொல்லுகிறார்கள்

ब्रह्म ப்ரஹ்ம=பிரம்மம்

ज्ञेयं ஜ்ஞேயம்=அறியத்தக்க வஸ்து

अजं அஜம்=பிறப்பில்லாதது

नित्यं நித்யம்=நித்தியமானது

अजेन அஜேந=ஜனனமில்லாத ஞானத்தால்

अजं அஜம்=ஜனனமில்லாத ஞேயத்தை அதாவது ஆத்மதத்வத்தை

विबुध्यते விபுத்யதே=அறிகிறான்.

மனது முதலிய த்வைதம் இல்லாதபக்ஷத்தில் எதனால் ஆத்மதத்வத்தை அறியக்கூடும்? " நித்திய ஞானம் அநந்தம் பிரம்

மனுமிருக்கிற ஞானமே பாரமார்த்திக சத்தாகிய பிரம்மரூப ஞேயத்துக்கு அன்னியமன்றென்று பிரம்மவேத்தாக்கள் சொல்லுகிறார்கள். அக்கினியும் உஷ்ணமும் அபின்னமாயிருப்பதுபோல ஞேயமான பிரம்மமும் ஞானமும் அபின்னம். சூரியன் தன்னை அறிவதற்கு வேறு பிரகாசத்தை அபேக்ஷிக்காததுபோல், பிரம்மம் தன்னை அறிவதற்கு (ஞானாந்தரத்தை) அபேக்ஷிக்கிறதில்லை. பிரம்மமே ஞான ஸ்வரூபம்.

निगृहीतस्य मनसो निर्विकल्पस्य धीमतः ।
प्रचारः स तु विज्ञेयः सुषुप्तेऽन्यो न तत्समः ॥ 113 ॥

நிக்ருஹீதஸ்ய மநஸோ நிர்விகல்பஸ்ய தீமத: ।
ப்ரசார: ஸ து விஜ்ஞேய: ஸுஷுப்தேऽந்யோ ந தத்ஸம: ॥ 113॥

निगृहीतस्य நிக்ருஹீதஸ்ய = நிக்ரஹிக்கப்பட்டதாயும்
निर्विकल्पस्य நிர்விகல்பஸ்ய = கற்பனைகளற்றதாயுமிருக்கிற
धीमतः தீமத: = விவேகியினுடைய
मनसः மநஸ: = மனதின்
प्रचारः ப்ரசார: = பிரகாரமானது
सः ஸ: = அது
विज्ञेयः விஜ்ஞேய: = அறியத்தக்கது
सुषुप्ते ஸுஷுப்தே = சுஷுப்தியிலிருக்கிற பிரகாரத்துக்கு
अन्यः அந்ய: = இந்த மனதில் பிரகாரம் வேறு
न तत्समः ந தத்ஸம: = அதற்குச் சமானமாயில்லை.

தா-ம் :—ஆத்மதத்வமறியப்பட்ட மாத்திரத்தில் சகல சங்கற்பங்களும் அற்று "பாஹிய விஷயங்களில்லாமற் போய் கட்டையில்லாத நெருப்பைப்போல் மனதும் சாந்தமாய் அடங்கிப் போகிறது என்றும், அப்படிப் போவதால் த்வைதம் இல்லாமற் போகிறதென்றும் சொல்லப்பட்டது. இப்படி சங்கற்பமற்றதாயும், அடங்கிப்போனதாயுமிருக்கிற மனதின் ஸ்திதி யோகாப்பியாஸிகளால் வெகு ஜாக்கிரதையாய் அறியத்தக்கது. சுஷுப்தியிலும் மனதின் விருத்திகளும் அடங்கியிருப்பதால் இந்த அவஸ்தைக்கும் சுஷுப்தி அவஸ்தைக்கும் வித்தியாஸமில்லையே யெனில் சுஷுப்தியில் துக்க பலத்துக்கு பீஜமான அவித்தையும் அநேக துக்க வாஸனா பீஜங்களும் லயமடைந்திருந்தாலும் நாசமாகாமலிருக்கின்றன. ஸமாதியவஸ்தையிலோ சகல துக்க பீஜங்களும் நாசமடைந்து [illegible] இருக்கின்றன.

ஆகையால் ஜாக்ரதவஸ்தையிலும் சுஷுப்தியிலும் மனதின் செயல் வெவ்வேறாயிருக்கிறதே தவிர சமமாயிருக்கவில்லை. ॥113॥

लीयते हि सुषुप्ते तन्निगृहीतं नलीयते ।
तदेव निर्भयं ब्रह्मज्ञानालोकं समन्ततः ॥ 114 ॥

லீயதே ஹி ஸுஷுப்தே தந்நிக்ருஹீதம் நலீயதே ।
ததேவ நிர்பயம் ப்ரஹ்ம ஜ்ஞாநாலோகம் ஸமந்தத: ॥ 114 ॥

तत् தத் = மனது
सुषुप्ते ஸுஷுப்தே = சுஷுப்தியில்
लीयते हि லீயதே ஹி = அஞ்ஞானத்தில் லயமடைந்து விடுகிறது.
निगृहीतं நிக்ருஹீதம் = நிக்கிரகிக்கப்பட்ட மனது
नलीयते நலீயதே = லயமடைகிறதில்லை
तदेव ததேவ = அந்த மனதே
निर्भयं நிர்பயம் = பயமற்ற
ब्रह्म ப்ரஹ்ம = பிர்ம்மம்
समन्ततः ஸமந்தத: = எங்கும்
ज्ञानालोकं ஜ்ஞாநாலோகம் = ஞானமாகிற பிரகாசஸ்வரூபம்.

தா - ம்:—சுஷுப்தியிலும் சமாதியிலும் மனதின் வித்தியாஸம் சொல்லப்பட்டது. அதற்குக் காரணமென்னவெனில், சுஷுப்தியில் மனது அஞ்ஞானமாகிற பீஜத்தில் அடங்கிப்போகிறது. சமாதியில் அஞ்ஞானத்தை மனது அடைகிறதில்லை. சமாதியில் மனதுக்கு விஷய பாவங்களில்லாதபடியால் பரபிரம்மத்தையே அடைகிறது. ஆகையால் மனது நிர்ப்பயமான பிரம்மமாயிருக்கிறது. ஏனெனில், பயத்துக்குக் காரணமான த்வைதம் யாதொன்றுமில்லை. மேலும் எங்கும் ஏகரசமான ஸ்வரூபமாயிருக்கிறது. ॥114

अजमनिद्रमस्वप्नमनामकमरूपकम् ।
सकृद्विभातं सर्वज्ञं नोपचारः कथंचन ॥ 115 ॥

அஜமநித்ரமஸ்வப்நமநாமகமரூபகம் ।
ஸக்ருத்விபாதம் ஸர்வஜ்ஞம் நோபசார: கதஞ்சந ॥ 115 ॥

(ब्रह्म ப்ரஹ்ம = பிரம்மம்)
अज அஜம் = ஜன்மகாரணமில்லாதபடியால் அஜமாயிருக்கிறது
अनिद्रं அநித்ரம் = நித்திரையில்லாதது

अस्वप्नं அஸ்வப்நம்=ஸ்வப்நமில்லாதது
अनामकं அநாமகம்=நாமமில்லாதது
अरूपकं அரூபகம்=ரூபமில்லாதது
सकृद्विभातं ஸக்ருத்விபாதம் = எப்போதும் பிரகாசரூபம்
सर्वज्ञं ஸர்வஜ்ஞம்=ஸர்வஜ்ஞமானது
कथंचन கதஞ்சந=எந்தப்பிரகாரத்திலும்
उपचारः न உபசார: ந = செய்ய வேண்டியது யாதொன்று மில்லை.

தா—ம்:—பிரம்மத்தையே வேறு விதமாய் நிரூபிக்கிறார். ரச்சுவில் சர்ப்பம் தோன்றுவதற்குக் காரணம் அவித்தை ஆகையால் அவித்தையாகிற நிமித்தத்தினின்றும் சர்ப்பம்ஜனிக்கிறதாக சொல்லுகிறோம். ஆத்ம தத்துவத்தை அறிந்த மாத்திரத்தில் அவித்தை நீங்கிப்போகிறது. இவ்விதமாய் ஜன்மத்துக்குக் காரணமாயிருக்கிற அவித்தையில்லாமல் இருப்பதால் பிரம்மம் அஜன்மாவாயிருக்கிறது. அவித்தியா ரூபமான மாயாநித்திரை யில்லாதபடியாலும் அத்வைத ஞானமாகிற விழிப்பிலேயே யிருப்பதாலும் பிரம்மம் நித்திரையற்றதாகச் சொல்லப்படுகிறது. அப்படியே ஸ்வப்நமற்றதாயு மிருக்கிறது. ரச்சுவை அறியாத காலத்தில் சர்ப்பத்தின் நாமரூபங்கள் விளங்குகின்றன. ரச்சுவை அறிந்த மாத்திரத்தில் இவைகள் நீங்கிப்போகின்றன. இதுபோல், பிரம்மத்தை அறிந்த மாத்திரத்தில் நாமரூபங்கள் அற்றுப்போவதால் பிரம்மம் நாமரூப மற்றதாயிருக்கிறது. அவித்தையாகிற அந்தகாரம் இல்லாதபடியால் பிரம்மம் எப்போதும் சர்வரூபமாயும் ஞானஸ்வரூபமாயும் இருக்கிறது. இப்படிப்பட்ட பிரம்மத்தை அறிய சமாதி முதலிய வியவஹாரங்கள் யாதொன்றும் வேண்டியதில்லை. அஞ்ஞானிகள் ஆத்மஸ்வரூபத்துக்கு வேறான சித்தைகாக்கிரியம் முதலியவைகளை அனுஷ்டிக்கிறார்கள். அவித்தை நீங்கின விடத்தில் செய்யவேண்டியது யாதொன்றுமில்லை. வியவஹாரங்கள் எல்லாம் அவித்தியா தசையில் ஏற்படுகின்றன. ஞானம் ஜனித்த தசையில் ஒரு வியவஹாரத்துக்கு மிடமில்லை. ஆனால் அத்தசையில் காணப்படும் வியவஹாரங்கள் எல்லாம் ஆபாசரூபங்களே. 115

सर्वाभिलापविगतः सर्वचिन्तासमुत्थितः ।
सुप्रशान्तः सकृज्ज्योतिः समाधिरचलोऽभयः ॥ 116 ॥
ஸர்வாபிலாபவிகத: ஸர்வசிந்தாஸமுத்தித: ।

सर्वाभिलापविगत: ஸர்வாபிலாபவிகத: = சமஸ்தமான வசனங்களும் அதீதமானது

सर्वचिन्तासमुत्थित: ஸர்வசிந்தாஸமுத்தித: = சிந்தனைகளினின்றும் வெளிப்பட்டது

सुप्रशान्त: ஸுப்ரசாந்த: = வெகுசாந்தமானது

सकृज्ज्योति: ஸக்ருஜ்ஜ்யோதி: = எப்போதும் பிரகாச ஸ்வரூபமானது

समाधि: ஸமாதி: = சமாதியால் அறியத்தகுந்தது

अचल: அசல: = கிரியாரகிதம்

अभय: அபய: = பயமற்றது.

சு-பா :—நாமமற்றதாகச் சொன்ன விஷயம் இன்னும் தெளிவாக்கப்படுகின்றது. பிரம்மாநுபவித்துவான் வாக்கு முதலிய சகல பாஹ்யகரணங்களில்லாதவன்; அப்பிராண: அமனா: என்கிற சுருதிப்படி அவன் அந்தக்கரணமில்லாதவன்; விஷயங்களில்லாதபடியால் எப்போதும் சாந்தமானவன். ஆத்மா சைதன்னிய ஸ்வரூபமாக இருப்பதால் எப்போதும் பிரகாசஸ்வரூபம். சமாதியிலுண்டான ஞானத்தால் அறியத்தகுந்ததாயிருப்பதால் சமாதிரூபம். அல்லது இந்த பிரம்மத்தினிடத்தில் ஜீவனும் அவனுடைய உபாதியுமிருப்பதால் அது சமாதி என்று சொல்லப்படுகின்றது. யாதொரு விகாரமுமில்லாதது. கிரியையில்லாதபடியால் பயமற்றது. ॥116॥

ग्रहो न तत्र नोत्सर्गश्चिन्ता यत्र न विद्यते ।
आत्मसंस्थं तदा ज्ञानमजाति समतां गतम् ॥ 117 ॥

க்ரஹோ ந தத்ர நோத்ஸர்கச்சிந்தா யத்ர ந வித்யதே ।
ஆத்மஸம்ஸ்தம் ததா ஜ்ஞாநமஜாதி ஸமதாம் கதம் ॥ 117 ॥

यत्र யத்ர = எந்த பிரம்மத்தினிடத்தில்

चिन्ता சிந்தா = யாதொரு சிந்தையும்

नाविद्यते நவித்யதே = இல்லையோ

तत्र தத்ர = அந்த பிரம்மத்தினிடத்தில்

ग्रह: க்ரஹ: = கிரகணமும்

न ந = இல்லை

उत्सर्ग: உத்ஸர்க: = உத்ஸர்ச்சனமும்

न ந = இல்லை

आत्मसत्यानुबोधः ஆத்மஸத்யானுபோத:=அப்படிப்பட்ட ஆத்மாவே சத்தியமென்று ஞானம் உண்டாகிறதோ

तदा ததா=அப்போது

आत्मसंस्थं ஆத்மஸம்ஸ்தம்=ஆத்மாவிலேயிருக்கிற

ज्ञानं ஜ்ஞானம்=ஞானஸ்வரூபனாகவும்

अजाति அஜாதி=ஜன்ம மற்றவனாகவும்

समतांगतं ஸமதாம் கதம்=சமத்துவத்தை அடைந்தவனாகவும்

भवति பவதி=ஆகிவிடுகிறான்.

ச-பா :—பிரம்மம் விகாரமற்றதாயும் நிரவயவமாயு மிருப்பதால் எடுத்துக்கொள்ளும்படி யானது ஒன்றுமில்லை. கொடுத்துவிடும்படியானதும் ஒன்றுமில்லை. மனோ வியாபாரத்துக்கே இடமில்லை. ஏகரஸமான ஞானமட்டு மிருக்கிறதே தவிர வேறுயாதொன்று மில்லை. எப்போது ஆத்மஞான முண்டாகிறதோ அப்போது விஷயமிராதபடியால் அக்கினியாயிருக்கிற உஷ்ணம் போல் ஆத்மாவிலேயே இருக்கிற ஞானஸ்வரூபனாகவும் ஜன்மமற்றவனாகவும் பரமசாமியத்தை அடைந்தவனாகவும் ஆகிறான் ஆத்மஞானமடைந்தவனுக்கு மற்ற எல்லாஞானமும் அற்பமாய் விடுகிறது. தத்துவஞானத்தை அறிந்தவன் கிருதகிருத்தியப் பிராமணனாய் விடுகிறான் என்பது கருத்து.

இந்த பிரகிரணத்தில் முதலில் अतोवक्ष्यामि அதோவக்ஷ்யாமி= என்று சொன்னதை அனுசரித்து அந்த அர்த்தமே இப்போது சொல்லி முடிக்கப்பட்டது. ॥117॥

अस्पर्शयोगो वै नाम दुर्दर्शः सर्वयोगिभिः ।
योगिनो बिभ्यति ह्यस्मादभये भयदर्शिनः ॥ 118 ॥

(39)

அஸ்பர்சயோகோ வை நாம துர்தர்ச: ஸர்வயோகிபி: ।
யோகினோ பிப்யதி ஹ்யஸ்மாதபயே பயதர்சின: ॥ 118 ॥

अस्पर्शयोगो वै नाम அஸ்பர்சயோகோ வை நாம=வர்ணாசிரமாதி சம்பந்தமற்ற யோகமே பிரசித்தம்

सर्वयोगिभिः ஸர்வயோகிபி:=சகல யோகிகளாலும்

दुर्दर्शः துர்தர்ச:=வெகு வருத்தத்துடன் பார்க்கத்தகுந்தது.

„ अभये அபயே=பயமற்ற ஆத்மஞானத்தில்

भयदर्शिनः பயதர்சின:=பயத்தை ... யோகி,

अस्मात् அஸ்மாத்=மேற் சொன்ன ஆத்மஞானத்தினின்றும்

बिभ्यति பிப்யதி=பயப்படுகிறார்கள்.

தா - ம்:—சச்சிதானந்த ரூபமான பிரம்மம் தத்வஞானத்தால் அடையப்படுமானாலும் மூடர்கள் அதற்கு ஏற்பட்ட யோகத்தில் பிரவேசிக்கிறதில்லை. வர்ணாசிரமாதிகளின் தர்மா தர்மங்களாகிற மலசம்பந்த மன்றியில் கேவலம் பிரம்மமாகப் பாவித்துக் கொண்டிருக்கும் யோகமே உபநிஷத்தில் பிரசித்தமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது. வேதாந்த ஞானமில்லாமல் கர்ம நிஷ்டையில் தத்பரர்களான யோகிகளால் சிரவண மனன நிதித்யாசன முதலிய சிரமத்தால் வருத்தத்துடன் இந்த பிரம்மம் அடையத்தக்கது. யாதொரு பயத்துக்கு மிடமில்லாமலிருக்க இப்படிப்பட்ட யோகிகள் இந்த யோகத்தால் தங்கள் ஸ்வரூபத்துக்கு ஹானிவருமென்று இந்த யோகத்தில் பிரவேசிக்க பின் வாங்குகிறார்கள். ஆகையால்தான் இவர்கள் பிரம்மத்தை அடைவது வெகு வருத்தமான விஷயம். ॥118॥

मनसोनिग्रहायत्त मभयं सर्वयोगिनाम् ।
दुःखक्षयः प्रबोधश्चाप्यक्षयाशान्तिरेवच ॥ 119 ॥
மநஸோநிக்ரஹாயத்தமபயம்ஸர்வயோகிநாம் ।
துஃகக்ஷய: ப்ரபோதஶ்சாப்யக்ஷயா ஶாந்திரேவச ॥ 119 ॥

सर्वयोगिनां ஸர்வயோகிநாம்=சகல யோகிகளுக்கும்

अभयं அபயம்=பயமில்லாமல் (தத்வஞானம்)

दुःखक्षयः துஃகக்ஷய: = துக்கநாசம்

प्रबोधश्च ப்ரபோதஶ்ச=ஞானம்

अक्षया அக்ஷயா=நாசமற்ற

शान्तिरेवच ஶாந்திரேவச=சாந்தி இவைகள்

मनसः மநஸ: = மனதில்

निग्रहायत्तं நிக்ரஹாயத்தம் = மனோநிக்கிரகத்தைப்பொருந்ததாயிருக்கின்றன.

தா - ம்:—மனது முதலானதுகள் ரச்சுசர்ப்பம்போல் எவர்களுக்குக்கற்பிதமாகிறதோ பீஜத்தில்இல்லையோ அப்பேர்க்கொற்ற பிரம்மஸ்வரூபத்தை அடைந்த உத்தம புருஷனுக்கு தத்வஞானமும் மோக்ஷமாகிய சாந்தியும் ஸ்வத: சித்தமாகின்றன. அப்படியில்லாத மற்ற [illegible] நிலையுள்ள யோகிகள் மனோ நிக்கிரகத்

அடையலாம். ஆத்மாவும் மனதும் வெவ்வேறு என்றும், மனது ஆத்மாவுடன் சம்பந்தப்படக்கூடும் என்றும் இவர்கள் நினைப்பதால், இந்தமனதை அவர்கள் அடக்கினால்தான் சாந்தி முதலியவைகளை அவர்கள் அடையலாம். 119

उत्सेक उदधेर्यद्वत् कुशाग्रेणैकबिन्दुना ।
मनसो निग्रहस्तद्वद्भवेदपरिखेदतः ॥ 120 ॥

உத்ஸேக உததேர்யத்வத் குசாக்ரேணைகபிந்துநா ।
மநஸோ நிக்ரஹஸ்தத்வத் பவேதபரிகேதத: ॥ 120 ॥

कुशाग्रेण குசாக்ரேண = தர்ப்பைப்புல்லின் நுனியிலுள்ள
एकबिन्दुना ஏகபிந்துநா = ஒருதிவலையால்
उदधेः உததே: = சமுத்திரத்தின்
उत्सेकः உத்ஸேக: = சோஷணம்
यद्वत् யத்வத் = எப்படி சாத்தியமோ
तद्वत् தத்வத் = அப்படி
अपरिखेदतः அபரிகேதத: = சிரமத்தைப் பாராத விடாத முயற்சியால்
मनसः மநஸ: = மனதின்
निग्रहः நிக்ரஹ: = நிக்கிரஹம்
भवेत् பவேத் = உண்டாகும்

தா-ம:—மனதை எப்படி அடக்கமுடியும் என்றால் சொல்லுகிறார்:—டிட்டிபம் என்கிறபக்ஷி தர்ப்பைபுல்லின் நுனியால் சமுத்திர ஜலத்தை ஒவ்வொரு திவலையாக எடுத்து சமுத்திரத்தை வற்ற வைத்துவிடலாம் என்று நினைக்கிறது. இதுபோல பரபரப்பில்லாமல் சாவதானத்துடன் ஒரு விடாத முயற்சி எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் மனதை நிச்சயமாய் அடக்கிவிடலாம். 120

उपायेन निगृह्णीयाद्विक्षिप्तं कामभोगयोः ।
सुप्रसन्नं लये चैव यथा कामो लयस्तथा ॥ 121 ॥

உபாயேந நிக்ருஹ்ணீயாத்விக்ஷிப்தம் காமபோகயோ: ।
ஸுப்ரஸந்நம் லயே சைவ யதா காமோ லயஸ்ததா ॥ 121 ॥

कामभोगयोः காமபோகயோ: = காமத்திலும் போகத்திலும்
विक्षिप्तं விக்ஷிப்தம் = விக்ஷேபத்தை அடைந்த
मनः மந: = மனதை
उपायेन உபாயேந = உபாயத்தால்

निगृह्णीयात् 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍=நிக்கிரகிக்கவேண்டும்
यथा 𑌯𑌥𑌾=எப்படி
कामः 𑌕𑌾𑌮𑌃=காமமோ
तथा 𑌤𑌥𑌾=அப்படி
लयः 𑌲𑌯𑌃=லயம்

தா-ம்:—மனதை அடக்கவிடாத முயற்சியேபோதாது. இனி சொல்லப்போகிற உபாயங்களாலும் காமபோகங்களில் விக்ஷேபத்தை அடைந்த மனதை திருப்பி ஆத்மாவிடத்திலேயே செல்லும்படிச் செய்யவேண்டியது. அப்படியே சுஷுப்தியாகிற நித்திரையில் லயமடைந்த மனது யாதொரு துக்கத்தை அறியாவிட்டாலும் அதை திருப்பி ஆத்மாவிடத்தில் செலுத்தவேண்டியது. எப்படி இச்சை அனர்த்த காரணமோ அப்படி நித்திரையும் அனர்த்தகாரணம். ஆகையால் காமத்தினின்றும் மனதை நிக்கிரகிக்கிறது போல் லயத்தில் நின்றும் மனதைத் திருப்பவேண்டியது என்று அர்த்தம் ॥121॥

दुःखं सर्वमनुस्मृत्य कामभोगान्निवर्तयेत् ।
अजं सर्वमनुस्मृत्य जातं नैव तु पश्यति ॥ 122 ॥

𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯 𑌕𑌾𑌮𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌜𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯 𑌜𑌾𑌤𑌂 𑌨𑍈𑌵 𑌤𑍁 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥122॥

सर्वं 𑌸𑌰𑍍𑌵𑌂=சமஸ்தமும்
दुःखं 𑌦𑍁𑌃𑌖𑌂=துக்கம் என்று
अनुस्मृत्य 𑌅𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯=பாவித்து
कामभोगान् 𑌕𑌾𑌮𑌭𑍋𑌗𑌾𑌨𑍍=இச்சாபோகத்தினின்றும்
निवर्तयेत् 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍=மனதைத்திருப்பவேண்டும்
सर्वं 𑌸𑌰𑍍𑌵𑌂=சமஸ்தமும்
अजं 𑌅𑌜𑌂=பிரம்மமென்று
अनुस्मृत्य 𑌅𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯=பாவித்து
जातं 𑌜𑌾𑌤𑌂=உண்டாயிருக்கும் சமஸ்த த்வைதத்தையும்
नैवतुपश्यति 𑌨𑍈𑌵𑌤𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿=பார்க்கிறதில்லை.

தா-ம் :—மனதை நிக்கிரகம் செய்யும் உபாயம் என்னவெனில், ஞானப்பியாசமும் வைராக்கியமுமே என்கிறார். அவித்தையால் உண்டான சர்வத்வைதமும் துக்கமே என்றுபாவித்து விஷயங்களில் பற்றுதலடைந்த மனதை வைராக்கியத்தால் திருப்பவேண்டும், ஜனனமற்ற பிரம்ம மாமே சமஸ்தமும் என்று

சாஸ்திரத்தாலும் ஆசாரியருடைய உபதேசத்தால் தெரிந்து கொண்டவன் த்வைதத்தையே பார்க்கிறதில்லை. அது இல்லவேயில்லை. ॥122॥

लयेसंबोधयेच्चित्तं विक्षिप्तं शमयेत्पुनः ।
सकषायं विजानीयात्समप्राप्तं नचालयेत् ॥ 123 ॥

லயே ஸம்போதயேச்சித்தம் விக்ஷிப்தம் ஶமயேத்புந:।
ஸகஷாயம் விஜாநீயாத் ஸமப்ராப்தம் நசாலயேத் ॥ 123 ॥

लये லயே = ஸுஷுப்தியில்
(लीनं லீநம் = லயமடைந்த)
चित्तं சித்தம் = மனதை
संबोधयेत् ஸம்போதயேத் = விழிப்பு மூட்டிவிட வேண்டியது.
पुनः புந: = மறுபடியும்
विक्षिप्तं விக்ஷிப்தம் = விக்ஷேபத்தை அடைந்த மனதை
शमयेत् ஶமயேத் = சாந்தமாகும்படிச் செய்யவேண்டும்.
सकषायं ஸகஷாயம் = கஷாய தோஷத்துடன் கூடினதாக
विजानीयात् விஜாநீயாத் = அறியத்தக்கது
समप्राप्तं ஸமப்ராப்தம் = சமானபாவத்தை அடைந்த மனதை
नचालयेत् நசாலயேத் = சலிக்கும்படிச் செய்யக்கூடாது.

தா - ம்:—ஞானாப்பியாஸம், வைராக்கியம் இந்த இரண்டு உபாயங்களால் ஸுஷுப்தியில் லயமடைந்த மனதை விவேகத்தால் ஆத்மாவை சேரும்படிச் செய்யவேண்டும். கர்ம யோகங்களில் மனது விக்ஷேபம் அடைந்திருந்தால் அதை சமனம் செய்து ஆத்மாவினிடத்தில் சேர்ப்பிக்கவேண்டும். இப்படி அடிக்கடி அப்பியாசம் செய்யும் யோகியின் சித்தம் ஸுஷுப்தியையும் அடையாமல் விஷயத்திலிருந்து திரும்பியும், சமான பாவத்தை எப்போது அடைகிறதில்லையோ அப்போது அது கஷாய தோஷத்துடன் கூடியிருப்பதாக அறியப்படுகிறது. இந்த மத்திமஸ்திதியில் அதை விடாமல் நிர்விகல்ப சமாதிக்கு அதைக் கொண்டுபோகவேண்டும். அந்த ஸ்திதியில் மனது சமபாவத்தை அடைந்தபிறகு மறுபடியும் அது விஷயத்தில் பிரவேசிக்கும்படி செய்யக்கூடாது.

नास्वादयेत्सुखंतत्र निःसगः प्रज्ञयाभवेत् ।
निश्चलं निश्चरच्चित्तमेकीकुर्यात्प्रयत्नतः ॥ 124 ॥

நாஸ்வாதயேத் ஸுகம் தத்ர நிஸ்ஸங்க: ப்ரஜ்ஞயா பவேத் [illegible]
[illegible]

सुखं ஸுகம்=சமாதி சுகத்தை
नास्वादयेत् நாஸ்வாதயேத்=ஆசைபடக்கூடாது
तत्र தத்ர=அந்த சுகத்தில்
प्रज्ञया ப்ரஜ்ஞயா=புத்தியுடன்
निःसंगः நி:ஸங்க:=பற்றுதலின்றியில்
भवेत् பவேத்=இருக்கவேண்டும்
निश्चलं நிஶ்சலம்=நிச்சலஸ்வபாவத்தையடைந்த
चित्तं சித்தம்=மனது
निश्चरत् நிஶ்சரத்=வெளியே விஷயத்தில் சஞ்சரித்தால்
प्रयत्नतः ப்ரயத்நத:=பிரயத்தினத்துடன்
एकीकुर्यात् ஏகீகுர்யாத்=ஒன்றாக்கவேண்டும்.

தா - ம்:—சமாதியில் அடையக்கூடிய சுகத்திற்கூட யோகி ஆசைவைக்கக் கூடாது. ஆனால் அந்த சுகமும் அவித்தியா கற்பிதமானதால் மித்தையே. விவேக ஞானத்துடன் அதினின்றும் மனதைத் திருப்பவேண்டியது. அப்படித் திருப்பப்பட்டு ஒரு யிடத்தில் நிலை நிறுத்தப்பட்டும் மறுபடியும் மனது விஷயங்களில் பிரவேசித்தால், ஞானப்பியாசத்தில் முன் சொன்ன உபாயங்களால் அதை தகைத்து ஆத்மாவிடத்தில் திருப்பி ஆத்மாவுடன் ஒன்றாகும்படி செய்யவேண்டியது.

यदा न लीयते चित्तं न च विक्षिप्यते पुनः ।
अनिङ्गनमनाभासं निष्पन्नं ब्रह्म तत्तदा ॥ 125 ॥

யதா நலீயதே சித்தம் நச விக்ஷிப்யதே புந: ।
அநிங்கநமநாபாஸம் நிஷ்பந்நம் ப்ரஹ்ம தத்ததா ॥ 125 ॥

चित्तं சித்தம்=மனது
यदा யதா=எப்போது
नलीयते நலீயதே=சுஷுப்தியில்லயப்படவில்லையோ
पुनःच புந:ச=மறுபடியும்
नविक्षिप्यते நவிக்ஷிப்யதே=விக்ஷேபத்தை அடையவில்லையே ஆனால்,
अनिङ्गनं அநிங்கநம்=நிச்சலமாயும், அதாவது
अनाभासं அநாபாஸம்=கற்பித விஷயங்களால் பிரகாசிப்பிக் கப்படாமலும்

तत् தத்=அந்த சித்தம்

ब्रह्म निष्पन्नं ப்ரஹ்மநிஷ்பந்நம்=பிரம்மரூபமாகிறது.

தா-ம் :—நிரோதம் செய்யப்பட்ட மனது சுஷுப்தியில் லீனமாகாமலும், விஷயங்களில் பிரவிர்த்திக்காமலும் எப்போது இருக்கிறதோ, மேலும் காத்து யில்லாதவிடத்திலிருக்கும் தீபம் போல் எப்போது சித்தம் ராகாதிசலன காரணங்களில்லாமலும் இதர பதார்த்தங்களால் பிரகாசிக்கப்படாமல் எப்போது இருக்கிறதோ அப்போது தான் மனது பிரம்மரூபமாகிறது. ॥125॥

स्वस्थं शान्त सनिर्वाणमकथ्यं सुखमुत्तमम् ।
अजमजेन ज्ञेयेन सर्वज्ञं परिचक्षते ॥ 126 ॥
ஸ்வஸ்தம் ஶாந்தம் ஸநிர்வாணமகத்யம் ஸுகமுத்தமம் ।
அஜமஜேந ஜ்ஞேயேந ஸர்வஜ்ஞம் பரிசக்ஷதே ॥ 126 ॥

(ब्रह्मविदः ப்ரஹ்மவித:=பிரம்மவேத்தாக்கள்)
उत्तमं உத்தமம்=உத்தமமான பாரமார்த்திக
सुखं ஸுகம்=சுகத்தை
स्वस्थं ஸ்வஸ்தம்=ஸ்வ ஸ்வரூபத்திலேயே யிருப்பதாயும்
शान्तं ஶாந்தம்=சகல அநர்த்த நிவிர்த்தி ரூபமாயும்.
सनिर्वाणं ஸநிர்வாணம்= மோக்ஷத்துடன் கூடியிருப்பதாயும்
अकथ्यं அகத்யம்=சொல்ல முடியாததாயும்
अजं அஜம்=விஷயங்கள் ஜனிக்கிறது போல ஜனிக்காமலும்
अजेन அஜேந=உத்பத்தியற்ற
ज्ञेयेन ஜ்ஞேயேந=ஞேயவஸ்துவுடன்
(अभिन्नं அபிந்நம்=ஒன்றாயிருக்கிற)
सर्वज्ञं ஸர்வஜ்ஞம்=ஸர்வஞ்ஞனை பிரம்மமாக
परिचक्षते பரிசக்ஷதே=சொல்லுகிறார்கள்.

ச-பா :—அசம்பிரஞ்ஞாத சமாதியில் எந்தரூபமாக சித்தமாகிறதோ அந்த பிரம்ம ஸ்வரூபத்தை விளங்கும்படிச் சொல்லுகிறார். மேற்சொன்ன பரமார்த்தசுகமான ஆத்மஞானம் தன்னிடத்தில் இருக்கிறதாகவும் அதுசகல அநர்த்த மற்றதாகவும் கைவல்லியத்துடன் கூடினதாகவும், சொல்ல முடியாததாகவும், உத்தம சுகமாகவும், யோகிகளுக்கு மாத்திரம் பிரத்தியக்ஷமாகவும் விஷய சுகத்தாலுண்டாகிற ஞானம்போலிராமல் உற்பத்தி யற்றதாயும் ஞேயவஸ்துவுக்கு வேறாகாமலும், எல்லாவற்றையும் அறிந்தா [illegible]

न कश्चिज्जायते जीवः संभवोऽस्य न विद्यते ।
एतत्तदुत्तमं सत्यं यत्र किंचिन्नजायते ॥ 127 ॥
इति गौडपादीय कारिकायामद्वैताख्यम्
तृतीयप्रकरणम् ॥ ओंतत्सत् ॥

48

ந கஶ்சிஜ்ஜாயதே ஜீவ: ஸம்பவோऽஸ்ய நவித்³யதே ।
ஏதத்தது³த்தமம் ஸத்யம் யத்ர கிஞ்சிந்நஜாயதே ॥ 127 ॥
இதி கௌ³ட³பாதீ³யகாரிகாயாம் அத்³வைதாக்²யம்
த்ருதீயம்ப்ரகரணம் ॥ ஓம்தத்ஸத் ॥

कश्चित् கஶ்சித்=யாதொரு
जीवः ஜீவ:=ஜீவனும்
न जायते நஜாயதே=உண்டாகிறதில்லை
अस्य அஸ்ய=இந்த ஜீவனுக்கு
संभवः ஸம்பவ:=காரணம்
न विद्यते நவித்³யதே=இருக்கவில்லை
यत्रकिंचिन्नजायते யத்ரகிஞ்சிந்நஜாயதே=எந்த பிரம்மத்தினிடத்தில் யாதொன்றும் உண்டாகிறதில்லையோ
एतत् ஏதத்=அந்த பிரம்மமானது
उत्तमम् உத்தமம்=உத்தமமான
सत्यं ஸத்யம்=சத்தியமாக இருக்கிறது.

தா - ம்:—மனதின் நிக்கிரகம் முதலிய உபாயங்கள், மண், தங்கம் முதலியவைகள் போல் சிருஷ்டி, உபாசனை, இவைகள் எல்லாம் பாரமார்த்திக ஸ்வரூபத்தை அடைய உபாயங்களேதவிர வாஸ்தவமல்லவென்று பிரஸ்தாபிக்கப்படுகின்றன. பாரமார்த்திகத்தில் அவைகள் சத்தியமல்ல. பாரமார்த்திகத்தில் கர்த்தா போக்தாரூபமான எந்த ஜீவனும் எந்த விதத்திலும் உற்பத்தியாகிறதில்லை. ஆகையால் ஸ்வபாவத்திலேயே ஜனனமில்லாத ஆத்மாவுக்குக் காரணமில்லை. காரணமில்லாததினால்தான் ஜீவன் காரியமன்று. எந்த பிரம்மத்தினிடமிருந்து அணுமாத்திரமும் உண்டாகிறதில்லையோ அந்த பிரம்மமானது இதற்கு முன்சொன்ன வியாவஹாரிக சத்தியமான உபாயங்களுக்குள் உத்தமமான சத்தியம்.

உபாயங்கள் சத்தியமானால் அத்வைதத்துக்கு ஹானி வருமே, சத்தியமாகாவிட்டால் அவைகள் உபயோகப் படமாட்டாதே என்று ஆரம்பித்த இந்த கடைசிமந்திரம் சொல்லப்பட்டது. ॥129॥

॥ हरिः ओं ॥

॥ ஹரி: ஓம் ॥

अथ गौडपादीयकारिकायाः

अलातशान्त्याख्यं चतुर्थप्रकरणम् ॥

அத கௌடபாதீய காரிகாயா:

அலாதசாந்த்யாக்யம் சதுர்த்தப்ரகரணம் ॥

ओं ॥ ज्ञानेनाऽऽकाशकल्पेन धर्मान्यो गगनोपमान् ।
ज्ञेयाभिन्नेन संबुद्धस्तं वन्दे द्विपदां वरम् ॥ 128 ॥

ஓம் ॥ ஜ்ஞாநேநாऽऽகாசகல்பேந தர்மாந்யோ ககநோபமாந் ।
ஜ்ஞேயாபிந்நேந ஸம்புத்தஸ்தம் வந்தே த்விபதாம் வரம் ॥ 128 ॥

यः ய:=எவன்

ज्ञेयाभिन्नेन ஜ்ஞேயாபிந்நேந=கற்பிக்கப்பட்ட உபாதி பேதங்களால் வெகு ரூபமாய் தோன்றும் ஆத்மஸ்வரூபமாகிய ஞேயத்துக்கு அபின்னமாயிருக்கிற

आकाशकल्पेन ஆகாசகல்பேந=சர்வவியாபகமாயிருக்கும் விஷயத்தில் ஆகாசத்துக்கு ஸதிருசமான

ज्ञानेन ஜ்ஞாநேந=ஞானத்தால்

गगनोपमान् ககநோபமாந்=ஆகாசத்துக்குச் சதிருசமான

धर्मान् தர்மாந்=ஆத்மாக்களை

संबुद्धः ஸம்புத்த:=செவ்வையாய் அறிந்தவனாய் இருக்கிறானோ

द्विपदां த்விபதாம்=மனிதர்களுக்குள்

वरं வரம்=சிரேஷ்டமான

तं தம்=அந்த ஆசாரியனை

वन्दे வந்தே=நமஸ்கரிக்கிறேன்.

ச பா:—அத்வைதம் ஓங்காரத்தின் அர்த்தத்தை நிச்சயித்த முதல் பிரகரணத்தில் நிரூபிக்கப்பட்டது. இரண்டாவது பிரகரணத்தில் துவைதம் மித்தை என்று காட்டப்பட்டது. மூன்றாவது பிரகரணத்தில் அத்வைதமே பரம சத்தியமென்று சாஸ்திரத்தாலும் யுக்தியாலும் சித்தாந்தம் செய்யப்பட்டது. இந்த நான்காவது பிரகரணத்தில் பேதவாதிகளுடையவும் நாஸ்திகவாதிகளுடையவும் மதங்களிலுள்ள பரஸ்பர பேதங்கள் பூர்வோத்தர விருத்தியாவங்கள் இவைகளைக் காட்டுவது மூலமாக அ[illegible] [illegible]

கிரந்தத்தின் ஆதியிலும் மத்தியிலும் முடிவிலும் செய்யப்படும் மங்களாசரணம் கிரந்தத்தின் பிரசித்திக்கு ஹேதுவாயிருப்பதால் இப்போது இந்த நான்காவது பிரகரணத்தின் ஆரம்பத்தில் முதலாவது சுலோகத்தில் அத்வைதஞான சம்பிரதாய கர்த்தரான நாராயணனே அத்வைதத்துக்கு வேறாகாததாக பாவிக்கப்பட்டு நமஸ்கரிக்கப்படுகிறார்.

ஆகாசம்போல் எங்கும் வியாபகமாகவும் ஞேயாபின்னமாகவும் (அதாவது) சூரியனும் பிரகாசமும் அக்கினியும் உஷ்ணமும் போல ஞேயமான ஆத்மாவுடன் ஒன்றாயுமிருக்கிற ஞானத்தால் ஆகாசம்போல் வியாபகர்களான ஆத்மாக்களை எவன் அறிகிறானோ அவனே நாராயணனென்னும் பேருடைய ஈசுவரன். அவன் புருஷர்களுக்குள் சிரேஷ்டன். அவனை நமஸ்காரம் பண்ணுகிறேன். ஆசாரியனை நமஸ்காரம் பண்ணுவதால் பரபக்ஷங்களை நிஷேதித்து திருபுடியற்ற பரமார்த்த தத்துவஞானம் இந்த பிரகரணத்தில் பிரதிபாதிக்கப்படுகிறதென்று பிரதிஞ்ஞைபண்ணப்பட்டது. ॥128॥

IV 2-வது சுலோகம்.

अस्पर्शयोगो वै नाम सर्वसत्वसुखोहितः ।
अविवादोऽविरुद्धश्च देशितस्तं नमाम्यहम् ॥ 129 ॥

𑌅𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌯𑍋𑌗𑍋 𑌵𑍈 𑌨𑌾𑌮 𑌸𑌰𑍍𑌵𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍁𑌖𑍋 𑌹𑌿𑌤𑌃 ।
𑌅𑌵𑌿𑌵𑌾𑌦𑍋𑌽𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌶𑍍𑌚 𑌦𑍇𑌶𑌿𑌤𑌸𑍍𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥ 129 ॥

अस्पर्शयोगो वैनाम। 𑌅𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌯𑍋𑌗𑍋𑌵𑍈𑌨𑌾𑌮= எக்காலத்திலும் எதனுடனும் சம்பந்தமற்ற யோகமென்று பிரசித்தமாகவும்

सर्वसत्वसुख: 𑌸𑌰𑍍𑌵𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍁𑌖𑌃=ஸர்வபிராணிகளுக்கும் சுகமாகவும்

हित: 𑌹𑌿𑌤𑌃=அனுகூலமாகவும்

अविवाद: 𑌅𑌵𑌿𑌵𑌾𑌦𑌃=விவாதமற்றதாகவும்

अविरुद्ध: च 𑌅𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌶𑍍𑌚=விரோதமற்றதாகவுமிருக்கிற

(तत्वदर्शनयोग: 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑌯𑍋𑌗𑌃=தத்வஞானமானது

देशित: 𑌦𑍇𑌶𑌿𑌤𑌃=சாஸ்திரத்தால் உபதேசிக்கப்படிருக்கிறதோ

तं 𑌤𑌂=அப்படிப்பட்ட தத்வஞானத்தை

अहं 𑌅𑌹𑌂=நான் நமஸ்கரிக்கிறேன்

இப்போது அத்வைத ஞானத்தை ஸ்துதிக்கும் பொருட்டு அதை நமஸ்கரிக்கிறார் எக்காலத்திலும் எத்துடனும் சம்பந்தப்படாத யோகமானது பிரம்மஸ்வரூபமே. அது பிரம்மவித்துக்களுக்கு அஸ்பர்சயோகமென்று பிரசித்தம். தபசு மிகவும் சுக சாதனமா யிருந்தாலும் துக்கரூபமா யிருக்கிறது. இது எல்லாருக்கும் சுககரமாயிருக்கிறது. விஷயயோகம் சுகமா யிருந்தாலும் ஹிதமாகவில்லை. இந்த ஆத்மஞானமோ எப்போதும் சலனமற்றிருப்பதால் ஹிதமாயும் சுகமாயுமிருக்கிறது. மேலும் வாதிப் பிரதிவாதிகளின் விவாதமற்றதாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட அத்வைத ஞானமானது சாஸ்திரத்தால் உபதேசம் பண்ணப்படுகிறது. அந்த ஞானத்தை நான் நமஸ்கரிக்கிறேனென்று அர்த்தம். ‖ 129 ‖

IV 3-வது சுலோகம்.

भूतस्य जातिमिच्छन्ति वादिनः केचिदेव हि ।
अभूतस्यापरे धीरा विवदन्तः परस्परम् ॥ 130 ॥

ഭൂതസ്യ ജാതിമിച്ഛന്തി വാദിനഃ കേചിദേവ ഹി ।
അഭൂതസ്യാപരേ ധീരാ വിവദന്തഃ പരസ്പരം ॥130॥

केचित् കേചിത്=சில
वादिनः വാദിനഃ=வாதிகள்
भूतस्य ഭൂതസ്യ=இருக்கப்பட்ட பதார்த்தத்திற்கு
जातिं ജാതിം=ஜனனத்தை
इच्छन्ति एव हि ഇച്ഛന്തി ഏവ ഹി=இச்சிக்கிறார்கள்.
धीराः ധീരാഃ=பண்டிதர்கள் என்கிற அபிமானமுடைய
अपरे അപരേ=வேறுசிலர்
अभूतस्य അഭൂതസ്യ=இல்லாததற்கு
(जातिं इच्छन्ति ജാതിം ഇച്ഛന്തി=ஜனனத்தை இச்சிக்கிறார்கள்)
(एवं ഏവം=இந்த பிரகாரம்)
परस्परम् പരസ്പരം=ஒருவருக்கொருவர்
विवदन्तः വിവദന്തഃ=விருத்தமாய்ச் சொல்லுகிறார்கள்.

ஸ்ரீ - பா:—அத்வைதம் அவிருத்தமா யிருப்பதால் அதில் விவாதத்துக்கு இடமில்லை என்பதைத் தெளிவாக்குவதற்காக முதலில் துவைதிகளின் விரோதங்களை உதாஹரிக்கிறார். துவைத வாதிகளுக்குள் சாங்கியர்கள் பதார்த்தங்கள் உண்டாவதற்கு முன்

யென்றும் பரஸ்பரம் விருத்தமாக வாதம் செய்கிறார்கள். தாங்களே புத்திமான்கள் என்று ஒருவரையொருவர் ஜயிக்க இச்சிக்கிறார்கள். ॥ 130 ॥

IV 4-வது சுலோகம்.

भूतं न जायते किंचिद्भूतं नैवजायते।
विवदन्तोऽद्वया ह्येवमजातिं ख्यापयन्ति ते ॥ 131 ॥

பூதம் நஜாயதே கிஞ்சித்பூதம் நைவஜாயதே ।
விவதந்தோऽத்வயா ஹ்யேவமஜாதிம் க்யாபயந்தி தே ॥ 131 ॥

भूतं किञ्चित् பூதங்கிஞ்சித்=இருக்கிற பதார்த்தம் யாதொன்றும்

नजायते நஜாயதே=ஜனிக்கமாட்டாது.
अभूतं அபூதம்=இல்லாத பதார்த்தமும்
नैवजायते நைவஜாயதே=ஜெனிக்கமாட்டாது
एवं ஏவம்=இந்த பிரகாரம்
विवदन्तः விவதந்த:=விருத்தமாய்ச் சொல்லுகிறார்கள்
अद्वयाः ते அத்வயா:தே=அத்வைதிகளும்
अजातिं அஜாதிம்=ஜனனமில்லை என்பதை
ख्यापयन्ति க்யாபயந்தி=பிரகாசம் செய்கிறார்கள்.

ச - பா:—சாங்கியர்களுடையவும் வைசேஷிகர்களுடையவும் பரஸ்பர விரோதத்தால் அவர்களுடைய மதம் பரஸ்பரம் த்வேஷிக்கப்படுகிறது. இதனால் என்ன சித்திக்கிறதெனின், சொல்லுகிறார். எது முன்னமேயே இருக்கிறதோ அதை உண்டு பண்ண வேண்டியதில்லை. ஏனெனின், ஆத்மாபோல் அது முன்னமேயே சத்தாயிருக்கிறது. இப்படி அசத்தினின்றும் சிருஷ்டி உண்டானதாகச் சொல்லும் வைசேஷிகர்கள் சாங்கியர்களை த்வேஷிக்கிறார்கள். சாங்கியர்களோ அசத்தினின்றும் சத் பதார்த்தம் உண்டானதாக வைசேஷிகர்கள் சொல்லுவது முயல் கொம்பு போல் சுத்த பிசகு என்று சொல்லுகிறார்கள். ॥ 131 ॥

IV 5-வது சுலோகம்.

ख्याप्यमानामजातिं तैरनु मोदामहे वयम् ।
विवदामो न तैः सार्धमविवादं निबोधत ॥ 132 ॥

க்யாப்யமாநாமஜாதிம் தைரநுமோதாமஹே வயம் ।

तैः தை:=அவர்க[redacted] ளால் இப்படி

ख्याप्यमानां க்யாப்யமாநாம்=பிரகாசம் செய்யப்பட்டிருக்கிற

अजातिं அஜாதிம்=உற்பத்தியில்லாமையை

वयं வயம்=நாங்கள்

अनुमोदामहे அநுமோதாமஹே=அனுசரித்து ஆமென்று ஒப்புக்கொள்ளுகிறோம்.

तैः सार्धं தை: ஸார்த்தம்=அவர்களுடன்

न विवदामः நவிவதாம:=விவாதம் செய்யவில்லை.

अविवादं அவிவாதம்=விவாதமற்றதை

निबोधत நிபோதத=தெரிந்துகொள்.

ஏ- பா:—வாதிகள் அனுற்பத்தியை ஒப்புக்கொள்ளுவதினால் நாம் அவர்களை தடுத்துச் சொல்லவேண்டும் என்பது கருத்தில்லை. அந்த அனுற்பத்தியே எங்களுக்கும் சம்மதம். ஆகையால் நாம் விவாதம் செய்யவேண்டியதில்லை. விவாதம் இல்லாததே பாரமார்த்திக சத்தியம் என்று சிஷ்யர்களே தெரிந்து கொள்ளுங்கள். ||132||

IV 6-வது சுலோகம்.

अजातस्यैव धर्मस्य जातिमिच्छन्ति वादिनः ।
अजातो ह्यमृतो धर्मो मर्त्यतां कथमेष्यति ॥ 133 ॥ (6)

அஜாதஸ்யைவ தர்மஸ்ய ஜாதிமிச்சந்தி வாதிந: ।
அஜாதோ ஹ்யம்ருதோ தர்மோ மர்த்யதாம் கதமேஷ்யதி ||133

वादिनः வாதிந:=சத் அசத்வாதிகள்

अजातस्यैव धर्मस्य அஜாதஸ்யைவ தர்மஸ்ய=ஜனன தர்மமில்லாத பரமாத்மாவுக்கு

जातिं ஜாதிம்=ஜனனத்தை

इच्छन्ति இச்சந்தி=இச்சிக்கிறார்கள்

अजातः அஜாத:=ஜன்மமற்றதாயும்

अमृतः அம்ருத:=மரணமில்லாததாயு மிருக்கிற

धर्मः தர்ம:=பரமாத்மா

कथं கதம்=எப்படி

मर्त्यतां மர்த்யதாம்=மரிக்கும்படியான யோக்கியதையை

एष्यति ஏஷ்யதி=அடையக்கூடும்.

IV 7-வது சுலோகம்.

(7)

न भवत्यमृतं मर्त्यं न मर्त्यममृतं तथा ।

(7)

ந பவத்யம்ருதம் மர்த்யம் ந மர்த்யமம்ருதம் ததா ।
ப்ரக்ருதேரந்யதாபாவோ ந கதஞ்சித்பவிஷ்யதி ॥ 134 ॥

अमृतं அம்ருதம்=மரணதர்மமில்லாதது
मर्त्यं மர்த்யம்=மரணதர்மமுள்ளதாக
नभवति பவதி=ஆகமாட்டாது
तथा ததா =அப்படியே
मर्त्यं மர்த்யம்=மரணதர்மமுள்ளது
अमृतं அம்ருதம்=மரணதர்மமில்லாததாக
नभवति நபவதி=ஆகமாட்டாது.
प्रकृतेः ப்ரக்ருதே:=ஸ்வபாவத்துக்கு
अन्यथाभावः அந்யதாபாவ:=வேறு பாவம்
कथंचित् கதஞ்சித்=எவ்விதத்திலும்
नभविष्यति நபவிஷ்யதி=உண்டாகமாட்டாது.

IV 8-வது சுலோகம்.

(8)

स्वभावेनामृतोयस्य धर्मोगच्छतिमर्त्यताम् ।
कृतकेनाऽमृतस्तस्यकथं स्थास्यति निश्चल: ॥ 135 ॥
ஸ்வபாவேநாம்ருதோயஸ்ய தர்மோகச்சதிமர்த்யதாம் ।
க்ருதகேநாऽம்ருதஸ்தஸ்ய கதம்ஸ்தாஸ்யதி நிஶ்சல: ॥ 135 ॥

यस्य யஸ்ய=எந்த பரிணாம வாதியின் மதத்தில்
स्वभावेन ஸ்வபாவேந=ஸ்வபாவத்தில்
अमृत: धर्म: அம்ருத:தர்ம:=மரணதர்மமில்லாத பரமாத்மா
मर्त्यतां மர்த்யதாம்=காரியபாவத்தை அடைவதால் மரண தர்மத்தை
गच्छति கச்சதி=அடைகிறதோ
तस्य தஸ்ய=அந்த வாதி மதத்தில்
कथं கதம் =எப்படி
कृतकेन க்ருதகேந=கர்மம் உபாஸ்தி இவைகளை சேர்த்து அநுஷ்டானம் பண்ணுவதினால்
अमृत: அம்ருத:=மரணரஹிதமாயும்
निश्चल: நிஶ்சல:=சலனமற்றதாயும்
स्थास्यति ஸ்தாஸ்யதி=இருக்கக்கூடும்.

தா - ம்:— (6-7-8) மூன்றாவது பிரகரணம் 20.21-22-வது ...லோகங்களில் இவைகளின் தாற்பரியம்வந்திருந்தாலும், ...

டும்பொருட்டு மறுபடியும் இவ்விடத்தில் இந்த சுலோகங்கள் எழுதப்பட்டன.

IV 9-வது சுலோகம்.

सांसिद्धिकी स्वभाविकी सहजा अकृताचया ।
प्रकृतिः सेति विज्ञेया स्वभावं न जहातिया ॥ 136 ॥

ஸாம்ஸித்திகீ ஸ்வாபாவிகீ ஸஹஜா அக்ருதாவயா ।
ப்ரக்ருதிஃ ஸேதிவிஜ்ஞேயா ஸ்வபாவம் நஜஹாதியா ॥ 136 ॥

या யா=எது

सांसिद्धिकी ஸாம்ஸித்திகீ=யோகிகளுக்கு யோகஸித்தியால் உண்டான அணிமாதிகள்போல் ஸித்தியால் உண்டாயிருக்கிறதோ

स्वाभाविकी ஸ்வாபாவிகீ=எப்படி அக்கினியின் உஷ்ணமும் பிரகாசமும் ஸ்வபாவமா யிருக்கிறதோ எக்காலத்திலும் எந்த இடத்திலும் வித்தியாசப்படவில்லையோ, அப்படி ஸ்வாபாவிகமா யிருக்கிறதோ

सहजा ஸஹஜா=பக்ஷிகளுக்கு ஆகாசத்தில் பறக்கிற ஸ்வபாவம் சஹஜமா யிருப்பதுபோல் ஆத்மாவுடன் கூடியிருப்பதால் சஹஜமாயிருக்கிறதோ

अकृता அக்ருதா=பள்ளத்தில் ஓடும் ஜலத்தின் குணம் ஒருவனாலும் செய்யப்படாததுபோல் அப்படி செய்யப்படாம லிருக்கிறதோ

या யா=எது

स्वभावं ஸ்வபாவம்=ஸ்வபாவத்தை

नजहाति நஜ்ஹாதி=விடுகிறதில்லையோ

सा ஸா=அது எல்லாம்

प्रकृतिः ப்ரக்ருதிஃ=பிரகிருதி

इति இதி=என்று

विज्ञेया விஜ்ஞேயா=அறியத்தக்கது.

ச - பா:—இந்த சுலோகத்தில் பிரகிருதி என்றால் இன்னதென்பது குறிப்பிடப்படுகின்றது. சாதாரணமாய் பிராபஞ்சிக வியவஹாரத்திலேயே ஒரு பதார்த்தத்தின் பிரகிருதி என்றால் எக்காலத்திலும் மாறுபாட்டை அடையாத சுபாவம் என்று அறியப்படுகிறது. அப்படியிருக்க பரமார்த்த சத்தியமான பரமாத்மாவின் அமிர்தாதி பிரகிருதி ஒரு வித்தியாசத்தையும் அடையமாட்டாது

IV 10-வது சுலோகம்.

जरामरण निर्मुक्ताः सर्वे धर्माः स्वभावतः ।
जरामरण मिच्छन्तश्च्यवन्ते तन्मनीषया ॥ 137 ॥

𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃 ।
𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑍇 𑌤𑌨𑍍𑌮𑌨𑍀𑌷𑌯𑌾 ॥ 137 ॥

सर्वे 𑌸𑌰𑍍𑌵𑍇=சமஸ்தமான
धर्माः 𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 = ஜீவர்கள்
स्वभावतः 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃=ஸ்வபாவத்தில்
जरामरण निर्मुक्ताः 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃=ஜனன மரணங்களினின்றும் விடுபட்டவர்கள்
तन्मनीषया 𑌤𑌨𑍍𑌮𑌨𑍀𑌷𑌯𑌾 = அவைகளில் பாவனையால்
जरामरणं 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌂=ஜரா மரணங்களை
इच्छन्तः 𑌇𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌃=இச்சித்துக்கொண்டு
च्यवन्ते 𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑍇=ஸ்வபாவத்தில் நின்றும் நழுவுகிறார்கள்.

ச - பா:—சில வாதிகள் முந்திய சுலோகத்தில் சொல்லிய பிரகிருதிக்கு மாறுபாடு உண்டென்று கற்பிக்கிறார்கள். அப்படி கற்பிப்பதில் என்ன தோஷம் எனின், உத்தரம் கூறுகிறார். ஸ்வபாவத்தில் சகல ஜீவர்களும் ஜரா மரணங்களில்லாதவர்கள் ரச்சுவில் சர்ப்பத்தைக் கற்பிக்கிறதுபோல் ஜீவர்களிடத்தில் ஜராதிகளை கற்பிக்கிறார்கள். இப்படி கற்பிப்பதால் அவர்கள் பிரஷ்டர்கள் ஆகிறார்கள். அதாவது விகாரமில்லாத ஆத்மாவிடத்தில் விகாரத்தைக் கற்பிக்கிறதினால், அந்த வாஸனையால் அவர்களுடைய ஸ்வபாவத்துக்கு ஹானி உண்டாகும். ॥ 137 ॥

IV 11-வது சுலோகம்.

कारणं यस्य वै कार्यं कारणं तस्य जायते ।
जायमानं कथमजं भिन्नं नित्यं कथं च तत् ॥ 138 ॥

𑌕𑌾𑌰𑌣𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌵𑍈 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂 𑌕𑌥𑌮𑌜𑌂 𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌕𑌥𑌂 𑌚 𑌤𑌤𑍍 ॥ 138 ॥

यस्य 𑌯𑌸𑍍𑌯=எவனுடைய மதத்தில்
कारणं वै 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌵𑍈 = காரணமே
कार्यं 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂=காரியமாயிருக்கிறதோ
त[illegible]=அவன் மதத்தில்

जायते ஜாயதே=ஜனிக்கிறது.
जायमानं ஜாயமானம்=ஜனிக்கிற பதார்த்தம்
कथं கதம்=எப்படி
अजं அஜம்=ஜனனமில்லாததாயிருக்கும் ?
भिन्नं तत् பின்னம் தத்=பின்னமாயிருக்கிற பதார்த்தம்
कथं கதம்=எப்படி
नित्यं நித்யம்=நித்தியமாயிருக்கும் ?

தா - ம்:—சாங்கியர்களை வைசேஷிகர்கள் தூஷிக்கும் விதம் சொல்லப்படுகிறது. சாங்கியர்களுடைய மதத்தில் கடத்துக்கு மண் உபாதான காரணமா யிருப்பதுபோல உபாதான காரணமான பிரதானமே காரியமாகிறது. அதாவது மஹத்முதலிய ஆகாரமாகிறது. அஜன்மாவான பிரதானமே பால் தயிராகிறது போல் மஹத்தத்வம் முதலிய ஆகாரமாய்ப் பரிணமிப்பதால் அது ஜன்மமில்லாததுஎன்றும் நித்தியம் என்றும் எப்படி சொல்லலாம். மாறுதலை அடையாதது மாறுதலை அடையும் என்பது பூர்வோத்தர விருத்தம். மேலும் பிரதானம் நித்தியம் என்று சொல்லப்படுகிறது. அது பேதம் அடைந்தால் நித்தியம் என்று எப்படி சொல்லக்கூடும். சாதாரணமாய் ஒருகடம் ஒடையக்கூடியது. இதுகூட நித்தியம் என்று சொல்லப்படவில்லையே. இவ்விதமாக அஜன்மாவானது ஜனிக்கிறது என்றும், நித்தியமானது சாவயமாகி பேதமடைகிறது என்றும் சொல்லுவதில் விரோதம் காணப்படுகிறது.

IV 12-வது சுலோகம்.

कारणाद्यद्यनन्यत्वमतः कार्यमजं यदि ।
जायमानाद्धि वै कार्यात्कारणं ते कथं ध्रुवम् ॥ 139 ॥ (12)

காரணாத்யத்யநந்யத்வமத: கார்யமஜம் யதி ।
ஜாயமானாத்தி வை கார்யாத்காரணம் தே கதம் த்ருவம் ॥139॥

कारणात् காரணாத்=காரணத்தைக்காட்டிலும்
अनन्यत्वं यदि அநந்யத்வம் யதி=காரியம் வேறாகாமல் இருந்தால்
अतः அத:=அப்போது
कार्यं கார்யம்=காரியமானது
[illegible]

जायमानात् ஜாயமாநாத் = ஜனனத்தை அடைந்த
कार्यात् கார்யாத் = காரியத்தைக் காட்டிலும்
कारणं காரணம் = காரணமானது
ते தே = உன்னுடைய மதத்தில்
कथं கதம் = எப்படி
ध्रुवं த்ருவம் = நித்தியமாகும் (வேறாகாமலிருக்கும்.)

ச-பா:—முன்சொன்ன அர்த்தமே விவரிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தியற்ற காரணத்தைவிட காரியம் வேறாகாமலிருப்பது இஷ்டமானால், காரியமும் ஜன்மமற்றதாக ஆகும். அது உன் மதத்தில் விருத்தம். மேலும் காரிய காரணங்களுக்கு அபேதம் சொல்லும் பக்ஷத்தில் ஜனனத்தை அடைந்த காரியத்தைக் காட்டிலும் காரணம் நித்தியமென்றும் வேறல்லவென்றும் எப்படி சொல்லக்கூடும், ஒரே பதார்த்தத்தில் சில பாகம் காரியமாகவும் சிலபாகம் காரணமாகவும் நித்தியமாகவும் இருக்குமா? ஒரே கோழியின் சில பாகம் சமைக்கவும் சிலபாகம் முட்டையிடவும் உபயோகப்படுமா? ||139||

IV 13-வது சுலோகம்

अजाद्वै जायते यस्य दृष्टान्तस्तस्य नास्तिवै ।
जाताच्च जायमानस्य न व्यवस्था प्रसज्यते ॥ 140 ॥
அஜாத்வை ஜாயதே யஸ்ய த்ருஷ்டாந்தஸ்தஸ்ய நாஸ்திவை ।
ஜாதாச்ச ஜாயமாநஸ்ய ந வ்யவஸ்தா ப்ரஸஜ்யதே ॥ 140 ॥

यस्य யஸ்ய = எந்த பிரதானவாதி மதத்தில்
अजात् அஜாத் = ஜனனமில்லாததிலிருந்து
जायते ஜாயதே = காரியம் ஜனிக்கிறதோ
तस्य தஸ்ய = அந்த மதத்தில்
दृष्टान्तः த்ருஷ்டாந்த: = திருஷ்டாந்தம்
नास्तिवै நாஸ்திவை = இல்லை
जातात् ஜாதாத் = ஜனித்ததினின்றும்
जायमानस्य ஜாயமாநஸ்ய = ஜனிப்பதற்கு
न व्यवस्था प्रसज्यते நவ்யவஸ்தா ப்ரஸஜ்யதே = அனவஸ்தை ஏற்படும்.

தா-ம்:—சாங்கிய மதப்படி யாதொரு காரணத்தினின்றும்
... காரணத்திலிருந்தும் காரியங்கள் உண்டாகிற

துக்கு காரணமிருக்கிறது. அப்படி உண்டான காரணத்திலிருந்து காரியமுண்டானால் இந்த காரணத்துக்கும் காரணம் இருக்கவேண்டும். அப்போது அனவஸ்தா தோஷம் சம்பவிக்கும். ॥ 140 ॥

IV 14-வது சுலோகம்.

हेतोरादिः फलं येषामादिर्हेतुः फलस्य च ।
हेतोः फलस्यचानादिः कथं तैरुपवर्ण्यते ॥ 141 ॥

ஹேதோராதி: ப²லம் யேஷாமாதிர்ஹேது: ப²லஸ்ய ச ।
ஹேதோ: ப²லஸ்யசாநாதி³: கத²ம் தைருபவர்ண்யதே ॥ 141 ॥

येषां யேஷாம்=எந்த வாதிகளின் மதத்தில்
हेतोः ஹேதோ:=தர்மா தர்மாதி ஹேதுக்களுக்கு
फलं ப²லம்=தேகாதி சங்காத ரூபபலன்
आदिः ஆதி³:=காரணமோ
फलस्यच ப²லஸ்யச=தேகாதி சங்காத பலத்துக்கு
हेतुः ஹேது:=தர்மா தர்மம்
आदिः ஆதி³:=காரணமோ
तैः தை:=அவர்களால்
हेतोः ஹேதோ:=ஹேதுவினுடையவும்
फलस्यच ப²லஸ்யச=தேஹாதிகளுடையவும்
अनादिः அநாதி³:=ஆதி இல்லாமை
कथं கத²ம்=எப்படி
उपवर्ण्यते உபவர்ண்யதே=வர்ணிக்கப்படுகிறது.

ச - பா:—"எந்த காலத்தில் சர்வமும் ஆத்மாவாகிறதோ" என்கிற சுருதியில் வாஸ்தவத்தில் துவைதமில்லையென்று சொல்லப்பட்டது. அதை அனுசரித்து இப்போது சொல்லுகிறார்.

சில வாதிகள் தர்மா தர்மங்களால் சரீராதிகள் உண்டாகின்றன வென்றும் சரீராதிகளால் தர்மாதர்மங்கள் உண்டாகின்றன வென்றும் இவ்விதமாக தர்மத்துக்கும் சரீரத்துக்கும் ஒரு ஆதியை கற்பிக்கிறார்கள். மறுபடியும் இவைகளுக்கு ஆதியில்லை அனாதி என்று எப்படி அவர்கள் சொல்லக்கூடும். நித்தியமாயும் நிர்விகாரமாயுமிருக்கிற ஆத்மா ஹேதுவாகவும் பலனாகவும் சம்பவிக்கமாட்டாது. அமலமான ஆத்மா ஹேதுவுமாகமாட்டாது

[illegible]

हेतोरादिः फलं येषामादिर्हेतुः फलस्यच ।
तथा जन्म भवेत्तेषां पुत्राज्जन्म पितुर्यथा ॥ 142 ॥

ஹேதோராதி꞉ ஃபலம் யேஷாமாதிர்ஹேது꞉ ஃபலஸ்யச ।
ததா ஜந்ம பவேத்தேஷாம் புத்ராஜ்ஜந்ம பிதுர்யதா ॥ 142 ॥

येषां யேஷாம் = எவர்கள் மதத்தில்
हेतोः ஹேதோ꞉ = தர்மா தர்மங்களுக்கு
फलं ஃபலம் = தேகாதிகள்
आदिः ஆதி꞉ = காரணமோ
फलस्यच ஃபலஸ்யச = தேகாதிகளுக்கும்
हेतुः ஹேது꞉ = தர்மாதிகள்
आदिः ஆதி꞉ = காரணமோ
तेषां தேஷாம் = அவர்களுக்கு
यथा யதா = எப்படி
पुत्रात् புத்ராத் = புத்திரனிடத்தினின்றும்
पितुः பிது꞉ = பிதாவினுடைய
जन्म ஜந்ம = ஜன்மமோ
तथा ததா = அப்படி
जन्म ஜந்ம = ஜன்மம்
भवेत् பவேத் = உண்டாகும்

தா-ம் :—முந்தின சுலோகத்தில் காணப்படும் விருத்தத்தை எடுத்துக்காண்பிக்கிறார். தர்மத்தினின்றும் சரீரமும், சரீரத்தினின்றும் தர்மமும் உண்டானால், புத்திரனிடத்தினின்றும் பிதா உண்டானார் என்பதுபோலாகும் சரீரத்தினின்றும் தர்மம் உண்டாகிறது என்பது. இது விருத்தம். ॥142॥

संभवे हेतुफलयोरेषितव्यः क्रमस्त्वया ।
युगपत्संभवे यस्मादसंबन्धो विषाणवत् ॥ 143 ॥

ஸம்பவே ஹேதுஃபலயோரேஷிதவ்ய꞉ க்ரமஸ்த்வயா ।
யுகபத்ஸம்பவே யஸ்மாதஸம்பந்தோ விஷாணவத் ॥ 143 ॥

हेतुफलयोः ஹேதுஃபலயோ꞉ = தர்மாதிகளுடையவும் சரீராதிகளுடையவும்

संभवे ஸம்பவே = உற்பத்தியில்

क्रमः க்ரம꞉ = கிரமம்

एषितव्यः ஏஷிதவ்ய:=நிச்சயிக்கத்தக்கது.
यस्मात् யஸ்மாத்=ஏனெனில்
युगपत्संभवे யுகபத்ஸம்பவே=ஒரே காலத்தில் உண்டாவதில்
विषाणवत् விஷாணவத்=கொம்பு போல்
असंबंधः அஸம்பந்த:=சம்பந்தமில்லாமல் போகும்

தா-ம் :—ஓய்வாதி, மேற்சொன்னபடி நீர் அங்கீகாரம் செய்யாவிட்டால் ஹேது முன்னு பலன் முன்னு என்பதை நீர் நிச்சயம் செய்யவேண்டும். ஒரே காலத்தில் இரண்டும் உண்டாவதாக இருந்தால் ஒரு பசுமாட்டின் இரண்டு கொம்புகளுக்குள் எப்படி காரியகாரண பாவ சம்பந்தமில்லையோ அப்படி ஹேதுவுக்கும் பலனுக்கும் சம்பந்தமிருக்கமாட்டாது. ॥ 143 ॥

फलादुत्पद्यमानः सन्नते हेतुः प्रसिध्यति ।
अप्रसिद्धः कथं हेतुः फलमुत्पादयिष्यति ॥ 144 ॥

பலாதுத்பத்யமான: ஸந்நதே ஹேது: ப்ரஸித்யதி ।
அப்ரஸித்த: கதம் ஹேது: பலமுத்பாதயிஷ்யதி ॥ 144 ॥

ते தே=உன்னுடைய மதத்தில்
हेतुः ஹேது:=ஹேதுவானது
फलात् பலாத்=பலத்தினின்றும்
उत्पद्यमानः सन् உத்பத்யமான: ஸந்=உற்பத்தியானதாய்
न प्रसिध्यति நப்ரஸித்யதி=பிரசித்தியை அடையமாட்டாது
अप्रसिद्धः அப்ரஸித்த:=அப்பிரசித்தமான
हेतुः ஹேது:=ஹேதுவானது
कथं கதம்=எப்படி
फलं பலம்=பலத்தை
उत्पादयिष्यति உத்பாதயிஷ்யதி=உண்டுபண்ணும்

ச-ப :—இரண்டும் ஒரே காலத்திலுண்டாவதாக இருந்தால் ஒன்று மற்றொன்றை அபேக்ஷிக்கிறதினால் ஒன்றைக் காரணமென்றும் மற்றொன்றைக் காரியமென்றும் எப்படி அவைகளுக்குள் சம்பந்தத்தைக் கூறக்கூடும். தானே சித்திக்காமலும், ஜனிக்கக்கூடியதாயுமிருக்கிற பலத்திலிருந்து (காரியத்திலிருந்து) காரணமுண்டாகுமானால் அதுவும் சித்திக்காமலிருக்கவேண்டும். அதாவது முயல் கொம்பிலிருந்து ஒன்றுமுண்டாகாததுபோல், இதுவும் சித்திக்காமலிருக்கவேண்டும். [illegible] முயல் கொ

ப்புபோலிருப்பதால் ஒருக்காலத்திலும் காரியத்தை உண்டுபண்ண மாட்டாது. தங்களுடைய ஸித்தியின் பொருட்டு பரஸ்பரம் அபேக்ஷிக்கிற இரண்டு விஷயங்கள் முயல் கொம்புபோல் ஒருக்காலத்திலும் காரிய காரண சம்பந்தத்தை அடையமாட்டா, அல்லது ஆதார ஆதேய ரூபமான வேறுவித சம்பந்தத்தையும் அடையமாட்டா. ॥144॥

यदि हेतोः फलात्सिद्धिः फलसिद्धिश्च हेतुतः ।
कतरत्पूर्वनिष्पन्नं यस्य सिद्धिरपेक्षया ॥ 145 ॥

யதிஹேதோ: பலாத்ஸித்தி: பலஸித்திஶ்ச ஹேதுத:।
கதரத்பூர்வநிஷ்பந்நம் யஸ்யஸித்திரபேக்ஷயா ॥ 145 ॥ (18)

फलात् பலாத்=பலத்தினின்றும்

हेतोः ஹேதோ:=ஹேதுவுக்கு

यदि सिद्धिः யதிஸித்தி:=ஸித்தியை (அதாவது) உத்பத்தியை அங்கீகரித்தாலும்

हेतुतः ஹேதுத:=ஹேதுவினின்றும்

फलसिद्धिः பலஸித்தி:=பலன் உண்டாகிறதாக அங்கீகரித்தாலும்

अपेक्षया அபேக்ஷயா = பூர்வஸித்தியை அபேக்ஷித்து

तस्य யஸ்ய = யாதொன்று உண்டாகப்போகிற பதார்த்தத்தின்

सिद्धिः ஸித்தி:=உத்பத்தியானது ஸித்திக்குமோ அந்த ஹேது பலங்களுக்குள்

पूर्वनिष्पन्नं பூர்வநிஷ்பந்நம்=முதலில் உத்பத்தியானது

कतरत् கதரத்=எது

ச-ம்:—மேற்சொல்லியபடி ஹேது பலன்களுக்குள் காரிய காரண பாவ சம்பந்தம் ஸித்திக்கமாட்டாது. என்று நிரூபித்தாலும் மறுபடியும் அவர்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றாக உண்டாகலாம் என்று பிடிவாதமாய்ச் சொல்லும் பக்ஷத்தில் அவரை கேட்கிறதாவது அவ்விரண்டில் எது முன்னும் எது பின்னும் உண்டாகின்றது. பின்னால் உண்டாகிறதற்குக் காரணமாய் எது இருக்கிறது. அதைச் சொல்லவும். ॥145॥

अशक्तिरपरिज्ञानं क्रमकोपोऽथ वा पुनः ।
एवं हि सर्वथा बुद्धैरजातिः परिदीपिता ॥ 146 ॥ (19)

அஶக்திரபரிஜ்ஞாநம் க்ரமகோபோऽதவா புந:।
ஏவம் ஹி ஸர்வதா புத்தைரஜாதி: பரிதீபிதா ॥146॥

अशक्तिः அசக்தி: = இதை சொல்ல முடியாது என்பது

अपरिज्ञानं அபரிஜ்ஞானம் = தத்வத்தை அறியாத மூடதன்மையே

अथवा அதவா = இல்லாவிட்டால், அல்லது

पुनः புந: = மறுபடியும்

क्रमकोपः க்ரமகோப: = ஹேதுவினின்றும் பலம் பலத்தினின்று ஹேது, இவ்விதமான கிரமமில்லாமை.

(स्यात् ஸ்யாத் = இருக்கிறது)

एवंहि ஏவம்ஹி = இந்தப் பிரகாரம்

सर्वथा ஸர்வதா = எந்த விதத்திலும்

बुद्धैः புத்தை: = புத்திமான்களால்

अजातिः அஜாதி: = பிறப்பில்லாமையே

परिदीपिता பரிதீபிதா = பிரகாசம் பண்ணப்படுகிறது.

த-ம்:—காரிய காரண கிரமத்தை சொல்ல முடியாது என்றால் அஜ்ஞானமே ஸ்பஷ்டமாகிறது. சொன்னால் முன் காட்டிய தோஷம் சம்பவிக்கிறது. எவ்விதத்திலும் பண்டிதர்கள் அனுற்பத்தி பக்ஷத்தையே அங்கீகாரம் செய்யும்படி நேரிடுகிறது. ||146||

बीजाङ्कुराख्यो दृष्टान्तः सदा साध्यसमो हि सः।
न हि साध्यसमो हेतुः सिद्धौ साध्यस्य युज्यते ॥ 147 ॥

பீஜாங்குராக்யோ த்ருஷ்டாந்த: ஸதா ஸாத்யஸமோ ஹி ஸ: ॥
ந ஹி ஸாத்யஸமோ ஹேது: ஸித்தௌ ஸாத்யஸ்ய யுஜ்யதே ॥ 147 ॥

बीजाङ्कुराख्यः பீஜாங்குராக்ய: = விதை முளை என்கிற

दृष्टान्तः த்ருஷ்டாந்த: = உபமானம் எதுவோ

सः ஸ: = அது

सदा ஸதா = எப்போதும்

साध्यसमः हि ஸாத்யஸமோஹி = சாத்தியமாகிய தார்ஷ்டாந்திகத்துக்கு சமானமாகவே இருக்கிறது

साध्यसमः ஸாத்யஸம: = தார்ஷ்டாந்திகத்துக்கு சமானமாயிருக்கிற

हेतुः ஹேது: = திருஷ்டாந்தமானது

साध्यस्य ஸாத்யஸ்ய = சாத்தியமாகிய பலனுடைய

सिद्धौ ஸித்தௌ = சித்தியின்பொருட்டு

नयुज्यतेहि நயுஜ்யதேஹி = பிரமாண குசலர்களால் பிரயோகிக்கப்படுகிறதில்லை.

ச-பா:—ஹேது பலன்களுக்குள் காரிய காரணபாவம் உண்டென்று நாங்கள் சொன்னதை அவலம்பித்து, புத்திரனிடத்தினின்றும் பிதாவின் ஜன்மம்போலும், ஏககாலத்திலுண்டாகிற கொம்புகளில்போலும், காரணகாரியபாவம் நாம் சொன்னபடி சம்பவிக்கமாட்டாது என்று நீ ஆக்ஷேபித்தாய். அஸித்தமான ஹேதுவினின்றும் பலஸித்தியையும், அஸித்தமானபலத்தினின்றும் ஹேதுவின்ஸித்தியையும் நாம் ஒப்புக்கொள்ளவில்லை. பின்னையோ வெனின், பீஜாங்குரம்போல் காரிய காரண பாவத்தை ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆகையால் அன்னியோன்னியாஸ்ரய தோஷமில்லை.

இப்படிச் சொல்லும் பூர்வபக்ஷியைப் பார்த்து இனி உத்தரம் சொல்லுகிறார்.

பீஜாங்குர திருஷ்டாந்தம் பொருந்தாது. ஏனெனின் ஒரு விரையினின்றும் ஒரு முளை உண்டாகிறது. அதினின்றும் விரை உண்டாகிறது. இப்படி உண்டாவதை ஆதி என்று பிரத்தியக்ஷமாய்க் கண்டிருக்கிறோம். இப்படியே ஹேது பலன்களையும் சொல்லவேண்டும். அப்போது மேற்கூறிய அன்னியோன்னியாஸ்ரய தோஷம் சம்பவிக்கும் பீஜ சந்ததிக்கும் அங்குர சந்ததிக்கும் அனாதியாயிருக்கும் தன்மையும் ஒன்றுக்கொன்று காரணமாயிருக்கும் தன்மையும் இருப்பதில் யாதொரு விரோதமுமில்லை என்று சொல்லுவது சரியன்று. பீஜாங்குரத்தை அனாதியாக ஒப்புக்கொள்ளுகிற வாதிகள் பீஜாங்குர சந்ததியையும் ஹேது பல சந்ததியையும் அனாதியாக ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஆகவே ஹேதுவையும் பலனையும் எப்படி அனாதி என்று சொல்லலாம். ॥147॥

पूर्वापरापरिज्ञानमजातेः परिदीपकम् ।
जायमानाद्धि वै धर्मात्कथं पूर्वं न गृह्यते ॥ 148 ॥

பூர்வாபராபரிஜ்ஞாநம் அஜாதே: பரிதீபகம் ।
ஜாயமாநாத்தி வை தர்மாத் கதம் பூர்வம் ந க்ருஹ்யதே ॥148॥

पूर्वापरापरिज्ञानं பூர்வாபராபரிஜ்ஞாநம்=ஹேதுபலன்களில் இன்னதுதான் காரணம், இன்னது காரியம், என்று அறியாமை

अजातेः அஜாதே:=உற்பத்தியில்லை என்னும் பக்ஷத்திற்கு

परिदीपकं பரிதீபகம்=பிரகாசம் செய்கிறது

जायमानात् ஜாயமாநாத்=உற்பத்தியாகும்

हि वै ஹிவை=பிரசித்தமான

यतः யத: = காரியத்தினின்றும்
पूर्वं பூர்வம் = காரணம்
कथं கதம் = எப்படி
न गृह्यते நக்ருஹ்யதே = கிரகிக்க முடியாது

தா-ம்:—19-வது சுலோகத்தில் பண்டிதர்கள் அனுத்பத்தியையே ஆதரிக்கிறதாக சொல்லப்பட்டது. அது எப்படி எனில் உற்பத்தியாகிற பதார்த்தம் கிரகிக்கப்பட்டால், அதின் காரணமும் கிரகிக்கப்படவேண்டும். காரியத்தை கிரகிக்கிறவன் காரணத்தை அவசியம் கிரகிக்கவேண்டியது. ஏனெனில் ஜன்னிய ஜனகங்களுக்கு சம்பந்தம் எப்போதும் இருக்கிறது. அது கிரிகிக்கப்படாமற்போனால் ஜன்னிய ஜனகபாவமே இல்லையென்று சித்திப்பதால் அஜாதி யென்கிற உற்பத்தி இல்லாமைக்கு இது அதாவது காரிய காரண அபாவமே பிரகாசமாகும். ॥ 148 ॥

स्वतो वा परतो वापि न किंचिद्वस्तु जायते ।
सदसत्सदसद्वापि न किंचिद्वस्तु जायते ॥ 149 ॥ (௨௨)

ஸ்வதோவாபரதோவாபி நகிஞ்சித்வஸ்துஜாயதே ।
ஸதஸத்ஸதஸத்வாபி நகிஞ்சித்வஸ்துஜாயதே ॥ 149 ॥

स्वतः वा ஸ்வத:வா = தானாகவாவது, அதாவது தன்னிடத்திலிருந்தாவது
परतो वापि பரதோவாபி = வேறு ஒன்றிலிருந்தாவது
எந்த किञ्चित् वस्तु கிஞ்சித்வஸ்து = எவ்வளவு பதார்த்தமும்
न जायते நஜாயதே = உண்டாகிறதில்லை
सत् ஸத் = சத்தாயிருந்தாலும் சரி
असत् அஸத் = அசத்தாயிருந்தாலும் சரி
सदसत् वापि ஸதஸத்வாபி = சத அசத்தாயிருந்தாலும் சரி
किंचिद्वस्तु கிஞ்சித்வஸ்து = வஸ்து எவ்வளவேனும்
न जायते நஜாயதே = உண்டாகிறதில்லை

தா-ம்:—வாஸ்தவத்தில் வஸ்துவுக்கு உற்பத்தியில்லை என்பதை இந்த சுலோகத்தில் சொல்லுகிறார். கடத்திலிருந்து கடம் உண்டாகததுபோல் ஒரு வஸ்து தன்னிடத்திலிருந்தே உண்டாகமாட்டாது. துணியிலிருந்து கடம் உண்டாகாததுபோல் ஒரு வஸ்து வேறு ஒன்றிலிருந்தும் உண்டாகமாட்டாது. கடமும் துணியும் சேர்ந்த ஒரு கடத்தை உண்டுபண்ணாததுபோல் ஒரு வஸ்து தன்னிடத்திலிருந்தும் வேறொன்றினிடமிருந்தும் உண்டா

க.மாட்டாது. மண்ணிலிருந்து கடமும் மாதா பிதாக்களிடமிருந்து குழந்தைகளும்உண்டாவதைப் பார்க்கிறோமென்று ஒருவன் ஆக்ஷேபிக்கும் பக்ஷத்தில் மூடர்களின் திருஷ்டிப்படி ஞானமும் வசனமும் வேறு யிருப்பதாகத் தோன்றலாம்.

ஞானிகளின் அபிப்பிராயப்படி உற்பத்தியானவைகளை பற்றி விவேசனை செய்து பார்க்குமளவில் வசனத்துக்கும் ஞானத்துக்கும் விஷயங்களான கடம் புத்திரன் முதலியவைகள் சத்தியமாய்க் காணப்பட்டால் சப்த மாத்திரமாகவே காணப்படுகின்றன. சுருதியும் அப்படியே சொல்லுகிறது. மேலும் மிருத்பிண்டம்போல் வஸ்து சத்தாயிருந்தால் அதற்கு ஜன்மம் சொல்லவேண்டியதில்லை. முயல்கொம்புபோல அசத்தாயிருந்தால் அது ஒருக்காலத்திலும் உண்டாகமாட்டாது. சத சத்தாயிருக்கும்பக்ஷத்தில் ஒரே வஸ்து இருட்டும் பிரகாசமும்போல் விருத்த தர்மங்களுடன்கூடி யிராதபடியால் அவைகளினின்றும் ஒன்றும் உற்பத்தி யாகமாட்டாது. ஆகையால் ஒன்றும் உற்பத்தியாகிறதில்லை என்று சொல்லுவது யுக்தமே. பௌத்தர்கள் வஸ்துக்களை க்ஷணிக மென்றும் ஒன்றையே கிரியை ஹேது பலம் என்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அது சரியல்ல பதார்த்தங்களை க்ஷணிகமென்று சொல்லும்பக்ஷத்தில் இது வஸ்து அதின் காலம் இன்னதுதானென்று நிச்சயம்பண்ணின பிறகு அனுபவம் உண்டாகக்கூடும். அந்தவஸ்து இராததால் அனுபவம் உண்டாகவில்லை. அதின் விஷய ஸ்மரணமும் உண்டாகமாட்டாது. ஆகையால் அந்த மதம் விருத்தமானபடியினாலே தூரம் தள்ளப்பட்டது.

हेतुर्न जायतेऽनादेः फलं चापि स्वभावतः ।
आदिर्न विद्यते यस्य तस्य ह्यादिर्न विद्यते ॥ 150 ॥

ஹேதுர்ந ஜாயதேऽநாதே: பலஞ்சாபி ஸ்வபாவத: ।
ஆதிர்ந வித்யதே யஸ்ய தஸ்ய ஹ்யாதிர்ந வித்யதே ॥ 150 ॥

अनादेः அநாதே:=ஆதியில்லாத பலத்தினின்றும்
हेतुः ஹேது:=ஹேதுவானது
न जायते நஜாயதே=உண்டாகமாட்டாது
अनादेः அநாதே:=ஆதியில்லாத ஹேதுவினின்றும்
फलञ्चापि பலஞ்சாபி=பலமும்
स्वभावतः ஸ்வபாவத:=ஸ்வபாவத்தில்

यस्य யஸ்ய=எதற்கு

आदिः ஆதி:=காரணம்

न विद्यते ந வித்யதே=இல்லையோ

तस्य தஸ்ய=அதற்கு

आदिः ஆதி:=உற்பத்தியும்

न विद्यते ந வித்யதே=இல்லை

ஜ-பா:—ஹேது பலன்களுக்கு ஆதியில்லை என்று சொல்லு கிறவன் அவைகள் உற்பத்தியாகவில்லை என்றும் ஒப்புக்கொள்ள வேண்டும். எதற்குக் காரணமில்லையோ அது அனாதி. எதற்குக் காரணமிருக்கிறதோ அதுதான் ஆதியுள்ளது. எப்போது ஒன்று அனாதியாயிற்றோ அப்போது காரணமில்லை. ஆகையால் உற்பத் தியுமில்லை. ॥150॥

प्रज्ञप्तेः सनिमित्तत्वमन्यथा द्वयनाशतः ।
संक्लेशस्योपलब्धेश्च परतन्त्राऽस्तिता मता ॥ 151 ॥

ப்ரஜ்ஞப்தே: ஸநிமித்தத்வமந்யதா த்வயநாஶத: ।
ஸம்க்லேஶஸ்யோபலப்தேஶ்ச பரதந்த்ராऽஸ்திதா மதா ॥151॥

प्रज्ञप्तेः ப்ரஜ்ஞப்தே:=சப்தாதிகளின் ஞானம்

स निमित्तत्वं ஸநிமித்தத்வம்=காரணத்தோடே கூடிக்கொண்டிருக் கிறது அதாவது விஷயத்துடன் கூடினதென்று அர்த்தம்

अन्यथा அந்யதா=இப்படி இல்லாவிடில்

द्वयनाशतः த்வயநாஶத:=விஷயம், ஞானம் இவ்விரண்டும் நாச மாய் விடுவதாலும்

संक्लेशस्य ஸம்க்லேஶஸ்ய=துக்கத்தினுடைய

उपलब्धेश्च உபலப்தேஶ்ச=உபலப்தியினாலும்

परतन्त्रास्तिता பரதந்த்ராஸ்திதா=இதரமதப்பிரகாரம் ஞானத் துக்கு அஸ்திவம்

मता மதா=பாவிக்கப்பட்டிருக்கிறது.

ஜ-பா:—மேற்சொன்ன அர்த்தத்தை ஸ்திரப்படுத்துவதற் காக மறுபடியும் ஆக்ஷேபிக்கிறார். சப்தாதி ஞானம் ஆத்மாவை விட வேறு விஷயத்துடன் கூடியிருப்பதாகச் சொல்லுகிறோம். விஷயமன்றியில் ஞானமுண்டாகமாட்டாது. அப்படி உண்டாகும் பக்ஷத்தில் கருப்பு சிகப்பு வெளுப்பு சப்தஸ்பர்சம் முதலிய ஞான பேதங்கள் சித்திக்காமற் போகும். ஞானபேதத்தைப் பிரத்தி [illegible] கண்டிருப்பதால் அன்னிய சாஸ்திரத்திற் சொல்லிய

ஞானத்தைவிட வேறான பாஹ்ய விஷயமிருப்பதாலே ஒப்புக்கொள்ளவேண்டும். ஸ்படிகத்துக்கு நீலம் முதலிய உபாதிகளன்றியில் பேதம் ஏற்படமாட்டாதுபோல் பிரகாசமாத்திர ஸ்வரூபமான ஞானத்துக்கு விஷயபேதமன்றியில் பேதம் ஏற்படமாட்டாது. மேலும் அக்கினி இருந்தால்தான் சுடுதல் என்கிற ஞானமும் தாக்கமும் உண்டாகும். இல்லாவிட்டால் இவை உண்டாகமாட்டா. ஆகையால் பாஹ்யமான விஷயமிருக்கிறதாகவே ஒப்புக்கொள்ளவேண்டும் (இது பூர்வபக்ஷ ச்லோகம்.)

प्रज्ञप्तेः सनिमित्तत्वमिष्यते युक्तिदर्शनात् ।
निमित्तस्यानिमित्तत्वमिष्यते भूतदर्शनात् ॥ 152 ॥
ப்ரஜ்ஞப்தே: ஸநிமித்தத்வமிஷ்யதே யுக்திதர்சநாத் ।
நிமித்தஸ்யாநிமித்தத்வமிஷ்யதே பூததர்சநாத் ॥ 152 ॥

युक्तिदर्शनात् யுக்திதர்சநாத்=யுக்தியை கண்டிருப்பதால்
प्रज्ञप्तेः ப்ரஜ்ஞப்தே:=பிரஞ்ஞப்திக்கு
सनिमित्तत्वं ஸநிமித்தத்வம்=விஷயத்துடன் கூடினதன்மை
इष्यते இஷ்யதே=உன்னால் சொல்லப்படுகிறது
निमित्तस्य நிமித்தஸ்ய=கடாதிரூப நிமித்தத்துக்கு
अनिमित्तत्वे அநிமித்தத்வம்=காரணமன்றி இருப்பது அதாவது விஷயமன்றி இருப்பது
भूतदर्शनात् பூததர்சநாத்=பாரமார்த்திக திருஷ்டியால்
इष्यते இஷ்யதே=எங்களால் சொல்லப்படுகிறது.

ச-பா:— ஞான பேதத்தையும் தாக்கத்தையும் பார்த்து பிரஞ்ஞப்திக்குக் காரணமாகிற பாஹ்ய விஷயமிருக்கவேண்டும் என்று நீ சொன்னாய். விசார திருஷ்டியால் நாம் பார்க்கும்போது காரணமான விஷயமிருக்கிறதாகத் தோன்றவில்லை. கடம் மிருத்ஸ்வரூபமாகப் பார்க்கப்படும்போது அதற்கு வேறாகக் காணப்படவில்லை. அப்படியே படம் தந்துவைவிட வேறில்லை. இப்படி எல்லாம் பாரமார்த்தத்தைவிட வேறில்லை. ஆகையால் சர்வ பதார்த்தங்களும் நிஷேதிக்கப்படுவதால் பிரஞ்ஞப்திக்கு நிமித்தம் காணப்படவில்லை.

அல்லது இரச்சுவில் சர்ப்பாதிகள் பரமார்த்தமாக இராதது போல் ஞானத்துக்கும் விஷயம் பாரமார்த்திகமாயில்லை. சுஷுப்தி சமாதி, முக்தி, இவைகளில் பிராந்தி ஞானமன்றியில் ஆத்மாவை விட வேறு விஷயம் காணப்படவில்லை. உன்மத்தனால் காணப்

பட்ட வஸ்து உன்மத்தனுபிராதவனாலும் அப்படியே காணப்படாததுபோலும். ஆகையால் யுக்தி கண்டிருப்பதால். ஞானமானது விஷயத்தோடு கூடியிருக்கவேண்டும் என்று சொன்னதானது நிராகரிக்கப்பட்டது.

चित्तं न संस्पृशत्यर्थं नार्थाभासं तथैव च ।
अभूतो हि यतश्चार्थो नार्थाभासस्ततः पृथक् ॥ 153 ॥

சித்தம் ந ஸம்ஸ்ப்ருசத்யர்த்தம் நார்த்தாபாஸம் ததைவ ச ।
அபூதோ ஹி யதஸ்சார்த்தோ நார்த்தாபாஸஸ்தத: ப்ருதக் ॥ 153 ॥

चित्तं சித்தம்=மனது
अर्थं அர்த்தம்=விஷயங்களை
न संस्पृशति நஸம்ஸ்ப்ருசதி=தொடுகிறதில்லை
तथैव च ததைவச=அப்படியே
अर्थाभासं அர்த்தாபாஸம்=மனோராச்சியமான விஷயாபாசங்களை
யும்
न ந=தொடுகிறதில்லை
यतः யத:=ஏனெனில்
अर्थः அர்த்த:=விஷயம்
अभूतः हि அபூத: ஹி=இல்லை
अर्थाभासः அர்த்தாபாஸ:=விஷயாபாசம்
ततः தத:=அதற்கு (மனதுக்கு)
पृथक् ப்ருதக்=வேறாக
न ந=இல்லை

தா-ம் :—ஞேயமான விஷயத்தை ஒட்டியே ஞானம் சம்பவிக்கிறபடியால் விஷயமில்லாவிட்டால் ஞானமுமில்லாமற் போகுமே என்கிற சங்கையின்பேரில் சொல்லுகிறார். மனதுக்கு பாஹிய விஷயங்களே யில்லாதபடியால் மனது அவைகளுடன் சம்பந்தப்படமாட்டாது அப்படியே மனோமயமானமான சிக பதார்த்தாபாசங்களுடனும் ஸ்வப்நத்தில்போல் சம்பந்தப்படுகிறதில்லை: இரண்டாவது பிரகரணத்தில் சொல்லிய காரணங்களால் ஜாக்கிறத் காலத்தில் பார்க்கப்படும் பதார்த்தங்களும் ஸ்வப்நத்தில் பார்க்கப்படும் பதார்த்தங்கள்போல் மித்தையாகவே யிருக்கின்றன. ஸ்வப்நத்தில் பதார்த்தங்கள் மனதால் கற்பிக்கப்படுவதுபோல் ஜாக்கிறத் பதார்த்தங்கள் மனதின் கற்பனைகளானதால் மனதிற்கு வேறன்று.

निमित्तं न सदा चित्तं संस्पृशत्यध्वसु त्रिषु ।
अनिमित्तो विपर्यासः कथं तस्य भविष्यति ॥ 154 ॥ (27)

நிமித்தம் ந ஸதா சித்தம் ஸம்ஸ்ப்ருசத்யத்வஸு த்ரிஷு ।
அநிமித்தோ விபர்யாஸ: கதம் தஸ்ய பவிஷ்யதி ॥ 154 ॥

चित्तं சித்தம்=ஞானமானது
निमित्तं நிமித்தம்=விஷயத்தை
त्रिषु த்ரிஷு=மூன்று
अध्वसु அத்வஸு=காலங்களிலும்
सदा ஸதா=எப்போதும்
न संस्पृशति நஸம்ஸ்ப்ருசதி=தொடுகிறதில்லை
तस्य தஸ்ய=அந்த ஞானத்தின்
विपर्यासः விபர்யாஸ:=மாறுதல் அதாவது பிரமம்
अनिमित्तः அநிமித்த:=விஷயமன்றியில்
कथं கதம்=எப்படி
भविष्यति பவிஷ்யதி=உண்டாகும்

ச-பா:—கெடாதிகளான விஷயமில்லாதபக்ஷத்தில் ஞானம் கெடாகாரமாகத் தோன்றுவது பிரமையானால், யதார்த்தஞானம் ஒரு இடத்தில் இருக்கவேண்டுமே எனின் ஞானமானது விஷயத்துடன் மூன்று காலங்களிலும் சம்பந்தப்படுகிறதில்லை. அப்படி சம்பந்தப்பட்டால் அந்த ஞானம் யதார்த்தமாகும். அதை அபேக்ஷித்து கெடாதிகளன்றி கடாகாரமாகத் தோன்றுவது பிரமையாக ஆகிவிடும். ஒருக்காலும் ஞானத்துக்கு விஷயத்துடன் சம்பந்தங்கிடையாது. ஆகையால் கெடாதி விஷயமில்லாமல் கெடாகாரமாகத் தோன்றுவதே ஞானத்தின் ஸ்வபாவம் ॥154॥

तस्मान्न जायते चित्तं चित्तदृश्यं न जायते ।
तस्य पश्यन्ति ये जातिं खे वै पश्यन्ति ते पदम् ॥ 155 ॥ (28)

தஸ்மாந்நஜாயதே சித்தம் சித்தத்ருச்யம் நஜாயதே ।
தஸ்ய பச்யந்தியே ஜாதிம் கேவை பச்யந்தி தே பதம் ॥155॥

तस्मात् தஸ்மாத்=ஆகையால்
चित्तं சித்தம்=ஞானம்
न जायते நஜாயதே=உண்டாகிறதில்லை
चित्तदृश्यं சித்தத்ருச்யம்=ஞானத்தால் கிரகிக்கப்படும் பதார்த்த

மும்

तस्य தஸ்ய=அதின்
जातिं ஜாதிம்=உற்பத்தியை
ये யெ=எவர்கள்
पश्यन्ति பஶ்யந்தி=பார்க்கிறார்களோ
ते தெ=அவர்கள்
खे கெ=ஆகாசத்தில்
पदम् பதம்=பக்ஷிகளின் காலடியை
पश्यन्ति वै பஶ்யந்திவெ=பார்க்கிறார்கள்

ச-பா:—பாஹ்ய அர்த்தவாதியின் பக்ஷத்தை நிஷேதிக்கிற பௌத்த மதத்தை ஆசாரியர் ஒப்புக்கொண்டு அதை ஹேதுவாய் வைத்துக்கொண்டு அந்த மதத்தைக் கண்டிக்கிறார். கடாதி விஷயமன்றியில் ஞானம் கடாகாரமாகத் தோன்றுகிறதென்று விஞ்ஞானவாதி ஒப்புக்கொள்ளுகிறான். வாஸ்தவத்தைப் பார்ப்பதில் அது சரிதான் என்று அத்வைதிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனதால் ஞானத்துக்கு உற்பத்தியன்றியில் கடாகாரத் தோற்றம் சம்பவிக்கமாட்டாதென்று பௌத்தன் செய்யும் ஆக்ஷேபத்துக்கு உத்தரம் யாதெனின் ஞானம் உற்பத்தியை அடையவில்லை. ஞானத்தால் அறியக்கூடிய வஸ்துவும் உற்பத்தியாகவில்லை. அப்படியிருக்க அந்த ஞானம் உண்டாகிறதென்றும், க்ஷணிகமென்றும், துக்கமென்றும், சூன்யமென்றும் அனாத்மாவென்றும், ஞானத்தாலேயே ஞானஸ்வரூபத்தை அறிய அசமர்த்தர்களான எந்த விஞ்ஞானவாதிகள் பார்க்கிறார்களோ அவர்கள், ஆகாசத்தில் பக்ஷி முதலியவைகளுடைய அடியை பார்ப்பார்கள். தவிர இதர துவைதிகளைவிட மிகவும் சாஹஸிகத்திய முடையவர்கள் என்று அர்த்தம். எவன் சர்வத்தையும் சூன்யம் என்று பார்த்து தன்னுடைய ஞானத்தையும் சூன்யமாகப் பிரதிஞ்ஞை பண்ணுகிறானோ, அவன் விஞ்ஞானவாதியைவிடசாஹஸிகன். அவன் ஆகாசத்தை கைக்குள் அடக்க இச்சிக்கிறான். ||155||

अजातं जायते यस्मादजातिः प्रकृतिस्ततः ।
प्रकृतेरन्यथाभावो न कथंचिद्भविष्यति ॥ 156 ॥

அஜாதம் ஜாயதெ யஸ்மாதஜாதிஃ ப்ரக்ருதிஸ்ததஃ ।
ப்ரக்ருதெரந்யதாபாவொ நகதம்சித்பவிஷ்யதி ॥ 156 ॥

यस्मात् யஸ்மாத்=எந்த காரணத்தால்
अजातं அஜாதம்=ஜ...

जायते ஜாயதே=ஜனனத்தை அடைகிறதென்று வாதிகளால் கற்பிக்கப்படுகிறதோ

ततः தத꞉=அந்த காரணத்தால்
अजातिः அஜாதி꞉=உற்பத்தி இல்லாமையே
प्रकृतिः ப்ரக்ருதி꞉=ஸ்வபாவம்
प्रकृतेः ப்ரக்ருதே꞉=அந்த ஸ்வபாவத்துக்கு
अन्यथाभावः அந்யதாபாவ꞉=மாறுதல்
कथंचित् கதஞ்சித்=ஒரு விதத்தாலும்
न भविष्यति நபவிஷ்யதி=உண்டாகமாட்டாது.

ச-பா:—மேற்சொன்ன ஹேதுக்களால் பிரம்மம் உற்பத்தியற்றதென்றும் ஏகமென்றும் முதலில் பிரதிஞ்ஞை செய்யப்பட்டது. இந்த சுலோகத்தில் இது உபசம்காரம் செய்யப்படுகிறது.

अनादेरन्तवत्त्वं च संसारस्य न सेत्स्यति ।
अनन्तता चादिमतो मोक्षस्य न भविष्यति ॥ 157 ॥

அநாதேரந்தவத்வஞ்ச ஸம்ஸாரஸ்ய நஸேத்ஸ்யதி ।
அநந்ததா சாதிமதோ மோக்ஷஸ்ய நபவிஷ்யதி ॥ 157 ॥

अनादेः அநாதே꞉=ஆதியில்லாத
संसारस्य ஸம்ஸாரஸ்ய=சம்சாரத்துக்கு
अन्तवत्त्वं அந்தவத்வம்=முடிவு
न सेत्स्यति நஸேத்ஸ்யதி=யுக்தியால் சித்திக்கிறதில்லை
आदिमतः ஆதிமத꞉=ஞானோற்பத்திகாலத்தில் உண்டாகிறபடியால் ஆதியுடன்கூடின
मोक्षस्य மோக்ஷஸ்ய = மோக்ஷத்துக்கு
अनन्तता அநந்ததா=முடிவு இல்லாமை
न भविष्याति நபவிஷ்யதி=உண்டாகிறதில்லை

ச-பா:—ஆத்மாவுக்கு பந்தமோக்ஷங்கள் பரமார்த்தங்கள் என்று சொல்லுகிறவாதியின் மதத்தில் இந்ததோஷம் சொல்லப்படுகின்றது. ஆதியில்லாத சம்சாரத்துக்கு யுக்தியால் முடிவு சித்திக்கிறதில்லை ஏனெனின் அனாதியின் ஒருபதார்த்தமும் லோகத்தில் அந்தத்தோடுகூடினதாகக் காணப்படுகிறதில்லை. பீஜாங்குரத்தின் சம்பந்தம் தொடர்ச்சியா யிருப்பதுபோல் அந்தத்தோடு கூடினதென்று சொல்லும்பக்ஷத்தில் பீஜாங்குர சம்பந்தம் ஒன்றாக இராமல் பலவாக இருப்பதால் ஆதியுடன்கூடினதாக இருக்கிறது. அப்படியே ஞானகாலத்தில் உண்டாகிறமோக்ஷமும் கடாதிகள்போல் முடிவு

அற்றதாக ஆகமாட்டாது. கொம்பின் நாசம்போல் அந்தமில்லாதது என்று சொன்னால் அந்த விநாசம் சுபாவமாகையால் முயற் கொம்புபோல் அஸத்தாகவேயிருக்கிறது. ஆகையால் மோக்ஷம் பரமார்த்தமென்று சொன்ன பிரதிஞ்ஞைக்கு ஹானிவருகிறது.

आदावन्ते च यन्नास्ति वर्तमानेऽपि तत्तथा ।
वितथैः सदृशाः सन्तोऽवितथा इव लक्षिताः ॥ 158 ॥
ஆதாவந்தே ச யந்நாஸ்தி வர்தமாநே(அ)பி தத்ததா ।
விததை: ஸத்ருஶா: ஸந்தோ(அ)விததா இவ லக்ஷிதா: ॥ 158 ॥

सप्रयोजनता तेषां स्वप्ने विप्रतिपद्यते ।
तस्मादाद्यन्तवत्त्वेन मिथ्यैव खलु ते स्मृताः ॥159 ॥
ஸப்ரயோஜநதா தேஷாம் ஸ்வப்நே விப்ரதிபத்யதே ।
தஸ்மாதாத்யந்தவத்த்வேந மித்யைவ கலு தே ஸ்ம்ருதா: ॥ 159 ॥

சபா:—இந்த 31-32-வது சுலோகங்கள் இரண்டாவது அத்தியாயத்தில் 6-7-வது சுலோகங்களே. உற்பத்திமோக்ஷங்கள் வாஸ்தவத்திலில்லை என்பதை திடம்பண்ண இவ்விடத்தில் மறுபடியும் கூறப்பட்டிருக்கின்றன,

सर्वे धर्मा मृषा स्वप्ने कायस्यान्तर्निदर्शनात् ।
संवृतेऽस्मिन्प्रदेशे वै भूतानां दर्शनं कुतः ॥ 160 ॥
ஸர்வே தர்மா ம்ருஷா ஸ்வப்நே காயஸ்யாந்தர்நிதர்ஶநாத் ।
ஸம்வ்ருதே(அ)ஸ்மிந்ப்ரதேஶே வை பூதாநாம் தர்ஶநம் குத: ॥160

स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்நத்தில்
सर्वे ஸர்வே=சமஸ்தமான
धर्माः தர்மா:=பதார்த்தங்களும்
कायस्य காயஸ்ய=சரீரத்துக்கு
अन्तः அந்த:=உள்ளே
निदर्शनात् நிதர்ஶநாத்=காணப்படுவதால்
मृषाः ம்ருஷா:=மித்தையே
संवृते ஸம்வ்ருதே= அவகாசமில்லாத
अस्मिन् அஸ்மிந்=இந்த
प्रदेशे ப்ரதேஶே= பிரத்தியக்பிரம்மத்து னிடத்தில்
भूतानां பூதாநாம்=பதார்த்தங்களின்
दर्शनं தர்ஶநம்=பார்வை
कुतः குத:=எப்படி உண்டாகும்

ச-பா :—நிமித்தஸ்ய அநிமித்தத்வம் என்கிற (25-152) சுலோகார்த்தத்தையே இது முதலான சுலோகங்கள் விவரிக்கின்றன.

न युक्तं दर्शनं गत्वा कालस्यानियमाद्गतौ ।
प्रतिबुद्धश्च वै सर्वस्तस्मिन्देशे न विद्यते ॥ 161 ॥

𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌕𑌾𑌲𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌯𑌮𑌾𑌦𑍍𑌗𑌤𑍌 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌶𑍍𑌚 𑌵𑍈 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍇𑌶𑍇 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥161॥

गतौ 𑌗𑌤𑍌=ஸ்வப்நத்தில் தேசாந்திரத்துக்குபோகிற விஷயத்தில்

कालस्य 𑌕𑌾𑌲𑌸𑍍𑌯=காலத்தின்

अनियमात् 𑌅𑌨𑌿𑌯𑌮𑌾𑌤𑍍=நியமமில்லாதபடியால்

गत्वा 𑌗𑌤𑍍𑌵𑌾=தேசாந்திரத்துக்கு வாஸ்தவத்தில்போய்

दर्शनं 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂=பதார்த்தங்கள்பார்க்கபபடுகின்றனவென்பது

न युक्तं 𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂=யுக்தமன்று

प्रतिबुद्धश्च 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌶𑍍𑌚=விழித்துக்கொண்ட

सर्वः 𑌸𑌰𑍍𑌵𑌃=சகலமும்

तस्मिन् 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍=அந்த

देशे 𑌦𑍇𑌶𑍇=ஸ்வப்நத்தில் பார்த்ததேசாந்திரத்தில்

न विद्यते 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇=இருக்கிறதில்லை

ஸ்வப்நத்தில் ஜீவன் வேறுஇடத்துக்குப்போகிறதில்லை இதுபோல் ஜாக்கிரத்தில் தேகாதிகளி லிருப்பதாக பாவிக்கிற அஞ்ஞானியின் அஞ்ஞானநித்திரையைவிட்டு விழித்துக்கொண்ட உடன், தன்னுடைய பிரம்மஸ்வரூபத்தைப்பார்க்கிருனேதவிர வேறு ஒன்றும் பார்க்கிறதில்லை. ஆகையால் ஜாக்கிரத்தும் ஸ்வப்நமும் சமம்.

मित्राद्यैः सह संमन्त्र्य संबुद्धो न प्रपद्यते ।
गृहीतं चापि यत्किंचित्प्रतिबुद्धो न पश्यति ॥ 162 ॥

𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑌹 𑌸𑌂𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯 𑌸𑌂𑌬𑍁𑌦𑍍𑌧𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇
𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍋 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥ 162॥

मित्राद्यैः सह 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑌹=ஸ்வப்நத்தில் இஷ்டமித்திரர்களுடன்

संमन्त्र्य 𑌸𑌂𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯=சம்பாஷணைசெய்து

संबुद्धः 𑌸𑌂𑌬𑍁𑌦𑍍𑌧𑌃=விழித்துக்கொண்டவன்

न प्रपद्यते 𑌨 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇=ஒன்றையும்பார்க்கிறதில்லை.

यत्किञ्चिदपि யத்கிஞ்சிதபி=ஸ்வர்ணம் முதலிய யாதொருபதார்த்தத்தையும்

प्रतिबुद्धः ப்ரதிபுத்த:=விழித்துக்கொண்டவன்

नपश्यति நபச்யதி=பார்க்கிறதில்லை

ச-பா :—ஸ்வப்நத்திற்கண்ட வஸ்துக்கள் விழித்துக்கொண்டபிறகு நாசத்தை அடைவதால் பொய்யாயிருப்பதுபோல் ஜாக்கிரத்காலத்தில் பிரம்மஞானிகளுடைய உபதேசத்தால் அவித்தையாகிற நித்திரையினின்றும் விழித்துக்கொண்டவன் எல்லாம்பொய் என்று அறிகிறான். அப்படி அறிந்தவனுக்கு எல்லாரும் நித்தியமுக்தர்கள்! என்கிற நிச்சயமிருப்பதால் ஞானம்வருகிறதற்குமுன் மோக்ஷ இச்சையும் சிரவணாதிகளைச் செய்யவேண்டியதென்கிற ஞானமும் இவைகளெல்லாம் பிராந்தி என்று கூறுகிறார்.

स्वप्ने चावस्तुकः कायः पृथगन्यस्य दर्शनात् ।
यथा कायस्तथा सर्वं चित्तदृश्यमवस्तुकम् ॥ 163 ॥

ஸ்வப்நே சாவஸ்துக: காய: ப்ருதகந்யஸ்ய தர்சநாத் ।
யதாகாயஸ்ததா ஸர்வம் சித்தத்ருச்யமவஸ்துகம் ॥ 163 ॥

स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்நத்தில் (காணப்படும், வியவஹாரிக்கு)

कायः காய:=சரீரம்

अवस्तु कः அவஸ்துக:=பொய் (ஏனெனில்)

अन्यस्य அந்யஸ்ய=அந்த ஸ்வப்ந சரீரத்துக்கு

पृथक् ப்ருதக்=வேறான (ஜாக்கிரத்காலத்திலுள்ள சரீரம்)

दर्शनात् தர்சநாத்=காணப்படுகிறது

यथा யதா=எப்படி

कायः காய:=(ஸ்வப்நத்தில் பார்க்கப்பட்ட) சரீரம்(அசத்தோ)

तथा ததா=அப்படி (ஜாக்கிரத்திலும்)

चित्तदृश्यं சித்தத்ருச்யம்=மனதால் அறியக்கூடிய

सर्वं ஸர்வம்=சமஸ்தமானது

अवस्तुकं அவஸ்துகம்=பொய்யே

ச-பா :—ஸ்வப்நத்தில் சஞ்சரிக்கிறதாகத் தோன்றும் சரீரம் பொய்யேனெனின் ஸ்வப்நம் பார்க்கிறவன் தூங்குகிற இடத்திலேயே அந்தசரீரத்தைவிடவேறானசரீரம் இருக்கிறதுஸ்வப்நசரீரம் பொய் போல் ஜாக்கிரத்தில் காணப்படும் பதார்த்தங்களும் பொய். ஏனெனின் இரண்டும் மனோகற்பனைகளே. ஸ்வப்நம்போல் ஜாக்கிரத்தும்

ग्रहणाज्जागरितवत्तद्धेतुः स्वप्न इष्यते ।
तद्धेतुत्वात्तु तस्यैव सज्जागरितमिष्यते ॥ 164 ॥

க்ரஹணாஜ்ஜாகரிதவத்தத்தேதுஃ ஸ்வப்ந இஷ்யதே । (37)
தத்தேதுத்வாத்து தஸ்யைவ ஸஜ்ஜாகரிதமிஷ்யதே ॥ 164 ॥

जागरितवत् ஜாகரிதவத்=ஜாக்கிரதம்போல்

हणात् க்ரஹணாத்=கிராஹிய கிராஹகரூபமாய் ஸ்வப்நம் கிரஹிக்கப்படுவதால்

तद्धेतुः தத்தேதுஃ=ஜாக்கிரதத்தை ஹேதுவாய் உடைத்தாயிருக்கிற அதாவது ஜாக்கிரத்தின் காரியமாக

स्वप्नः ஸ்வப்நஃ=ஸ்வப்நம்

इष्यते இஷ்யதே=சொல்லப்படுகிறது

तद्धेतुत्वात् தத்தேதுத்வாத்=ஜாக்கிரத் காரியமாயிருப்பதால்

तस्यैव தஸ்யைவ=ஸ்வப்ந திருஷ்டாவுக்கே

जागरितं ஜாகரிதம்=ஜாக்கிராவஸ்தை

सत् ஸத்=இருப்பதாக

इष्यते இஷ்யதே=சொல்லப்படுகிறது

ஸ-பா :—ஜாக்கிரத்தின் அசத்வம் இந்த சுலோகத்திலும் சொல்லப்படுகிறது ஜாக்கிராவஸ்தையில் கிராஹிய கிராஹகபாவங்களிருப்பதுபோல் ஸ்வப்நாவஸ்தையிலு மிருக்கின்றன. ஸ்வப்நம் ஜாக்கிரத்தின்காரியம் ஸ்வப்நகாலத்தில் ஸ்வப்நதிருஷ்டாவுக்கே ஸ்வப்நம் உண்மையாய்த் தோன்றுவதுபோலவும் ஸ்வப்நத்தின்காரணமான ஜாக்கிரதமும் அவனுக்கே சத்தியமாயிருக்கிறதேதவிர மற்றவர்களுக்கு இல்லை. ஆகையால் ஜாக்கிரவஸ்துக்கள் ஸ்வப்நம்போல் மித்தையே.

उत्पादस्याप्रसिद्धत्वादजं सर्वमुदाहृतम् ।
न च भूतादभूतस्य संभवोऽस्ति कथंचन ॥ 165 ॥ (38)

உத்பாதஸ்யாப்ரஸித்தத்வாதஜம் ஸர்வமுதாஹ்ருதம் ।
ந ச பூதாதபூதஸ்ய ஸம்பவோऽஸ்தி கதஞ்சந ॥ 165 ॥

उत्पादस्य உத்பாதஸ்ய=உற்பத்திக்கு

अप्रसिद्धत्वात् அப்ரஸித்தத்வாத்=பிரசித்தியில்லாததினால்

सर्वं ஸர்வம்=சமஸ்தமும்

अजं அஜம்=பிறப்பில்லாததாக

उदाहृतं உதாஹ்ருதம்=சொல்லப்பட்டிருக்கிறது

भूतात् பூதாத்=இருக்கப்பட்டதினின்றும்
अभूतस्य அபூதஸ்ய=இல்லாததின்
संभवः ஸம்பவ:=உற்பத்தி
कथञ्चन கதஞ்சந=எந்தவிதத்திலும்
न च अस्ति ந ச அஸ்தி=இருக்கவில்லை

தா—ம் :—ஜாக்கிறதம் ஸ்வப்நத்துக்குக் காரணமாயிருப்பதா ல் ஸ்வப்நம்போல் ஜாக்கிறதமும் பொய் என்று சொல்லக்கூடாது. ஏனெனில் ஸ்வப்நம் ஸ்திரமல்ல, ஜாக்கிரதமோ ஸ்திரம். ஆகையால் இரண்டும் விலக்ஷணங்களாயிருக்கின்றன. இப்படி ஒருவன் ஆக்ஷே பிக்க அவனுக்கு உத்தரம் யாதெனின் :—ஓவாதியே நீ சொல்லுவ து அவிவேகி புருஷனுக்குச்சரிதான். விவேகியானவன் ஒருவஸ்து வையும் உற்பத்தியானதாக அறிகிறதில்லை. "எல்லாம் ஆத்மா" என் கிற சுருதிப்படி எல்லாம் ஜனனமற்றதே. மேலும ஜாக்கிறத்தினின் றும் ஸ்வப்நம் உண்டாவதாக நீநினைக்கிறதும்சரியல்ல. ஏனெனின் இருக்கிறதி னின்றும் இல்லாதது உண்டாகமாட்டாது. முயற்கொ ம்பு ஒருவிதத்தாலும் உண்டாகாததுபோலும்.

असज्जागरिते दृष्ट्वा स्वप्ने पश्यति तन्मयः ।
असत्स्वप्नेऽपि दृष्ट्वा च प्रतिबुद्धो न पश्यति ॥ 166 ॥

அஸஜ்ஜாகரிதே த்ருஷ்ட்வா ஸ்வப்நே பச்யதி தந்மய: ।
அஸத்ஸ்வப்நேऽபி த்ருஷ்ட்வா ச ப்ரதிபுத்தோ ந பச்யதி ॥166॥

जागरिते ஜாகரிதே=ஜாக்கிறவஸ்தையில்
असत् அஸத்=கற்பிக்கப்பட்டவஸ்துவை
दृष्ट्वा த்ருஷ்ட்வா=பார்த்து
तन्मयः தந்மய:=அந்த விபரீதபாவனையுடன் கூடினவனாய்
स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்நத்தில்
पश्यति பச்யதி=பார்க்கிறான்
असत् அஸத்=இல்லாதவஸ்துவை
स्वप्नेऽपि ஸ்வப்நேऽபி=ஸ்வப்நத்திலும்
दृष्ट्वा த்ருஷ்ட்வா=பார்த்து
प्रतिबुद्धः ப்ரதிபுத்த:=விழித்துக்கொண்டபுருஷன்
नपश्यति நபச்யதி=ஒன்றையும் பார்க்கிறதில்லை
च ச=ஜாக்கிரத்தில் பார்க்கப்பட்ட எந்தவஸ்துவும் எந்தஸ்வப்நத்திலும் பார்க்கப்படுகிறதில்லை

தா—ம் :— 37-வது சுலோகத்தில் ஸ்வப்நம் ஜாக்கிறத்தின் காரியம்என்று சொல்லப்பட்டதுமதுபடியும் 38ல் உற்பத்தியேயில்லை என்றும் சொல்லப்பட்டது. இவ்விரண்டும் எப்படி பொருந்துமெனில், சித்தாந்தியினுடையகாரியகாரண பாவப்படி பொருந்தும் என்பதைகேள். ஜாக்கிறத்காலத்தில் ரச்சு சர்ப்பம்போல் கற்பிக்கப்பட்ட வஸ்துவையே பார்த்து, அந்த கற்பிதவஸ்துவின் வாசனையுடன் கூடினவனால் ஸ்வப்நத்திலும் ஜாக்கிறத்தில் போல் விஷயங்களையும் இந்திரியங்களையும் கற்பித்துக்கொண்டு அவைகளைப்பார்க்கிறான். அப்படியே ஸ்வப்நத்திலும் கற்பித பதார்த்தங்களைப் பார்த்து விழித்துக்கொண்டபிறகு அவைகளைப் பார்க்கிறதில்லை. ஸ்வப்நத்தில் நான் கற்பித்தபதார்த்தங்களைத்தான் பார்க்கிறேன்தவிர ஜாக்கிரத் பதார்த்தம் எக்காலத்திலும் ஸ்வப்நத்தில் பார்க்கப்படுகிறதில்லை. ஜாகிறதமானது ஸ்வப்நத்துக்கு ஹேதுவே. அதுபரமார்த்த சத்தல்ல. இப்படி அசத்தான பதார்த்தங்களுக்குள்தான் காரிய காரணபாவம் ஏற்படும். வாஸ்தவத்தில் ஒரு பதார்த்தமும் சத்தியமன்று.

नास्त्यसद्धेतुक मसत्सदसद्धेतुकं तथा ।
सच्च सद्धेतुकं नास्ति सद्धेतुक मसत्कुतः ॥ 167 ॥

நாஸ்த்யஸத்தேதுகமஸத்ஸதஸத்தேதுகம் ததா ।
ஸச்ச ஸத்தேதுகம் நாஸ்தி ஸத்தேதுகமஸத்குத: ॥ 167 ॥

असत् அஸத்=அசத்தானது
असद्धेतुकं அஸத்தேதுகம்=அசத்தின்காரியமாக
नास्ति நாஸ்தி=இல்லை
तथा ததா=அப்படி
सत् ஸத்=சத்தானது
असद्धेतुकं அஸத்தேதுகம்=அசத்தின் காரியமாக
नास्ति நாஸ்தி=இல்லை
सच्च ஸச்ச=சத்தும்
सद्धेतुकं ஸத்தேதுகம்=சத்தின்காரியமாக
नास्ति நாஸ்தி=இல்லை
असत् அஸத்=அசத்தானது
कुतः குத:=எப்படி
सद्धेतुकं ஸத்தேதுகம் = [illegible] காரியமாக இருக்கக்கூடும்.

தா - ம் :—ஜாக்கிர ஸ்வப்நங்களுக்குக் காரியகாரண பாவமான்து இது வரையில் வியாவஹாரிக திருஷ்டியால் சொல்லப்பட்டது பாரமார்த்திகத்தில் காரியகாரணபாவமேயில்லை என்பதை இப்போது சொல்லுகிறார் :—

(1) வஸ்துவை அறியாமையாகிய அஞ்ஞானத்தி லிருந்து அவஸ்து உண்டாகிறது என்று சிலர் சொல்லுவது சரியன்று. எப்படி. எனின் முயற் கொம்பிலிருந்து ஆகாசபுஷ்பம் உண்டாகமாட்டாது (2) சூன்னியவாதி அசத்திலிருந்து சத்உண்டாகிறதாக சொல்லுவதும் சரியன்றுமுயற்கொம்பிலிருந்து கடம்உண்டாகாததுபோலும். (3) சாங்கியர்கள் முதலானவர்கள் காரிய காரணங்கள் இரண்டும் சத் என்று சொல்லுகிறார்கள் இதுவும் சரியல்ல. கடத்திலிருந்து படம் உண்டாகாததுபோலும் (4) சத் பிரம்மத்தினின்றும் மித்தியா பிரபஞ்சம் உண்டானதாக சிலர் சொல்லுவதும் சரியன்று. சத்திலிருந்து அசத் உண்டாகமாட்டாது. காரியகாரணபாவங்கள் மேற் சொல்லிய நான்கு விதங்கள் தவிர வேறுவிதமா யிருக்கமாட்டா. கற்பிக்கவும் முடியாது. ஆகையால் விவேகியானவன் காரியகாரண பாவத்தை ஒன்றுக்கும் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

विपर्यासाद्यथा जाग्रदचिन्त्यान्भूतवत्स्पृशेत् ।
तथा स्वप्ने विपर्यासाद्धर्मांस्तत्रैव पश्यति ॥ 168 ॥

விபர்யாஸாத்யதா ஜாக்ரதசிந்த்யாந்பூதவத்ஸ்ப்ருசேத்।
ததா ஸ்வப்நே விபர்யாஸாத்தர்மாம்ஸ்தத்ரைவ பச்யதி॥ 168॥

यथा யதா=எப்படி (ஒருவன்)
जाग्रत् ஜாக்ரத்=ஜாக்கிராவஸ்தையில்
विपर्यासात् விபர்யாஸாத்=அவிவேகத்தால்
अचिन्त्यान् அசிந்த்யாந்=சிந்திக்கத்தகாத ரச்சு சர்ப்பாதிகளை
भूतवत् பூதவத்=பாரமார்த்திகம்போல்
स्पृशेत् ஸ்ப்ருசேத்=பார்க்கிறானோ
तथा ததா=அப்படி
स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்நத்தில்
विपर्यासात् விபர்யாஸாத்=பிரமையினால்
धर्मान् தர்மாந்=யானை குதிரை முதலிய பதார்த்தங்களை
तत्रैव தத்ரைவ=அந்த அவஸ்தையிலேயே
[illegible]

தா-ம் :—ஜாக்கிர ஸ்வப்நங்களுக்குள் காரிய காரணபாவங்களின் சங்கை இல்லை என்பதை மறுபடியும் காட்ட இந்தசுலோகம் பிரவிர்த்தித் திருக்கிறது. விவேகத்தால்ஜாக்கிருவஸ்தையில் ரச்சுவில் ஒருக்காலத்திலும் சர்ப்பம்பார்க்கப்படமாட்டாது. ஆயினும்ஒருவன் விபரீத ஞானத்துடன்கூடி பார்க்கிறதாக பாவிக்கக்கூடும். இதுபோல ஸ்வப்நத்திலும் யானை முதலிய பதார்த்தங்களை பார்க்கிறதுபோல் பாவிக்கக்கூடும். இரண்டு அவஸ்தைகளிலும் இருக்கும் அனுபவங்கள் வெவ்வேறுதான். இவைகளுக்கு யாதொருசம்பந்தமுமில்லை.

उपलंभात्समाचारादस्ति वस्तुत्ववादिनाम् ।
जातिस्तु देशिता वुद्धैरजातेस्त्रसतां सदा ॥ 169 ॥

𑌉𑌪𑌲𑌂𑌭𑌾𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌾𑌰𑌾𑌦𑌸𑍍𑌤𑌿𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌵𑌾𑌦𑌿𑌨𑌾𑌮𑍍।
𑌜𑌾𑌤𑌿𑌸𑍍𑌤𑍁𑌦𑍇𑌶𑌿𑌤𑌾𑌬𑍁𑌦𑍍𑌧𑍈𑌰𑌜𑌾𑌤𑍇𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌤𑌾𑌂𑌸𑌦𑌾 ॥ 169॥

उपलम्भात् 𑌉𑌪𑌲𑌮𑍍𑌭𑌾𑌤𑍍 = த்வைத பிரதீதியாலும்

समाचारात् 𑌸𑌮𑌾𑌚𑌾𑌰𑌾𑌤𑍍=வர்ணாசிரம தர்மங்களை செவ்வையாய் ஆசரிக்கிறதினாலும்

अस्तिवस्तुत्ववादिनां 𑌅𑌸𑍍𑌤𑌿𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌵𑌾𑌦𑌿𑌨𑌾𑌂 = த்வைதம் என்று சொல்லிக்கொண்டு

अजातेः 𑌅𑌜𑌾𑌤𑍇𑌃=ஜன்மமற்றதினின்றும்

सदा 𑌸𑌦𑌾=எப்போதும்

त्रसतां 𑌤𑍍𑌰𑌸𑌤𑌾𑌂=பயந்துகொண்டிருக்கிறவர்களின் பொருட்டு

वुद्धैः 𑌬𑍁𑌦𑍍𑌧𑍈𑌃=ஞானிகளால்

जातिः 𑌜𑌾𑌤𑌿𑌃 =ஜனனவாதம்

देशिता 𑌦𑍇𑌶𑌿𑌤𑌾=உபதேசிக்கப்படுகிறது

தா-ம் :—காரியகாரணபாவம் வாஸ்தவத்தில் இல்லாவிட்டால் வியாசரால் இரண்டாவது சூத்திரத்தில் பிரம்மத்தினின்றும் ஜகத் உண்டானதாக சொல்லப்பட்டிருப்பானேன். இந்த சங்கையை நிவர்த்திக்க இந்தசுலோகம்பிரவிர்த்தித்திருக்கிறது. த்வைதிகள்ஜகத் பிரத்தியக்ஷத்தில் காணப்படுகிறதே என்கிறார்கள். கர்மத்திலேயே சிரத்தையுள்ள இந்த பிரீதியுள்ள புருஷர்கள் வர்ணாசிரம தர்மங்களை செவ்வையாய் அனுஷ்டிக்க வேண்டும் என்கிறார்கள். இந்த இரண்டு காரணங்களால் ஜகத் சத்தியம் என்கிறார்கள். இவர்களை ஸ்தூலபுத்தியால் பஹிர்முகமாய் [illegible] [illegible] வரும் எ

ன்று பயப்படுகிறார்கள் இப்படிப்பட்டவர்களை உத்தேசித்து வியாசர் உற்பத்தியைச்சொல்லியிருக்கிறார்: இந்த உபதேசமானது அவர்களுடைய சாதகத்துக்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படி முதலில் உற்பத்தியை அவர்கள் பாவத்தாலும் வேதத்தை உபதேசம்பெற்று ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவர்கள் இந்த பிராந்தியை விட்டுவிடுவார்கள். இதை மனதில்வைத்துக்கொண்டு வியாசர் ஜகத் உற்பத்தி சூத்திரத்தை எழுதினாரே தவிர வாஸ்தவத்தில் ஜகத்து இருக்கிறது என்பதை உபதேசிக்கவில்லை. காரிகையின் 3-வது பிரகரணத்தில் 84-வது சுலோகத்திலும் அத்வைதபுத்தியுண்டாகும் பொருட்டே சிருஷ்டி பிரகாரம் சொல்லப்பட்டதாக சொல்லியிருக்கிறது.

अजातेस्त्रसतां तेषामुपलम्भाद्वियन्ति ये ।
जातिदोषा न सेत्स्यन्ति दोषोऽप्यल्पो भविष्यति ॥ 170 ॥

அஜாதெஸ்த்ரஸதாந்தெஷாமுபலம்பாத்வியந்தி யெ ।
ஜாதிதொஷா நஸெத்ஸ்யந்தி தொஷொऽப்யல்பொ பவிஷ்யதி ॥170॥

ये யெ=எவர்கள்

उपलम्भात् உபலம்பாத்=ஜகத் இருக்கிறது என்கிற ஞானத்தால்

वियन्ति வியந்தி=விருத்த பாவனையை அடைகிறார்களோ
तेषां தெஷாம்=அந்த
अजातेः அஜாதெ:=அனுற்பத்தியினின்றும்
त्रसतां த்ரஸதாம்=பயத்தை அடைகிறவர்களுக்கு
जातिदोषाः ஜாதிதொஷா:=ஜனனதோஷம்
नसेत्स्यति நஸெத்ஸ்யதி=சித்திக்கமாட்டாது
दोषोपि தொஷொபி=தோஷமும்
अल्पः அல்ப:=அல்பமாக
भविष्यति பவிஷ்யதி=ஆய்விடும்

தா-ம் :—ஜகத்து பிரதீதியாகிறபடியாலும், வர்ணாசிரமாசாரங்கள் ஏற்பட்டிருப்பதாலும் ஜகத் சத்தியம் என்று நினைத்து அஜாதவாதத்தினின்றும் பஹிர்முகமாகிறவர்கள் அத்வைத ஆத்மாவுக்கு விருத்தமாக த்வைத பாவத்தை அடைந்து தங்களுக்கு நாசம்வரும் என்று பயப்படுகிறார்கள். சிரத்தையுடனும் விவேகத்துடனும் கூடின இப்படிப்பட்டவர்களுக்கு ஜாதிவிதத்தைச் சொல்லுவதில் தோஷமில்லை. ஏனெனில் அவர்கள் விவேகமார்க்கத்தில் பிரவிர்த்தித்துக்கொண்டே யிருக்கிறார்கள். [illegible]

ஷமிருந்தாலும் சம்யஞ்ஞானம் வராததினால் இந்த தோஷம் சம்பவிக்கிறது.

उपलम्भात्समाचारान्मायाहस्ती यथोच्यते ।
उपलम्भात्समाचारादस्ति वस्तु तथोच्यते ॥71॥

உபலம்பாத்ஸமாசாராந்மாயாஹஸ்தீ யதோச்யதே ।
உபலம்பாத்ஸமாசாராதஸ்தி வஸ்து ததோச்யதே ॥ 171 ॥

यथा யதா = எப்படி

मायाहस्ती மாயாஹஸ்தீ = மாயாரூப யானை

उपलम्भात् உபலம்பாத் = பிரதீதியாலும்

समाचारात् ஸமாசாராத் = ஆசரணையாலும்

उच्यते உச்யதே = யானை என்று சொல்லப்படுகிறது.

तथा ததா = அப்படி

उपलम्भात् உபலம்பாத் = பிரதீதியாலும்

समाचारात् ஸமாசாராத் = ஆசரணையாலும்

अस्ति वस्तु அஸ்தி வஸ்து = வஸ்து இருக்கிறதென்று

उच्यते உச்யதே = சொல்லப்படுகிறது

தா-ம் :—த்வைதம் காணப்படுவதாலும் ஆசரிக்கப்படுவதாலும் இல்லை என்று சொல்லக்கூடாதெனில் அது சரியன்று ஏனெனில் அனுபவமும் ஆசாரமும் வியபிசரிக்கின்றன. எப்படியெனில் மாயாரூப யானையானது யானைபோல் தோன்றுகிறது. இதர யானைகளை கட்டுதல் அவைகளின்பேரில் ஏறுதல் முதலிய வியவஹாரங்களை நடத்துகிறதுபோல் இந்த மாயாரூப யானை விஷயத்திலும் நடத்துகிறோம். இந்தப்படி அனுபவத்தாலும் ஆசரணையாலும் வாஸ்தவத்தி லில்லாத யானையும் யானையாகச் சொல்லப்படுவதுபோல், வாஸ்தவத்திலில்லாத பிரபஞ்சமும் வஸ்துபோல் சொல்லப்படுகிறது. இந்த தோற்றம் ஆசாரம், இவைகள் த்வைதம் வாஸ்தவம் என்று ஸ்தாபிக்கச் சாதகங்களல்ல ‖ 171 ‖

जात्याभासं चलाभासं वस्त्वाभासं तथैव च ।
अजाचलमवस्तुत्वं विज्ञानं शान्तमद्वयम् ॥ 172 ॥

ஜாத்யாபாஸம் சலாபாஸம் வஸ்த்வாபாஸம் ததைவ ச ।
அஜாசலமவஸ்துத்வம் விஜ்ஞானம் சாந்தமத்வயம் ॥ 172 ॥

जात्याभासं ஜாத்யாபாஸம்=தேவதத்தன் உண்டானன் என்கிறதுபோல் ஆத்மாவுக்கு ஜன்மம் உண்டாகிறதுபோல் தோற்றல்

चलाभासं சலாபாஸம்=தேவதத்தன் நடந்தான் என்பதுபோல் ஆத்மாவுக்கு சலனம் உள்ளதுபோல் தோற்றல்

तथैव च ததைவ ச=அப்படியே

वस्त्वाभासं வஸ்த்வாபாஸம்=தேவதத்தன் குள்ளன் என்கிறதுபோல் ஆத்மாவுக்கு தர்மங்களை உண்டென்கிற தோற்றல் (இம்மூன்று தோற்றங்களும் உண்டாகின்றன) பாரமார்த்திகத்தில்லை

विज्ञानं விஜ்ஞானம்=ஞானமே

अजाचलं அஜாசலம்=பிறப்பற்றதும் சலனமற்றதும்

अवस्तुत्वं அவஸ்துத்வம்=தர்மங்களோடு கூடின திரவியமில்லாததும்

शान्तं சாந்தம்=பிறப்பு முதலியவைகளில்லாதபடியால் சாந்தமாயும்

अद्वयं அத்வயம்=இரண்டற்றதாகையால் அத்வைய ரூபமாயுமிருக்கிறது

ச-பா :—உற்பத்தி முதலிய அசத்தின் ஞானம் எதினிடத்தில் கற்பிக்கப்படுகிறதோ அந்த பரமார்த்தவஸ்து எதுவென்பது இந்த சுலோகத்திற் கூறப்படுகின்றது. சத்துக்கு ஜன்மமில்லை. ஆயினும் தேவதத்தன் என்பவன் உண்டானன் என்று சொல்லுவதுபோல் சத்து உண்டானதாகத் தோன்றுகிறது. தேவதத்தன் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குப் போகிறான் என்பதுபோல் சத்தும் சலிக்கிறதுபோல் காணப்படுகிறது. தேவதத்தன் குள்ளன் நெட்டை இப்படிச் சொல்லப்படுவதுபோல் சத்தும் குணங்களுக்கு ஆதாரமானவஸ்துபோல் காணப்படுகின்றது. வாஸ்தவத்தில் அது பிறப்பற்றது. சலனமற்றது வஸ்துவற்றது. இப்படிப்பட்ட பதார்த்தம் எது? ஞானமே. இது இவைகளற்றிருப்பதால் சாந்தமாயும் அத்வயமாயுமிருக்கிறது.

एवं न जायते चित्तमेवं धर्मा अजाः स्मृताः ।
एवमेवं विजानन्तो न पतन्ति विपर्यये ॥ 173 ॥

ஏவம் நஜாயதே சித்தமேவம் தர்மா அஜா: ஸ்ம்ருதா: ।
ஏவமேவம் விஜானந்தோ நபதந்தி விபர்யயே ॥ 173 ॥

एवं ஏவம்=இந்த காரணங்களால்
चित्तं சித்தம்=பிரம்ம சைதன்னியம் (ஆத்மா)
न जायते நஜாயதே=ஜனிக்கிறதில்லை
एवं ஏவம்=ஆகையாலும்
धर्माः தர்மா:=ஜீவர்கள்
अजाः அஜா:=ஜனனமற்றவர்களாக
स्मृताः ஸ்ம்ருதா:=பிரம்ம வேத்தாக்களால் பாவிக்கப்படுகிறார்கள்
एवमेव ஏவமேவ=இந்தப்பிரகாரமே
विजानन्तः விஜானந்த:=அறிகிறவர்கள்
विपर्यये விபர்யயே=விபரீத ஞானத்தில்
न पतन्ति நபதந்தி=விழுகிறதில்லை

ச-பா :—மேற்சொன்ன காரணங்களால் சித்தத்துக்கும் ஜீவர்களுக்கும் ஜன்மமில்லை என்று பிரம்ம ஞானிகள் சொல்லுகிறார்கள். வெகு தேக பேதத்தை உத்தேசித்து ஜீவர்கள் என்னும் பன்மைப் பிரயோகம் ஏற்பட்டது. ஜன்மமற்ற அத்வைத ஆத்ம ஸ்வரூபத்தை கேவல ஞானஸ்வரூபமாக அறிந்தவர்கள் விஷயங்களில் இச்சையற்றவர்களாய் மறுபடியும் பிராந்தி ஞானமாகடலில் விழுகிறதில்லை. तत्र को मोहः कः शोकः एकत्वमनुपश्यतः தத்ர கோ மோஹ: க: சோக: ஏகத்வமனுபச்யத:=அத்வைதத்தை அறிந்த இடத்தில் சோகமேது மோஹமேது என்று ஈசாவாஸ்யசுருதி சொல்லுகிறது. ॥173॥

ऋजुवक्रादिकाभासमलातस्पन्दितं यथा ।
ग्रहणग्राहकाभासं विज्ञानस्पन्दितं तथा ॥ 174 ॥

ருஜுவக்ராதிகாபாஸமலாதஸ்பந்திதம் யதா ।
க்ரஹணக்ராஹகாபாஸம் விஜ்ஞானஸ்பந்திதம் ததா ॥ 174 ॥

यथा யதா=எப்படி
अलातस्पन्दितं அலாதஸ்பந்திதம்=கொள்ளிக்கட்டையின் அசைவானது

ऋजुवक्रादिकाभासं 𑌋𑌜𑍁𑌵𑌕𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌾𑌭𑌾𑌸𑌂=நேர் கோணல் முதலிய ரூபங்களுள்ளதாக தோற்றுவிக்கிறதோ

तथा 𑌤𑌥𑌾=அப்படியே

विज्ञानस्पन्दितं 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌿𑌤𑌂=விஞ்ஞானத்தில் சலனமும்

ग्रहण ग्राहकाभासं 𑌗𑍍𑌰𑌹𑌣𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌾𑌭𑌾𑌸𑌂=கிரகித்தல், கிரகிக்கிறவன் முதலியவைகளாக தோன்றுகின்றன

ச-பா :—மேற்சொன்ன பரமார்த்த ஞானத்தை திருஷ்டாந்தத்தால் விஸ்தாரமாகச் சொல்லுகிறார். கொள்ளிக்கட்டை அசைக்கிறதினால் அது நேர்போலும், கோணல்போலும்காணப்படுகிறது. அதுபோல் ஆத்மாவினிடம் ஞாதா, ஞேயம் முதலிய தோற்றங்கள் காணப்படுகின்றன. இவைகள் எவை? கேவல ஞானஸ்வரூபத்தின் சலனமே. அவித்தையால் சலனமே இப்படி காணப்படுகிறது. அசலமான ஞானம் எப்போதும் சலிக்கமாட்டாது. அதற்குச் சலனமில்லை ஜன்மமில்லை என்று முன்னமேயே நிரூபித்திருக்கிறோம். ‖174‖

अस्पन्दमान मलातमनाभासमजं यथा ।
अस्पन्दमानं विज्ञानमनाभासमजं तथा ‖ 175 ‖

𑌅𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌮𑌲𑌾𑌤𑌮𑌨𑌾𑌭𑌾𑌸𑌮𑌜𑌂 𑌯𑌥𑌾 ।
𑌅𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌾𑌭𑌾𑌸𑌮𑌜𑌂 𑌤𑌥𑌾 ‖ 175 ‖

(48)

यथा 𑌯𑌥𑌾=எப்படி

अस्पन्दमानं 𑌅𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌂=அசையாத

अलातं 𑌅𑌲𑌾𑌤𑌂=கொள்ளிக்கட்டை

अनाभासं 𑌅𑌨𑌾𑌭𑌾𑌸𑌂=நேர் கோணல் முதலிய ரூபத்தோற்றமில்லாததாயும்

अजं 𑌅𑌜𑌂=உற்பத்தியற்றதாயுமிருக்கிறதோ

तथा 𑌤𑌥𑌾=அப்படியே

अस्पन्दमानं 𑌅𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌂=அசைவில்லாத

विज्ञानं 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂=விஞ்ஞானம்

अनाभासं अजं 𑌅𑌨𑌾𑌭𑌾𑌸𑌂 𑌅𑌜𑌂=ஜன்மமுதலானதுகளற்றதாயும் அசலமாயுமிருக்கிறது.

தா-ம் ,—45-வது சுலோகத்தில் விஞ்ஞானம் சாந்தம் என்று சொன்னதை திருஷ்டாந்தத்தால் ஸ்பஷ்டம் செய்கிறார். திருஷ்டாந்தத்தில் போல அவித்தையால் சலிக்கிறதுபோலும் அவித்தை

நிவிர்த்தியானவுடன் சலனமில்லாமலு மிருக்கிற விஞ்ஞானம் உற்பத்தி முதலியவைகளின் தோற்றமன்றியிலிருக்கிறது. ॥175॥

अलाते स्पन्दमाने वै नाभासा अन्यतोभुवः ।
न ततोऽन्यत्र निस्पन्दान्नालातं प्रविशन्ति ते ॥ 176 ॥

𑌅𑌲𑌾𑌤𑍇 𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑍇 𑌵𑍈 𑌨𑌾𑌭𑌾𑌸𑌾 𑌅𑌨𑍍𑌯𑌤𑍋𑌭𑍁𑌵𑌃 ।
𑌨 𑌤𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌨𑌿𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌾𑌨𑍍𑌨𑌾𑌲𑌾𑌤𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥ 176 ॥

अलाते 𑌅𑌲𑌾𑌤𑍇=கொள்ளிக்கட்டை
स्पन्दमाने 𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑍇=அசையுமளவில்
आभासाः 𑌆𑌭𑌾𑌸𑌾𑌃=நேர்கோணல் முதலிய ரூபாபாசங்கள்
अन्यतोभुवः 𑌅𑌨𑍍𑌯𑌤𑍋𑌭𑍁𑌵𑌃=கொள்ளிக்கட்டையைத் தவிர வேறு இடத்திலிருந்துண்டானதாக
न 𑌨=ஆகமாட்டா
ततः निस्पन्दात् 𑌤𑌤𑌃 𑌨𑌿𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌾𑌤𑍍=அசையாத கொள்ளிக்கட்டைக்கு
अन्यत्र 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰=வேறான யிடத்தில்
न 𑌨=அந்த ஆபாசங்கள் தோன்றுகிறதில்லை
ते 𑌤𑍇=அவைகள்
अलातं 𑌅𑌲𑌾𑌤𑌂=கொள்ளிக்கட்டையை
न प्रविशन्ति 𑌨 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿=பிரவேசிக்கிறதில்லை

தா-ம்:—கொள்ளிக்கட்டை அசைவிலிருக்கும்போது நேர்கோணல் முதலிய தோற்றங்கள் வேறு ஒன்றிலிருந்து கொள்ளிக்கட்டைக்கு வருகிறதில்லை. (2) கொள்ளிக்கட்டை அசையாமலிருக்கும்போது இந்த ஆபாசங்கள் வேறு இடத்திற் காணப்படுகிறதில்லை. (3) கொள்ளிக்கட்டை அணைந்துபோகும்போது அவைகள் இதில் பிரவேசித்து விடுகிறதில்லை. ॥176॥

न निर्गता अलातात्ते द्रव्यत्वाभावयोगतः ।
विज्ञानेऽपि तथैव स्युराभासस्याविशेषतः ॥ 177 ॥

𑌨 𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌾 𑌅𑌲𑌾𑌤𑌾𑌤𑍍𑌤𑍇 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌯𑍋𑌗𑌤𑌃 ।
𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 𑌤𑌥𑍈𑌵 𑌸𑍍𑌯𑍁𑌰𑌾𑌭𑌾𑌸𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 177

द्रव्यत्वाभावयोगतः 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌯𑍋𑌗𑌤𑌃=திரவியமாய் இல்லாததினால்
ते 𑌤𑍇=அந்த நேர் கோணல் முதலிய ஆபாசங்கள்
अलातात् 𑌅𑌲𑌾𑌤𑌾𑌤𑍍=கொள்ளிக்கட்டையினின்றும்

न निर्गताः ந நிர்க₃தா:=வெளியே போகிறதில்லை
अभासस्य ஆபா₄ஸஸ்ய=ஆபாசம்.
अविशेषतः அவிஶேஷத:=விசேஷமாயிராதபடியால்
विज्ञानेपि விஜ்ஞாநேபி=விஞ்ஞான விஷயத்திலும்
तथैव ததை₂வ=அப்படியே
स्युः ஸ்யு:=இருக்கும்

தா-ம் :—கிரகத்தினின்றும் வெளியே போகிறதுபோல் கொள்ளிக்கட்டையினின்றும் மேற்சொல்லிய ஆபாசங்கள் வெளியே போகிறதில்லை. ஏனெனில் அவைகள் வாஸ்தவத்தில் திரவியங்களாயில்லை. வெளியே போவதும் உள்ளே வருவதும் வஸ்துக்களுக்கு சாத்தியமே தவிர ஆபாசங்களுக்கு சாத்தியமல்ல. அப்படியே விஞ்ஞான விஷயத்திலும் அறியத்தக்கது. இவ்விடத்திலும் ஞானாபாசங்கள் காணப்படுகின்றன. ஆபாச பாலங்கள் இரண்டுக்கும் சமம். ‖177‖

विज्ञाने स्पन्दमाने वै नाभासा अन्यतोभुवः ।
न ततोऽन्यत्र निस्पन्दान्न विज्ञानं विशन्ति ते ॥ 178 ॥ (51)
விஜ்ஞாநே ஸ்பந்த₃மாநே வை நாபா₄ஸா அந்யதோபு₄வ:।
ந ததோऽந்யத்ர நிஸ்பந்தா₃ந்ந விஜ்ஞாநம் விஶந்தி தே॥ 178 ॥

विज्ञाने விஜ்ஞாநே=விஞ்ஞானம்
स्पन्दमाने वै ஸ்பந்த₃மாநே வை=சலிக்கும்போது
आभासाः ஆபா₄ஸா:=விஞ்ஞானாபாசங்கள்
अन्यतोभुवः அந்யதோபு₄வ:=வேறு இடத்தினின்றும் உண்டானதாக
न ந=இல்லை
ततः निस्पन्दात् தத: நிஸ்பந்தா₃த்=அசலமான விஞ்ஞானத்தைவிட
अन्यत्र அந்யத்ர=வேறு இடத்தில்
न ந=ஆபாசம் காணப்படுகிறதில்லை
ते தே=அந்த ஆபாசங்கள்
विज्ञानं விஜ்ஞாநம்=விஞ்ஞானத்துக்குள்
न विशन्ति ந விஶந்தி=பிரவேசிக்கிறதில்லை

தா-ம் :—ஆபாசம் எப்படிச் சமம் எனில் :—விஞ்ஞானம் சலிக்கும்போது இதர இடங்களிலிருந்து விஞ்ஞானாபாசங்கள் வருகிறதில்லை. அப்படியே விஞ்ஞானம் சலிக்காமலிருக்கும்போது இ

ந்த ஆபாசங்கள் வேறு இடத்தில் காணப்படுகிறதில்லை. மேலும் இந்த ஆபாசங்கள் விஞ்ஞானத்தில் பிரவேசிக்கிறதில்லை. ஏனெனில் விஞ்ஞானம் அவைகளுக்கு உபாதானமாயில்லை. ॥178॥

न निर्गतास्ते विज्ञानाद् द्रव्यत्वाभावयोगतः ।
कार्यकारणताभावाद्यतोऽचिन्त्याः सदैव ते ॥ 179 ॥

நநிர்கதாஸ்தே விஜ்ஞாநாத் த்ரவ்யத்வாபாவயோகத:
கார்யகாரணதாபாவாத்யதோऽசிந்த்யா: ஸதைவதே॥179

द्रव्यत्वाभावयोगतः த்ரவ்யத்வாபாவயோகத: = திரவியமாயில்லாதபடியால்

ते தே=அந்த ஆபாசங்கள்

विज्ञानात् விஜ்ஞாநாத்=விஞ்ஞானத்தினின்றும்

न निर्गताः ந நிர்கதா:=வெளியே போகிறதில்லை

यतः யத:=ஏனெனில்

कार्यकारणताभावात् கார்யகாரணதாபாவாத்=விஞ்ஞானுபாசங்களுக்கும் காரிய காரணபாவம் இல்லாதபடியால்

ते தே=அவைகள்

सदैव ஸதைவ=எப்போதும்

अचिन्त्याः அசிந்த்யா:=சிந்திக்கக்கூடியவைகளல்ல

यतः யத:=இப்படி இருப்பதால்

(अतो मृषैव அதோ ம்ருஷைவ=அதுகள் மித்தையே)

தா-ம்:—எப்படி ஆபாசம் விஞ்ஞானத்தில் பிரவேசிக்கிறதில்லையோ அப்படி விஞ்ஞானத்தினின்றும் வெளியேபோகிறதில்லை. ஏனெனில் அவைகள் வாஸ்தவங்களல்ல. விஞ்ஞானத்துக்கும் கொள்ளிக்கட்டைக்கும் சாதிர்சிய பாவங்கள் அநேகமிருந்தாலும் விஞ்ஞானம் எப்போதும் அசலமாயிருப்பதே இரண்டுக்கும் வித்தியாசம். அப்படி அசலமான விஞ்ஞானத்தினிடத்தில் ஜன்மாதி ஆபாசங்கள் எதினால் காணப்படுகின்றன என்றால் சொல்லுகிறார். ஆபாசங்களுக்கும் விஞ்ஞானத்துக்கும் ஜன்னிய ஜனக பாவங்களில்லாதபடியால், ஆபாசங்கள் எப்போதும் அநிர்வசனீயங்களே. ஆகையால் அவைகள் மித்தை. கொள்ளிக்கட்டை விஷயத்தில் வாஸ்தவத்தில் நேர்கோணல் முதலிய ஆபாசங்கள் இல்லாமலிருக்க அவைகள் காணப்படுவதுபோல் விஞ்ஞான விஷயத்திலும் வாஸ்தவத்தில் ஜன்மாதிகளில்லாமலிருக்க அவைகள் இருப்பதாக தோன்றுவதால் மித்தையே என்பது சம்பிரதாய அர்த்தம்.

द्रव्यं द्रव्यस्य हेतुः स्यादन्यदन्यस्य चैव हि ।
द्रव्यत्वमन्यभावो वा धर्माणां नोपपद्यते ॥ 180 ॥

𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑍍𑌯𑌹𑍇𑌤𑍁𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑌨𑍍𑌯𑌦𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌚𑍈𑌵𑌹𑌿 ।
𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑌭𑌾𑌵𑍋 𑌵𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂 𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ 180

द्रव्यं 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂=திரவ்யம்

द्रव्यस्य 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑍍𑌯=திரவியத்துக்கு

हेतुः स्यात् 𑌹𑍇𑌤𑍁𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍=காரணமாகக்கூடும்

अन्यत् 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍=வேறான ஒன்று

अन्यस्य चैवहि 𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚𑍈𑌵𑌹𑌿=வேறான ஒன்றுக்குக் காரணமாகக்கூடும்

द्रव्यत्वं 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌂=திரவியத்வமும்

अन्यभावः वा 𑌅𑌨𑍍𑌯𑌭𑌾𑌵𑌃 𑌵𑌾=வேறு பாவமும்

धर्माणां 𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂=ஜீவர்களுக்கு

नोपपद्यते 𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇=பொருந்தமாட்டா

தா-ம்:—முந்தின சுலோகத்தில் சொல்லிய காரியகாரணதா பாவத்தை பிரதிபாதிக்கிறார் ஆத்மாவானது அஜன்மா (அதாவது அவயவ அவயவி பாவங்களில்லாதது) ஏகம் (அதாவது குணகுணி பாவங்களில்லாதது) இப்படி ஸ்தாபிக்கப்பட்ட (38-52) காரிய காரண பாவங்கள் ஏற்பட்ட திரவியம் அல்லது வேறு ஏதாவது இருக்கவேண்டியது. ஆத்மா திரவியமும் அல்ல வேறு ஒரு பதார்த்தமுமல்ல ஆகையால் (ஜீவன்) ஒன்றுக்கும் காரணமாயிருக்கமாட்டாது காரியமாயுமிருக்கமாட்டாது. ॥180॥

एवं न चित्तजा धर्माश्चित्तं वापि न धर्मजम् ।
एवं हेतुफलाजातिं प्रविशन्ति मनीषिणः ॥ 181 ॥

𑌏𑌵𑌂𑌨𑌚𑌿𑌤𑍍𑌤𑌜𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌵𑌾𑌪𑌿𑌨𑌧𑌰𑍍𑌮𑌜𑌮𑍍 ।
𑌏𑌵𑌂𑌹𑍇𑌤𑍁𑌫𑌲𑌾𑌜𑌾𑌤𑌿𑌂𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃 ॥ 181 ॥

एवं 𑌏𑌵𑌂=இந்தப்பிரகாரம்

धर्माः 𑌧𑌰𑍍𑌮𑌾𑌃=பாஹ்ய கடாதிபதார்த்தங்கள்

न चित्तजाः 𑌨 𑌚𑌿𑌤𑍍𑌤𑌜𑌾𑌃=பிரம்ம சைதன்னியத்தினின்றும் உண்டாகிறதில்லை

चित्तं वापि 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌵𑌾𑌪𑌿=பிரம்ம சைதன்னியமும்

न धर्मजम् 𑌨 𑌧𑌰𑍍𑌮𑌜𑌮𑍍=கடாதிகளிடமிருந்து உண்டாகிறதில்லை

एवं 𑌏𑌵𑌂=இந்தப்பிரகாரம்

मनीषिणः 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃=பண்டிதர்கள்.

हेतुफलाजाति ஹெதுஃபலாஜாதிம் = காரண காரியங்களின் அனுற்பத்தியை

प्रविशन्ति ப்ரவிஶந்தி = நிச்சயிக்கிறார்கள்.

தா-ம் :—விஞ்ஞான ஸ்வரூபமே பிரம்மம் இது கடாதி பாஹியங்களினின்றும் உண்டாகிறதில்லை. அவைகள் பிரம்மத்தினின்றும் உண்டாகிறதில்லை. ஜீவர்களும் பிரம்ம சைதன்னியாபாசங்களானதால் அதினின்றும் உண்டாகிறதில்லை. இப்படி காரணத்தினின்றும் காரியம் காரியத்தினின்றும் காரணம் உண்டாகமாட்டாதென்று வித்வான்கள் நிச்சயம் செய்கிறார்கள், பிரம்ம வித்துக்கள் ஆத்மாவினிடத்தில் காரியகாரணங்களில்லை என்று அறிகிறார்கள் என்பது அர்த்தம். ॥181॥

यावद्धेतु फलावेशस्तावद्धेतु फलोद्भवः ।
क्षीणे हेतुफलावेशे नास्ति हेतु फलोद्भवः ॥ 182 ॥

யாவத்ஹெதுஃபலாவேஶஸ்தாவத்ஹெதுஃபலோத்பவ: ।
க்ஷீணெ ஹெதுஃபலாவேஶெ நாஸ்தி ஹெதுஃபலோத்பவ: 182

यावत् யாவத் = எதுவரையில்

हेतु फलावेशः ஹெதுஃபலாவேஶ: = ஹேது பலன்கள் இருப்பதாக பாவிக்கப்படுகின்றனவோ

तावत् தாவத் = அதுவரையில்

हेतु फलोद्भवः ஹெதுஃபலோத்பவ: = ஹேது பலன்களின் பிரவிர்த்தியிருக்கிறது

हेतु फलावेशे ஹெதுஃபலாவேஶெ = ஹேது பலங்களில் அபிமானம்

क्षीणे க்ஷீணெ = க்ஷயித்தவளவில்

हेतु फलोद्भवः ஹெதுஃபலோத்பவ: = ஹேது பலன்களின் பிரவிர்த்தி

नास्ति நாஸ்தி = இருக்கிறதில்லை

தா-ம் :—தர்மாதர்மங்களுக்கு நான் கர்த்தா அவைகள் எனக்கிருக்கின்றன. அவைகளை நான் செய்து காலாந்திரத்தில் தேசாந்திரத்தில் அவைகளின் பலன்களை நான் அனுபவிப்பேன். இப்படி ஒருவன் பாவிக்கிறவரையில் தர்மாதர்மங்களும் அவைகளின்பலன்களும் விடாமல் இருந்துக்கொண்டேயிருக்கும். மந்திரம் ஔஷதம் முதலிய உபாயங்களால் ஆவேசம் வெளியேபோய் விடுவதுபோல் அத்வைத ஞானத்தால் அவித்தியா காரியமான பிராந்திவ

ர்த்தியாகும்போது ஹேது பலங்களிலுள்ள அபிமானமும் மறுபடியும் உண்டாகமாட்டாது.

यावद्धेतु फलावेशः संसारस्तावदायतः ।
क्षीणे हेतु फलावेशे संसारं न प्रपद्यते ॥ 183 ॥

யாவத்தேதுபலாவேஶ: ஸம்ஸாரஸ்தாவதாயத: ।
க்ஷீணே ஹேதுபலாவேஶே ஸம்ஸாரம் ந ப்ரபத்யதே ॥ 183

यावत् யாவத்=எதுவரையில்

हेतु फलावेशः ஹேது பலாவேஶ:=ஹேது பலன்களில் நம்பிக்கை இருக்கிறதோ

तावत् தாவத்=அதுவரையில்

संसारः ஸம்ஸார:=சம்சாரம்

आयतः ஆயத:=இருக்கிறது

हेतु फलावेशे ஹேது பலாவேஶே = ஹேதுபலங்களின் அபிமானம்

क्षीणे க்ஷீணே=நாசமானபோது

संसारं ஸம்ஸாரம்=சம்சாரம்

न प्रपद्यते ந ப்ரபத்யதே=அடையப்படுகிறதில்லை

தா-ம் :—ஹேதுபலன்களில் நம்பிக்கை இருந்தால் தோஷம் என்னவெனில் இவைகளில் நம்பிக்கை இருக்கும்வரையில் சம்சாரம் (பிரபஞ்சம்) இருக்கும் நம்பிக்கை நசித்துப்போனால் சம்சாரமும் நாசமாய்விடும் ॥ 183॥

संवृत्या जायते सर्वं शाश्वतं नास्ति तेन वै ।
सद्भावेन ह्यजं सर्वमुच्छेदस्तेन नास्ति वै ॥ 184 ॥

ஸம்வ்ருத்யா ஜாயதே ஸர்வம் ஶாஶ்வதம் நாஸ்தி தேந வை ।
ஸத்பாவேந ஹ்யஜம் ஸர்வமுச்சேதஸ்தேந நாஸ்தி வை ॥ 184

संवृत्या ஸம்வ்ருத்யா=அவித்தியாகாரியமான லௌகிக வியவஹாரத்தால்

सर्वं ஸர்வம்=சமஸ்தமும்

जायते ஜாயதே=உண்டாகிறது

तेन தேந=அக்காரணத்தால்

शाश्वतं ஶாஶ்வதம்=சாஸ்வதமானது யாதொன்றும்

नास्ति நாஸ்தி=இல்லை

सद्भावेन ஸத்பாவேந=பாரமார்த்திக சத்பாவத்தால்

सर्वं ஸர்வம்=சமஸ்தமும்
अजं हि அஜம் ஹி=ஜனனமற்றது
तेन தேந=ஆனதால்
उच्छेदः உச்சேத:=விநாசமும்
नास्ति वै நாஸ்தி வை=இல்லை

தா-ம் :—அஜன்மாவான ஆத்மாவுக்கு அன்னியமானது வேறுஒன்றுமில்லை என்று நீங்கள் சொல்லும்பக்ஷத்தில், ஹேதுபில்லன்கள், சம்சாரத்தின் உற்பத்தி நாசங்கள் இவைகளை நீங்கள் அங்கீகரிப்பானேன இதற்கு உத்தரம் :— அவித்தையால் சம்சாரம் அதாவது ஜகத்து உண்டாகிறதுபோதும் நாசமாகிறதுபோதும் சொல்லப்படுகிறது. சம்சாரம் ஒருக்காலத்திலும் சாஸ்வதமல்ல. எல்லாம்பிரம்மஸ்வரூபமா யிருப்பதால் எல்லாம் ஜன்மரகித ஆத்மாவே! ஜனனமே யில்லாதபடியால் நாசமுமில்லை. எதிரிலிருக்கும் ரச்சுவைபார்த்து ஒருமூடன் சர்ப்பம் என்று பாவித்து ஓடுகிறான். விவேகி அது ரச்சுதான், ஏன் பயந்து ஓடுகிறாய் என்கிறான். இதனால் அவனுடைய வசனம் விருத்தப்படுகிறதில்லை. இதுபோல பரமார்த்தகூடஸ்தாத்மாவை அறிவதும் வியாவஹாரிக ஜன்மாதி வசனத்தால் விருத்தமாகிறதில்லை. ॥184॥

धर्माय इति जायन्ते जायन्ते ते न तत्त्वतः ।
जन्म मायोपमं तेषां सा च माया न विद्यते ॥ 185 ॥

58

தர்மாய இதிஜாயந்தே ஜாயந்தே தேந தத்வத: ।
ஜந்மமாயோபமந்தேஷாம் ஸாசமாயாநவித்யதே ॥ 185 ॥

ये யே=எந்த
धर्माः தர்மா:=ஜீவர்கள், இதரபதார்த்தங்கள்
जायन्ते ஜாயந்தே=உண்டாகின்றனவோ
ते தே=அவைகள்
तत्त्वतः தத்வத:=வாஸ்தவத்தில்
न जायन्ते ந ஜாயந்தே=உண்டாகிறதில்லை
तेषां தேஷாம்=அவைகளின்
जन्म ஜந்ம=ஜன்மம்
मायोपमं மாயோபமம்=மாயைக்கு ஒப்பானது.
सा च माया ஸா ச மாயா=அந்தமாயையும்
न विद्यते ந வித்யதே=இல்லை

தா-ம் :—ஜீவாதிகளுக்குத் தோன்றும் ஜன்மாதிகளும் மாயையே மாயையுமில்லை மாயையென்றால் இல்லாதவஸ்து.

ச-பா :—ஜன்மமுள்ளதாகக்காணப்படும் ஜீவாதிகளும் வாஸ்தவத்தில் ஜன்மமடைகிறதில்லை அவித்தியாபலத்தால் உண்டானவை போல் காணப்படுகின்றன. ஆகவே ஜன்மமானது பிராந்தி காரியமானதால் பிராந்தியே அப்படியானால் பிராந்தி அதாவது மாயையென்னவஸ்துவா? இல்லவேயில்லை ॥ 185॥

यथा मायामयाद्बीजाज्जायते तन्मयोऽङ्कुरः ।
नासौ नित्यो न चोच्छेदी तद्वद्धर्मेषु योजना ॥ 186 ॥

யதா மாயாமயாத்பீஜாஜ்ஜாயதே தந்மயோऽங்குர: ।
நாஸௌ நித்யோ நசோச்சேதீ தத்வத்தர்மேஷு யோஜநா ॥186॥

यथा யதா=எப்படி

मायामयात् மாயாமயாத்=மாயாமயமான

बीजात् பீஜாத்=பீஜத்தினின்றும்

तन्मयोऽङ्कुरः தந்மயோऽங்குர:=மாயாமயமான முளை

जायते ஜாயதே=உண்டாகிறதோ

असौ அஸௌ = இந்தமுளை

न नित्यः ந நித்ய:=நித்தியமன்றோ

न च उच्छेदी ந ச உச்சேதீ=நாசமடைகிறதில்லையோ

तद्वत् தத்வத்=அப்படி

धर्मेषु தர்மேஷு=ஜீவாதிகளில் ஜன்மநாசாதிகள்

योजना யோஜநா=சேர்ந்து இருக்கின்றன

தா-ம் :—மாயைக்குச்சமானம் எப்படியோ ஒருவித்தையாடி மாயாரூபமாய்கொட்டையினின்றுமொருமாங்கன்றை உண்டுபண்ணினால் அந்த கன்று நித்தியமுமல்ல, நாசமுமடையத்தக்கதல்ல. இப்படியே ஜீவாதிகளின் ஜன்மாதிகளையும் அறியத்தக்கது. வாஸ்தவத்தில் ஜீவாதிகளுக்கு ஜன்ம நாசங்களில்லை என்பதுகருத்து॥186॥

नाजेषु सर्वधर्मेषु शाश्वताशाश्वताभिधा ।
यत्र वर्णा न वर्तन्ते विवेकस्तत्र नोच्यते ॥ 187 ॥

நாஜேஷு ஸர்வதர்மேஷு ஶாஶ்வதாஶாஶ்வதாபிதா ।
யத்ர வர்ணா ந வர்தந்தே விவேகஸ்தத்ர நோச்யதே ॥187॥

सर्वधर्मेषु ஸர்வதர்மேஷு=ஜீவாதிசர்வமும்

अजेषु அஜேஷு=ஜன்மரஹிதங்களாயிருப்பதால்

शाश्वताशाश्वताभिधा ஶாஶ்வதாஶாஶ்வதாபிதா=நித்தியம் அநித்தியம் என்கிறபேர்கள்

न ந=ஏற்படவில்லை

यत्र யத்ர=எந்த ஆத்மாக்களிடத்தில்

वर्णाः வர்ணா:=வசனங்கள்

न वर्तन्ते ந வர்த்தந்தே=பிரவிர்த்திக்கவில்லையோ

तत्र தத்ர=அவ்விடத்தில்

विवेकः விவேக:=பகுத்தறிவு

नोच्यते நோச்யதே=சொல்லப்படமாட்டாது

ச-பா:—எல்லாம் சத்ரூபமாயும் அஜடமாயுமிருக்கிறதென்று முன் 57-வது சுலோகத்தில் சொன்னதை தவர்ணிக்கிறார். வாஸ்தவத்தில் எல்லாம் நித்தியமான ஞானஸ்வரூபமாகத்தானிருக்கிறது. அப்படியிருக்க அவைகள் நித்தியம் என்றாவது அநித்தியம் என்றாவது சொல்லமுடியாது. இது இன்னதென்று சொல்லமுடியாதவிடத்தில் நித்தியம் அநித்தியம் என்கிற பகுத்தறிவுதான் எப்படி உண்டாகும் (யதோவாசோநிவர்த்தந்தே) யென்கிறசுருதி இந்த அர்த்தத்தைச் சொல்லுகிறது ॥ 187॥

यथा स्वप्ने द्वयाभासं चित्तं चलति मायया ।
तथा जाग्रद्द्वयाभासं चित्तं चलति मायया ॥ 188 ॥

யதா ஸ்வப்னே த்வயாபாஸம் சித்தம் சலதி மாயயா । (61)
ததா ஜாக்ரத் த்வயாபாஸம் சித்தம் சலதி மாயயா ॥ 188 ॥

यथा யதா=எப்படி

स्वप्ने ஸ்வப்னே=ஸ்வப்னத்தில்

द्वयाभासं த்வயாபாஸம்=த்வைதாபாசரூபமான

चित्तं சித்தம்=மனது

मायया மாயயா=மாயையால்

चलति சலதி=சலிக்கிறதோ

तथा ததா=அப்படி

जाग्रद्द्वयाभासं ஜாக்ரத்த்வயாபாஸம்=ஜாக்கிரத்தில் த்வைதாபாசரூபமான

चित्तं சித்தம்=மனது

मायया மாயயா=மாயையால்

चलति சலதி=சலிக்கிறது

अद्वयं च द्वयाभासं चित्तं स्वप्ने न संशयः ।
अद्वयं च द्वयाभासं तथा जाग्रन्न संशयः ॥ 189 ॥

அத்3வயம் ச த்3வயாபா4ஸம் சித்தம் ஸ்வப்நே ந ஸம்ஶய: ।
அத்3வயம் ச த்3வயாபா4ஸம் தத2ா ஜாக்3ரந்ந ஸம்ஶய: ॥ 189 ॥

अद्वयस्य அத்3வயஸ்ய=அத்வைதமான
चित्तं சித்தம்=மனது
स्वप्ने ஸ்வப்நே=ஸ்வப்நத்தில்
द्वयाभासं த்3வயாபா4ஸம்= த்வைதமாகத் தோன்றுபடியாயிருக்கிறது
न संशयः ந ஸம்ஶய:=சந்தேகமில்லை
तथा தத2ா =அப்படி
अद्वयञ्च அத்3வயஞ்ச=அத்வயமான மனது
जाग्रत् ஜாக்3ரத்=ஜாக்கிரத்தில்
द्वयाभासं த்3வயாபா4ஸம்=த்வைதமாகத் தோன்றுபடியாகக் காணப்படுகிறது
न संशयः ந ஸம்ஶய:=சந்தேகமில்லை

188-189 ஸ்லோ. தாத்பர்யம் :—ஆத்மா ஏகத்துக்கு அநேகாகாரமானதெப்படி. ஆசாரியரால் வர்ணிக்கப்படுமெனில், இந்த வர்ணனை சித்தத்தின் ஸ்புரணையே தவிர வாஸ்தவமல்ல. ஒன்றாயிருக்கிறது என்பது ஸ்வப்நத்தில் மாயையால்சலிக்கிறதுபோல் ஜாக்கிரத்திலும் மாயையால்சலிக்கிறது. ஸ்வப்நத்தில் மனது ஒன்றாக இருந்தும் அநேகமில்லை. அப்படியேஜாக்கிரத்திலும்காணப்படுகிறதும் ஸ்பதிக்க ஏகமில்லை. பாரமார்த்திகத்தில்விஞ்ஞானமாத்திரமாயிருக்கிற வஸ்து வாக்குக்குவிஷயமாகமாட்டாது. அந்தவஸ்துவின்வாக்குக்கு விஷயமாயிருக்குந் தன்மை மனதினுடையசலனமாத்திரமேதவிர வாஸ்தவமல்ல, இதுவெல்லாம் முன் மூன்றாவது பிரகரணத்தில் 29-30-வது ஸ்லோகங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

स्वप्नदृक् प्रचरन्स्वप्ने दिक्षु वै दशसु स्थितान् ।
